# தொல்லியல் கருத்தரங்கு

தொகுதி—1

பதிப்பாசிரியர்கள் :
ஆ. பத்மாவதி, M. A.,
டாக்டர். இரா. நாகசாமி, M. A, Ph. D.

தமிழக வரலாற்றுப் பேரவை
சுப்பிரமணிய ஐயர் தெரு,
41/2, அபிராமபுரம்,
சென்னை—600018.

# தொல்லியல் கருத்தரங்கு

தொகுதி-I

பதிப்பாசிரியர்கள் :

ஆ. பத்மாவதி, M. A.,

டாக்டர், இரா. நாகசாமி, M. A., Ph. D

**தமிழக வரலாற்றுப் பேரவை**

சுப்பிரமணிய ஐயர் தெரு,

41/2, அபிராமபுரம்,

சென்னை—600018.

அச்சிட்டவர் :

அன்னை அருக்கம் அச்சகம்,
இராயப்பேட்டை,
சென்னை—600 014.

# அணிந்துரை

தமிழ் நாட்டுத் தொல்பொருள் துறையினர் அரிய பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அவற்றுள் ஒன்று இந்த வெளியீடு கல்வெட்டு, பழம் சுவடிகள் இவற்றை ஆய்ந்து கண்ட முடிவுகளை விளக்கும் கருத்தரங்கில் பூத்த முல்லை மலர்களை தொடுத்து அளிக்கிறது இந்நூல்.

கட்டுரைகள் வரைந்த இளம் ஆய்வினர், துறைக் காப்பாளர்கள், தங்கள் படைப்பில் மிகுந்த ஊக்கமும், நுண்ணிய கருத்தும் காட்டியுள்ளனர். ஒவ்வொரு கட்டுரையும் ஒரு ஆய்வுத் திட்டத்தையும், அதற்கான சான்றுகளைத் தொகுத்து, அலசி, அதில்கண்ட முடிவுகளையும் வடிக்கிறது. ஆங்காங்கே கையாண்ட நூல்களையும், மேற்கோள்களையும் உன்னிப்புடன் குறிப்பிட்டிருப்பது ஆய்வுத்தரத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் தமிழர் பண்பாட்டையும் வரலாற்றையும் பொதிந்து, சுமந்து, தாங்கி நிற்கும் நிலைக் கருவூலம். இவற்றை ஊன்றி ஆராய்ந்து உட்பொருள் கொண்டு, உண்மையைத் தேர்ந்து விளக்குவது ஒரு தொடர் பணி. வரலாற்றியல் முறைகளைப்பயின்று, வனைவதால் மட்டுமே இதை நிறைவேற்ற முடியும். மரபின் நினைவும், பழம் பண்பின் நிழலும் மறையுமுன்னமேயே இப்பணி ஈடேறுமானால், கருத்துத் தூய்மையும், சொல்லில் நாணயமும் மிளிரும்.

இந்நூல் இத்தேவைகளை வலியுறுத்துகிறது. இத்தேவைகளையும் இதன் பரப்பில் அடக்கியுள்ளது. வரலாற்றியல் அடைவுகளை அறிந்து செய்யும் வழியில் அமைந்துள்ளது.

இம்முயற்சியை மேற்கொண்ட இளம் ஆய்வாளர்களுக்கு என் பாராட்டு. அவர்களும் தொல்பொருள் துறையினரும் மேலும் இம்மாதிரியான அரிய செய்திகளும், சுவையான நிகழ்ச்சிகளும் நிரம்பிய பல நூல்களை வெளிக் கொண்டு வரவேண்டும் என்பது என் அவா.

புதுடில்லி
1-3-83

ரா. திருமலை

# பதிப்புரை

தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையினால் மாதந்தோறும் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் முதல்கட்டமாக தஞ்சாவூரில் நடந்த முதல் வரலாற்றுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இதில் இடம் பெறுகின்றன.

இவ்வாய்வுக் கருத்தரங்கில் நாற்பத்து ஆறு ஆய்வாளர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுப்படைப்புக்களை வழங்கினார்கள். இச்சிறப்பு மிக்க கருத்தரங்கு தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர். வி ஐ சுப்ரமணியம் அவர்கள் முன்னிலையிலும் மு. அருணாசலம் போன்ற தமிழ்ப் பேரறிஞர் தலைமையிலும் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19, 20 ஆகிய இரு நாட்களில் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளில் பெரும்பாலானவற்றை இங்கே தொகுத்தளிக்கின்றோம். சிறப்பான முறையில் இந்நூலை அச்சிட்டுத்தந்த அன்னை அஞ்சுகம் அச்சகத்தாருக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். இத்தொகுப்பில் ஆர்வம் கொண்டு நூலை வெளியிட்ட தமிழக வரலாற்றுப் பேரவைக்கு எங்களது நன்றிப் பெருக்கை உரித்தாக்குகிறோம்.

—பதிப்பாசிரியர்கள்

# பொருளடக்கம்

## கல்வெட்டு


ஒரு செப்பேட்டின் கதை
—சொ. சந்திரவாணன் எம். ஏ., ... 1

சட்டிச் சோறு —கி. ஸ்ரீதரன் எம். ஏ., ... 10

திருமலைநாயக்கர் செய்த சாதி மாற்றம்
—புலவர். செ. போசு எம். ஏ., ... 14

தெய்வீக மன்னன் செப்பேடு
—ச. செல்வராசு எம். ஏ., ... 18

நடுகற்களில் குலச் சின்னங்கள்
—சொ. சாந்தலிங்கம் எம். ஏ., ... 24

வீரப் பட்டணக் கல் —சுப்பிரமணியன் எம். ஏ., ... 32


## வரலாறு


அம்பிகையும் அம்மையாரும்
—வெ. வேதாசலம் எம். ஏ., ... 41

ஆதி செஞ்சி —ச. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., ... 53

இஞ்சிக் குடி —ஆ. பத்மாவதி எம். ஏ., ... 61

குப்பள நாயக்கன்
—மா. செந்தில்செல்வக்குமரன் எம். ஏ., ... 70

தஞ்சை மராட்டிய வம்சாவளியும்
போன்சுலே வம்ச சரித்திரமும்
—ம. இராசேந்திரன் எம். ஏ., ... 75

மலர் எடுத்த ஒரு கோயில்
—சு. இராசகோபால் எம். ஏ., ... 81

மனு நெறிகண்ட சோழன்
—குடவாசல். பாலசுப்ரமணியன் ... 86

பகையறுத்துக் கொண்ட சோழன்
—து. துளசிராமன் எம். ஏ., ... 90

## இலக்கியம்

உவமைத் தொடர் அகரவரிசை
—பொ. இராசேந்திரன் எம். ஏ., ... 94

புதிய நாடக வகை
—புலவர். சௌந்தரபாண்டியன் எம். ஏ., ... 100

ரஸகல்பத்ருமம் —கு. வெங்கடாசாரியார் எம். ஏ., ... 102

வாசவதத்தை —எஸ். சேஷாத்திரி ... 105

## அறிவியல்

தொன்மையான கற்சின்னங்கள் புனரமைப்புப்
பணிகள் பற்றிய ஒரு அறிமுகம்
—கோ. தேவராஜன் ... 108

வழி வழிவந்த பூச்சு முறைகள்
—வி. நாராயணசாமி ... 115

## பொதுவியல்

கொங்கு நாட்டில் கன்னி வழிபாடு
—இரா. செல்வராசு எம். ஏ., ... 118

சங்கு —ஆர். வசந்தகல்யாணி எம். ஏ., ... 122

சருகு அரிக்கும் சிந்திவலையர்
—இரா. ப. கருணானந்தம் எம். ஏ., ... 129

மங்கையர் வணங்கும் மயில் பண்டிகை
—கலைவாணன் எம். ஏ., ... 136

மன்னன் இறந்தால்.........
—அ. இராசேந்திரன் எம். ஏ., ... 139

சுவாமிதேவர் —சி. வசந்தி எம். ஏ., ... 145

பல்லவ ஈசுவரவர்மன்
—டாக்டர். இரா. நாகசாமி ... 148

A revolt by Nattars—நடன. காசிநாதன் எம். ஏ., ... 153

The Conservation of Wall Paintings at Madurai
Sri Meenakshi Sundareswarar Temple
—ஜே. லட்சுமணன் எம். எஸ்ஸி. ... 156

# ஒரு செப்பேட்டின் கதை

சொ. சந்திரவாணன், எம். ஏ.,
அரண்மனைக் காப்பாளர்,
தஞ்சாவூர்.

செப்பேட்டால் அறியலாகும் செய்திகள் பலப்பல. அவற்றால் எத்தனையோ சுவையான வரலாற்றை, நிகழ்ச்சிகளை அறிய முடியும். இதோ ஒரு சுவையான செய்தியைத் தருகின்ற செப்பேட்டைப் பற்றியும்; அதன் கால ஆய்வைப்பற்றியும் இவண் அறிவோம்.

**செப்பேட்டுச் செய்திச் சுருக்கம் :**

தஞ்சாவூரில் கிடைக்கப்பெற்ற ஒரு செப்பேடு சுவையான நிகழ்ச்சி ஒன்றைக் கூறுகிறது. நடைபெற்ற இடமும் தஞ்சை தான்; அதிலும் தஞ்சைக்கும் வல்லத்துக்கும் இடையே சாலையில் நடந்த நிகழ்ச்சி. சமயப் பொதுமையைச் சுட்டும் செய்தி:

''ஒரு பிராமணத்தியைக் கள்ளரிடமிருந்து பக்கிரிசாயபு என்பவர் காப்பாற்ற முயன்று கொலை செய்யப்பட்டார். தன்னால் சாயபு இறந்தார் என்ற காரணத்தால் பிராமணத்தி நாக்கைப் பிடுங்கிக் கொண்டு இறந்தாள்.

இறந்த அவ்விருவருக்கும் கோயில், குளம், கிணறு கட்டிய கள்வர்களையும் இன்ன பிற செய்திகளையும், ஒரு செப்பேட்டின் காலம் ஆகியவற்றை அறிவதும் மிக முக்கியமானதொன்றாகும்

இச் செப்பேட்டில் முன்னுரை இல்லை. குறிப்புரையும், முடிவுரையும் மட்டுமே அமைந்துள்ளன. முன்னுரையில் கூறப் படும் அரசப் பரம்பரைக்குப் பதில் காலம் மட்டுமே தரப்படு கின்றது.

எந்த மன்னனின் காலம் என்று சுட்டாமல் தமிழ் வருடம் மட்டிலுமே சுட்டப்படுகின்றது. அதாவது,

"ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் 13தேதி என்று தொடங்கி செய்திகள் தொடருகின்றன. மன்னரை நேரிடையாக இன்னார் என்று கூறாமல் இன்ன மன்னரின் நாளையிலே இதற்கு மானியம் இவ்வளவு என்று கூறுகின்றது.

> "விசைய ரகுநாத நாயக்கர்
> னலயிலே யிதுக்கு மானிய நிலம்.
> 1500 குளி........................."[3]

என்று மட்டும் கூறப்படுகின்றது. பின்னர் முடிவுரையுள் இக்கொடைக்குத் தீங்கு யாரும் செய்யக்கூடாது என்று கூறும் போதும்,

> "............யிந்தப் படிக்கு விசைய ரகு(நாத) நாயக்கரு ளெயிலே நடப்பி விச்சு நடந்து சொன்னுகற தற்ம(ம)யிதுக்கு மரிக்கத் தேவையில்லை"[4] என்று முடிகின்றது.

**செப்பேட்டின் காலம் :**

இச்செப்பேட்டின் முதல் வரியே ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் என்று தொடங்கினாலும் யாருடைய வருடத்தியது என்பது தெளிவாகக் கூறவில்லை. எத்தனையோ மன்னர்கள் காலத்தில் ஆனந்த வருடம் வருவதுண்டு. இங்கு சுட்டப்படும் ஆண்டுயாருடைய காலம் என்பதைக் காண்போம்.

இதில்,

> "..................மானியம் நஞ்சை நிலம்
> விட்டுக் கொடுத்தார்கள் நாயக்கர்"[5]

என்று வருவதால் நாயக்கர் காலத்தில் இச்செப்பேட்டின் செய்தி நடந்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றது.

**நாயக்கரில் யார் காலத்தியது :**

நாயக்கர் காலத்தியது என்றாலும் எந்த மன்னன் காலத்தியது என்று காணுதல் அவசியம். கி. பி. 1535 முதல் 1674 வரையான காலக் கட்டத்துள் ஆண்ட தஞ்சை நாயக்க மன்னர்களில்[6] ஒவ்வொரு அறுபது ஆண்டிலும் ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் வரும். எந்த மன்னரின் கால ஆனந்த வருடம் என்பதைக் காண வேண்டும்.

இச்செப்பேட்டில் கூறப்படும் விசைய ரகுநாத நாயக்கர் என்ற பெயர் கொண்டு பார்த்தால் அவரது ஆண்டான கி.பி. 1614 முதல் 1633 வரை[7]யில் (1614—1640 என்பாரும் உளர் [8]) உள்ளதில் 'ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் 13க்குச் சரியான ஆண்டாக 1614 நவம்பர் 12ம் தேதி சனிக்கிழமை அன்று இஃது எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால் செப்பேட்டின் வரிகள் 'விசைய ரகுநாதநாயக்கர் நாளையிலே யிதுக்கு மானியம்' என்று கூறுவதாலும் 'விசைய ரகுநாத நாயக்கர் நாளையிலே நடப்பிவிச்சு நடந்து கொள்ளுகிற தருமம்' என்று கூறுவதும் இறத்த காலத்தைச் சுட்டுவதாகத் தெரிகின்றது. அவ்வாறே கொண்டால் இச்செப்பேடு எழுதிய போது விசைய ரெகுநாத நாயக்கர் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதி. அவ்வாறாயின் இச்செப்பேடு கி.பி. 1614 ஆக இருக்க முடியாது. காரணம் மன்னன் அப்போது ஆட்சி செய்து வருகின்றான்.

**இதன் ஆண்டு எது? :**

கி. பி. 1614-ஆம் ஆண்டு இல்லை என்றால் இதற்கு அறுபது ஆண்டின் பின் ஆண்டும் ஆனந்த வருடம் வருகின்றது. அதாவது கி.பி. 1674-ஆம் ஆண்டு. அந்த ஆண்டில் மன்னன் யார் இருந்திருப்பார் என்றால் ரகுநாத நாயகருக்குப் பின் வந்த விஜயராகவ நாயக்கர் கி.பி. 1733—1673 என்று கொண்டால் அவனும் 1673ல் மதுரைச் சொக்கநாதருடன் ஏற்பட்ட போரில் இறந்தான்.

அவன் குடும்பத்தார்கள் தீயுட் புகுந்தனர் என்றும் தெரிகின்றது. அப்படிப் பார்த்தால் அவனும் இச்செப்பேடு எழுதிய போதில் இல்லை போலும். சிலர் இவன் 1674ம் ஆண்டு வரை இருந்தான் என்று கூறுவர்.[10].

கி. பி. 1574ல் எழுதியதாகவே கொண்டால் இதன் செய்திகள் விசைய ரகுநாதருக்குத் தெரிந்து அவனால் மானியம் கொடுத்து நடந்து வந்த செய்தியை விஜயராகவ நாயகருக்குப் பின்னோ அல்லது அவன் ஆண்டிலேயோ படியெடுத்து எழுதப் பட்டிருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டியுள்ளது.

ஆகவே இச்செப்பேடு 1674ம் ஆண்டு நவம்பர் மாதம்13ம்தேதி வெள்ளிக்கிழமை எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

**செப்பேட்டின் சிறப்புச் செய்திகள் :**
**சுட்டிய பாதைகள் :**

தஞ்சைக்கும் வல்லத்துக்கும் இடையே,

> ''தா(ர்)சா ஒரு பாதையில் வ(ா)ன வாசமான
> காட்டுப்பாதையில்''

இந்நிகழ்ச்சி நடந்தது என்றும்,

> ''இந்தப் பாதை காசி ராமேசுரத்துப் பாதை
> மக்கா மதினத்துப் பாதை''[11]

என்றும் குறிப்பிடப்படுகின்றது.

**இட்ட ஆணையும் பட்ட துயரமும் :**

கள்ளரிடமிருந்து காக்க முயன்ற பக்கிரிசாயபு,

> ''.................யிந்த பிறாமணத்தி
> உங்கள்க்கு தெயிவ மதுவாரி அ
> வளை தொடவேண்டா மென்று...'' [12]

ஆணை கூறினார். ஆனால் கள்வர்கள் பக்கிரிசாயபை குத்திக் கொன்றார்கள். தனக்காக சாயபு உயிர்விட்டார் என்பதறிந்து பிறாமணத்தியும் உயிர்விட்டாள். தெய்வத்தின் மீது ஆணை இட்டதால் கள்வர்களுக்கு கண் தெரியாமல் போனது.

**வேண்டலும் செய்த பணியும் :**

காமத்தால் கண்ணிழந்த கள்வர்கள் தவறுணர்ந்து வேண்டினர். எப்படி,

> ''நாங்கள் அரிஞ்சு அறியாமல் செ
> ய்து போட்டோம் எங்கள்க்கு
> கண்ணு வெளிச்சம் தந்திகளே
> ஆனு உங்கள்க்கு கோவில் கட்டிவிச்சு கெ
> ணரும் வெட்டிவிச்சுக் கொளமும்
> வெட்டி விக்கிறோம்'' [13]

என்றார்கள். உடன் கண்வெளிச்சம் கிடைத்ததும் அவ்வாறே செய்தனர் போலும்.

**கொடை :**

விசைய ரகுநாத நாயக்கர் நாளையிலே மானிய நிலம் 1500 குழி. அதுவும் நஞ்சை நிலம் விட்டார்கள். இந்த தருமம்,

"………கல்லும்
காவேரி பில்லும் பூமி வரைக்கும் நட
ப்பிவிச்சார்கள் நாயக்கர்கள்" [14]

என்பது தெரிகிறது.

**காப்பும் நடப்பும் :**

இத்தருமத்தைக் காப்பாருக்கும் அழிக்க முயல்வோருக்கும் எழுதும் இறுதிச் சொல் உறுதியாகக் கூறப்படுகின்றது.

"………………துலுக்க நாகப் பட்டவன்
யிந்த மானியத்துக்கு மரிச்சால்
பன்னியெ அறுத்துத் தின்னான் சூத்தர
ன்னானவன் மரிச்சால் கெங்கை
கரையில் பசுவை கழுத்தை அறு
த்தான்…………………" [15]

என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலத்தில் வருகின்ற,

"………………காய்கரிம
ரவெடை பிறவெடை அனுபொ
விச்சு கொண்டு போகவும் யிந்த
தற்ம அழிவில்லாமல் அனுபொ
விச்சுக் கொண்டுவரவும்" [16]

என்றும் கூறப்படுகின்றது.

**பிற செய்தி :**

இச்செப்பேட்டில் வருகின்ற சொற்றொடர்கள் பிழை மலிந்தும், கொச்சையாகவும் கையாளப்பட்டுள்ளன. சான்றாக,

"எனக்கொசர அல்லோ பக்கிரி சாய
பெ குத்திப் போட்டார்கள் யென்று அவள்
நாக்கெ பிடிங்கிக் கொண்டு செத்துப் போனாள்" [17]

**கல்வெட்டில் :**

இது போன்ற நிகழ்ச்சி கல்வெட்டில் ஏதேனும் உண்டா எனப் பார்ப்போம். கல்வெட்டில் 'நவகண்டம்' கொடுத்தலைப் பற்றிக் கேட்டிருக்கின்றோம். "கொற்றவையின் காலடியில் இருந்து கொண்டு தன் வாளால் தன் கழுத்தை அறிந்து கொடுத்ததைக் கூறும் கல்வெட்டு உண்டு'"[18] அந்நிகழ்ச்சியைப் படம் பிடிப்பதே போன்று பாடல் உண்டு.

"அடிக்கழுத்தின் நெடுஞ் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின் கைக் கொடுப்பாராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ"[19]

என்று பரணி கூறும்.

ஆனால் நாக்கரிந்து கொண்ட நிகழ்ச்சி உண்டா என்றால் இதோ ஒரு நிகழ்ச்சி.

கி. பி. 1738ம் ஆண்டு ஆந்திராவில் கிடைத்த ஒரு தெலுங்குக் கல்வெட்டுள்,[20] 'மல்லப்பா' என்ற ஒருவன் 'குரோகூரு' என்ற இடத்திலுள்ள வீரேஸ்வரர் முன்னர் தன் நாக்கை வெட்டிக் கொண்டான். சிவனிடத்தேகொண்ட பக்தி மேலீட்டால்,—"என் குலத்திலே பிறந்தவனும், பிறப்பவனும், கருவிலே இருந்து பிறக்க இருப்பவனுக்கும் ''சம்பு'' எனும் சிவனைத் தவிர வேறு தெய்வம் வேறில்லாதிருக்கணும்'' என்ற மிகுந்த நம்பிக்கையோடு நாக்கரிந்து கொண்டான். மீண்டும் 11 நாட்கள் கழிந்த பின்னர் அவனுக்கு நாக்குவந்து ஒட்டிக் கொண்டதாக (அல்) இறைவன் கொடுத்ததாக ஒரு செய்தியைத் தருகின்றது.

**ஓலைச் சுவடியுள் :**

மேற்சொன்னதே போன்று ஒரு ஓலைச் சுவடியுள்ளும் செய்தி வருகின்றது. "இருப்புலி நாவிதர் பட்டையம்"[21] என்ற அவ்வோலைச் சுவடியுள்ளும் இதுபோன்ற செய்தி வந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

"செங்கோல் முறைமை தவறாமல் நடத்திக் கொண்டு மதுரை தலத்துக்கு அதிபதியாகிய மதுரைய்யர் திருமலை நாயக்கர் அவர்கள் நாளையிலே......'' என்று தொடங்கிக் கூறிவரு

கின்ற செய்தியுள் இருப்புலி குமரன் என்ற வெள்ளாள நாவிதனை ஒரு வேட்டுவ நாவிதன் சதிசெய்து கொன்றதும் அவன் மனைவி புலம்பி தன்னுடைய,

> "15 நாள் குழந்தையை விட்டெறிந்து போட்டு ஊத்தலூர்க் கோட்டையிலிருந்து திருப்பூரு கோட்டைக்குவந்து மன்ருடியார் காலிலே விழுந்து, நாக்கைப் பிடிங்கிக் கொண்டு சாகிறேனென்று" சொன்னள். அதற்கு மன்ருடியாகும் நாக்கைப் பிடிங்கிக் கொண்டு சாக வேண்டியதென்ன மசப்பொட்டி மகளே"[52] சாகவேண்டாமென்று சொன்ன

தாக வருகின்றது.

**முடிவுரை :**

மேற்சொன்ன மூன்று நிகழ்ச்சியில் எண்ணம் ஒன்றா இருந்தது. முடிவிலே படிப்படியான மாற்றம் அமைந்த ஒரு பெண் 'நாக்கைப் பிடிங்கிக் கொண்டு சாக முயன்ற' எண்ணத்தைத் தடுத்து விட்டனர். மற்றொன்றில் தன் தளறா உறுதியால் நாக்கை அரிந்து கொண்ட ஆடவனுக்கு இறைவன் மீண்டும் நாக்கைக் கொடுத்தான். ஆனால் இவற்றினும் மேலாகத் தன் உயிரை இழந்த—அதுவும் தன்னைக் காக்க முயன்ற ஒரு முகமதியருக்காக உயிர் விட்டவள், அந்தப் பிராமணத்தி—என்று எண்ணும் போது வியக்காமல் இருக்க முடியாது.

**துணை செய்தவை :**


1. கல்வெட்டியல். பக். 131.
2. செப்பேட்டின் மூலம். வரி. 1.
3. ,, ,, வரிகள் 28 to 30
4. ,, ,, ,, 44 to 48
5. ,, ,, ,, 30 to 31
6. A Descriptive Catalogue of Telugu Manuscript—Introduction — Page. (13). XIII by P. P. S. Sastri -Editor
7. ,, ,, ,,
8. Historical Inscription of Southern India. by Robert Sewell. Page. 394.

9. 'Tanjai Purandhra Nayakaraja Charitramu' in English, by Sitaramaya—Page. 386 to 391.
10. H. I. S.I., Robert Sewell. Page. 394.
11. செப்பேட்டின் மூலம்—வரிகள்-2, 3, 33 to 35.
12. ,, ,, ,, 10 to 12
13. ,, ,, ,, 22 to 27
14. ,, ,, ,, 31 to 33
15. ,, ,, ,, 35 to 40
16. ,, ,, ,, 40 to 44
17. ,, ,, ,, 15 to 17
18. S. I. I. Voe. XII No. 106.—கம்பவர்மன் 20—ஆட்சி யாண்டு.
19. கலிங்கத்துப் பரணி—கோயில். 15.
20. A. R. E. 281 of 19 33, Preface. 78. Para. 60.
21. கலைமகள் மீனாட்சி சுந்தரம் தொல்பொருள் ஆய்வு மையம், ஈரோடு, - பட்டயங்கள்.
22. இருப்புலி நாவிதர் பட்டையம் — ஏடு 3.4. கை யெழுத்துப் பிரதி.

## இணைப்பு—1

### செப்பேட்டின் மூலம்

1. ஆனந்த ஷு கார்த்திகை மீ 13 வல்லத்து
2. க்கு தா சா ஒரு பாதையில் வான வாச
3. மான காட்டுப் பாதையில் தஞ்சாவூரு
4. யிந்து வல்லத்துக் பக்கிரிசா°பொ
5. கச்சே ஒரு பிருமனத்திம்மாள் வல்ல
6. த்தியிருந்து தாஞ்சா வூர்க்கு பொனுள்
7. அப்பொ கள்ள[ர்] வந்து பிருமநித்தியெ பரி
8. க்க வந்தா அப்பொ ஓடிவந்து பக்கிரிசா
9. யபு காலுலெ விளுந்தான் பக்கிரிசா
10. யபு யிருந்து கொண்டுயிந்த பிருமனத்தி
11. உங்கள்க்கு தெயிவ மதுவாரி அ
12. வளெ தொட வெண்டா மென்று செ
13. ன்னாற் சொன்ன விடத்தில் பக்கிரி சாய
14. பெ குத்தினார்கள் அந்த பிருமணத்தி

15. எனக் கொசர அல்லொ பக்கிரி சாய
16. பெ குத்தி பொட்டார்கள் யென்று அவள்
17. நாக்கெ பிடிங்கிக் கொண்டு செத்துப் பொனா
18. ள் கள்ளருக்கு யெல்லாம் கன்னு தெரி
19. யாமல் பொச்சுது னாலு சாமத்
20. துக்கும் கன்னு தெரியாமல் பொச்
21. சுது அப்பொ கல்லர் யிரு(ந்து) கொண்டு
22. நாங்கள் அரிஞ்சு அரியாமல் செ
23. ய்து பொட்டோம் யெங்கள்க்கு
24. கன்னு வெளிச்சம் தந்திகளெ
25. ஆனா உங்கஞக்கு கொவில் கட்டிவிச்சு கெ
26. னரும் வெட்டிவிச்சு கொளமு
27. ம் வெட்டி விக்குறொம் யிந்த செ(தி)
28. விசைய ரெகுநாத னாயக்கர்
29. னாலயிலே யிதுக்கு மானிய நிலம்
30. 1500 குளி மானியம் நஞ்சை நி
31. ல விட்டு குடுத்தார்கள் னாயக்கர் கல்லும்
32. க(ா)வெரி யில்லும் பூமி வரைக்கும் நட
33. ப்பி விச்சார்கள் யிந்தப் பாதை க
34. ாசி றாமெசுரத்துப் பாதை மக்கா மதி
35. னத்து பாதை துலுக்க நாக பட்டவன்
36. யிந்த மானியத்துக்கு மரிச்சால் ப
37. ன்னியெ அருத்து தின்னான் சுத்திர
38. ன்னாவன் மரிச்சால் கெங்கை
39. கரையில் பசுவெ கழுத்தெ அரு
40. த்தான் யிந்த தற்மம் காய்கரி ம
41. ரவெடை பிற வெடை அனு பொ
42. விச்சு கொண்டு பொகவும் யிந்த
43. தற்ம அழிவில்லாமல் அனு பொ
44. விச்சு கொண்டு வரவும் யிந்தப
45. டிக்கு விசைய ரெகுனயக்கஞ
46. ளெயிலெ நடப்பி விச்சு நடந்
47. து கொள்ளுகற தற்ம[ம்] யிது
48. க்கு மரிக்க தெவயில்லெ.

# சட்டிச் சோறு

து. ஸ்ரீதரன் எம். ஏ.,
பதிவு அலுவலர்,
சென்னை. 28.

கல்வெட்டுக்களில் சட்டிச்சோறு, எச்சோறு, புளிச்சோறு, திங்கட் சோறு, வரிச்சோறு, வெட்டிச்சோறு என்று பல சொற்றொடர்கள் வருகின்றன. எச்சோறு என்பது ஒரு வகை வரியாகும்.

சட்டிச் சோறு என்பதற்கு கோயில் வேலைக்காரர்களுக்கு கொடுக்கப்படும் உரிமை பிரசாதம் என T. N. சுப்ரமணியம், தென்னிந்திய கோயில் சாசனங்களில் விளக்கம் கூறுகிறார். திருவிழாவிற்கு வரும் அடியார்களுக்கும், சிவபிராமணர்களுக்கும் அளிக்கப்பட்டதாக பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**திருவண்ணாமலைக் கல்வெட்டு :**

முதலாம் இராஜேந்திர சோழன்காலத்தில் திருவண்ணாமலைக் கோயிலில் பல பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இவனுடைய பணிமகன் ஒருவன் 'பாண்டிய உதய திவாகரன்' என்பவன் சோழமண்டலத்து அருமொழித்தேவ வளநாட்டு ஓர்வலக் கூற்றத்து ராஜராஜ நல்லூரைச் சேர்ந்தவன். திருவண்ணாமலை நாதர் கார்த்திகை மாதம் திருவேட்டை திருவிழாவிற்கு எழுந்தருளும் பொழுது இறைவனுக்குப் படைக்கவும், அடியார்க்கு 'சட்டிச்சோறு, பிரசாதம் கொடுக்கவும் ஏற்பாடு செய்தான். ஏழு கழஞ்சு பொன் தானமளித்தான். 4 கழஞ்சை புலியூர் என்னும் ஊர் சபையார் பெற்றுக்கொண்டு இதிலிருந்து ஆண்டுதோறும் இறைவனுக்கு அமுது படைப்பதற்காக நெல் அளிக்க ஒப்புக் கொண்டார்கள். இந்த நெல் கொண்டு திருவமுது, 5 கறி, புளிங் கறி, மிளகு, உப்பு, சீரகம், நெல், தயிர் எட்டு வாழைப்பழம் 20 பாக்கு, எண்பது வெற்றிலை, விறகு, வாழைக்குருத்து,

குசக்கலம், கலமிடும் குசவன், முதலியவற்றுக்கு கொடுக்க ஏற்பாடு செய்தார்கள்.

மீதம் உள்ள 3 கழஞ்சு பொன்னை வயிரமேக சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர்சபை பெற்றுக்கொண்டது. அதற்கு வட்டியாக ஆண்டு தோறும் நெல் அளிக்க ஒப்புக்கொண்டது. இதிலிருந்து திருக்கார்த்திகை திருவிழாவில் திருவிழாவின்போது அடியார்களுக்கு 'சட்டிச்சோறு' கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டது.

சட்டிச் சோறு என்றால் ஒரு சட்டிக்கு 2 நாழி அரிசி, புளிங் கறி, மிளகு, சீரகம், உப்பு, நெல், தயிர், நாலுபாக்கு முதலியவை கொடுக்க வேண்டும். இது சமைக்க விறகுக்கும் விறகு கொண்டு வந்து தருபவருக்கும், சட்டி மூடிக் கொடுக்க வாழையிலைக்கும் நெல் கொடுக்க வேண்டும். இதற்காக குசவன் 20 சட்டி, பேரகல் நாற்பது, சிற்றகல் இருபது கொடுக்க வேண்டும் எனவும், ஏற்பாடு செய்யப்பட்டது. சட்டிச்சோறு எவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதை இக்கல்வெட்டு விரிவாக எடுத்துரைக்கின்றது.

குத்தாலம் கல்வெட்டு :

சட்டிச்சோறு பற்றி மாயவரம் வட்டம் குத்தாலம் உத்தர வேதீஸ்வரர் ஆலய கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"இச்சொந்நவாறறிவார் கோயில் உடையார் உச்சியம் பொதைஸந்தி தெசாந்திரிகளாய் வந்த சிவயோகிகளுக்கு இவன் வைத்த சட்டிச்சோறு ஒன்றுக்கும், அரிசி இரு நாழி நெல்லைஞ் நாழியும், கறி மிளகு பொடி ஒன்றுக்கும், புழுக்குக்கறி ஒன்றுக்கும் நெல்லு நாழி உழக்கும், விறகுக்கு நெல் உறியும், உப்புக்கு நெல் ஆழாக்கும், பாக்கு வெற்றிலை எட்டுக்கும் நெல்லுரி யாழாக்குக்கும் ஆக நாள் ஒன்றுக்கு நெல்லு குறுணியும் ஆக இக்காசு இருபத்தைஞ்சுக்கும் இப்பலிசை நெல்லு முப்பதிந் கலத்தாலும் இச்சட்டிச்சோறு ஒன்றும் சந்திராதித்தவர் சாஸ் வதமாக இச்சட்டிச்சோறு குடுக்ககடவோமாக கல்வெட்டு வித்துக் கொடுத்தோம்.

இக்காசிலேய் இவ்வூர் குசவன் சொதிமாணிக்க வெட் கோவந்வ...சை செருத்து சந்திராதித்தவல் சட்டிஇட குடுத்த காசு ஒன்று. 2

இத்தானம் அளித்தவன் கங்கை கொண்ட சோழபுரத்து உள்ளாலைப் பெரிய அங்காடி வியாபாரி வெண்காடன் ஆடவல் லான் என்பவன் ஆவான்.

சட்டிச் சோறு தேசாந்திரிகளாய் வந்த சிவயோகிகளுக்கும் அளிக்கப்பட்டது. இதற்கு தானமாக அளிக்கப்பட்ட காசில் குசவன் சொதி மாணிக்க வெட்கோவன் என்பவன் சந்திராதித்த வரை சட்டிஇடக் கொடுத்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வெட்கோவர் தொழில் தொடர்ந்து நடைபெற இத்தானம் உதவியளிக்கும்.

**ஆத்தூர் கல்வெட்டு :**

திருச்செந்தூர் வட்டத்திலுள்ள ஆத்தூர் கோயிலிலுள்ள மாறவர்மன் விக்கிரமசோழ பாண்டிய தேவனின் 25-ம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு சட்டிச் சோறு பற்றி கூறுகிறது.

"இக்கொயில் உச்சியம் பொழுது சந்தியில் சிவயோகி களுக்கும் நித்தமும் ஒடுக்கிக் குடுக்க கடவ சட்டிச் ஒன்றினுக்கு இடுமரிசியிருநாழிக்கும் பொழிகறி அஞ்சுக்கும், நெய் ஒரு பிடிக்கும், தயிருக்கும், உப்புக்கும், புளிக்கும். மிளகுக்கும் பாக் கிரண்டிற்கும், வெற்றிலையஞ்சுக்கும், சட்டிச் சோறுறிடுவார்க் கும் விறகிடுவானுக்குமாக நாளொன்றினுக்கு நெல்லு குறுணியி குநாழியாக......"[3]

இதே போன்று சட்டிச்சோறு அமாவாசை தொறும் அளிப்ப தற்கு நெல் தானமாக அளிக்கப்பட்டதாக விக்கிரம சோழனின் 5 ஆம் ஆண்டு திருவிடைமருதூர் கல்வெட்டு கூறுகிறது. காஞ்சி புரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் சட்டிச்சோறு, வழங்க பெற்ற தாக அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட கல்வெட்டுக்களை நோக்கும்பொழுது திருவிழாக்களின் போது வந்த அடியவர்களுக்கும், தினந்தோறும் கோயில்களில் சிவயோகிகளுக்கும் சட்டிச் சோறு அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. சட்டிச் சோறு என்றால் அதற்கு என்னென்ன பொருட்கள் வேண்டும் என்பதனையும் கல்வெட்டுக்கள் குறிப்பிடு கின்றன. இது இன்று உணவு விடுதிகளில் வழங்கப்படும் அளவு சாப்பாடு போல இருந்திருக்க வேண்டும்.

இன்றும் சிவன் கோயில்களில் அளிக்கப்படும் உணவிற்கு 'பட்டை' என்றும் விஷ்ணு ஆலயங்களில் அளிக்கும் உணவிற்கு

'உண்டைக்கட்டி' எனவும் அழைக்கப் படுகின்றது. கொங்கு நாட்டு பகுதிகளில் திருமணம், கோயில் விழாக்களில் வேலை செய்பவர்களுக்கு 1 இலைச் சோறு அளிக்கப்படும் பழக்கம் இருந்து வருகிறது. எனவே சட்டிச் சோறு என்பது ஒரு குறிப் பிட்ட அளவு சாப்பாடு என்பது உணரப்படுகிறது.

சட்டிச் சோறு என்பது குறிப்பிட்ட அளவு என்பதை மேலும் சில கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

பேரூர் கோயில் கல்வெட்டில்,

"தில்லை நாயகபட்டநெந் பெரூவிருக்கும் கைக்கோளரில் குலையந் பொத்தியந் செல்வ ஞானசம்பந்தன் பக்கல் நான் கொண்டு இந்நாயனூர் கொயிலிலே என் உபாதி காணியில் நித்த மிருநாழி அரிசி சோறு யிரண்டுசட்டியிட்டு வருவெநாகவும் இந் நாயனூர் கோயிலில் குடங்கொண்டு குச்சிபுகுவார்க்குச் சட்டி யிரண்டு மிட்டு வருவேநாகவும்.

உடுமலை வட்டம் கடத்தூர் மருந்திஸ்வரர் கோயில் கல் வெட்டில்,

"நாள் ஒன்றுக்கு அமுதுபடி அரிசி இருநாழியில் நாழி சட்டி யிட்டு வருவதாகவும்' எனக் குறிப்பிடப் படுகிறது.

திருமழபாடி கல்வெட்டில் "திருவமுது பொநகப்பானை ஒன்றுக்கும் கறியமுது சட்டி ஒன்றுக்கும்" என்று குறிப்பிடப் படுகிறது.

மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகளால் உணவு விடுதிகள் இல்லாத அக்காலத்தில் தேசாந்திரிகளாய் வருபவர்களுக்கும், சிவனடியார்களுக்கும் சட்டிச்சோறு அளிக்கப்பட்டு வந்ததை அறியலாம். அச்சட்டிச் சோறும் ஒரு குறிப்பிட்ட அளவுள்ளதாக வழங்கப்பட்டு வந்ததாயும் அறிகிறோம்.

**பயன்படுத்திய நூல்கள் :**


1. திருவண்ணாமலையில் முதல் இராசேந்திர சோழன் காலப் பணிகள். இரா நாகசாமி—அருள்மிகு அண்ணாமலையார். திருக்கோயில் கும்பாபிடேக மலர்—4.4. 1976.
2. S. I. I. vol XXiii 486 (286 of 1907)
3. S. I. I. vol Xiv—191 A. R. NO : 393 of 1929-30.

# திருமலை நாயக்கர் செய்த சாதி மாற்றம்

புலவர் செ. போசு,
எம்.ஏ. டிப்.எப்ஜி. ஆர்க்,
டிப்.இன். ஜர்னலிசம்,
கல்வெட்டாய்வாளர்,
மதுரை.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம் மங்கலரேவு என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரு. வி. இராமசாமி நாயுடு என் பவரிடம் இரு செப்புப் பட்டயங்கள் உள்ளன.

அவற்றுள் ஒன்று 'சாதி மாற்றம்' செய்யப்பட்ட நிகழ்ச் சியைத் தெரிவிக்கிறது. இந் நிகழ்ச்சி திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் நிகழ்வுற்றிருக்கிறது.

பட்டயம் கோர்ப்பதற்கு வசதியாக மேல்பகுதியின் நடுவில் துளையிடப்பட்டுள்ளது. கூட்டெழுத்துக்கள் [க்ர, த்ர] காணப் படுகின்றன. செப்பேட்டின் எழுத்தமைதி கி. பி 17—ஆம் நூற் றாண்டைச் சார்ந்ததாக உள்ளது.

செப்பேட்டுச் செய்தி வருமாறு:

திருமங்கலம் அருகே உள்ள சின்னாரெட்டி பட்டியைச் சேர்ந்த சிந்துரெட்டி என்பவன் சுப்புலாபுரம் என்னும் இடத் திற்குச் சென்று சின்னாரெட்டி பட்டியை விற்பனை செய்யப் போனான். அப்போது அதே ஊரைச் சேர்ந்த சோலப்பரெட்டி என்பவன், 'கிராமத்தை நானே வாங்கிக் கொள்கிறேன், என்று கேட்க அதற்குச் சிந்துரெட்டி, 'நீ குரவரெட்டி; அதனால் உனக்கு விற்க மாட்டேன்' என்று இகழ்ச்சியாகப் பேசுகின்றான்.

இந்த நேரத்தில் திருமலை நாயக்கர் நல்லமறம் கோயிலில் சீமை பார்ப்பதற்காக வந்திறங்கி இருந்தார். சோலப்பரெட்டி

திருமலை நாயக்கரிடம் சென்று நடந்ததைக் கூறிப் பாதகாணிக் கையாக 60 கழஞ்சு பொன் வைத்துக் கண்டு கொண்டான்.

உடனே திருமலை நாயக்கர் பாளைக்காரனாகிய முத்து லிங்கத்தும்பிச்சினாயக்கரை வரவழைத்து நியாயத்தைஆராய்ந்து பார்த்து, சிந்துரெட்டி மீது குற்றம் சாட்டி அவன் கட்டிய வீடும், 3 சங்கலி நிலமும், 4 காணி நன்செய் நிலமும் வைத்துக் கொண்டால் போதுமானது என்று கூறிச் சோலப்ப ரெட்டிக்குச் சோலப்பநாயக்கன் என்று பட்டம் கொடுத்து நாட்டாண்மை முதன்மையும், தீர்த்தம், திருமலை முதலானவற்றில் தலைமை யும் கொடுத்து ஆணையிட்டான்.

மேலும் சிந்துரெட்டி, திருமணச் செலவுக்கு 30 கழஞ்சு பொன், நெல் 4 பொதி, விறகு 2 பொதி, ஏர்மாடு 1 ஆகியவற் றைப் பெற்றுக் கொண்டதால் சின்னா ரெட்டி பட்டியில் சிந்து ரெட்டிக்குப் பாத்தியம் இல்லை என்று சோலப்ப நாயக்கனுக்கு எழுதிக் கொடுத்து விட்டான்.

இச் செப்பேட்டின் சாட்சியாகக் கொட்டாணிபட்டி வெள்ளை நாயக்கன், நல்லமறம் சூசயதேவன் ஆகியோர் குறிப்பிடப் பட்டுள்ளனர். திருமலைநாயக்கர், முத்துலிங்கத் தும்பிச்சி நாயக்கர், சிந்துரெட்டி ஆகியோர் கையொப்பமிடப் பட்டுள்ளது. பட்டயம் செய்தவன நல்லமறம் குமராண்டி ஆச்சாரி என்று குறிக்கப்பட்டுள்ளான்.

### பட்டயம்

1. உ ராம செயம்
2. ருச்சிதா ஹு ஆடி மீ 9-ஆம் தேதிசின்னாரெட்
3. டிபட்டி சிந்துரெட்டி சுப்புலா பறத்தில்ப்
4. போய் ஊரை விக்கப் போனான் அப்போது
5. ஷெயூற் சோலப்பரெட்டி நான் கிரமம் வா
6. ங்கிக் கொள்கிரேனென்று சொன்னான்
7. உனக்கு விக்கிரதில்லையென்று குரவரெட்டி எ
8. ன்று சோலப்பரெட்டியைப் பார்த்து யிகள்
9. ச்சியாய் சொன்ஞன் ஷெயான் கோபங் கெ
10. ாண்டு கர்த்தருகிய மகருச மானிய ஸ்ரீ திரி
11. திருமலை ஞயக்கறவற்கள் நல்லமறம் கோவ

12. விலில் சீமைபாற்க்க வந்திரங்கி யிருந்தா
13. ற்கள் அப்போது சோலப்ப ரெட்டி சமுகத்தி
14. ல் பிறாது சொன்ன சிந்துரெட்டி ஊரை
15. விக்கப் போனான் நான் கேட்டேன் வி
16. த்தேசமாய்ப் பேச்சுப் பேசி உனக்கு விக்கிரதி
17. ல்லையென்று சொன்னான் றாசாவாகிய திரு
18. மலைனாயக்கறவர்களுக்கு பாதகாணிக்கை
19. டெ 60 பொன் வச்சுக் கண்டு கொண்ட
20. ரன் ஷ்டி றாசாவானவற்—முத்துலிங்கத்தும்
21. பிச்சினாக்கரை வறவளைச்சு யிறாபேற் நாய
22. த்தை யாற்ப்பதில்—சிந்துரெட்டி பேரில் கு
23. த்தம் சிமந்து கட்டின வீடும்—3—சங்கிலி நி
24. லமும்—நஞ்சை—4—காணி வச்சு சீவனம் பண்
25. ணிக் கொண்டிருக்கவும். சோலப்பரெட்டிக்கி
26. சோலப்பனுக்கரென்று கற்த்தாக்களரிய பா
27. ளையக்காறரிய னுக்கமாரென்ற பட்டங் குடுத்த
28. து சோலப்பனாக்கருக்கு நாட்டாமை முதமை
29. தீத்தம் திருமாலை சகலமும் தாம்பூர சாதினப்
30. பட்டயத்தில் உத்தறவு. சிந்துரெட்டிக்கி கலியா
31. ணச்சிலவு ஷ்டி 30 பொன் நெல்லு—4பொ
32. தி—வறகு—2—பொதி யெருமாடு யிவளவும்
33. வாங்கிக் கொண்ட படியினாலே சின்னாரெட்
34. டிபட்டியைத் தொட்டு சிந்து ரெட்டிக்கி பாத்திப
35. ம்யில்லையென்று எழுதிக்குடுத்தது. சோலப்

## II

36. பனாக்கனுக்கு யிதை யாதாமொருதற் அடி
37. அளித்தால் புதுநயினர் பெருமாள் கேள்
38. ப்பாற்—யிதற்கு சாட்சி கொட்டாணிபட்டி
39. வெள்ளைய னுக்கன் நல்லமறம் சூரிய தேவ
40. ன் யிந்தப் படிக்கி கற்த்தருகிய திருமலை னாய்க்
41. கறவற்கள் திருக்கறத்தில் ஒப்பம்—பாளைய
42. காறன் முத்திலிங்கத் தும்பிச்சி னுக்கற் கய்
43. யி ஒப்பம் சிந்துரெட்டி கய்யிஒப்பம் யி
44. ந்தப் பட்டயஞ் செய்தவன் நல்லமறம் கும
45. றாண்டி ஆசாரி .

இச் செப்பேட்டின் மூலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டளவில் ஒரு சாதிக்குள்ளேயே உயர்வு, தாழ்வு மனப்பான்மை கொண்டு வாழ்ந்து வந்தமை அறியப்படுகிறது. ரெட்டி இனத்தாருள் குரவரெட்டி என்ற பிரிவு கீழானதாக எண்ணப்பட்டு, அதே சாதியினர் தாம் நலிவுற்ற காலத்தும் தம் சொத்தை பொருளை தம்முள் கீழான அப்பிரிவினருக்கு வழங்கும் வழக்க மின்மை இருத்தலும் இங்கு சுட்டப் படுகிறது.

சாதியிலே உயர்வு-தாழ்வு பார்த்த போதும், திருமலை நாயக்கர் இச் சாதிமனப்பான்மையினை அறவே வெறுத்து, குரவ ரெட்டி என்று அழைக்கப்பட்டவனை தன்னுடைய சாதிப் பெயர் சூட்டி—நாயக்கன் என்ற பட்டம் கொடுத்துத் தன்னுடைய நிலைக்கு அவனை உயர்த்தி விடுகின்றான். இச் செய்கையின் மூலம் திருமலைநாயக்கர் சாதியில் நாட்டமிலாதவராக இருந்தார் என்று எண்ண இடம் தருகிறது.

இக் காலத்தே ஒரு வழக்கை நீதிமன்றத்து எடுத்துரைக்குங் கால் பணம் செலுத்துவதைப் போன்று, திருமலைநாயக்கரிடம் சென்று 60 கழஞ்சு பொன் பாதகாணிக்கையாக வைத்துத் தன் குறை கூறிய நிகழ்ச்சியும் இங்கு காட்டப் பட்டுள்ளது.

# தெய்வீக மன்னன் செப்பேடு

திரு. ச. செல்வராசு எம். ஏ.,
தொல்பொருள் அலுவலர்,
சிதம்பரம்.

சோழப் பேரரசு நிலவிய காலங்களில் தென்னாற்காடு மாவட்டத்து தென் மேற்கு பகுதி மலையமான் நாடாக விளங்கியது. சங்ககாலத்து மலையமான் நாட்டின் எல்லையை அறிய முடியவில்லை. ஆனால் அம்மலைய மன்னர்கள் திருக் கோவலூரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்துள்ளனர். இம் மலையமான் நாட்டிற்கு ''ஜனநாத வளநாடு'' என்ற வேறு பெயரும் உண்டு. ஜனநாதன் என்பது முதலாம் இராசராசனின் சிறப்பு பெயர்களில் ஒன்று. சங்க காலத்தில் மலையமான் திருமுடிக்காரி, சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்ற இருவர் பற்றிய செய்திகளே சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது.

பாரி இறந்த பின்னர் அவரது பெண்களில் ஒருத்தியை மலைய மன்னன் மணம் புரிந்ததாக செவிவழிச் செய்தி ஒன்று உளது. இம் மன்னனையே தெய்வீக மன்னன் என்று கூறுவர். தமிழக வரலாற்றில் இப்பெயருடைய மன்னன் எவருமில்லை என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. ஆனால் தெய்வீகனின் திருமணத்திற்கு நெய்யும், பாலும் வேண்டும் என்று அவ்வையார் பெண்ணையாற்றை நோக்கிப் பாடியதாக ஒரு தனிப் பாடலுண்டு. சங்ககாலத்தில் இப்பெயருடைய மன்னன் இருந்ததற்கு சான்றுகள் இல்லையென்பர்.

இக்கருத்தை மறுக்கும் வண்ணம் தற்பொழுது தமிழ் நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை ஓர் செப்புப் பட்டயத்தைக் கண்டு பிடித்துள்ளது. இச்சாசனம் முழுவதும் தெய்வீக மன்னன் பற்றியச் செய்திகளை கூறித் தமிழக வரலாற்றுக்கு உதவுகின்றது.

**சாசனம் கூறும் செய்திகள் :**

இச்சாசனம் தெய்வீக மன்னன் அளித்த கொடையைப் பற்றி கூறுகின்றது. தெய்வீகன் சிதம்பரத்தில் திருப்பாற்கடல் நந்தவனம் மடம் ஒன்றும், சதுர்முடி வினாயகர் கோயில் ஒன்றும் கட்டி அதனை சிறப்புற நடத்தி வருதல் வேண்டும். என்றும்; இம்மடத்து தர்மங்களையும், அதன் வழி முறைகளையும், கூறி நன்கு நடத்தி வருமாறும் 'இச் சாசனத்தை எழுதிக் கொடுத்துள்ளான். இதில் தெய்வீகனின் பிறப்பு, வளர்ப்பு, வெற்றிகள், வீரம் ஆகிய வற்றைக் கூறி நிற்கின்றது. இப்பட்டயம் தெய்வீக மன்னனால் சிதம்பரத்தில் வாழும் சொக்கலிங்கத் தம்பிரானுக்கு வருமங்குடி நூற்றுக்கால்மண்டபத்தில் எழுதி, சிவ கங்கைத் தீர்த்தம் அள்ளி, தீர்த்தம் பண்ணிக் கொடுத்தது என்று குறிக்கப்படுகிறது.

**சாசனத்தில் சிதம்பரத்தின் கதை :**

தெய்வீகன் அளித்த கொடையைப் பெற்ற நகரம் சிதம்பரம். அதன் அழகும், செழிப்பும் கூறுமிடத்து:

"சோழ நாடு வடதன்யான ராஜாதிராஜ ராஜ வள நாட்டு வெண்ணையூர் நாட்டு வழுதலம் பட்டு சாவடி சூழ்ந்த திருவணை முத்தா நதிக்கு தெற்கு சஞுள சாசரமான சமுத்திரத்திற்கு மேற்கு, உபய புண்ணிய காவேரிக்கு வடக்கு, வீர நாராயன சோழன் ஏரிக்கு கிழக்கு, மத்திய காவேரி பிரதாப ஜல சவுக்கிய நானா வித போக விளவு கொண்ட பூஸாரமுள்ள மருத நிலத்தில் சிங்காரமான காவண நந்தன வனங்கள், ஒடைத் தடாகங்கள் அனேகஞ் சூழ்ந்து விளங்கி இருக்கும் தில்லை வன நகர மத்தியில் அமைந்த நாற்கோபுரமும், ஐந்து சபைகளும் கொண்டு தொண்ணூற்றி ஆறு சாதிகளுக்கு மடம், நந்தன வனம், பணி விடை. கட்டளை, உபயம், அன்னதானம் முதலானதும் நடந்து வருகின்று" என்று கூறுகின்றது.

மருத நிலத்து செழிப்பும், தில்லையின் எல்லையை தொட்டாலே தொல்லை தீருமென்பார் கருத்திற்கு ஒப்ப அன்னதானங்களும், நந்தன வனங்களும் நிறைந்து சிறந்து விளங்கிய சிற்றம் பலத்தில் தெய்வீகன் தன்னால் ஓர் மடமும் கோயிலும் நிறுவி இத்தர்மம் செவ்வனே நடக்க விரும்பினான். அவ் விருப்பத்தினை ஸ்தலத்து பெரியோர்களிடம் விண்ணப்பஞ் செய்தான். அவரின் விண்ணப்பத்தை சிதம்பர ஸ்தல பெரியோர்கள் இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டனர்.

**மடத்திற்குக்குரிய நிலமும் பொருளும் :**

நந்தவனம் மடம் கட்டுவதற்கும் கோயில் எழுப்புவதற்கும் சிதம்பரம் கோயிலின் வடக்கு கோபுர வீதியில் (500) குழி நிலமும், பொன் 50 ம் கொடுக்கப்பட்டது.

**மடத்தின் விதி முறைகள் :**

மடம் சிறம்புற நடைபெற வேண்டும் என்பதற்காக அம் மடத்தை நடத்த சிற வழிமுறைகளை அமைத்துக் கொடுத்துள் ளார்கள். இம் மடத்தினை உபயோகிப்பவர்களிடம் பெற வேண்டிய தொகையின் அளவுகளை தகுதிக்கேற்ப நிர்ணயத்து உள்ளனர். அவையாவன :

> மடத்திற்கு வரும் தன்மைகத் துரைமார்களுக்குப் பணம் பத்தும் குதிரை பெற்ற பேருக்குப் பணம் ஐந்தும், அனைத்து நெய் வெத்தியம், திருவிளக்கு, வில் வாற் சனைக்குப் பணம் ஒன்றும், மடத்திற்குப் பணம் ஒன்றும், ஆட்கள் கூட்டு ஒன்றுக்குப் பணம் இரண்டும், திருமணம் செய்வதற்குப் பணம் ஒன்றும் இப்படி தம்பி ரான் வந்தவுடன் படி அரிசி, தாம்பூலம்: கொடுத்து அபிமானத்து கொள்ளவும்'' என்று குறிப்பிட்டு உள்ளனர். இவ்வாறு விதி முறைகளை அமைத்து அச்சா சனம் எழுதப்பட்டுள்ளது.

**சாசனம் வழங்கப்பட்ட இடம் :**

இத் தர்மத்தை நடத்தும் பொருட்டு சொக்கலிங்கத் தம்பி ரான் என்பவருக்கு மேல்மடத்து முதலியார், கீழ் மடத்து முதலி யார்- மாளிகை மடத்து முதலியார், ஆதி சண்டேஸ்வரன், சபா நடராச திட்சதர், கனக சபாபதிப் பிள்ளை பேரய்யா கேநய்யார், ஸ்தலத்து குரு நமச்சிவாயர், மற்றும் உறவினர் முறையானவர்கள் அனைவரும் கூடி வருமங்குடி நூற்றுக்கால் மண்டபத்தில் எழுதப்பட்ட தாமிர சாசனம், இச் சாசனத்தை சிவகங்கை தீர்த்தம் அள்ளி, தீர்த்தம் பண்ணி அருளினோம் என்று கூறுகின்றது,

**தெய்வீகன் வரலாறு:**

நாற்பத் தொண்ணூராயிர ரிஷிகளும் அமைந்து தபசு பண்ணு கின்றபோது வஞ்சனை, கோபதை என்கின்ற இரண்டுராக்சத பெண்கள் மிருகண்ட மகாமுனியின் இடத்தில் வணங்கி எங்க

னுக்கு புத்திரவரம் வேண்டும் என்று கேட்க, அப்படியே கொடுத் தோம் என்று கூற சிரசும், ஆறுகைகளும் பிளந்தவாயும். சிங்க பல்லும் கரிய நிறமும் கொண்டு இரண்டு ராக்கதர்கள் காரண்டன், வல்லூரன் பிறந்தார்கள்.

காரண்டன் பொறையூர் குன்றிலும், வல்லூரன் திருவண்ணு மலையிலும் இருந்து கொண்டு ராஜ்சிய பாரம் செய்து வருகை யில் ரிஷிகளுடைய தபசுகளையும் ரிஷிப் பத்தினிகள் கற்பையும் அழித்து, நரபலி கொண்டார்கள். இவ்வாறு இருக்கையில் பூமியில் எங்கும் மழை இல்லாமல் போனது.

இதனைக் கண்ட தேவர்களும், முனிவர்களும் பயந்து, சிவ பெருமானிடம் முறையிட அவர் குமாரன் வேலாயுத சாமியிடம் வேண்டுங்கள் என்றுகூற வேலாயுத சாமியிடம் வேண்டி நின்றனர். அவர் கையில் உள்ள வேலை எரிய அந்த வேல் அற்சவனத்தில் வந்து நின்றது, அங்கு முனிவருடன் சூழ்ந்து இமயவரும் மகிழ யாகம் வளர்த்திடும் வேலையில் பசும் புரவி மேற்கொண்டோர் அரசன் தோன் றினுன். அவ்வரசன் செம் பச்சைக் குதிரையும், முல்லை கடப்பம், அசோகம், கொன்றை, தும்பை, தாமரை, நொச்சி, செண்பகம், நந்தியாவற்சனம், அத்தி, வில்வம், துளசி ஆகிய பன்னிரெண்டு மாலைகளும், ரிசபம், யாழ், குதிரை, சேவல், மயில், அனுமன், மேழி ஆகிய கொடிகளுடனும், வில்லும், வேலும் கொண்டு இருந்தான் இவ்வரசனே தெய்வீகன் என்று இச்சாசனம் கூறுகின்றது.

இவன் மூவேந்தரையும் வென்று மும்முடியும் பெற்று பொன் னம்பலத்தில் முடிசூட்டிக் கொண்டான். மூவேந்தர் மகளிரையும் மணந்தான். சேரன் மகள் செண்பகவல்லி, சோழன் மகள் காஞ்சனமாலை பாண்டியன் மகள் குலோபதி ஆகியோரை மணந்தான் என்று கூறுகின்றது.

> பொன்னகரம் பலத்து பொற் சதுர முடியொன்று பெற்று
> கன்னி மும்மகவை கல்யாண மாலை சூட்டி மேலும்
> அவ்வை தன்னால் இயல் மணம் பெற்றவன்''

என்றும் கூறுகின்றது.

ஔவை தன்னால் இயல் மனம் பெற்றவன் என்பது கபிலர் தான் வளர்த்த பாரி மகளிரில் ஒருத்தியை அவ்வையின் முன்னால் திருக்கோயிலூரில் மலைய மன்னன் தெய்வீகன் மணம் பூண்டான் என்ற செய்தியேயாகும். மேலும் தெய்வீகன் மணம்பூண்ட இடத்திற்கு மணம் பூண்டி என்றும், திருப்பாலப் பந்தல்

பூமாரி, தேவனூர், குடமுருட்டி போன்ற ஊர்ப் பெயர்கள் இம் மன்னன் திருமணத்தின் காரணமாகி ஏற்பட்ட பெயர்கள் என்று திருக்கோயிலூர் வட்ட மக்கள் கூற்றால் அறியலாம்.

**தெய்வீகன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் :**

மலைய மன்னர்கள் தலப் பெருமையைக் கூறும் இடத்து இம் மலையமான் நாடு தொண்டை மண்டலத்தில் உண்டாகியது. இதன்கீழ் அமைந்த நாடுகள், சீமைகள் ஆகியவற்றை கூறி பெருமையுறுகின்றது. அவையான:

மங்களூர் சீமை, திருவண்ணாமலை சீமை, திருக்கோயிலூர் சீமை பன்னிரெண்டு, என்றும் அந்த பன்னிரெண்டு சீமைகளாக கீழ்வரும் சீமைகளை குறிப்பிடுகின்றது. பத்து சீமை, கள்ளக் குறிச்சி சீமை, சேலம் சீமை, வாலிகொண்டாபுரம் சீமை, தகையுற சீமை, வடகரை மாமுண்டு சீமை, உத்தனூர் சீமை, உகையூர் சீமை, அத்தனூர் அரியலூர் சீமை, உடையார் பாளையம் சீமை, தஞ்சாவூர் சீமை, சேரநாடு, சோழ மண்டலம், பாண்டியநாடு ஆகியவைகளைக் கொண்டு மண்டலத்தில் உண்டாக்கியது இந்த மலைய மன்னர்கள் குலம் என்றும் குறிப் பிடுகின்றது.

**தெய்வீகன் அளித்த பிற கொடைகள் :**

தெய்வீகன் மணம் புரிந்த சோழர் குல மகள் மூத்தவள், இவள் தன் மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்று, தர்மம் செய்ய வேண்டி நின்றாள். அவள் செய்யும் தர்மத்திற்காக தெய்வீகன் தன் நாட்டில் 108 காணியும், நாடும், முப்பத்திரண்டு குறிச்சியையும் அளித்து அத்தர்மம் நிலைக்கச் செய்துள்ளான்.

இங்கு குறிக்கப்படும் குறிச்சி கிராம சபையைக் குறிப்பது ஆகும்.

**தெய்வீகன் கட்டிய கோயில்கள் :**

தெய்வீகன், காரண்டன், வல்லூரன் என்ற இரண்டு அசுரர்களை அழித்ததன் காரணமாக பிரம்ம ஹத்தி பிடித்தது என்றும், அதனை நீக்கும் பொருட்டும் ஏர்வாச நல்லூரிலும், திருக்கோயிலூரிலும் தேவாலயமும் பிரம்மாலயமும், தடாகங் களும், நந்தனவனங்களும் கட்டி தருமஞ் செய்து உள்ளான் என்ற குறிப்பு வருகின்றது.

**செப்புப் பட்டயத்தின் காலம் :**

இப்பட்டயம் சாலிவாகன சகாப்தம் 1156 கலியுக ஞூ 4335 யிதன் மேல் செல்லா நின்ற சய வருசம் வைய்யாசி மாதம் 11 அமர பட்சமும் சோம வாரமும் பஞ்சமி ரோகினி நட்சத்திரமும் சுப வேக சுப உரையான சிம்ம லக்கிணத்தில் எழுதப்பட்டது.

இப்பட்டயத்தில் குறிப்பிட்டிருப்பது நோக்கின் இது கி. பி. 1234 ச் சார்ந்தது ஆகும். இதன் எழுத்தமைதி காலத்தோடு ஒன்றவில்லை.

**பொதுக் கருத்து :**

இப்பட்டயத்தில் கூறப்படும் சதுர்முடி விநாயகர் ஆலயமும், நந்தனவனமும் இன்னும் இத்தில்லை வனந்தில் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் காணலாம். நந்தன வனம் அழிந்த நிலையில் காணப்படுகின்றது. அதனை திருப்பாற் கடல் மடம் என்று அழைக்கின்றனர். இச்சாசனம் வழங்கப்பட்ட சொக்க லிங்கத் தம்பிரான் வழித் தோன்றல்கள் பாதுகாத்து வருகின்றார் கள். சதுர்முடி விநாயகர் ஆலயத்தில் அவர்களது பரம்பரையில் வந்துள்ள திரு. வைத்தியநாதன் அவர்களே வழிபாட்டை நடத்தி வருகின்றார். இச்செப்புப் பட்டயமும் இவரிடம் தான் உள்ளது.

# நடுகற்களில் குலச் சின்னங்கள்

சொ. சாந்தலிங்கம் எம். ஏ.,
தொல்பொருள் அலுவலர்,
தருமபுரி.

மனித சமூகத்தின் சாதிப் பிரிவினைகளைப் பற்றி ஆராய்ந்த சமூகவியல் அறிஞர்கள் பலரும் பலவிதமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். சாதிப் பிரிவினையின் தோற்றத்திற்கான காரணத்தை எத்தனைபேர் ஆராய்ந்தார்களோ அத்தனைவித மான மாறுபட்ட காரணங்கள் அவர்களால் கூறப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமான அம்சம் பழங்குடி இனங்கள் (Tribes) பலவும் சேர்ந்து ஒரு சாதியாக (Caste) உருவானது எனபதாகும். குறிப்பிட்ட எந்த ஒரு பெரிய சாதீய அமைப்பினுள்ளும் பல பழங் குடியினங்களின் பழக்க வழக்கங்கள், கலாச்சாரக் கூறுகள் கலந் திருக்கின்றன என்பதைக் காணலாம். இதில் குறிப்பிடத்தக்க ஒன்று குலச்சின்னங்கள் (Totems) என்பதாகும். ஒரு சாதியில் உள்ள உட்பிரிவுகள்பலவும் அப்பிரிவுகளுக்குரிய குலச்சின்னத்தின் அடிப்படையிலேயே பெயர் பெறுகின்றன. இத்தகைய உட்பிரிவு களை கோத்திரம் அல்லது குலம் எனலாம். இவற்றிற்குரிய குலச்சின்னங்களாக விலங்குகள், பறவைகள், தாவர இனங்கள் போன்றவை உள்ளன. ''ஒரு குழுவின் (clan) எல்லா அங்கத்தினர் களும் தாங்கள் அனைவரும் பொதுவான ஒரு முன்னோரின் வழி வந்தவர்கள் என்னும் வலிமையான நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். அந்த முதன்மையான முன்னோர் ஒரு தாவர மாகவோ, ஒரு விலங்காகவோ வழக்கமாகக் கற்பனை செய்யப் பட்டுவருகிறது. அதிலிருந்து அந்தக் குழு தன் பெயரைப் பெற்றுள்ளது''[1] என்பார் ஒரு சமூகவியலறிஞர்.

ஒவ்வொரு சின்னத்திற்குரியவரும் அதற்கென சில விலக்குகள் (Taboos) வைத்துள்ளனர். தங்கள் குலச்சின்னங்களை வேட்டை யாடுதல், காயப்படுத்துதல், உண்ணுதல் ஏதும் இன்றி அவற்றை

வணங்கத்தக்கதாகக் கருதி வழிபடுதலும் உண்டு. ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் மண உறவுகள் வைத்துக் கொள்ளாது பிற கோத்திரத்தவருடன் வைத்துக் கொள்வதே மரபு. இப்படிப்பட்ட சாதீயக் குலப்பிரிவினைகளுக்குரிய குலச் சின்னங்கள் பண்டைத் தமிழ்மக்களாலும் வழங்கி வரப்பட்டு அவை அவர்களது ஊர்ப்பெயர்களிலும், மனிதர்களின் பெயர் களிலும், அவர்களால் எடுக்கப்பட்ட நடுகற்களிலும் இடம் பெற்றுள்ள பான்மையைக் காண்பதே இவ்வாய்வின் நோக்கம்.

**பிராமண சமூகத்தில் கோத்திரங்கள்**

ஒவ்வொரு சாதியிலும் அதனுள் அடங்கிய பழங்குடி இனத்தினரின் பண்பாட்டுக் கூறுகள் மங்காது நிலவுகின்றன. இத்தகைய நிலை தாழ்ந்த சாதி என்ற வகையில் மட்டுமல்ல, உயர்ந்த சாயினரின் மத்தியிலும் உள்ளன. உதாரணமாக பிராமண சமூகத்தில் பலவிதமான கோத்திரப் பிரிவினைகள் உள்ளன. அவற்றின் எண்ணிக்கை 24, 32, 40, 49, 73 என்று பலவிதக் கருத்து மாறுபாடுகளுக்குட்பட்டுள்ளது.[2] ஒவ்வொரு கோத்திரமும் ஒரு குறிப்பிட்ட ரிஷியால் உருவாக்கப்பட்டது, எனக்கொண்டு அது அவர்களது பெயராலேயே வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் கோத்திரகரணிகள் எனப்படுவர். காஸ்யபம், பரத்வாஜம், கோதமம், குசிகம், மண்டூகம், தர்ப்பம், தித்திரா என்று பிராமண சமூகத்தில் பலவித கோத்திரங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் குலச்சின்னங்களின் பெயர்களாலேயே அமைந்துள்ளதைக் காணலாம்.[3]

காஸ்யபம்—ஆமை
பரத்வாஜம்—ஒரு பறவை
கோதமா—பசு
குசிகம்—ஆந்தை
மண்டூகம்—தவளை
தித்திரா—கிளி
தர்ப்பம்—புல்.

இவை தவிர இன்னும் நாய், கரடி, மீன், குரங்கு, ஆடு, மூங்கில் என்று பலவித விலங்கு, தாவர இனங்களின் பெயர்களிலும் பிராமண சமூகக் கோத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய கோத்திரங்களை உருவாக்கிய கோத்திரகர்ணிகளும்கூட அந்தந்த விலங்கு பழங்குடி முன்னோரின் வழித்தோன்

றல்களாக இருத்தல் வேண்டும் என்பதே சமூகவியலறிஞர்களின் முடிவு. இதேபோன்றே பிற சமூகங்களின் குலப்பிரிவுகளும் அடிப்படையான ஒற்றுமையைக் கொண்டுள்ளன.

**கொங்கு வேளாளர் சமூகத்தில் குலப்பிரிவுகள் :**

கொங்கு வேளாளர் சமூகத்தில் 90 அல்லது 96 வகையான பிரிவுகள் உள்ளன என்று கருதப்படுகிறது. அவர்கள் இத்தகைய பிரிவுகளைக் கூட்டங்கள் என்று அழைக்கின்றனர். இக் கூட்டங்களும் பொதுவாக மரம், செடி, பறவை, முதலிய பெயர்களைத் தாங்கியே வருகின்றன. உ-ம் : மயிலர், காடை, ஆந்தை, தேவாந்தை சாத்தாந்தை, பவழன், பனையன், கீரன், மேதி, குயிலர், பயிரன், நாரை, பனங்காடை, புன்னன், பொன்னன், கிளியர், போன்றவை. இவற்றில்வரும் விலங்குகள், பறவைகள் தாவரங்கள் ஆகியவை அந்தந்தக் கூட்டத்தின் குலச் சின்னங்களாகும். இவர்களில் ஒரு கூட்டத்தார் தங்கள் கூட்டத்திற்குள்ளேயே மணஉறவு கொள்வதில்லை. தங்கள் கூட்டத்திற்குரிய குலச்சின்னங்களைத் துன்புறுத்தலோ, கொல்வதோ இல்லை.

**வன்னியரில் உள்ள பிரிவுகள் :**

வன்னியர் இனத்திலும் பலவித பிரிவுகள் உள்ளன. இவர்களைப் பள்ளிகள் என்றும் அழைப்பர். பள்ளிகள் என்றால் கால் நடைகள் மேய்ப்பவர்கள் என்ற பொருளும் உண்டு. இவர்கள் வாழும் தெருவைப் பள்ளித் தெரு என்று வழங்குதல் இன்றும் உண்டு. இவர்களில் ஓலைப்பள்ளி, நாகவடப்பள்ளி, பந்தல் முட்டிப் பள்ளி, தடுக்கன் பள்ளி, குடுவைகட்டிப் பள்ளி, அரசுப் பள்ளி, அம்மிப்பள்ளி என்று இன்னும் சில பிரிவுகள் உண்டு. இவர்களது பிரிவுகள் ஒவ்வொன்றும் அதற்குரிய குலச் சின்னங்களோடு தொடர்புடையனவே. ஓலைப் பள்ளிகள் என்போர் காதுகளில் பனை ஓலை அணிகலனை அணிவர். நாடகப் பள்ளிகள் என்போர் காதணியில் நாகத்தின் படம் போன்ற அமைப்பை வைத்துக் கொள்வர். இவர்கள் நாகப்பாம்பைக் கொல்ல நேர்ந்தால் அதை குழி தோண்டிப் புதைத்து அதில் பால் ஊற்றுவது வழக்கம். இது அவர்களது குலச்சின்னமான நாகப்பாம்பின் வழிபாட்டைக் குறிக்கும் எச்சமாகும்.

**மனிதர்களின் பெயர்களில் குலச் சின்னங்கள் :**

குலச்சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு பெயர்கள் சூட்டியுள்ள வழக்கத்தை கோத்திரக் கர்ணிகளின் பெயர்களால்

அறிந்தோம். அதே அடிப்படையில் நோக்கினால் சங்கப்புலவர்கள் பலருடைய பெயர்களும், நடுகல் வீரர்கள் பெயர்கள் பலவும் குலச்சின்னங்களோடு ஒத்திருப்பதைக் காணலாம். எ-டு :

இம்மென் கீரனார்
எயினந்தை மகனார் இளங்கீரனார் } —கீரன்-கிளி எனப்படும்

நக்கீரன்
பொருந்தில் இளங்கீரனார்
மோசி கீரனார் } —கிளி என்னும் குலச் சின்னத்தை அடியாகக் கொண்ட பெயர்கள் இவையெனக் கருதலாம்.

பிசிராந்தையார்
மதுரை இளங்கௌசிகனார் (குசிகர்) } —ஆந்தையை ஒட்டிய பெயர்கள்.

கடுவன் மள்ளனார்—பூனையை ஒட்டிய பெயர்.
சிறு கருந்தும்பியார்—தும்பி, வண்டை அடிப்படையாய்க் கொண்ட பெயர்.

மருதனிள நாகனார்
மருதங்கிழார் மகனார் } —மருதமரம்

அள்ளூர் நன்முல்லையார்
காவன் முல்லைப் பூதனார் } —முல்லைப்பூ

குமிழி ஞாழலார்—ஞாழல்
பாவைக் கொட்டியார்—கொட்டில் } —தாவரம்

நடுகற்களில் நொச்சி சாத்தான்,[5] கூற்றப்பனை வடுகன்,[6] நாவின்ன கீரன்[7] என்ற பெயர்கள் முறையே நொச்சி, கூற்றப்பனை ஆகிய தாவரத்தையும், கிளி என்னும் விலங்கையும் அடிபொற்றி அமைந்த குலச் சின்னப் பெயர்கள் எனக் கொள்ளலாம்

**ஊர்ப் பெயர்களில் :**

மனிதர்களின் பெயரைப் போலவே ஊர்ப் பெயர்கள் பலவும் தாவரங்கள், விலங்குகள் பெயர்களால் அமைந்துள்ளன. இவையும் குலச்சின்னங்களின் பெயர்களால் அமைந்த ஊர்களே. எனக் கருதவாய்ப்புண்டு. உ-ம்: தாழையூர், ஈச்சம்பாடி, மாங்குடி, புளியங்குடி, கீரனூர் என்று இவை போன்று இன்ன பிறவற்றையும் கொள்ளலாம். நடுகற்களில் இடம் பெற்றுள்ள பல ஊர்ப்பெயர்களும் இவ்வகையில் அடங்கும். கருங்காலிப்பாடி[8], பனையூர் வஞ்சி[9], புளியூர்[10], பெரும்புளியூர்[11], தாழையூர்[12], ஆந்தைப்பாடி[13] முருங்கைச் சேரி[14] என்று பல எடுத்துக்காட்டுகளைக் காணலாம். அவை

முறையே கன்று, பனைமரம், புளியமரம், தாழை, ஆந்தை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த பெயர்களாகும்.

**நடுகற்களில் குலச் சின்னங்களின் உருவங்கள் :**

நடுகற்கள் நிறைந்த தருமபுரி மாவட்டத்தில் சில நடுகற்களில் பாம்பு, கிளி போன்ற உருவங்கள் வீரர்களின் உருவங்களுடன் செதுக்கப்பட்டுள்ளன. இவ்விலங்கினங்கள் அந்தந்த வீரர்கள் சார்ந்த குலச்சின்னங்களாகக் கருதப்படலாமா என்பதே எனது ஐயம்.

தருமபுரி மாவட்டம் மிட்டாரெட்டிஹள்ளி என்னும் கிராமத்தில் பொன்னியம்மன்மண்டு என்னுமிடத்தில் ஒரு நடுகல் உள்ளது. இந்நடுக்கல்லில் வீரன் ஒருவன் நிற்க அவனது இருபுறமும் இரண்டு பெண்கள் நிற்கின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளனர். ஒரு பெண் ஒரு கையில் மதுக்குடத்தையும் மற்றொரு கரத்தில் கத்தி ஒன்றையும் பிடித்துள்ளாள். இன்னொரு பெண் வணங்கிய நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள். வீரனது இருகரங்களும் சேர்ந்து கூப்பிய நிலையில் இருக்க அதன் நடுவே அனல் வளர்வது போல் காட்டப்பட்டுள்ளது. அவனது வாள் அக்குளில் தாங்க கீழ்நோக்கியுள்ளது. வீரன் அருகில் காளை மாடு ஒன்றின் உருவமும், கிளி ஒன்றின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. மாட்டின் கழுத்தில் பலவித அணிமணிகள் துலங்க, அதன் முதுகில் ஒருவித விரிப்பும் விரிக்கப்பட்டுள்ளது. கிளி தன் அலகுகளைப் பிளந்த நிலையில் அமர்ந்துள்ளது. இச்சிற்பம் சுமார் கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். அனல் ஏந்தியிருப்பது காட்டப்பட்டுள்ளதால் மூவரும் தீப்பாய்ந்து உயிர்விட்டார்களோ எனக் கருத வாய்ப்புள்ளது. காளை மாட்டின் உருவம் பலவித அலங்கார அணிகளுடன் வடிக்கப்பட்டிருப்பது அவர்கள் சமூகத்தில் தலைமைப் பீடத்தில் இருந்தனர் என்பதைக் காட்டக் கூடியதாக உள்ளது. இங்கு இடம் பெற்றிருக்கும் கிளியின் உருவம் வேறு எவ்விதமான கருத்தோட்டத்திற்கும் தொடர்பற்று இருப்பதால் இதனை அவ்வீரன் சார்ந்த குலச்சின்னமாகக் கொள்ளலாமா என்று எண்ணத் தோன்றுகிறது.

இதே போன்று தருமபுரி மாவட்டம் தொப்பூருக்கு அருகில் உம்மணஹள்ளி என்னும் ஊரில் உள்ள சுமார் கி.பி. 17-ம் நூற்றாண்டு நடுகல் ஒன்றில் வேல் ஏந்திய வீரன் ஒருவன் அருகில் கிளியின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

அதியமான் கோட்டை என்னும் இடத்திலுள்ள அதே காலத்தைச் சேர்ந்த புலிகுத்திப்பட்டான் நடுகல் ஒன்றிலும் இரண்டு கிளிகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் பெரும்பாலும் வன்னியர் இனத்தைச் சேர்ந்தவர்களும், கணிசமான எண்ணிக்கையில் குறும்பர் இன மக்களும் வாழ்கின்றனர். வன்னியரின் குலச்சின்னமாகவோ, வேறு வகையிலோ கிளி தொடர்புடையதாக நான் ஆய்வு செய்த அளவில் அறியப்படவில்லை. குறும்பர் இன மக்களிடையே உள்ள பிரிவுகள் பற்றியும் அதன் பெயர்க் காரணங்கள் பற்றியும் அறிந்து கொள்ளத்தக்க வகையில் செய்தி தெரிந்தவர்கள் கிடைக்க வில்லை. எனவே கிளி என்னும் குலச்சின்னம் எந்த இனத்த வரோடு தொடர்புடையது என்பதை இப்போதைக்குத் திட்ட வட்டமாகக் கூற இயலவில்லை. எனினும் கொங்கு வேளாளர் சமூகத்தில் கீரன் கூட்டம், கிளியர் கூட்டம் என்று இருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. சேலம் நகரிலுள்ள சுகவனேஸ்வரர் ஆலயத்தின் இறைவனுக்கு கிளிவண்ணமுடையார் என்ற பெயரும உண்டு. எனவே இவற்றையெல்லாம் கொண்டு நோக்க வடகொங்கு நாடான இத்தருமபுரி, சேலம் மாவட்டங்களில் குலச்சின்னமாக ஏதோ ஒரு இனத்தவர்க்கு கிளி இருப்பதும் அது அவர்களால் எடுப்பிக்கப்பட்ட வீரவழிபாட்டுக்குரிய நடுகற் களிலும் இடம் பெற்று உயர்நிலை பெற்றது என்றும் கருதலாம்.

**நடுகற்களில் பாம்பு :**

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் தொட்டார்தன ஹள்ளி என்னும் கிராமத்தில் உள்ள இரண்டு நடுகற்களில் பாம்பு இடம் பெற்றுள்ளது. இவ்விரண்டு நடுகற்களும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

ஒரு நடுகல்லில் வீரன் ஒருவன் நின்ற நிலையில் இடது கையில் சிறிய வேல் ஒன்றைப் பிடித்துக் கொண்டும், வலது கையால் அருகில் அமர்ந்துள்ள நிலையில் செதுக்கப்பட்டுள்ள நாகத்தின் தலையைத் தொட்டுக் கொண்டும் இருக்கும் நிலையில் வடிக்கப் பட்டுள்ளது.

மற்றொரு நடுகல் அருகில் உள்ள ஒரு சிறிய பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. அப்பாறையில் காடி வெட்டப்பட்டு ஆறு மனித உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வீரன் ஒருவன் நின்ற நிலையில் வலக்கையில் வளைந்த அரிவாள் ஒன்றும் இடக்கையில் கட்டாரி ஒன்றும் பிடித்துள்ளான். அவனது இருபுறமும் இரண்டு பெண்கள் கையில் மதுக்குடம் ஏந்தி நிற்கின்றனர். அவர்களுக்கு

அருகில் ஒரு வீரன் ஓங்கிய வாளுடன் நிற்கிறான். அவனது இடக் கையில் உள்ள கட்டாரி எதிரில் வரும் குதிரையின் கால்களை வெட்டுவதாகக் காட்டப்பட்டுள்ளது. அக்குதிரையின் மீதும் வீரன் ஒருவன் அமர்ந்துள்ளான். குதிரைக்கும் கீழாக இன்னொரு வீரன் இருகையிலும் ஆயுதம் தாங்கி நிற்கிறான். இது ஒரு போர்க்களக் காட்சி போலவே காட்டப்பட்டுள்ளது. இந்த உருவங்களுக்கு மேலாக இரண்டு நீண்ட பாம்புகள் ஒன்றோ டொன்று பின்னிய நிலையில் செதுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் வாழும் மக்களில் பெரும்பாலோர் வன்னியரே. அதிலும் குறிப்பாக நாகவடப்பள்ளிகள் என்னும் பிரிவினரே. எனவே நாகப்பாம்பு இவர்களது குலச்சின்னமாக இருக்கலாம். இவர்கள் நாகப்பாம்பை எதிர்பாராத விதமாகக் கொல்ல நேர்ந் தால் அதை அதன் புற்றில் இட்டு பால் ஊற்றுவார்கள். உயிரோடு நாகப்பாம்பைக் காண நேர்ந்தால் வணங்கி மீண்டும் தங்கள் பார்வையில் படாமல் இருக்க வழிபாடு செய்கிறார்கள். எனவே இந்தப் பிரிவு மக்களின் குலச்சின்னமான நாகம் அவர் களது காதணிகளில் மட்டும் இடம் பெறாது வழிபாட்டிற்குரிய தாகவும் கருதி நடுகற்களிலும் இடம் பெற்றது எனக் கொள்ள லாம்.

முடிவுரை :

நடுகற்களில் இத்தகைய விலங்கினங்கள் இடம் பெற்றிருப் பதற்கு வேறு ஏதேனும் சிறப்பான காரணம் அறியப்படாத நிலையில் ஒரு புதிய அணுகு முறையாக இவற்றைக் குலச்சின்னங் களாகக் கருதலாமா என்று அறிஞர்களின் ஆய்வுக்கு முன் வைக் கிறேன். இதே காலத்தில், அதாவது கி.பி. 15-17-ஆம் நூற்றாண்டுகளில் நம் நாட்டின் பல பகுதிகளிலும் பெருங் கோயில் பலவும் கட்ட ப்பட்டு உயர்ந்த வழிபாட்டு முறைகளில் வணங்கி வரப்பட்ட போதிலும் தருமபுரி மாவட்டத்தில் அத்தகைய பெருங்கோயில் வழிபாடுகள் அதிகம் இல்லை. இங்கு வாழ்ந்த மக்கள் தங்களது பழங்குடித்தன்மையுள்ள கலாச்சார எச்சங்களை அவ்வளவு எளிதில் விட்டுவிடாத வகையில் தொடர்ந்து கடைப்பிடித்தே வந்துள்ளனர். அதன் சான்றுகள் தான் இம்மாவட்டத்தில் ஏராளமாகக் காணப்படும் நடுகற்களும், சிறுதெய்வ வழிபாடுகளும் ஆகும். ஒரு நாட்டின் நாகரிக முன்னேற்றம், பண்பாடு வளர்ச்சி என்பது ஒரே காலத்தில் அந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சமமாகப் பரவியது என்பது

எக்காலத்திலும் இல்லை. எடுத்துக்காட்டாக "சிந்து சமவெளி நாகரீகத்தில் பழக்கத்தில் கொள்ளப்பட்ட தாய்த் தெய்வ வழிபாடு குஜராத் அல்லது சரஸ்வதி பள்ளத்தாக்கில் இல்லை. ஆனால் அதே காலத்தில் அக்னி வழிபாடு எல்லாப் பகுதிகளிலும் பரவலாக இருந்தது.'' இதைப் போன்றே தமிழகத்தில் பெருங் கோயில் வழிபாடுகள் பெருகியிருந்த கால கட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் நடுகல் வழிபாடு தொடர்ந்து இருந்து வந்தது. அவ்வாறு அவர்கள் வழிபட்ட நடுகற்களில் அவ்வீரர்களின் குலச் சின்னங்களும் இடம் பெற்று வணங்கப்பட்டன என்று கொண்டால் அதில் தவறில்லை. இம்மரபு தருமபுரி மாவட்டத்திற்கே உரிய தனிச்சிறப்பாகவும் கருதலாம்.

அடிக் குறிப்புகள் :


1. **Debiprasad Ghatopadyaya—Lokayatha. P. 203 People's Publishing House. 1978.**
2. **Ibid. . P 208-209.**
3. **Ibid. P. 210.**
4. இரா. தேவ ஆசீர்வாதம். வேளாளர் யார்? p.79-80. இராமதேவன் பதிப்பகம், தஞ்சை.
5. தருமபுரி கல்வெட்டுகள். தொகுதி-2. எண் 138. தொ. பொ. ஆ. துறை.
6. ஒட்டப்பட்டி நடுகல். தருமபுரி மா. வ.
7. தருமபுரி கல்வெட்டுகள். தொகுதி 1. எண். 21. தொ. பொ. ஆ. துறை.
8. செங்கம் நடுகற்கள் 113/1971. தொ. பொ. ஆ. துறை வெளியீடு.
9. **Ibid. 34/1971**
10. **Ibid, 58/1971**
11. **Ibid. 62/1971**
12. **Idid. 74/1971**
13. **Ibid. 77/1971**
14. தா. வேலூர் கல்வெட்டு. கல்வெட்டு ஓர் அறிமுகம்.
15. **S. R. Rao. Indus cities : Planning for Perfection (Art) Science to day. June 1982. P. 13.**

# வீரப் பட்டணக் கல்

சுப்பிரமணியன் எம். ஏ.,
காப்பாளர்,
கோயம்புத்தூர்.

தென்னிந்தியாவின் மத்தியகால பொருளாதார முன்னேற்றத் திற்கு தொழிற் குழுக்கள் (Guild) பல அரும்பணியாற்றி உள்ளன என்பதை கல்வெட்டுகளின் மூலம் அறிகிறோம். சுமார் 9ம் நூற்றாண்டிற்கும் 12ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத் தில் பல தொழிற்குழுக்கள் தோன்றி உள்ளன. விவசாயம், வியா பாரம், கைவினைத்தொழில்கள் போன்ற தொழில்களில் ஈடுபட் டோர் இத்தகைய சங்கங்களை அமைத்துள்ளனர். கொங்கு நாட் டில் வாணிபத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் அதிகமாகக் கிடைக் கின்றன. எல்காம்வலசு என்ற ஊருக்கு அருகில் உள்ள நத்தமேடு என்ற இடத்தில் கிடைத்த வீரப்பட்டணக் கல் என்ற வணிக கல்வெட்டைப் பற்றிக் காண்போம்.

கொங்கு நாட்டில்மட்டும் கிட்டத்தட்ட 6 வணிகக் குழுக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அவை: 1. பெரியார் மாவட்டம் சர்கார் பெரியபாலையம். 2. உடுமலை வட்டம் கடத்தூர். 3. பொள்ளாச்சி வட்டம் வெப்பரை. 4. பொள்ளாச்சி வட்டம் பட்டணம். 5. கலைமகள் கல்விக்கூடம். 6. சமீபத்தில் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம்நல்லூர் என்ற ஊரில் "[1]அத்திகோசத் தார்' என்ற வட்டெழுத்து கல்வெட்டு கி. பி. 10ம் நூற்றாண்டை சார்ந்தது, கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டுக்கள் பெரும் பாலும் 10ம் நூற்றாண்டுக்கும் 13ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாக உள்ளன. இவற்றை நோக்குங்கால் கொங்கு நாட்டில் வணிககுழு கல்வெட்டுகள் ஏன் அதிகமாக கிடைக்கின்றது என்றகேள்விக்குறி எழுகின்றது. மேற்குக்கடற்கரையிலிருந்து வரு கின்ற பெருவழி பாலக்காட்டு கனவாய் வழியாக கொங்குநாட்டை அடைந்து பின் மூன்று பெருவழிகளாகப் பிரிந்து தமிழ் நாட்டின் முக்கியமான கிழக்கு கடற்கரை நகரங்களைச் சென்றடைந்தன.

பெருவழிகள் இருந்த காரணத்தால் வணிகர்கள் எளிதில் வர முடிந்தது. இங்கு விலையுயர்ந்த கற்கள் (Semi Precious Stones) படியூர் போன்ற இடங்களில் கிடைக்கின்றன. இது வெளி நாட்டாரையும் வணிகர்களையும் மிகவும் கவர்ந்தது. கொங்கு நாட்டைக் கைப்பற்றுவதில் அரசர்களிடையே பெரும் போர்கள் நடந்துள்ளன. இந்த நாடுபிடிச் சண்டைகள் பெருவழிகளைத் தங்களின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவருவதற்காகவே என்றால் அது மிகையாகாது. அன்று முதல் இன்று வரை வாணிகம் அதிகமாக நடைபெறுகின்ற இடமாகக் கொங்குநாடு இருந்து வருகின்றது என்ற உண்மையை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

தொழிற்குழுக்கள் பொருளாதாரத் துறைக்கு மட்டுமின்றிச் சமூக, நிர்வாகத் துறைகளின் முன்னேற்றத்திற்கும் பல அரும்பணிகளைச் செய்துள்ளன. ஆனால் இது யாருக்குக் கட்டுப்பட்டிருந்தது, தன்னிச்சைப்படி செயல்பட்டதா, இதற்கும் அரசாங்கத்திற்கும் உள்ளதொடர்பு, இதனுடைய வேலைகள், நிர்வாகிகளின் தகுதிகள் போன்றவற்றை விரிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. மன்னார்குடிக் கல்வெட்டில் இந்தத் தொழிற்குழுக்கள் வணிகப் பொருள்களின் மேல் வரிவிதித்தல், கோயில் வருமானத்தை நிர்வகித்தல், போன்ற உரிமைகளைப் பெற்றிருந்ததாகக் கூறுகின்றது. தொழிற்குழுக்கள் தனித்து இயங்காமல் அரசனின் அங்கீகாரம் பெற்று இருந்தன. இது அரசியல் துறையைச் சார்ந்ததே அன்றி சமயத்துறையைச் சார்ந்தது அன்று என்று K. V. சுப்ரமணிய ஐயர் கூறுகின்றார்[2]. தொழிற்குழுக்கள் அரசன் அதிகாரத்துடன் அரசியல் துறைஸ்யச் சார்ந்தும் செயல்பட்டது என்பதைப் பர்டன் ஸ்டீன் மறுக்கின்றார். இந்தக் காலத்தில் அரசே இல்லை என்றும் தொழிற்குழுக்களே சகல உரிமைகளையும் பெற்று, வரி வசூலிப்பது, அதைச்செலவு செய்வது ஆகிய அதிகாரங்களைப் பெற்றிருதன, தொழிற்குழுக்களே முதலிடம் வகித்தன என்று பர்டன் ஸ்டீன் கூறுகின்றார்.[3]

இத்தகைய தொழிற்குழுக்கள் தனிச்சின்னம் உள்ள கொடிகளைப் பயன்படுத்தியுள்ளன. திருவிக்கிரமப் பெருமாள் கோயில் (தென் ஆற்காடு மாவட்டம்) கல்வெட்டு இதை உறுதிப்படுத்துகின்றது. வியாபாரிகள் தங்களுடைய வணிகப் பொருட்களைப் பாதுகாக்கப் போர் வீரர்களை வைத்திருந்தனர். வணிகக்குழுக்களிடையே பல பிரிவுகள் இருந்திருக்கின்றன. அதாவது அந்தந்த

நாட்டிற்குள் வியாபாரம் செய்பவர்கள், வெளி நாடு சென்று வியாபாரம் செய்பவர்கள், பொருட்களைப் பாதுகாக்கும் வீரர்கள் இவற்றைப் போன்று மற்றும் பலபிரிவுகள் இருந்திருக்கின்றன.

**நத்தமேடு :**

பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம் எல்காம்வலசு என்ற ஊருக்கு அருகில் 'நத்தமேடு' என்ற இடம் உள்ளது. நத்தமேடு, நல்லதங்கா ஓடையின் கரையில் அமைந்துள்ளது. தாராபுரத்திலிருந்து மதுரைக்குச் செல்லும் பெருவழியிலிருந்து சுமார் 3 கி. மீ. தள்ளி அமைந்துள்ளது. இதன் அருகில் 'கருடன் கோட்டை' என்று வழங்கப்படும் மலைத்தொடர் உள்ளது. கோக்கண்டன் ரவி என்ற அரசனுடைய வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும், தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் இதன் அருகில் உள்ள ஈசுவர மலையில் கிடைக்கின்றன. இதனுடைய எழுத்தமைதியைக் கொண்டு இது 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று சொல்லப்படுகின்றது. இதுமட்டுமன்றி வீரராசேந்திரன், விக்கிரம சோழன் போன்ற கொங்குச் சோழர்களின் கல்வெட்டுக்களும் கிடைக்கின்றன.

**வணிகக் கல்வெட்டு :**

இந்தக் கல் சுமார் 6 அடி உயரமும் 2 அடி அகலமும் உள்ளது இந்தக்கல்லின் முன்புறம் பலவகையான சிற்பங்களும், பின்புறமும், பக்கவாட்டிலும் கல்வெட்டும் உள்ளன. முன்புறம் உள்ள சிற்பங்களின் மத்தியில் காளி நான்கு கரங்களுடன் காட்சியளிக்கின்றாள். காளியின் ஒரு கால் தூக்கியபடியும் மற்றொரு காலின் கீழ் மனித உருவம் ஒன்று படுத்தநிலையிலுமுள்ளது. காளியைச் சுற்றி உடுக்கை, சங்கு, கத்தி, சூலம், சிங்கம், விளக்கு, அம்பறுத்தூணி, அரிவாள், போன்றவை செதுக்கப்பட்டுள்ளது. பின்புறம் உள்ள கல்வெட்டு :

ஸ்வத்தி ஶ்ரீ தெந்க
ரை நாட்டு நிளம்
பொரி ஞனாதேசி
திசை மடி எறி
யும் எறி வீரபட்ட
ணத்து வீரபட்ட
ணக்கல் அஞ்சு
கரை நாடும்

அடிக்கிட் தளமு
ம் நகரமிரண்டு
ம் பதி நெண் வி
ஷையமும் எம்மி
லிசைந்தபடி யீதளத்தில் நாலு வாசலி
ல் பட்டாயர் வசம் நாலு காலும் சிங்காதன மு
—உடையாராக.

**தென்கரை நாடு :**

அமராவதி ஆற்றின் தென்கரையைச் சார்ந்து உள்ள நாட்டிற்குத் "தென்கரை நாடு" என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது.[4] வடக்கில் அமராவதி நதியும் கிழக்கில் மனலூர் நாடு (அ) வடகரைநாடும் [கரூர் தாலுக்கா] மேற்கில்நல்லதங்கா ஓடையும் தெற்கில் மலைத்தொடரும் தென்கரை நாட்டைச் சுற்றி உள்ளன.

**நீலம்பூர் :**

நீலம்பூர் என்று கூறப்படும் இந்த ஊர் தற்சமயம் கரையூர் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு கிடைக்கின்ற மற்ற கல்வெட்டுக்களும் இதை நீலம்பூர் என்று குறிக்கின்றன. நீலம்பூர், தாராபுரம்—கரூர் பெருவழியில் அமைந்துள்ளது. இங்கு காசுகள் கிடைத்ததாக ஊர் மக்கள் கூறுகின்றனர். நீலம்பூரில் கோட்டை மேடு என்ற ஒரு பெரிய மேடு காணப்படுகின்றது. இங்கு ஒரு பெரிய லிங்கம் மட்டும் தனித்து நிற்பதை நோக்கின் அந்த இடத்தில் சிவன் கோயில் ஒன்று இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம். விஷ்ணு சிற்பம் ஒன்று தற்சமயம் வழிபாட்டில் உள்ளது. இது 8,9ம் நூற்றுண்டைச் சார்ந்தது. இதைத் தவிர சப்தமாதர்கள் நந்திபோன்ற சிற்பங்கள் அருங்காட்சியகத்தில் உள்ளன. இவை பல்லவர் கலைப்பாணியை ஒத்திருக்கின்றன என்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் கூறுகின்றார். எல்காம் வலசுக் கல்வெட்டில் "நீலம்பூர்நானாதேசிகள்" போன்ற வணிகக்குழுக்கள் குறிப்பிடப்படுவதால் இது வணிக ஸ்தலமாக இருந்திருக்க வேண்டும்.

**நானாதேசி :**

இது ஒரு வியாபார சங்கம், இது ஐம்பொழிலை [Aihole] தலைமை இடமாகக் கொண்டு தென் இந்தியா மட்டும் இன்றி கடல் கடந்து சென்றும் வாணிபம் செய்து வந்துள்ளன. இவர்

களுடைய பெயர் கொண்ட கல்வெட்டுக்கள் இலங்கை, சுமத்திரா ஜாவா போன்ற இடங்களிலும் கிடைக்கின்றன. மைசூர் மாநிலத்தில் இவர்களுடைய கல்வெட்டுக்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இதனுடைய பிரிவாக இருக்கலாம் என்று எண்ணப் படுகின்ற ''பரதேசி'' என்ற பெயரைக் குறிக்கும் கல்வெட்டும் கிடைக்கின்றது. எனவே வெளிநாட்டு வணிகர்களின் பிரிவான நானாதேசிகள் கர்நாடகாவில் வந்து தங்கி மற்ற இடங்களுக்குச் சென்றிருக்கலாம்[5] என்று கே. இந்திராபாலா கருதுகிறார். இவர்களுடைய பிறப்பிடம் எதுவாக இருந்தாலும் வணிகக்குழு என்பது ஒப்புக் கொள்ளக்கூடிய கூற்று. நீலம்பூருக்கு அருகில் உள்ள பிரமியம் என்ற இடத்தில் கிடைத்த கி. பி. 11ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் "உத்தர மந்திரி ஆன நானாதேசி நாட்டுச் செட்டி'' என்று குறிப்பிடுகின்றது.[6] எனவே இந்தப் பகுதியில் நானாதேசிகள் செல்வாக்குடன் இருந்திருக்கின்றனர் என்ற கூற்றை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

**திசை :**

கல்வெட்டில் திசை என்ற சொல் மட்டுமே குறிக்கப்படுகின்றது. ''திசை என்றால் திசை ஆயிரத்து ஐநூற்றுவர்'' என்று வணிக குழுவைக் குறிப்பதாகும். முதன் முதலில் இவர்களைப் பற்றியகல்வெட்டு கர்நாடகத்திலுள்ள ஐஹொளே(**Aihole**)என்ற இடத்தில் கிடைக்கின்றது.[7] இது கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு. ஆனால் 12, 13ம் நூற்றாண்டுகளில்கிடைக்கின்ற கல்வெட்டுக்களில் இதனுடைய பிறப்பிடம் ''அகிசத்தரா'' [**Ahichchdatra**] என்ற இடம் என்று கூறுகின்றது. கர்நாடகாவில் அகிசத்தரா என்ற ஒரு இடம் உள்ளது. இங்கும் வணிகக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. எனவே இந்த ஐநூற்றுவர் மைசூரில் உள்ள அகிச்சத்தராவில் இருந்து வந்தவர்கள் என்று ஒரு கருத்து உள்ளது. முதலில் மைசூர் அகிச்சத்தராவை பிறப்பிடமாகக்கொண்ட இவர்கள் பின்னர் வடஇந்திய 'அகிச்சத்தரா' புகழ்பெற்ற நகரமாக விளங்கியதால் அதையே பிறப்பிடமாகக் கொண்டனர் என்று கே. இந்திரபாலா கூறுகின்றார். இவற்றைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. 500 உறுப்பினர்களைக் கொண்டு இந்த வணிகச் சபை இயங்கி வந்ததால் இதற்கு ஐநூற்றுவர் என்று பெயர் வந்தது எனறு ஒரு சாரார் கூறுகின்றனர். மற்றொரு சாரார் இதை மறுக்கின்றனர்.[8] ஜாதகக்கதை (**Sattigumba jataka**) தச்சர்களும், திருடர்களும் ''ஐநூற்றுவர் வணிகக்குழு''என்ற ஒருகுழுவை ஆரம்பித்தனர் என்றுமஅதில்100 உறுப்பினர்கள் இருந்தனர் என்றும் கூறுகின்றது. அதேபோன்று

சிதம்பரத்தில் பிராமணர்கள் மூவாயிரத்தார் இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆகவே 'ஐநூற்றுவர்' என்பது உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்து வழங்கப்படவில்லை என்றும், இது மரபொழுகுவயப்பட்டதாகும். [Conventional] என்று கே. இந்திரபாலா கூறுகின்றார். இந்த ஐநூற்றுவரில் ஐந்து பெரும் பிரிவுகள் இருந்ததாகப் பிரான்மலைக் கல்வெட்டுக் குறிக்கின்றது.[9] அவை 1 இட்டைவட்டையும் இடைவட்டையும், 2 ஏறுசாத்து இறங்கு சாத்து, 3 அரை வட்டை, அருவட்டை, நரட்டாரை, நால் வட்டரை, 4 அரங்கம் தரங்கம், 5 நாடு, நகரம். இவற்றில் முதல் பிரிவு மூன்றாம்பிரிவு இவற்றைப் பற்றி அறிய எந்தச் சான்றும் கிடைக்கவில்லை. ஏறுசாத்து இறங்கு சாத்து என்ற இந்தப் பிரிவு நாட்டில் நடைபெறுகின்ற ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றைக் கண்காணித்து வந்துள்ளன. அரங்கம், தரங்கம் என்ற பிரிவினர் விவசாயம், நிர்வாகம், வாணிபம் போன்ற உள்நாட்டுத் துறைகளுக்குப் பொறுப்பாளராக இருந்துள்ளனர். நாடு நகரம் என்ற பிரிவு உள்நாட்டு வியாபாரத்தைக் கவனித்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

**மடி :**

மடி என்பது "மடிகை" என்பதன் சுருக்கம். மடிகை என்பது 'மளிகை' என்பதன் திரிபாகும்என்று கே. வி. சுப்பிரமணிய ஐயர் கூறுகின்றார். வியாபாரப் பொருள்களைக் கொண்டு வந்து ஒரு இடத்தில் சேர்த்து வைக்கப்படும் இடம் "மடிகை." இதற்குப் பண்டகச்சாலை என்று ஒரு பொருள் உள்ளது. எனவே நீலம்பூர் நானாதேசிகன், திசை ஆயிரத்து ஐநூற்றுவரின் பண்டகசாலை என்று கொள்ளலாம்.

**எறிவீரப் பட்டணம் :**

எறிவீரர்களின் படை தங்கியிருக்கும் பட்டணம் எறிவீரப் பட்டணம்.

**அஞ்சு கரை நாடு :**

கொங்கு நாட்டில் இரண்டு கரை நாடு, நான்கு கரை நாடு, அஞ்சுகரை நாடு, ஏழு கரை நாடு என்று வழங்கும் வழக்கம் உள்ளது. 'கரை' என்றால்சிறிய ஆறு' என்றும் 'ஏழு(சிறிய) ஆறுகளை' உடையநாடு" "ஏழு கரைநாடு" என்று வழங்கப்படுகின்றது, என்று வீ. வைத்தியநாத ஐயர் கூறுகின்றார். ஆனால் இது ஏற்றுக்

கொள்ளக் கூடியதாக இல்லை. 'கரை' என்றால் 'பங்கு' (பிரிவு) என்று ஒரு பொருள் உள்ளது.[10] ஆகவே ஐந்து பாகங்களை உடைய நாடு என்று கொள்ளலாம். இப்பொழுது கொல்லிமலை மலையாளரிடம் 'கரை' என்று பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு கரைக்கும் ஒரு தலைவன் இருக்கிறான். அவனுக்கு "கரையாளன்" என்று பெயர். ஊரில் நடக்கின்ற காரியங்கள் இவர்களுடைய ஒப்புதலின் பேரில்தான் நடைபெறும். இது வேளாளர்களிடையே இன்றும் இருந்து வருகின்றது. ஆகவே 'ஐந்து கரை' என்பது நாட்டு வணிகர்களின் நிர்வாக அமைப்பு என்று கூறலாம்.

**அடிக்கீழ்த்தளம் :**

"தளம்" என்றால் பெருவழியில் செல்கின்றவர்களின் பாதுகாப்பிற்காகப் படைகள் தங்கியிருக்கும் இடம் [**Military Settlement**] என்று பொருள். கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களில் இதுவரை மூன்று அடிக்கீழ்த்தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருமுருகன்பூண்டியில் "கரையான அடிக்கீழ்த்தளம் என்று வருகின்றது."[11] கோபி வட்டம் குன்றத்தூர் அருகில் ஒரு "அடிக் கீழ்தளம்" வருகின்றது. எல்காம்வலசு கல்வெட்டில் பயின்று வரும் அடிக்கீழ்த்தளம் படை தங்கும் இடம் என்று கொள்வதை விடப் படையினர் அமைத்த சபை என்று கொள்ளலாம்.

**நகரம் :**

நகரத்தார் என்றால் வணிக நிர்வாகிகள் என்றும் பொருள் படுகின்றது.[12] நகரம் இரண்டு என்று கல்வெட்டில் உள்ளது. கொங்கு நாட்டில் ஒன்பது நகரங்கள் இருப்பதாகச் சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுக் கூறுகின்றது. அந்த ஒன்பது நகரங் கள் எவை என்பது குறிக்கப்படவில்லை. ஆகவே கல்வெட்டில் கூறப்படுகின்ற இரண்டு நகரங்கள் எது என்று கூறமுடியவில்லை. நீலம்பூர் வணிகத்தலமாக இருந்த காரணத்தாலும், நத்த மேட்டின் அருகில் உள்ளதாலும் இதை ஒரு நகரமாகவும் இராஜராஜபுரம் என்னும் தாராபுரத்தை மற்றொரு நகர மாகவும் யூகிக்கலாம். இரண்டு நகரத்தாரின் பிரதிநிதிகள் என்று பொருள் கொள்ளலாம்.

**பதினெண் விசயத்தார் :**

ஊர்சபையைப் போன்றிருந்த [**Village Assemblies**] சபை இதில் 18 பிரிவுகள் இருந்ததாகத் தெரிகின்றது. இந்தச் சபை 18 பிரிவுகளின்மேல் மட்டுமின்றித் துணைப்பிரிவுகள், கிராமங்கள்

போன்றவற்றின்மேலும் அதிகாரம் செலுத்தும் உரிமையுடையது. இது மரபுவழிச் சொல்லாகவும் இருக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

பட்டாயர் :

'பட்டையம்' உடையவர்கள்-வணிகப் பொருள்கள் சேகரிக்கப்பட்டுள்ள இடத்தில் பொருள்களை கொள்ளையடித்துச் செல்லாதவாறு பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டுள்ள வீரர்கள்[13] என்று எஸ். வைத்தியநாதன் கருதுகின்றார். இதைப் பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை.

தென்கரை நாட்டு நீலம்பூர் நானாதேசி, திசை ஆயிரத்து ஐநூற்றுவர்போன்ற வணிகக் குழுக்களின் பண்டக சாலையைக் காக்க எறிவீரர்களை உடைய வீரப்பட்டணத்தில் எடுக்கப் பட்டது வீரப்பட்டணக்கல். நத்தமேட்டின் அருகில் காடுகளும் மலைகளும் அதிகமாக உள்ளது இந்தக் காட்டில் பழங்குடிகள் இருந்திருக்கலாம். அந்தப் பழங்குடிகள் அடிக்கடி வாணிக நகரத்திற்கு வந்து தொந்தரவுகள் கொடுத்துச் சென்றிருக்கலாம். எனவே இவர்களின் கொடிய செயலை முறியடிக்க எறிவீரப் பட்டணத்தை ஏற்படுத்தி இருக்கலாம். ஆகவே அஞ்சுகரை நாடு, அடிக்கீழ்த்தளம், இருநகரம், பதினெண் விசயத்தார் இவர்களின் ஒப்புதலின்பேரில் பண்டகசாலைகளில் நான்கு வாசலில் காவல் காக்கும் பொறுப்பு எறிவீரர்களிடம் விடப்பட்டதாக கல்வெட்டுக் கூறுகின்றது.

அடிக்குறிப்புகள் :

1. பெரியார் மாவட்ட நல்லூர் ஆசிரியர் கண்டுபிடித்துப் புகைப்படம் எடுத்துள்ளார். கோவை பதிவு அலுவலர் அலுவலகத்தில் உள்ளது. [கையெழுத்துப் பிரதி]

2. **Largest Provincial organisation in Ancient India-K. V. Subramanya Aiyer. B. A.**

3. **Peasant State and Society in Medieval South India. Burton Stien.**

4. கொங்கு நாட்டு வரலாறு-கோவை கிழார்.

5. **Journal of the Tamil Studies—Volume II-K. Indrapala.**

6. **Historical Sketches of Ancient Dekkan Vol-II- K. V. Subramania Aiyer.**

7. **Journal of the Tamil Studies** Volume **II. K. Indra pala.**

8. **Journal of the Tamil Studies Volume II** by **K. Indra pala.**

9. **Largest provinical organisations in Ancient India by — K. V. Subramania Aiyer.**

10. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள்—பாகம்-3—பகுதி-2 பக்கம்-1413.

11. கோவை பதிவு அலுவலர் கல்வெட்டுத்தொகுதி [கையெழுத்து பிரதி]

12. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் — பாகம்-3 பகுதி-2.

13. தற்சமயம் பதிப்பிலுள்ள **The Geography of ancient Kongu Country K. S. Vaidhyanathan.**

# அம்பிகையும் அம்மையாரும்


வெ. வேதாசலம், எம். ஏ.,
காப்பாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
மதுரை.


சமணசமயப் பெண் தெய்வங்களில் ஒன்றாக விளங்கிய இயக்கி அம்பிகாவின் வரலாற்றையும் சைவ சமய அடியாராக விளங்கிய காரைக்காலம்மையாரின் வரலாற்றையும் ஒப்பிட்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ்நாட்டுச் சமய வரலாற்றிலும் கலை வரலாற்றிலும் இவர்கள் பெற்ற இடத்தை யும் ஒருவரின் வரலாறு மற்றவர் வரலாற்றிற்கு வித்திட்ட வகை யினையும் இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. தமிழ்நாட்டில் பக்தி இயக்க அலை வீசிய காலத்தில் சைவமும் சமணமும் ஒன்றுக் கொன்று போட்டியிட்டுக் கொண்டு வளர்ந்த நேரத்தில் ஒன்றின் கூறினை மற்றொன்று தழுவி வளர்ந்தவிதத்தையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

**இயக்கி அம்பிகா :**

சமண சமயத் தீர்த்தங்கரர்களுக்கு எவ்விதத் தீங்கும் வாரா வண்ணம் காத்து நின்ற சாசனத் தெய்வங்கள் ' இயக்கி என்றும் இயக்கன் என்றும் அழைக்கப்பெற்றனர். ஒவ்வொரு தீர்த்தங்க ரர்க்கும் காவலாக ஒரு இயக்கியும் ஒரு யக்சனும் விளங்கினர். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுக்கென்று தனித்தனியே இரு பத்து நான்கு இயக்கியரும் இருபத்து நான்கு இயக்கர்களும் இருந் தனர். வடஇந்தியாவில் குசானர்கள்காலத்திலிருந்து தீர்த்தங்கரர் உருவங்களை இயக்கிஇயக்கர் உருவங்களோடுசேர்த்துப்படைக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. இயக்கி அம்பிகாவே முதன் முதலில் தீர்த்தங்கரர் உருவத்துடன் சேர்த்து வழிபடப்பெற்ற , சாசனத் தெய்வமாவாள்.[1] தமிழ்நாட்டில் சிலப்பதிகார காலத்திலிருந்தே இயக்கி வழிபாடு பற்றிய குறிப்புக்கள் நமக்குக் கிடைத்துள்ளமை

குறிப்பிடத்தக்க செய்தியாகும். இதுவே தென்இந்தியாவில் இயக்கி வழிபாடு பற்றி நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளில் பழைமையானதாகும்.[2]

இருபத்து நான்கு இயக்கியரில் தமிழ்நாட்டில் குறிப்பிடத் தக்க முறையில் சிறப்பாகப் போற்றி வழிபடப்பெற்ற இயக்கியர் சிலரே. அவர்களில் இவ்வியக்கி அம்பிகையும் ஒருவள் ஆவாள். இவள் இருபத்திரண்டாவது தீர்த்தங்கரராகிய நேமி நாதரின் இயக்கி ஆவாள். இவளுக்குக் குஸ்மன்டினி, அமரர் என்ற பெயர்களும் உண்டு. நான்கு கரங்களில் மூன்று மாங்கனிகள் அடங்கிய கொத்து, பாசம், குழந்தை, தடி முதலிய வற்றுடன் காட்சியளிப்பாள். இவளது வாகனம் சிம்மம் என்று இவளது உருவ அமைதிகளைப் பற்றிக் கூறும் நூல்கள் தெரிவிக்கின்றன.[3]

தமிழ் நிகண்டுகளில் இவள் தரும தேவதை என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றாள். இவளுக்குரிய பெயர்களாக எட்டுப் பெயர்கள் பிங்கல நிகண்டிலும், சூடாமணி நிகண்டிலும் குறிப் பிடப்படுகின்றன. இயக்கி மரகதவல்லி, அருனைமுடி கவித்த பகவதி, அம்மை, பூகமர்நிழல்வஞ்சி, கழியாவரத்தில் மூர்த்தி தெரியல், அம்பிகை, அம்பாலிகை, பரமசுந்தரி என்பன அப்பெயர்களாகும். இவற்றில் பூகமர்நிழல்வஞ்சி, அருகனை முடி கவித்தபகவதி என்ற பெயர்கள் இவளது உருவநலனைக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. தமிழ் நாட்டில் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டுகளில் செய்யப்பெற்ற இவளது உருவங்கள் தலையிலுள்ள கரண்டமகுடத்தின் முன்புறம் நேமிநாதரின் உருவைத் தாங்கியது போன்று படைக்கப்பட்டிருக்கின்றன. விளாத்திகுளம். பள்ளன்கோயில் முதலிய இடங்களில் கிடைத்த இயக்கி அம்பிகை யின் உருவங்களின் தலையில் உள்ள கரண்டமகுடத்தில் நேமி நாதர் அர்த்தபரியங்காசனத்தில் அமர்ந்திருப்பதைக் காணலாம். இதனையே நிகண்டுகள் அருகனை முடிகவிந்த பகவதி என்று குறிப்பிடுகின்றன. இவ்வியக்கி தனது கணவனைப் பிரிந்து துயருற்றபோது அவள்முன் கற்பகவிருட்சம் ஒன்று தோன்றி அவளுக்கு வேண்டியவற்றையெல்லாம் அளித்தது. அவற்றைப் பெற்று அதனடியில் வாழ்வு நடத்தியதன் காரணமாக இவள் பூகமர்நிழல்வஞ்சி என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**அம்பிகையின் வரலாறு :**

இவள் இயக்கி ஆவதற்கு முன்பு வடநாட்டில் கிரிநகரம் என்ற நகரத்தில் சோமசர்மன் என்ற அந்தணனுக்கு மனைவியாக

விளங்கியிருக்கின்றாள். இவள் அந்நகரத்தில் தனது ஐந்து வயதும் ஏழு வயதும் நிரம்பிய ஆண்மக்கள் இருவரோடும் தோழிப் பெண் ஒருத்தியோடும் வாழ்ந்துவந்த காலத்தில் ஒருநாள் சோமசர்மன் தனது முன்னோர்க்கு பித்ருகடனிருக்கச் சிறப்பான முறையில் உணவு படைத்திருந்தான். அந்நாளில் அதனை உண்பதற்காகத் தனதுஉறவினர்களை அழைத்தான்.படைத்த உணவினைப் படையலில் வைத்துப் படைத்து உண்பதற்கு முன்னர் அனைவரும் அந் நகரத்திற்கு அருகிலுள்ள ஆற்றிற்கு நீராடச் சென்றிருந்தனர். அச்சமயத்தில் அம்பிகை மட்டும் வீட்டில் தனித்திருந்தாள். அப்பொழுது அந்நகரத்திற்கு அருகிலுள்ள மலையில் பலநாள் உண்ணா நோன்பு இருந்த சமணத்துறவி ஒருவர் பிச்சை கேட்டு அம்பிகையின் வீட்டு வாசலில் வந்து நின்றார். இதனைக் கண்ட அம்பிகா படையல் வைத்துப் படைப்பதற்கு இருந்த உணவினை அத்துறவிக்கு இட்டு மகிழ்ந்தாள்.

சிறிது நேரத்தில் ஆற்றிலிருந்து திரும்பிய சோமசர்மனும் அவனது உறவினரும் இதனைக் கண்ணுற்றுப் படையலுக்கு வைத்திருந்த உணவு எச்சிலாயிற்றே என்று கோபம் கொண்டனர். வந்த உறவினர்கள் வருத்தத்துடன் விருந்தை ஏற்காது வெளியேறினர். கோபம் கொண்ட சோமசர்மன் அம்பிகையை வீட்டை விட்டுத் துரத்தினான். இதனால் அம்பிகை வீட்டிலிருந்த தன் குழந்தைகளோடும் சேடிப்பெண்ணோடும் வெளியேறிப் பிச்சை பெற்ற சமணத்துறவி உறையும் மலைக்குச் சென்று அவரிடம் தன் குறையைக் கூறி முறையிட்டு வழி ஒன்றும் அறியாது அம் மலையிலேயே ஓரிடத்தில் மனம் கலங்கி நின்றாள். அப்போது அவள் முன்பு கற்பக விருட்சம் ஒன்று தோன்றி அவளுக்கு வேண்டியவற்றையெல்லாம் அளித்து வந்தது. இதனால் அவள் எவ்வித மனக்கவலையுமின்றி இருந்து வந்தாள்.

இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற சோமசர்மன் தெய்வ அருளைப் பெற்ற தனது மனைவிக்குப் பயந்து அவளை வீட்டிற்கு மீண்டும் அழைத்து வந்து வாழ்வு நடத்த ஆசைப்பட்டு அவளிருக்கும் இடம் நாடி வந்து கொண்டிருந்தான். அவனது வரவைத் தொலைவிலிருந்து கண்ணுற்ற அம்பிகா தன்னை மீண்டும் துன்புறுத்தவே சோமசர்மன் வருகின்றான் என்றெண்ணி அம்மலை உச்சியின்மீதேறிக் கீழே விழுந்து உயிர் துறந்தாள். உடனே அவள் தேவர் உலகில் பொன்மயமான இயக்கியாக மாறிப் பிறந்தாள். தேவருலகில் இயக்கியாகப் பிறந்த அம்பிகை தன் குழந்தைகளையும் சேடிப் பெண்ணையும் பிரிந்து வாழ இயலாமல் இயக்கி வடிவிலேயே தன் குழந்தைகள்முன் சென்றாள். அவை அவளது உருவி

னைக்கண்டு அஞ்சிஓடின. இதனால் வருந்திய அம்பிகாவுக்குத்தெய்வத்தின் கருணையினால் நினைத்தபோது மனித உருவாகமாறித் தன் குழந்தைகளுடனும் சேடிப் பெண்ணோடும் கணவனோடும் வாழும்பேறு கிடைத்தது. அதன்பிறகு மானிட வடிவில் தன் கணவனோடு வாழ்ந்து வந்த அம்பிகையிடம் சோமசர்மன் ஒரு நாள் பொன்மயமான அவளது இயக்கி உருவினைக் காட்டும்படி வேண்டினான். கணவன் விருப்பத்திற்கு இணங்கி அம்பிகையும் தன் உருவினை அவனுக்குக்காட்டினாள். அதனைக் கண்ணுற்ற சோமசர்மன் அவள் தெய்வ உருவினைக் கண்டு மருண்டு வீட்டை விட்டு வெளியே சென்று தற்கொலை புரிந்துகொண்டான். மறு பிறவியில் சிம்மமாகப்பிறந்து தன் மனைவியான அம்பிகைக்கே வாகனமானான். இறுதியில் அம்பிகை நேமிநாதரின் இயக்கியாகும் பேற்றினைப் பெற்றாள் என்று ஸ்ரீபுராணம் இவளது கதையை எடுத்துக் கூறுகின்றது.[4]

**கலை வரலாற்றில் அம்பிகை :**

தமிழ்நாட்டில் இவளது சிற்பங்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதல் மலைச்சரிவுகளில் உள்ள சமணத்தலங்களில் புடைப்புச் சிற்பமாகவும், கட்டடக் கோயில்களில் சிற்றாலயத்தில் தனிச் சிற்பமாகவும் காணப்படுகின்றன. மேலும் இவள் உறையும் கோயில்களில் இவளது செப்புத்திருமேனிகள் ஐம்பொன்னால் செய்யப்பெற்று விழாக்காலங்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. தொண்டை நாட்டில் திருப்பாண்மலை, சித்தாமூர், அனந்தமங்கலம் ஆகிய இடங்களிலும், பாண்டிய நாட்டில் ஆனைமலை, கழுகுமலை, விளாத்திக் குளம், அனுமந்தக்குடி ஆகிய இடங்களிலும் சோழ நாட்டில் பள்ளன்கோவிலிலும் மலை நாட்டில் சிதறாலிலும் இவளது சிற்பங்கள் காணப்படுகின்றன. பாண்டியநாட்டில் இளையான்குடி, சிங்கிக்குளம், அனுமந்தக்குடி முதலிய இடங்களில் இவளுக்கென்று எடுக்கப் பெற்ற பிற்காலத்தினைச் சார்ந்த தனிக்கோயில்கள் இருந்திருக்கின்றன. ஆறகளூர், செங்கனிக்குப்பம், தச்சம்பாடி முதலிய இடங்களில் ஐம்பொன்னால் செய்யப்பெற்ற இவளது படிமங்கள் கிடைத்துள்ளன.

திருப்பாண்மலை அனந்தமங்கலம் முதலிய இடங்களில் காணப்படும். அம்பிகையின் உருவங்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். கழுகுமலை, சிதறால் முதலிய இடங்களில் காணப்படும் சிற்பங்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். ஆனைமலையில் காணப்படும் அம்பிகை

யின் உருவம் கி. பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். ஆறகளூரில் கிடைத்துள்ள அம்பிகையின் செப்புத்திருமேனி கி. பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாகும். செங்கனிக்குப்பத்திலும் விளாத்திக்குளத்திலும் பள்ளன்கோயிலிலும் கிடைத்துள்ள அம்பிகையின் உருவங்கள் கி. பி. 13-14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

சித்தாமூர், அனந்தமங்கலம், கழுகுமலை, சிதறாள், ஆனைமலை முதலிய இடங்களில்காணப்படும் அம்பிகையின் உருவங்கள் மிகக் குறைந்த வேறுபாடுகளுடன் ஒரே உருவ அமைதியைக் கொண்டவையாய் அவளது வாழ்வை விளக்கும் வகையில் வடிக்கப் பட்டுள்ளன. இவ்வுருவங்களில் இயக்கி அம்பிகையுடன் அவளது குழந்தைகளும் அவளது சேடிப்பெண்ணும் அவளது வாகனமாகிய சிம்மமும் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றில் மட்டும் கற்பகவிருட்சமும் அம்பிகையின் கணவனான சோமசர்மனின் உருவமும் வடிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் காணப்படும் இவ்வனைத்து அம்பிகையின் உருவங்களும் இரண்டு கரங்களுடன் மட்டுமே காணப்படுகின்றன.

**காரைக்கால் அம்மையார் :**

காரைக்காலம்மையாரைப் பற்றிய குறிப்பு சுந்தரரது திருத்தொண்டத் தொகையிலேயே முதன்முதலில் காணப்படுகிறது. அதன் பிறகு அவரது வாழ்வைப் பற்றி நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாகவும் சேக்கிழாரின் பெரியபுராணத்தில விளக்கமாகவும் காணமுடிகின்றது. சுந்தரர்க்கு முன்வாழ்ந்த அப்பர், சுந்தரர் ஆகியோரது பாடல்களில் காரைக்காலம்மையாரைப் பற்றிய நேரடிச் சான்று காணப்படவில்லை. ஆனால் திருவாலங்காடு காரைக்கால் அம்மையார் தலையால்நடந்த பதியாதலின் திருவாலங்காட்டைச் சம்பந்தர் மிதிக்க அஞ்சி ஊரின் வெளிப்புறத்தில் தங்கினார் என்று கூறும் பிற்காலச்சோழர்காலத்தில் வாழ்ந்த சேக்கிழாரின் கூற்றை எடுத்துக் கொண்டு சம்பந்தரின் திருவாலங்காட்டுப் பதிகமும் இதனைக் குறிப்பாக உணர்த்துகின்றது என்று கூறி இவர் கி. பி. 7ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்தவர் என்று கருதுவர்.[5] ஆனால் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணி மாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் போன்ற சிறப்பு வாய்ந்த பாடல்களைப் பாடியவர் காரைக்கால் அம்மையார். எந்தப் பாடல்களையும் பாடாத பல அடியார்களின் வரலாற்றை அறிந்து அப்பரும் சம்பந்தரும் தங்களதுபாடல்களில் சிறப்பித்துப்

பாடியுள்ளனர். இந்நிலையில் அவர்களுக்கு முன்னர் காரைக் காலம்மையார் வாழ்ந்திருந்தால் அவரைப்பற்றி அறிந்து கண்டிப் பாக தங்களது பாடல்களில் குறித்திருப்பார்கள். எனவே அத் தகைய தெளிவான சான்றுகள் கிடைக்கும் வரை காரைக்காலம் மையார் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப் பட்ட காலத்தில் வாழ்ந்து மறைந்த சைவ அடியார் என்பதே பொருத்தமாகப் படுகின்றது.

காரைக்காலம்மையார் தான் பாடிய பாடல்களில் 'காரைக் கால்பேய்' என்றே தன்னைக் குறிப்பிட்டுக்கொள்கின்றார். இவரதுபாடல்கள் அனைத்திலும் சிவன் ஈமப்பெருங் காட்டில் பேய் நின்று பாடவும் ஆடவும் நடனமிடும் காட்சி சிறப்பித்துப் பேசப்படுவதால் இவர் 'காரைக்கால் பேய் என்றும்' காரைக்கால் பேயார்' என்றும் பெயர்பெற்றிருக்க வேண்டும்.

இவளது வாழ்க்கை வரலாறு சேக்கிழாரின் பெரிய புராணத் தில் திருநின்ற சருக்கத்தில் பின்வருமாறு எடுத்துக் கூறப் பெறு கின்றது.[6] காரைக்கால் அம்மையார் புனிதவதியார் என்ற பெயரில் வணிகர் குலத்தில் தனதத்தனார்க்கு மகளாகப் பிறந் தார். நாகப்பட்டினத்தில் நீதிபதி என்ற வணிகரது மகனாக விளங்கிய பரமதத்தனுக்கு வாழ்க்கைப்பட்டு அங்கேயே தனது இல்வாழ்வை நடத்தி வந்தார். ஒரு நாள் பரமதத்தனிடம் தொழில் நிமித்தமாக வந்த இருவர் இரண்டு மாங்கனிகளை அவ னிடம் அளித்தனர். அதனைப்பெற்ற பரமதத்தன் அவற்றைப் பிறர் மூலம் புனிதவதியாருக்கு கொடுத்தனுப்பினான். புனிதவதி யார் பழங்களைப் பெற்று வீட்டில் வைத்திருந்த வேளையில் பிச்சைகேட்டு வந்த ஒரு சைவ அடியாருக்கு அவற்றில் ஒன்றை உணவுடன் படைத்து மகிழ்ந்தார்.

வீடு திரும்பிய பரமதத்தனுக்கு எஞ்சியிருந்த மாங்கனி ஒன்றினை உணவோடு வைத்துப் படைத்தார். அதன் சுவையை உணர்ந்த பரமதத்தன் தான் கொடுத்தனுப்பிய மற்றொரு கனி யையும் கொண்டுவரப் பணித்தான். வீட்டின் உட்புறம் சென்று தவித்த புனிதவதியார்க்குச் சிவனது அருளால் மற்றொரு கனி கிடைத்தது. அதனைப் பரமதத்தனிடம் கொண்டு வந்து படைத் தார். அதன் சுவை முன்னைய மாங்கனியைக் காட்டிலும் அதிமது ரமாய் இருப்பதை அறிந்த பரமதத்தன் நடந்த உண்மையை அம்மையார் மூலம் அறிந்து அவரது சக்தியின் ஆற்றலை அறிய மற்றொரு மாங்கனியை வரவழைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டான். அம்மையாருக்கு சிவனது அருளால் மீண்டும் ஒரு கனி கிடைத்தது.

இதனைக் கண்ணுற்ற பரமதத்தன் அம்மையாரின் தெய்வ சக்திக்குப் பயந்து வெளிநாட்டிற்குப் பொருளீட்டுவதாகக் கூறி விட்டுப் பாண்டிய நாட்டிற்குச் சென்று ஒரு துறைமுகத்து ஊரில் தங்கினான். சிறிது காலத்தில் அங்கு வேறு ஒரு பெண்ணை மணம் புரிந்து மகள் ஒன்றைப் பெற்று அதற்கு அம்மையாரின் பெயரையே இட்டு வாழ்ந்து வந்தான். சிறிது நாளில் பரம தத்தனைப் பற்றி அறிந்த அம்மையாரின் உறவினர்கள் பரம தத்தனிடம் புனிதவதியை அழைத்துச் சென்றனர். பரமதத்தன் மனைவி மக்களோடு புனிதவதியாரை வணங்கி தனது நிலையை எடுத்துக் கூறினான். இதனைக் கேட்ட அம்மை யார் கணவன்பொருட்டே இவ்வுலகில் இவ்வூண் உடம்பைப் பெற்று வாழ்ந்து வந்தேன். இனிஅதுதேவையில்லை. பேயுடம்பே தனக்கு வேண்டும் என்று இறைவனிடம் வேண்டிப் பேயுடம்பு பெற்றாள். அதன் பின்பு கயிலை நோக்கிச்சென்றாள். கயிலையில் சிவனது வாயால் 'அம்மையே' என்று அழைக்கும் பேறு பெற்றார். கயிலையில் அவர் இறைவனிடம்,

'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேலுன்னையென்றும்
மறவாமை வேண்டும் மீண்டும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும்போதுன் னடியின் கீழிருக்கவேண்டும்'

என்று வேண்டியதாகச் சேக்கிழார் கூறுகின்றார்.

சிவபெருமானும் அதன்படியே அம்மையார்க்குத் தென் திசையில் திருவாலங்காட்டில் அவர் ஆடும் நடனத்தைக் கண்டு ஆனந்தம் கொண்டு அவரடியிலிருந்து பாடிக்கொண்டு களித் திருக்கும் பேற்றை அளித்தார் என்று கூறுகின்றார் சேக்கிழார். இவ்வாறு கூறுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது அம்மை யாரது இறைவன் நடனத்தைப் பற்றிப்பாடும் பாடல்களும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டில் படைக்கப்பட்ட நடராசர் திருமேனிகளின் அடியில் அம்மையார் பேய்க் கோலத் தில் அமர்ந்து பாடிக் கொண்டிருக்கும் சிற்பங்களும் செப்புத் திருமேனிகளுமேயாகும்.

**கலை வரலாற்றில் காரைக்காலம்மையார் :**

முற்காலப் பாண்டியர் குடைவரைக் கோயில்களிலோ பல்லவர் காலத்துக் குடைவரைக் கோயில்களிலோ காரைக்கால் அம்மையாரின் உருவம் காணப்படவில்லை. கி.பி. 9-ஆம் நூற் றாண்டிலிருந்தே சிவனது நடனத்திற்குக் கீழே பேய் வடிவில் எலும்பு போர்த்த உடம்போடு அமர்ந்து இருகைகளால் தாள மிட்டுப் பாடும் நிலையில் காரைக்கால் அம்மையாரின் உருவங்கள்

காணப்படுகின்றன. கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காரைக்காலம்மையாரின் மிகப்பழமையான உருவம் கம்போடியாவில் பண்டேசகிரி நாம்சிசோர், பசம் போன்ற பல இடங்களில்[7] காணப்படுவது குறிப்பிடத்தக்க செய்தியாகும். பண்டேசகிரி என்ற இடத்தில் நடனமிடும் சிவனது வலப் புறத்தில் இரு கரங்களுடன் அர்த்த பரியங்காசனத்தில் அமர்ந்த நிலையில் இருகரங்களைத் தூக்கி உணர்ச்சிப் பரவசத்துடன் விரல்களை இறுக மடித்து எலும்பு உடல்கொண்ட பேய் வடிவில் அம்மையாரின் சிற்பம் காணப்படுகின்றது.

இதற்கடுத்த நிலையில் தமிழ்நாட்டில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இராசராசன் எடுப்பித்த தஞ்சைக் கோயிலிலும் அவனது மகன் இராசேந்திரன் எடுப்பித்த கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலிலும் நடராசர் உருவங்களுக்கு அருகில் காரைக்கால் அம்மையாரது பேய் வடிவிலான சிற்பங்கள் காணப்படுகின்றன. தஞ்சைக் கோயிலில் நடராசரது இடது புறம் பேய்வடிவில் கைகூப்பி அமர்ந்த நிலையில் காரைக்கால் அம்மையாரின் உருவம் காணப்படுகின்றது.[8] கங்கைகொண்ட சோழபுரத்தில் பேய்வடிவில் பூதகணங்களுடன் நடராசரின் இடதுபுறம் காரைக்கால் அம்மையாரின் உருவம் இரு கரங்களில் தாளமேந்திப் பாடும் நிலையில் வடிக்கப்பெற்றுள்ளது.[9]

மேலைக்கடம்பூரிலும், தாராசுரத்திலும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காரைக்கால் அம்மையாரின் வாழ்வை விளக்கும் சிறிய சிற்பங்கள் காணப்படுகின்றன. மேலைக் கடம்பூரில் சிவன் கோயிலில் காரைக்காலம்மையார் தலையால் நடந்து செல்லும் காட்சி அழகுற சித்தரிக்கப்பட்டுள்ளது. திருப்பாலைவனத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் காரைக் காலம்மையார் சிலையைப்பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.[10]

### செப்புத் திருமேனிகள் :

காரைக்காலம்மையார்க்கென்று எடுக்கப்பெற்ற செப்புத் திருமேனிகளில் பழமையானது தஞ்சை மாவட்டத்து செம்பியன் மாதேவியில் காணப்படுகின்றது. நடராசரின் வலப்புறம் வட்ட மான கொண்டையிட்டு அமர்ந்த அழகிய பெண் அணங்காக வும் பேய்வடிவைக் காட்டும் வகையில் மார்பில் எலும்புகள் தெரிய கழுத்தில் ருத்திரமாலை தொங்க இருகரங்களிலும் தாளமேந்தி தலைகுனிந்து அமர்ந்த நிலையில் இவ்வுருவம் காணப்படுகின்றது.[11] தமிழ்நாட்டில் காணப்படும் காரைக்கால் அம்மையார் செப்புத் திருமேனிகளில் இது ஒரு அரிய கலைப்

படைப்பாகும். இருகரங்களில் தாளமேந்தி அமர்ந்த செப்புத் திருமேனிகள் தஞ்சை மாவட்டத்து குத்தாலத்திலும்(12) இலங்கையில் உள்ள பொலனருவா அருட்காட்சியகத்திலும்(13) காணப்படுகின்றன. தஞ்சை மாவட்டம் ஊட்டத்தூரில்(14) கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த காரைக்காலம்மையாரின் செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. பிற்காலத்தினைச் சார்ந்த காரைக்காலம்மையாரது செப்புத்திருமேனிகள் ஏராளமான கோயில்களில் காணப்படுகின்றன.

ஒப்பீடு :

இயக்கி அம்பிகாவின் வரலாற்றாய்வும் காரைக்கால் அம்மையாரின் வரலாற்றாய்வும், தமிழ்நாட்டு மக்களால் போற்றப் பெற்று வழிபடப் பெற்றதைக் காட்டுகின்றது. இயக்கி அம்பிகா சமண சமயத்தில் வரம்தரும் ஒரு பெண் தெய்வமாகப் போற்றப் பெற்றாள். காரைக்காலம்மையார் ஒரு சைவ அடியாராக போற்றப் பெற்றிருக்கின்றார். அம்பிகாவின் வழிபாடு கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே சிறப்புடன் போற்றப் பெற்று கி.பி. 14-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ்நாட்டு நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டுடன் கலந்து மறைந்திருக்கின்றது. காரைக்கால் அம்மையாரின் வழிபாடு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தொடங்கி அண்மைக்காலம் வரை மாறாமல் சிறப்புடன் விளங்கி வந்திருக்கின்றது. தமிழ் நாட்டில் இயக்கி அம்பிகாவிற்கென்று தனிச்சிற்றாலயங்கள் பல எடுக்கப்பெற்று வழிபடப் பெற்றிருக்கின்றாள். காரைக்காலம்மையார் சிவனது தாண்டவத்தோடு தொடர்புடைய உருவங்களில் ஒன்றாக வைத்து வழிபடப்பெற்றிருக்கின்றார்.

இயக்கி அம்பிகா, காரைக்காலம்மையாரைப் பற்றிக் கூறும் கதைகளில் பல ஒற்றுமைகளும் சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இயக்கி அம்பிகா சோமசர்மன் என்ற அந்தணனுக்கு மனைவியாக வடநாட்டில் வாழ்ந்திருக்கின்றாள். காரைக்கால் அம்மையார் தமிழ் நாட்டுக் காரைக்காலில் பிறந்து நாகப் பட்டினத்தில் பரமதத்தன் என்ற வணிகனுக்கு மனைவியாக வாழ்ந்திருக்கிறார். இருவரும் இல்லறத்தை ஏற்றுப் பின்னர் துறந்தவர்கள். முற்றிலும் துறந்த முனிவர்களை மதித்தவர்கள். இயக்கிஅம்பிகா தனதுமுன்னோர்களுக்குப் படையலுக்கு வைத்திருந்த உணவைப் பொருட்படுத்தாது ஒரு சமணத்துறவிக்கு இட்டு

மகிழ்ந்தவள். அம்மையாரோ தனது கணவனுக்கென்றிருந்த மாங்கனியை சைவ அடியார் ஒருவருக்கு இட்டு மகிழ்ந்தவர். இதனால் இருவரும் கணவனைப் பிரிந்து வாழும் கதிக்கு ஆளாயினர். அம்பிகாவின் கணவன் அவளது தெய்வீக சக்தியை அறிந்து அவளுடன் வாழ இயலாது தற்கொலை புரிந்து கொண்டான். காரைக்கால் அம்மையாரின் கணவனோ அவரது தெய்வீக சக்தியைக் கண்டஞ்சி வேற்று நாட்டிற்குச் சென்று வேறு மணம் புரிந்து கொண்டு அம்மையாரை மதித்து வாழ்ந்தவன். அம்பிகாவின் கணவன் அவளது இறப்பிற்குப் பின்னர் சிம்மமாகப் பிறந்து அம்பிகாவுக்கு வாகனமாகும் பேறு பெற்றான். அம்பிகா தெய்வீக அருளால் பொன்மயமான இயக்கி வடிவத்தினைப் பெற்றாள். காரைக்காலம்மையாரோ தெய்வத்தின் அருளால் பேய் வடிவத்தைப் பெற்றார். இதில் இயக்கி வடிவம் தானாகக் கிடைத்த ஒன்றாகும். மானுட வடிவிற்கு மாற்றிக் கொள்ளும்தன்மையது. பேய்வடிவம் மாறாத தன்மைஉடையது. இயக்கி வடிவம் பெற்ற அம்பிகா எப்போதும் நேமிநாதரை விட்டு நீங்காது அவரது அருகிலேயே இருக்கும் அவருக்குரிய இயக்கியாகும் பேறு பெற்றாள். காரைக்காலம்மையாரோ அரன் ஆடும்போது எப்போதும் அவரது அடியின் கீழிருந்து பாடும் பேறு பெற்றார் எனலாம்.

காரைக்காலம்மையாரின் வரலாறு பிற்காலத்தில் சேக்கிழாரால் சமணசமய இயக்கி அம்பிகாவின் வரலாற்றை அடியொற்றிப் புனையப்பெற்றதாகத் தோன்றுகிறது. ஏனெனில் அம்பிகாவின் வழிபாடு காரைக்காலம்மையாரின் காலத்திற்கு முன்பே வடநாட்டில் எழுந்த வழிபாடாகும். தமிழ் நாட்டிலும் சிலப்பதிகார காலத்திலிருந்து சமண சமய இயக்கி வழிபாடு சிறப்புடன் விளங்கியிருக்கின்றது. தமிழ் நாட்டுச் சிற்பச் சான்றுகள் கொண்டு பார்க்கும் போதும் காரைக்காலம்மையாரின் சிற்பங்களை விட அம்பிகாவின் சிற்பங்கள் காலத்தால் பழமையானவையாய் விளங்குகின்றன. அம்பிகாவின் வரலாற்றைக் கூறும் ஸ்ரீபுராணமும், திரிசஷ்டி சாலக்கா புருச சரித்திரமும் பெரிய புராணத்திற்கு முன்பெழுந்த நூல்களாகும். மேலும் அம்பிகாவின் உருவத்தினைப் படைக்கும் போது மூன்று மாங்கனிகள் உள்ள மாங்கொத்தினை அவள் ஏந்தியிருப்பது போன்று காட்டுவர், இதற்குத் தமிழ் நாட்டிலுள்ள பழமையான சான்றாக கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆறகளூரில் கிடைத்துள்ள இயக்கி அம்பிகாவின் உருவம் விளங்கு

கின்றது. இம்மாங்கனியேசேக்கிழார்க்குக் காரைக்காலம்மையார் சைவ அடியார்க்கு அளித்த வரலாற்றைப் புனைவதற்கு மூலமாக அமைந்திருக்க வேண்டும்.

இயக்கி அம்பிகா காரைக்காலம்மையாரைப் பற்றிய இவ்வொப்பீட்டாய்வு தமிழ் நாட்டில் சமணசமயமும் சைவ சமயமும் போட்டியிட்டுக் கொண்டு வளர்ந்தபோது சைவ சமயத்தவர் சமணசமயத்தினரின் செல்வாக்கைக் குறைக்க அவர்களது கதைகளை தமது அடியார் வரலாற்றில் சேர்த்துக் கொண்டு சைவ சமயம் வளர்ந்தமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. சமண சமயம் சைவமதத்தின் மீது ஏற்படுத்திய தாக்கத்தையும் இது காட்டுகின்றது எனலாம்.

அடிக் குறிப்புகள் :

1. Gupta, Iconography of the Hindus, Buddhist and Jains page 174-175
2. Desai, P. B. Jainism in South India, Jaina Sanskrit Samrakshaka Sanga, Sholapur, 1957.
3. Iconography of the Indus Buddhist and Jains
4. Ramachandran, T. N. Tiruppahruttikundram (Jina-kanchi) and its temples pp 157-158.
5. இராசமாணிக்கனார், சைவ சமயவளர்ச்சி, பாரி நிலையம், 59 பிராட்வே, சென்னை இரண்டாம் பதிப்பு பக். 57.
6. சுப்பிரமணிய முதலியார், சி. கே. திருத்தொண்டர் புராணம், திருநின்ற, சறுக்கம், மூன்றாம் பகுதி, இரண்டாம்பாகம், கோவை தமிழ்ச் சங்கம். இரண்டாம் பதிப்பு 1964.
7. Sivaramamurthy, C. Nataraja in Art. Thought and Literature, National Museum, New Delhi, p-354 fig 10, p-355 fig-11
8. Balasubramaniam, S. R. Middle chola temples, Thomson Press (India) Limited, Publication Division, Hariyana, 1975 Plate No. 15.

9. Ibid plate 214

10. ARE 329 of 1929

11. Venkataraman B, Thomson Press (India) Limited Publication Division, Hariyana 1976 plate No 16.

12. Nataraja in Art, Thought and Literatuae fig. 110

13. Ibid

14. Middle chola temples plate No. 241

# ஆதி செஞ்சி

கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ.
தொல்பொருள் அலுவலர்
தஞ்சாவூர்.

'செஞ்சி அழிஞ்சி சென்னைப்பட்டினம் தோன்றியது' என்ற பழமொழிக்கு ஆளான செஞ்சிநகர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது. மலைக்கோட்டைகளைத் தன்னகத்தேகொண்டுள்ள இச்செஞ்சி நகரம் ஆனந்தக்கோன் என்ற மரபில் வந்த இடையர்களால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. புதியதாக செஞ்சி நகர் உருவாவதற்கு முன்னர் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊராக விளங்கிய சிங்கபுர நாட்டின் சிங்கபுரத்தின் ஒரு பகுதியாக விளங்கிய மேலைச்சேரியே செஞ்சியாக இருந்துள்ளது. செஞ்சி என்ற ஊர்ப்பெயரின் காரணம் கூறும்போது அனுமன் தூக்கிச் சென்ற சஞ்சீவி மலையின் ஒரு துண்டு விழுந்து அதுவே செஞ்சியாயிற்று என்றும், சஞ்சீவிராயன் கோட்டைகட்டி ஆண்டதால் செஞ்சி எனப் பெயர் பெற்றது என்றும், சிங்கபுர நாடே நாளடைவில் செஞ்சியாக மாறியது என்றும் கூறுவர்.

சிங்கபுர நாடு செஞ்சியாய் மாறினாலும் சிங்கபுரம்—சிங்காவரமாக மாறியது. சிங்கபுரம் என்பது பல்லவ மன்னன் சிம்ம வர்மனையோ சிம்மவிஷ்ணுவையோ பெயராகக் கொண்டு தோன்றியது எனலாம். கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னர தேவன் காலத்திலும், பின்னர் சோழர் கல்வெட்டுகளிலும் இந்தச் சிங்கபுரம் குறிக்கப்படுகிறது. இந்த சிங்கபுரத்தின் அருகில் உள்ள ஊரே மேலைச்சேரியாகும். இரண்டு ஊருக்கும் இடையில் மலை உள்ளது. சிங்கபுரத்தில் திருமாலுக்கும் மேலைச்சேரியில் சிவனுக்கும் மகேந்திரவர்மன் காலத்தில் எடுக்கப்பட்ட குடைவரைக்கோயில்கள் உள்ளன. சிங்கபுரத்தின் ஒரு பகுதியாக மேற்கில் இருந்த காரணத்தால் மேலைச்சேரி என அழைத்தனர் போலும். செங்கல்பட்டு மாவட்டம் இந்தளூரில் உள்ள கல்வெட்டில் 'கீழைச்சேரி கோழி பொடு கொத்த' என்ற கி. பி.

7-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு உள்ளது. நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்திற்கு உரை கூறும்போது 'எடுத்த மொழியினம் செப்பலுமுரித்தே' என்ற நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாக,

''கீழ்ச்சேரி கோழி அலைத்தது என்றால்
மேல்சேரி கோழி அலைப்புண்டதும் அது'' என்பார்.

எனவே கீழைச்சேரி மேலைச்சேரி என்ற பெயர் தொன்மையான தென்பதறிகிறோம். பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் மேலைச்சேரி—மேலைச் சேரியாக அழைக்கப்பட்டதா என்பதை கல்வெட்டு மூலம் அறிய முடியவில்லை. ஆயின்,

'நந்தகோபாலன் ராஜ்ஜியம் ஆளரச்சே
செஞ்சி கமலகிரி என்பதைத் துர்க்கம்
கட்டி ஆனந்தகிரி என்று பெயர்வைத்து
பூமிக்கோட்டை ஒருசுற்று கட்டிக்
கொண்டு சிம்மாசன மண்டபம் கட்டி
மேலைச் சேரி அதுவும் செஞ்சிக்
குள்ளே சேர்ந்தது''

என்று கர்னாடக தேச ராசாக்கள் சவிஸ்தார சரித்திரத்தில் உள்ளது'

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் மேலைச்சேரியான செஞ்சியில் பூமி கோட்டை கட்டப்பட்டது. சிங்கபுர நாட்டின் ஒருபகுதி யாக இருந்தது செஞ்சியின் ஒரு பகுதியாக மாறுகிறது. மேலைச் சேரி விரிவடைந்து செஞ்சியாக மாறும்போது பழைய பெயருடன் புதுப்பெயரையும் ஏற்கிறது. புதிதாக உருவான பகுதிகளைச் செஞ்சி என்றும் மேலைச்சேரியை ஆதிசெஞ்சி என்றும் மக்கள் பாகுபடுத்திக் கொண்டனர். மக்கள் வளமாக வாழ்வதற்கேற்ப நீர் வளமும் நிலவளமும் மேலைச்சேரியில் இருப்பதை அங்குள்ள பல ஏரிகளாலும், சுனைகளாலும், குளங்களாலும் அறியலாம். அத்துடன் ஊரைச் சுற்றி மேலைச்சேரி மலையும், சிங்காவரம் மலையும் இருப்பதால் அரணாகவும் உள்ளது. மேலைச்சேரியை விட வளம் குன்றிய பகுதியாக செஞ்சி இருந்தாலும் பாதுகாப்பு மிகுதி என்பதாலும், புதிதாக நகரமாக மாறுவதாலும் மேலைச் சேரியைவிட செஞ்சியில் மக்கள் பெருகினர். மெல்ல மெல்ல மேலைச்சேரியாகிய செஞ்சி புகழ் குன்ற செஞ்சி நகரம் சிறப் பெய்தியது.

செஞ்சியில் கோன் மரபிற்குப்பின் கோட்டிலிங்கக் குறும்பன் போன்றோரும், சோழரின் பிரதிநிதிகளும் (கி. பி. 1331—நரசிங்கராயர்) பின்னர் ஹொய்சாளர்களும் ஆண்டாலும் விஜய நகரப் பேரரசின் வழியில் வந்த செஞ்சி நாயக்கர்களே பல்லாண்டுகள் சிறப்பாக ஆண்டுள்ளனர். செஞ்சி நாயக்கர்களில் துப்பாக்கி கிருஷ்ணப்பர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

செஞ்சி நாயக்கர்கள் பிஜப்பூர் சுல்தான்களால் முறியடிக்கப் பட்டபின் பிஜப்பூர் சுல்தான் பிரதிநிதி-நஜிர்கான் மூலம் ஆளப் பட்டாலும் மராட்டியர் சிவாஜி 1678-ல் செஞ்சியைக் கைப் பற்றினன். கி. பி. 1700வரை செஞ்சி மராட்டியர்களால் ஆளப் பட்டது. மொகலாயப் பேரரசின்கீழ் இருந்த ஜுல்பர்கான் நசரத்—மராட்டியரை வென்ற பின் செஞ்சி மன்னராகின்றான். டெல்லி மன்னன் நசரத்தை டெல்லிக்கு அழைத்துக் கொண்டு தம் படையில் ஆற்றல் மிக்க படைத்தலைவர்களில் ஒருவனான சொரூபசிங் என்ற இராஜபுதனத்து வீரனைச் செஞ்சியின் கில்லேதாராக்குகின்றான். சொரூபசிங் 18-1-1700 பட்டத்திற்கு வந்து செஞ்சிக்கோட்டையின் இடிபாடுகளைச் சரிசெய்தான். தன் தம்பி தாராசிங்கை மேலைச் சேரியிலிருந்து அரசு காரியங்களை ஆற்றும் படிப் பணித்தான். சொரூபசிங் 12 ஆண்டுகள் செஞ்சியை ஆண்ட நிலையில் டெல்லி மன்னர் 'ஷா ஆலம்' சொரூபசிங்கிற்கு காட்டாமல் இருந்த பன்னிரண்டு ஆண்டிற்குமாக 70 லட்சம் பணம் கட்டுமாறு தம்முடைய ஆர்க்காட்டு நவாப்பு 'சத்தகதுல் லாகான்' மூலம் பணிக்க, செய்தி அறிந்த சொரூபசிங் எப்படி 70 லட்சம் திரட்டுவது என்ற மனக்கவலையில்-காய்ச்சலாக இருந்து இறந்து விடுகிறான். சொரூபசிங்கின் மகன் 'தேசிங்கு' செஞ்சி மன்னனாகின்றான். தேசிங்கு 'அஞ்சா நெஞ்சமும்' தன்மானமு மிக்கவனாவான். கி. பி. 1714-ல் பட்டத்திற்குவந்த தேசிங்கிற்குச் சோதனை மேல் சோதனை வந்தன. டில்லி மன்னருக்கு கிஸ்திச் கட்டாததினல் சத்தகதுல்லாகான் எதிர்ப்பு தெரிவித்துத் தூதர் தோன்றால்மால் என்பவனை அனுப்பினான்.

தேசிங்குராஜின் நலனில் அக்கறை கொண்ட பைய்யர் ராம கிருஷ்ணர் தேசிங்கிடம் சமாதானம் செய்துகொள்ளக் கூறுகிறார். தேசிங்கு மேல்சேரியார் ராஜாக்கள் மசானகட்டம் பக்கம்போய்க் கோட்டைக்கு வருகிற வழியில் தொண்டர்மால் கூடாரம் போட்டு இருந்ததைக் கண்டார். தொண்டர்மால் தேசிங்கிடம் சத்தகதுல்லாகான் தந்த 'சப்தி' காகிதம் தர தேசிங்கு கண் சிவப்பேற எங்கள் முராசு கோட்டையைச் சப்தி பண்ண ஒட்டேன்.

அப்படி சப்தி பண்ணினால் அனேக தலைகள் உழுண்டுபோம் எனக்கூறி எங்களுக்கு யாரைப் பற்றியும் அக்கரையில்லை எனக் காகிதத்தைப் போட்டு விடுகிறான். தோன்றால்மால் ஆர்க்காடு வந்து நவாப்பிடம் நிகழ்ந்ததைக் கூற நவாப்பு போருக்குத் தயார் செய்கிறார்.

ஆர்க்காட்டு நவாப்பிற்கு எச்சமநாயக்கன் உள்ளிட்ட குறுநில அரசர் மட்டுமின்றி ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும்கூட உதவி புரியலாயினர். அப்போது ஆங்கிலேயர் கூடலூரிலும் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியிலும் கால் ஊன்றும் நிலையில் இருந்தனர்.

ஆர்க்காட்டு நவாப்பு பெரும் படையுடன் தேவனூர் போன்ற ஊர்களைக் கொள்ளையிட்டபடி வர தேசிங்குராஜன் தம்முடைய வழுதாவூர் நண்பன் மகமதுகானுடன் நவாப்பை செஞ்சி வருவதற்கு முன் முறியடிக்க வருகிறான். மேலைச்சேரி அருகில் உள்ள கடலி என்ற இடத்தில் இருதரத்துப் படைகளும் மோதுகின்றன. மகமதுகானும் அவனுடைய நீலவேணிக் குதிரையும் களத்தில் மாண்டுவிடத் தேசிங்கு ஆக்ரோஷமாகப் போரிடுகிறான். ஆர்க்காடு நவாப்பு தேசிங்கைக் கொல்லாமல் சிறைக் கைதியாக பிடிக்குமாறு தம் வீரர்களுக்குக் கூறுகிறான். தேசிங்கின் கோபத்தால் நவாப்பிற்கே ஆபத்துவரும்சூழலில் தேசிங்கின் குதிரை எதிரிகளால் வெட்டப்பட்டதும் தனியனாக நின்று போரிடுகிறான். அப்போது எச்சமநாயக்கன் தேசிங்கைச் அடியுங்கள் என்று கூற வீரன் ஒருவன் தேசிங்கைச் சுட்டுவிடுகிறான். தேசிங்கின் வீரத்தை மெச்சி ஆர்க்காட்டு நவாப்பு தேசிங்கு விழுந்த இடத்தில் நினைவுச் சின்னம் எழுப்புகிறான். பத்தேபேட்டை என அப்பகுதி வழங்கப் படுகிறது. மகமதுகான்—அவன் குதிரை, தேசிங்கின் பாராசாரிக் குதிரை மூவருக்கும் கடலியில்-செட்டிக் குளக்கரை மீது கோரி எழுப்புகிறான். துரதிருஷ்டவசமாகத் தேசிங்கு விழுந்த இடத்தில் எழுப்பப்பட்டக் கோயில் இடிந்துதரைமட்டமாய்ப் போய்விட்டது. ஆயின்கோரிகள் இன்றும் நன்னிலையில் உள்ளன. தேசிங்கின் பிணம் செஞ்சி கொண்டு செல்லப்பட்டது. தேசிங்கின் மனைவி எவ்வளவோபேர் தடுத்தும் கேளாமல் கணவனுடன் உடன்கட்டை ஏறுகிறாள். தேசிங்கின் உறவினனான அனுபசிங் காரியம் செய்து வைக்கிறான். தேசிங்கு சுமார் பத்தே மாதங்கள் ஆண்டாலும் மக்கள் உள்ளங்களில் இடம் பெற்றுவிட்டான். தேசிங்குராஜன் போர்க்களத்தில் எதிரிகளால் சுடப்பட்டு மாண்டான் எனக் கர்னாடக தேசராசாக்கள் சரித்திரத்தின் மூலம் அறிகிறோம்.

ஆயின் தேசிங்குராஜன் கதைப்பாடலில் மாற்றார் கையில் சிக்காமல் தம் கத்தி மூலம் தற்கொலை செய்து கொண்டான் என்றுள்ளது பொருத்தமாகத் தோன்றவில்லை. செஞ்சி ஆர்க்காட்டு நவாப்பின் வசமானவுடன் செஞ்சியில் இருந்த சிங்குகள் தம் தாயகம் சென்றனர். ஆயின் மேலைச்சேரியிலிருந்தவர்கள் அங்கு நிலைத்து வாழ முற்பட்டுள்ளனர்.

**குடைவரைக் கோயில்கள் :**

மேலைச்சேரியில் பல்லவர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட கோயில் இன்று மத்தனீஸ்வரர் என வழங்கப்பட்டாலும் கல்வெட்டில் 'சிகாரி பல்லவேஸ்வரம்' என்றே பார்க்கிறோம். மகேந்திரவர்மன் காலத்தில் குடைவிக்கப்பட்ட இக்கோயில் ஒரு மண்டபத்தையும் மண்டபத்தின் நடுவில் கருவறையையும் கொண்டுள்ளது.

> "காரிதம் இதம் ந்ருபதினா
> சந்தி ராதித் யேன ஸார்வ பௌமேன
> ஸ்ரீசிகாரி பல்லவேஸ் வரமித
> ன ஸவஸ்தாம ஸித்திர அஷ்டுக்ர"

என்ற பல்லவர் காலக் கல்வெட்டு உள்ளது. மேலைச்சேரிக்குக் கிழக்கில் சிங்காவரம் மலையில் அரங்கநாதர் குடைவரைக் கோயில் உள்ளது. மகேந்திரவர்மன் காலத்தில் குடைவிக்கப்பட்ட இக்கோயில் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் திருப்பன்றிக் குன்று எம்பெருமாள் என குறிக்கப்படுவதால் ஆதியில் வராக மூர்த்தியாக இருந்திருக்கலாம். மாலிக்காபூர் படையெடுப்பின் போது ஸ்ரீரங்கம் அரங்கநாதன் முதலில் திருப்பதிக்கும், பின் சிங்காவரத்திற்கும் எடுத்து வரப்பட்டதாகவும், பின்னர் கிருஷ்ணப்ப நாய்க்கர் காலத்தில் சேஷாத்திரி அய்யங்கார்மூலம் மீண்டும் ஸ்ரீரங்கம் கொண்டு செல்லப்பட்டதாகவும் ஒரு கதை வழங்கப்படுகிறது. அவ்வாறே மேலைச்சேரி சிவன் கோயிலுக்குச் சீயமங்கல அவணி பாஜன பல்லவேஸ்வர உத்சவ மூர்த்தியும் பனைமலை தானபுரீஸ்வரர் உத்சவ மூர்த்தியும் திருவிழா (மாசி மகம்)விற்கு கொண்டுவரப்பட்டதாகக் கதை வழங்குகின்றது. மூன்று கோயில்களும் குடைவரைக் கோயில்கள் என்பதும் பல்லவர் காலத்தில் உருவானவை என்பதும் நாமறிவோம். செஞ்சிமேலைச் சேரியும் (சேர்ந்தது) தலைநகராக இருந்ததால் பிற கோயில் உத்சவமூர்த்திகள் ஈண்டுவந்தனபோலும். சிங்காவரம் அரங்கன் உத்சவமூர்த்திகளில் ஒன்று செஞ்சி சங்கராபரணியாற்றங்கரையிலும் மற்றொன்று புதுச்சேரி கடற்கரையிலும் மாசிமகத்தில்

கொண்டுசென்று விழா நடத்துவதை இன்றும் காணலாம். செஞ்சி சிங்காவரம், மேலைச்சேரி மூன்றையும் முறையே செஞ்சி என்றும், விஷ்ணுசெஞ்சி என்றும் சிவசெஞ்சி என்றும் குறிப்பிடுவதுண்டு. தேசிங்குராஜனின் உபாசகமூர்த்தியாக சிங்காவரம் அரங்கன் விளங்கினான். போருக்குப் போகும்முன் அனுமதியை தேசிங்கு வேண்டியபோது அரங்கன் முகத்தைத் திருப்பிக் கொண்டதாகவும் ஒருகதை உண்டு.

**செஞ்சிபதியாள் :**

செஞ்சிபதியாள் என்று மக்களால் போற்றப்படுபவள் இவளேயாகும். இக்கோயில் தோன்றிய வரலாற்றை கர்னாடக தேச ராசாக்கள் சரித்திரத்தில்,

> "அந்த ராஜா...விஷ்ணு கோயிலும் சிவன் கோயிலும் கட்டிவைத்துக் கொண்டயிருக்க ராஜாவிற்கு துரோபதை அம்மன் பிரதட்சயமாய் அவன் முடித்த பூவில் மயிரும் காட்டானாள். ஆனதினாலே ராஜா தோபாலனே தர்மகர்த்தாவாய் வைத்து செஞ்சிக்கு வடக்குமுகனையில் தர்ம ராஜா துரோபதை கோயில் கட்டி குளமும் வெட்டி இந்தச்சீமையில் தம்முடைய ராஜரிகத்தில் இந்த அம்மனுக்கு மிராசு பண்ணிக்கொடுத்து ஆதிகோவிலா உண்டுபண்ணி இந்தக் கோயில் தர்மகர்த்தாவிற்கு கோயில்களில் மரியாதை முன் வரிசையாய் நடக்க திட்டம் பண்ணினர். அந்த தர்மகர்த்தா வமிசத்தான் அப்பாசாமிப் பிள்ளை பெரிய பூசாரி தினம் நாளது வரைக்கும் நடந்து கொண்டு வருகிறது''

எனக் கூறப்பட்டுள்ளது.

**தீப்பாய்ந்தாள் கோயிலும் பொந்திலியரும் :**

மேலைச்சேரியில் உள்ள தீப்பாய்ந்தாள் கோயில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஊருக்குத் தெற்கில் சிங்காவரம் மலைக்கருகில் வன இலாகா எல்லையில் தீப்பாய்ந்தாள் கோயில் உள்ளது. பல ஊர்களில் தீப்பாய்ந்தாள் கோயிலை நாம் பார்த்தாலும் இக்கோயில் தோன்றிய வரலாறு சுவையுடையது.

மேலைச்சேரி சிங்கு அரசமரபில் வந்த ஒரு மன்னன் (க்ஷத்திரிய சிங் என்கின்றனர்) மங்காபாய் என்ற நாயுடு வகுப்பைச் சேர்ந்தவளை ஆசை நாயகியாக வைத்திருந்தாராம். மன்னர் இறந்தவுடன் நிறை மாத கர்ப்பிணியாக இருந்த மங்கை ஆசைநாயகன் மாட்டு வைத்திருந்த அன்பின் காரணத்தால்

உடன்கட்டையேறத் துணிகிறாள். மன்னனின்சொந்த மனைவி யான சிங்குப்பெண் உடன்கட்டை ஏற மறுக்கிறாள். கூடியிருந்த மக்கள் அவளை எரியும் தீயில் தள்ளி விடுகின்றனர். மங்கையின் அன்பைப் பாராட்டி மண்டபம் ஒன்றை எழுப்பி சிங்கு மன்ன னுடைய உருவத்தை வணங்கும் நிலையிலும் மங்கையையும் சிலையாக வடிக்கின்றனர். அருகில் சமாதியில் நால்வர் பாதங் களில் ஒன்று குழந்தையின் பாதமாகும். அதாவது சிங்கு, சிங்கின் மனைவி மங்காபாய், மங்காபாய் வயிற்றில் இருந்த கருவாகிய குழந்தை ஆகியோர் பாதங்களாகும். இக் கோயிலுக்கு சிறிது தூரத்தில் இயற்கையான குளமும் உண்டு. செய்குளம் கிணறு போல் சிறிய அளவில் உள்ளது. அதில் தூண்களும் உள்ளன. கிழக்கில் படிக்கட்டுகள் உள்ளன. மேற்கில் தடுப்புச் சுவர் உள்ளது. ஒருபுறமிருந்து மறுபுறம் பிறரறியாமல் செல்ல முடியும். குளத்தைச் சுற்றி உள்ள சுவரில் விளக்குகள் வைக்க மாடங்களுமுள்ளன. இவ்விடம் குதிரைத் தோப்பு என இன்றும் வழங்கப் படுகிறது. அந்நாளில் அரச மரபினர் இங்கு வருவராம். இன்று சிங் இனத்தவர்கள் திருமணம் செய்த இரண் டாம் நாள் இங்கு வருகின்றனர். ஊஞ்சல் கட்டி விளையாடு கின்றனர். தீப்பாய்ந்தவளான மங்காபாய் போல அன்பு வாழ்க்கை அமையவேண்டும் என்ற நோக்கில் இங்கு வந்து வழி படுகின்றனர் எனலாம்.

மேலைச்சேரியில் இன்று வாழும் சிங்குகள் பொந்திலியர் எனத்தம்மை அழைத்துக்கொள்கின்றனர். சுமார் 60 வீடுகளே இன்று பார்க்கிறோம். இவர்கள் இந்துஸ்தானி மொழி பேசினா லும் தமிழர் பழக்க வழக்கங்களையே மேற்கொள்கின்றனர். தம்முடைய மூதாதையரைப்பற்றிப் பலருக்கு ஒன்றுமே தெரிய வில்லை. இவ்வூரில் இருந்த அரண்மனை இடிந்த நிலையில் தம் முடைய தொன்மையைக் காட்டிக் கொண்டுள்ளது. அரண்மனை இருந்த இடம் அரண்மனைத்தெரு என அழைக்கப்படுகிறது. பழைய அரண்மனைக் கிணறுகள் சில உள்ளன. ஒரு கிணற்றின் அருகில் நடுகல் போன்ற சிற்பம் உள்ளது. மக்கள் முனிஎன்கின்றனர். உண்மையில் தேசிங்கு ராஜனை நினைவு கூரும் வண்ணம் சிங் மன்னர் எழுப்பியிருக்க லாம். இளம் வயதுடைய போர் வீரனாக இச்சிற்பம் உள்ளது. அவ்வாறே காமாட்சி கோயில் என மக்கள் அழைக்கும் கோயிலில் உள்ள சிலை சிங்கு வம்சத்தைச் சேர்ந்த மன்னராகவே தோன்று கிறது. காமாக்ஷி கோயில் அருகில் பாறையில் தேவ நாகரியில் Vவ என்ற இரண்டு எழுத்து. சிதைந்த நிலையிலும் 'விமுசிங்கு'

என்ற 18ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களும் உள்ளன. இவ்வாறு ஆதி செஞ்சியான மேலைச் சேரி வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டு விளங்குகிறது. மேலைச் சேரியில் மட்டுமின்றி கிழவன் பூண்டியிலும் நெமிலியும் பொந்திலியரும் இன்று வாழ்கின்றனர்.

வட இந்தியாவிலிருந்து போந்த மராட்டியர்கள் தஞ்சையிலும், இராஜஸ்தானத்து பொந்திலியர் செஞ்சியிலும், ஆட்சி புரிந்த இவர்கள் சம காலத்தவர்கள் எனலாம். மராட்டியர்களை பீஜப்பூர் சுல்தான் வேண்டுகோளுக்கிணங்க தேசிங்கு தோற்கடிக்கிறான். ஆரம்பத்தில் தஞ்சையைக் கைப்பற்றிய ஏகோஜி-முஸ்லீம்களின் படைத் தலைவராக இருந்தது போலவே சொரூபசிங்கும் முஸ்லீம்களின் படைத்தலைவராக இருந்துள்ளான். பத்தே மாதம் ஆண்ட தேசிங்கு வீரத்தின் மாட்சிமையில் பாமர மக்களிடையே செல்வாக்குப் பெற்று இன்றும் போற்றப்படுகிறான். ஏகோஜி மரபில் வந்த மன்னர்கள் பெரும்பாலும் சமாதானம் செய்துகொண்டுதம் அரசாட்சியைக் காப்பாற்றிக்கொண்டுள்ளனர். அதே போல்- மேலைச்சேரியில் அரசாண்ட தாராசிங் மரபினர் முதலில் முஸ்லீம்களுடனும் பின்னர் ஆங்கிலேயர்களுடனும் சமரசம் செய்து கொண்டு சிற்றூரை ஆண்டனர்.

**ஆய்வுக்குதவிய நூல்கள் :**

1. கர்னாடக தேச ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்.
2. செஞ்சியைப்பார்—கோவிந்தசாமி.
3. மகேந்திரவர்மன்—மயிலை சீனி. வேங்கடசாமி.
4. தெ. ஆ. மா. கெஜட்—கோயில்கள்.
5. செங்கை மாவட்டக் கருத்தரங்கு.
6. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்— கே. கே. பிள்ளை.
7. திரு. கோபால கவுண்டர் Ex. M. L. A. நேரில் கூறிய தகவல்கள்.

# இஞ்சிக்குடி

ஆ. பத்மாவதி எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை—28.

தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டத்திலுள்ள ஊர் இஞ்சிக்குடி. இவ்வூரிலுள்ளகோயில் ஸ்ரீபாற்வதீசுவரர் கோயில். இக்கோயில் கல்வெட்டுக்களைப் படித்தபோது ஸ்ரீமருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயில் என்றவொரு கோயிலின் கல்வெட்டுக் களும் இக்கோயிலில் காணப்படுவது தெரிய வந்தது. இக்கல் வெட்டுக்களை ஆழ்ந்து நோக்கியபோது ஸ்ரீமருதாந்தக ஈஸ்வர முடையார் கோயில் கல்வெட்டுக்கள் என்றும் ஸ்ரீபாற்வதீசுர முடையார் கோயில் கல்வெட்டுக்கள் என்றும் இருபகுதியாக இக் கல்வெட்டுக்களை ஆய்தல் அவசியம் என்பது தெரிய வந்தது.

இரண்டாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன் ஆகியோர் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய ஸ்ரீமருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயிலில் திரிபுவன சுந்தரர், செம்புறம் உடையார் ஆகிய திருவுருவங்கள் இருந்தன. திரிபுவன சுந்தரருக்கு 10 காசினைப் பெற்றுக் கொண்டு மகாசபையார் நிலம் இறையிலி செய்து கொடுத்தனர். செம்புறம் உடையாருக்கு பொன்னாலான தட்டு ஒன்று பராந்தக பிரம்மராயரால் அளிக்கப்பட்டது. இதுதவிர இக்கோயிலில் மகா சபையார் கூட்டங் குறைவறக் கூடியிருந்து இக் கோயிலுக்கு சாஸ்வதகமாக நிலம் இறையிலி செய்து கொடுத்தனர். இக் கோயிலில் வடவாயில் சந்தி விளக்கு, தெற்கடைய திங்கள் தோறும் மெய்ப் பூச்சு, திருநந்தவனம் ஆகியவற்றிற்கு தர்ம மாக ஒருவன் நிலம் அளித்த செய்தி ஆகியவை குறிப்பிடப்பட் டிருக்கின்றன.

இரண்டாம் இராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் சிறப்புற்று விளங்கியது. வியாபாரிகள் வசிக்கும் அம்பர் நகரம் எதிரிலி சோழ நல்லூரில் எடுத்த பாற்வதீசுவரர் கோயிலில் சாத்தாங்குடையான் நந்திவருமன் என்பவன் அழகிய நாயகரையும் நாச்சியாரையும் எழுந்தருளு வித்து அமுதுபடிக்கு நிலமும் கொடுத்திருக்கின்றான். இக்கல் வெட்டில் பள்ளியான சிற்றம்பல நல்லூர் குறிப்பிடப்படுகிறது. எனவே இக்கோயில் மட்டுமின்றி ஒரு சமணப் பள்ளியையும் உள்ளடக்கித் திகழ்ந்திருத்தல்வேண்டும்.

மேற்கூறிய இவ்விரு கோயில்களிலும் இரு வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. முதலில் ஸ்ரீமருதாந்தக ஈஸ்வர முடையார் கோயில் கல்வெட்டினைக் காண்போம்.

இக்கோயில் ஸ்ரீசோளமாதேவி சதுர்தேவி மங்கலத்தில் அமைந்திருந்தது.

இக்கோயிலைச் சேர்ந்த கல்வெட்டுக்களுள் காலத்தால் முந்தியது இரண்டாம் ராஜேந்திரனின் 10-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும்.[1] இக்கல்வெட்டில் இராஜாதிராஜன் என்பவனும் அரையன் திருச்சிற்றம்பலமுடையானும் சங்கரன் இராமநாந ராஜ மகேந்திர (பிரமாதராய) னும் குறிப்பிடப்படுகின்றனர். இதன் பின்னர் வரும் பகுதிகள் கிடைக்கவில்லை. என்றாலும் இவர்கள் அனைவரும் படைத்தளபதிகளாகக் (commander in-chiefs) காணப்படுவதால் ஏதாவது ஒருபோரில் வெற்றிதேடித்தந்து இற திருத்தல் வேண்டும். அவர்கள் குடும்பத்திற்கு மன்னன் மானிய மாக இவூரில் (ஸ்ரீகோளமாதேவி சதுர்வேதிமங்கலத்தில்) நிலம் கொடுத்திருத்தல் வேண்டும். அவ்வாறாயின் அவர்கள் வெற்றி பெற்ற போர் எது? இரண்டாம் இராஜேந்திர சோழனின் 9-வது ஆட்சியாண்டில் நடந்த போர் முடக்காற்றுப் போர்.

இந்தப்போரில் இரண்டாம் இராஜேந்திரனும் இராஜமகேந் திரனும் கலந்து கொண்டனர். இப்போர் மேலைச் சாளுக்கிய ஆகவமல்லனை எதிர்த்து நடந்த போர். இப்போரில் வெற்றி. தேடித் தந்தவர்களாக மேற்கூறியபடைத்தளபதிகள் இருக்கலாம் இவர்களுள் ஒருவன் இராஜமகேந்திரனின் பெயரைக் கௌரவ மாகத் தன் பெயரோடு வைத்துக்கொண்ட 'சங்கரன் இராமனுன ராஜமகேந்திர பிரம்மாதராயன்' ஆவான். இக்கல்வெட்டில் முதலா வதாகக் குறிக்கப்படுபவன் இராஜாதிராஜன். இவனும் முதலாம் இராஜாதிராஜனின் பெயரைத்தன் பெயரோடுசிறப்புப்பெயராக

பெற்றவன். இவனைப் பற்றிக் கூறும்போது முதலில் இவன் தந்தை சங்கரன் பெரியானைக் கூறி அவனுடைய மகன் இராஜாதிராஜன் எனக் கூறுகிறது கல்வெட்டு. அதாவது முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் நடந்த புகழ் பெற்ற போர், கல்யாணபுரத்தில் நடந்த போர். இப்போரில் கலந்து கொண்டு பெரும் வெற்றியைத் தேடித் தந்த இவன், கல்யாணபுரங் கொண்ட சோழப் பிரம்மாதி ராயன் என்று கௌரவிக்கப்பட்டிருக்கின்றான். முதலாம் இராஜாதிராஜன் தம்பி இரண்டாம் இராஜேந்திரன் காலத்தில் ஆகவமல்லனோடு கொப்பத்தில் நடந்தபோரிலும் கலந்துகொண்ட சங்கரன் பெரியாந் செயற்கரிய செயல் ஒன்றைச் செய்தவன். எதிரியின் யானைப் படைகளுள் ஒரு யானையின் முகத்தில் தனது குதிரையைப் பாயவிட்டு போர் செய்து இறந்து பட்ட பெருவீரன். இரட்ட ராஜ்ஜியத்தை வெற்றி பெற்று பேராற்றங் கரைக்கு வந்து ஆகவமல்லனோடு போரிடும் போதுதான் மேற் கூறிய பெரும்செயல் புரிந்து இறந்துபட்டான். இப்போர்ப்பட்ட வீரனுடையமகன்தான் இராஜாதிராஜன் எனக் கூறுகிறது கல் வெட்டு. தந்தை கொப்பத்துப் போரில் இறந்துபட மகன்அதே மன்னன் காலத்தில் நடை பெற்ற முடக்காற்றுப்போரில் வெற்றி தேடித்தந்துவிட்டு இறந்து விடுகின்றான். அதாவது,

........................

இரட்ட ராச்சியந்
துமிச்சு பேரா
ற்றங்க(ரை)சேய்வ
ந்து ஆகோமல்
லனோடு பொ(ரு)
த பூசலில் ஆனை
முகத்தில் குதி
ரை பாச்சிப்பட்ட
சங்கரன் பெரி
யா நான கல்லி
யாண புரங் கொ
ண்ட சோழ பிர
மாத ராயந் (மக
ன்) ராஜாதிராஜன்...

..........................

எனக் கூறுகிறது.

இக்கல்வெட்டின் மெய்க்கீர்த்திப் பகுதியில் ஆகோமல்லனை இருமடி வெற்றி கண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவன் காலத்தில்

முதல்முறை கொப்பத்துப் போரிலும் இரண்டாம் முறை முடக் காற்றுப் போரிலும்தான் என்பது உறுதி. முடக்காற்றுப் போர் இரண்டாம் இராஜேந்திரனது 9-வது ஆட்சியாண்டில் நடை பெற்றதாலும் மேற்கூறிய கல்வெட்டு 10-ஆம் ஆட்சி யாண்டைச் சார்ந்ததாலும் இக்கல்வெட்டு குறிக்கும் போர் முடக்காற்றுப் போராகத்தான் இருத்தல் வேண்டும். எனவே இக்கல்வெட்டில் குறிக்கப்படும் படைத்தளபதிகள் முடக்காற்றுப் போரில் கலந்து கொண்டவர்களே என்பது உறுதியாகிறது.

(b) அடுத்து அம்பர் நகரத்தைச் சேர்ந்த மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டொன்று வரலாற்றுச் சிறப்புடையது.[2] இக்கல்வெட்டில் வியாபாரி கோனல் தில்லை அழகன், ஐய்யாறன் அமுதன், நாரணன் சேந்தன், வீரணுக்க தாழி செட்டி, ஸ்ரீசோழ அணுக்கரில் அருக்கண் பெரியான் ஆகிய நால்வரும் துவராபதி பேரிளமை (ஏரி இன்) சென்று போர் நடத்தி இறந்ததாகக் கூறப்படுகின்றனர். மேலும் இவர்கள் இவ்வூராற்கு நன்றி செய்து இறந்ததாகவும் குறிக்கப்படு கின்றனர். ஊரார் இவர்களுக்குச் செய்த உதவியாது? இவர்கள் துவராபதி பேரிளமையாருடன் போரிடக் காரணமென்ன? என்ப தெல்லாம் தெரியவில்லை. மேற்கூறிய இந்நால்வருக்கும் நகரத்தார் நிலம் இறையிலி செய்து கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் குறிக் கப்பட்டுள்ளது. மேற்கூறிய நால்வரில் இருவர் அணுக்கர் என்று தெரிய வருகிறது. ஒருவர் வீரணுக்கர் என்றும், ஸ்ரீசோழ அணுக்கர் என்றும் குறிக்கப்படுகின்றனர்.

துவராபதி பேரிளமையார் உய்ய கொண்டார் வள நாட்டு அம்பர் நாட்டு ஒரு பகுதியில் கோளமதேவி சதுர்வேதி மங்கலமும் என்ற ஊரும், அம்பர் நகரமும் அமைந் திருந்தன என்றும் பார்த்தோம். சதுர்வேதி மங்கலத்தாரும் நகரத்தாரும் இணைந்து சிலகாரியங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். உதாரணமாக மலூர் பட்டினத்துக் கல்வெட்டொன்றில் சோள மாதேவி சதுர்வேதி மங்கலத்தாரிடம் இருந்து பிறரால் கடன் வாங்கப்பட்ட அவ்வூர்க்கோயிலில் பொருளுக்கு வட்டி வசூலிக் கும் பணியை அவ்வூர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சேர்ந்து செய்வ தாக நகரத்தார் ஒப்பந்தம் செய்தனர்.[3] அதுபோல சதுர்வேதி மங்கலத்தாருக்கும் விவசாயிகளான பேரிளமையாருக்கும் சில ஒப்பந்தங்கள் நடைபெற்றிருந்தன. உதாரணமாக திருக்கட வூரில் 240 பேரிளமையாருக்கும் மகாசபையாருக்கும் சில ஒப்பந் தங்கள் நடைபெற்றிருந்தன.[4] எனவே மகாசபையார்...நகரத் தார்—பேரிளமையார் இவர்கள் சிற்சில ஒப்பந்தங்கள் செய்து

வாழ்ந்தனர் என்று தெரிகிறது. எல்லா பேரிளமை நாடுகளும் தனியூர்களுக்கு அருகிலேயே அமைந்திருந்தன என்றும் அதனால் பேரிளமை நாடுகளுக்கும் தனியூர்களுக்கும் சில தொடர்புகள் இருந்திருத்தல் வேண்டும்[7] எனக் கூறப்படுவதும் மேற்கூறிய கருத்தை வலுப்படுத்துகிறது. மேற்கூறிய கல்வெட்டில் குறிக்கப் பெறும் துவராபதி பேரிளமையார் யார்? எங்கு வசித்தார்? என்பது கேள்விக்குறியாக நம்முன் நிற்கின்றன. துவராபதி பேரிளமையார் தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடிக்கருகில் வாழ்ந்திருந்தனர். இராமநாதபுரம் மாவட்டம் சிவபுரியில் உள்ள முதல் குலோத்துங்கன் காலக் கல்வெட்டொன்றில் கந்தன் மங்கலத்தேவன் என்ற துவராபதி வேளான் என்பவனும் சுந்தரத்தோளான் கந்தன் என்ற ராஜேந்திரசோழ துவராபதி வேளானும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர்—எனக் கூறப்பட்டுள்ளது. இதற்குப்பின் 10 வருடங்கள் கழித்து இதைப்போன்று இன்னொரு ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தில் வட ஆற்காடு மாவட்டம் மாடம் என்ற ஊரில் இதுபோன்று செங்கேணி வழியினர் ஒப்பந்தம் செய்திருந்தனர். மேலும் மூன்றும் குலோத்துங்கன் காலத்திலும் அதிகமாகக்காணப்பட்டது எனத் தெரியவருகிறது.[8] எனவே முதலாம் குலோத்துங்கன் காலத்தில் நடந்த போர் இராமநாதபுரம் மாவட்டம் துவராபதி வேளாளர்களுடன்நடந்த போராக இருக்கலாம். அப்போரில் இவ்வூர் வியாபாரிகள் நால்வர் இறந்துபட்டதால் அவர்கள் குடும்பத்தாருக்கு அம்பர் நகரத்தார் இறையிலி செய்து கொடுத்துள்ளனர்.

கோளமாதேவி சதுர்தேதி மங்கலத்திலுள்ள இரண்டாம் ராஜேந்திர சோழனின் முக்கியமான கல்வெட்டையும் அம்பர் நகரத்து முதலாம் குலோத்துங்கச் சோழனின் முக்கியமான கல்வெட்டு ஒன்றையும் பார்த்தோம்.

அந்தணர்கள் குடியிருப்பான கோளமாதேவி சதுர்வேதி மங்கலத்துக் கல்வெட்டில் குறிக்கப்படுபவர்கள் அனைவரும் பிரம் மாதிராயர்கள் (அந்தணர்கள்).

வியாபாரிகள் குடியிருப்பான அம்பர் நகரத்துக்கல்வெட்டில் குறிக்கப்படுபவர்கள் அனைவரும் வியாபாரிகளென்பதை நோக்கும் போது சிறப்பான செய்தியாக உள்ளது. இத்தனை முக்கியத் துவம் வாய்ந்த ஸ்ரீமருதாந்தக (ஈஸ்வரமுடையார் கோயிலையும் ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயிலையும் கட்டிய மன்னர்கள் யார் யார்? என்ற கேள்வி எழுகின்றது.

ஸ்ரீ மருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயில்:

இக்கோயில் கல்வெட்டுக்களுள் காலத்தால் முந்தியது. இரண்டாம் ராஜேந்திரன் காலத்து 10-ஆம் ஆட்சி ஆண்டை சேர்ந்த கல்வெட்டாகும். இதற்குப்பின் இரண்டாம் இராஜேதிரன் இரு ஆண்டுகள்தாம் ஆட்சி புரிந்தான். (1052-1064) இவன் காலத்தில் (கி. பி. 1061-ல்) நடந்த முடக்காற்றுப் போரில் இராஜமகேந்திரன் கலந்துகொண்டிருந்தான் என்றுபார்த்தோம். ஆனால் 1063-64-ல் வீரராஜேந்திரன் பொறுப்பில் நடந்த கங்கவாடி வேங்கி மீட்புப்போரில் ராஜமகேந்திரனையும் மதுராந்தகனையும் காணவில்லை.[7] கவர்வாட் கல்வெட்டொன்று (கடக் தாலுகா—துங்கபத்திரைக்கு வடக்கு) பெல்வேலோ பகுதியில் மேலைச் சளுக்கியரின் சிற்றரசர்களான கங்க மன்னர்கள் வாழ்ந்தனர். இவர்களை எதிர்த்து நடந்தபோரில் இராஜமகேந்திரனும் மதுராந்தகனும் இறந்திருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது.[8] இப்போரில் கலந்து கொண்ட சோழமன்னன் சோழ பாண்டியன் என்ற பெயருடையவன் என்றும், பெர்மானடி என்ற கங்கமன்னனால் எழுப்பப்பட்ட ஜைனக் கோயிலை இடித்து அழிவுக்குள்ளாக்கினான் என்றும், அவனுடைய அந்த பாவத்திற்கு தண்டனையாக திரைலோக்ய மல்லன் என்ற முதல் சோமேஸ்வரனால் கொல்லப்பட்டான் என்றும் தெரிய வருகிறது. இவ்வாறு சோழபாண்டியனாக ஆட்சி செலுத்தியவன் இராஜமகேந்திரன்தான் என்றும் அவன்தான் இப்போரில் இறந்தான் என்றும் உறுதியாக கூறப்பட்டுள்ளது.[9]

மதுராந்தகனும் இப்போரில் இறந்திருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகிறது. எனவே இராஜமகேந்திரனும் மதுராந்தகனும் இரண்டாம் இராஜேந்திரனின் ஆட்சிக் காலத்திற்குள்ளேயே அதாவது 1064-க்கு முன்னமேயே இறந்து விட்டனர். அதனால் தான் கூடல்சங்கமத்துப் போருக்குப்பின் இரண்டாம் ராஜேந்திரன் வீரராஜேந்திரனுக்கு முடிசூட்டினான். இவர்களில் இராஜமகேந்திரன் இறந்தது கவர்வாட்டில் நடந்த கங்கநாட்டுப் போரில் என்பது உறுதியாகிறது. அப்போர் நடந்தது கி. பி 1063—ன் முற்பகுதியில்[10] ஆனால் மதுராந்தகனும் அப்போரில் இறந்திருக்கக்கூடும் என்பது திரு. N. சேதுராமன் அவர்களின் ஊகமே தவிர, ஆதாரம் ஏதும் இல்லை. அவர் மதுராந்தகனை கி. பி. 1061க்குப்பின் காணப்படவில்லை என்று கூறுகிறார். எனவே மதுராந்தகன் காணப்படாதவருடம் 1061. இரண்டாம் ராஜேந்திரனின் இவ்வூர் கல்வெட்டு கி. பி. 1062ஐச் சேர்ந்தது. எனவே இவனுடைய 9-வது ஆட்சியாண்டில், 1061-இல் நடந்த முடக்

காற்றுப் போரில் ஏன் மதுராந்தகன் இறந்திருத்தல்கூடாது. இப் போரில் மதுராந்தகன் இறந்ததால் அவனுடைய நினைவாக ஸ்ரீமருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயிலை ஏன் கட்டியிருத்தல் கூடாது.

**பள்ளிப் படைக் கோயில்**—மதுராந்தகன் நினைவாக ஸ்ரீ மருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயில்.[11] இரண்டாம் ராஜேந்திரனால் பள்ளிப் படைக்கோயிலாகக் கட்டப்பட்டு அவன் கலந்து கொண்ட போரையும் கல்வெட்டில் பொறித்திருக்கலாம். இக் கோயில் தூண் கல்வெட்டு ஒன்று பராந்தகன் பிரம்மமாராயர் என்பவர் திருச்செம்புரம் உடையார்க்கு பொன்னுலான தட்டு ஒன்றை தானமாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.[12]

கோயில்களில் செம்புறம் உடையார் என்ற பெயரில் இறைவன் திருவுருவங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த செம்புறம் உடையார் ஏன் செம்புலத்தில்—(போர்க்களத்தில்) உயிர்துறந்தவராக—மதுராந்தகனாக—இருத்தல் கூடாது முதலாம் குலோத்துங்கன் காலத்தில் போரில் இறந்துபட்ட வியாபாரிகளைப் பற்றிக் கூறும் கல்வெட்டில் நிலம்—செம்புரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. எனவே போரில் இறந்துபட்ட வியாபாரிகளுக்குச் செம்புறமாக (உதிரப்பட்டியைப்போல்) நிலம் அளித்திருக்கலாம். எனவே செம்புறம் உடையார்—பள்ளிப்படை இறைவனாக—இறைவனான மானிடனாகத்தானிருத்தல் வேண்டும். உயர் பதவி வகிக்கும் பராந்தகன் பிரம்மமாராயரால் பொன்னாலான தட்டு தானமளிக்கப்படும் அளவு முக்கியம் வாய்ந்த இறைவனாகக் கருதப்பட்டது மேற்கூறிய கருத்தை இன்னும் உறுதிப் படுத்தலாம்.[13]

### d. ஸ்ரீ பார்வதீசுரமுடையார் கோயில் :

கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று (ஓ)வாத கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள் மகனார் திருக்கற்றளியும் திருமதிலும் எடுத்து ஊர்க்கீழ் இறையிலியாக நிலமும் அளித்து திருச்சூலக் கல்லும் நட்டதாகக் கூறுகிறது. மேற்கூறிய இக்கல்வெட்டில்,

> "[ஓ]வாத கூத்தரான கவிச்சக்ரவர்த்திகள்[12] மகனுர்
> எதிரிலி சோழ........"

என்ற பகுதி மட்டுமே முதல் வரியில் காணப்படுகிறது. இன்னொரு கல்வெட்டில் எதிரிலி சோழநல்லூர் உடையார் ஸ்ரீ பார்வதீசுரமுடையார் என்ற தொடர் கிடைக்கின்றது. எனவே இரண்டை

யும் இணைத்துப் பார்த்தால் ஒவாத கூத்தரான கவிச்சக்கர வர்த்திகள் மகனார் எடுத்த கோயில் எதிரிலி சோழநல்லூரில் உள்ள பார்வதீசுரமுடையார் கோயில் என்பதில் சந்தேக மில்லை.

எதிரிலிசோழன் என்பது இரண்டாம் இராஜராஜனின் சிறப்புப் பெயராகும். இவன் பெயரில் அமைந்த இவ்வூரில் கோயில் எடுத்தவன் வேறு யாருமல்ல, இரண்டாம் இராஜ ராஜன்மீது உலாவும், அவன் காலத்தில் தக்கயாகப்பரணியும் பாடி அவன் கட்டிய கோயிலில் தக்கயாகப்பரணியை அரங் கேற்றம் செய்தவருமான ஒட்டக் கூத்தரின் பேரனாரின் மகன்தான் அவர்.

எனவே ராஜராஜனை இரண்டாம் ஒட்டக்கூத்தர் பாடிச் சிறப்பிக்க அவர் மகன் ராஜராஜன் பெயரில் அமைந்த ஊரில் கோயில் எடுத்து சிறப்பித்திருக்கின்றான்.

**தற்போதைய நிலை:** இதுகாறும் நாம் பார்த்த ஸ்ரீமருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயிலும் ஸ்ரீபார்வதீசுரமுடை யார் கோயிலும் தற்போது எந்நிலையிலுள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

ஸ்ரீமதுராந்தக ஈஸ்வரமுடையார் கோயிலின் கல்வெட்டுச் சிறப்பினையும் செல்வச் சிறப்பினையும், அன்று அக்கோயிலுக்கு அரசியல் அதிகாரிகளால் எத்துணை முக்கியத்துவமாகக் கருதப் பட்டு கொண்டாடப்பட்டது என்பதையெல்லாம் பார்த்தோம். அப்பேர்ப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கோயிலை இப்போது நம்மால் காண முடியாது. காரணம் அப்படியொரு கோயில் இன்று இருந்தால் தானே? ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயில் பிற்காலத்தாரால் பிரித்துப் பழுது பார்க்கப்படும்பொழுது ஸ்ரீமது ராந்தக ஈஸ்வரமுடைய கோயில் இடிந்துகிடந்திருத்தல்வேண்டும். அக்கோயில் தூண்களைக்கொண்டுவந்து ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயிலில் ஆங்காங்கே பொருத்திவிட்டனர். ஸ்ரீபார்வதீசுர முடையார் கோயில் கல்வெட்டுக்களும் ஆங்காங்கே சிதறி காணப் படுகின்றன. எனவே ஸ்ரீமதுராந்தக ஈஸ்வரமுடையார் கோயில் தூண்கள் ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயில் மகா மண்டபத்துத் தூணாகவும், வாகன மண்டப நடராஜர் சந்நிதித் தூண்களாகவும் பொருத்தப்பட்டன. மேலும் சில கல்வெட்டுக்கள் ஆங்காங்கே சுவர்களில் தலைகீழாகவும் அம்மன் சந்நிதியிலும் பொருத்தப்பட் டிருக்கின்றன. ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயிலைக் கட்டியவன்

யாரென்று கூறும் முக்கியமான கல்வெட்டு அக்கோயில் கிணற்றில் பதிக்கப்பட்டுள்ள அவல நிலையைக் காணலாம்.

ஆக ஸ்ரீமதுராந்தக ஈஸ்வரமுடையார் கோயிலே இப்போது இல்லை. அக்கோயிலில் உள்ள தூண்கள் ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயிலுக்குக் கொண்டு வரப்பட்டதால் அக்கோயில் கல்வெட்டுக்களுள்—தூண்களில், உள்ள கல்வெட்டுக்கள் மட்டும் நமக்கு கிடைக்கின்றன. ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயில் கல்வெட்டுக்களும் சிதறிக்காணப்படுகின்றன. இத்தகைய நிலையில் உள்ள கல்வெட்டுக்களை வைத்துத்தான் இவ்வடிவம் எடுத்துள்ளது இக்கட்டுரை.

**அடிக் குறிப்புக்கள் :**

1. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 428/1954-55ன்படி தரப்பட்டுள்ளது.
2. இக்கல்வெட்டு ஸ்ரீமருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயிலில் இருந்திருத்தல் முடியாது. ஏனெனில் இது நகரத்தார் வெட்டிய கல்வெட்டு. ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயிலிலும் இருந்திருக்கமுடியாது. காரணம், இக்கோயில் பின்னர் கட்டப்பட்டது. எப்படியோ இக்கல்வெட்டு ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயில் அமைந்துள்ள நகரத்தினைச் சேர்ந்தது என்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

   இப்பொழுது இக்கல்வெட்டு ஸ்ரீபார்வதீசுரமுடையார் கோயிலில் உள்ளது.
3. The Colas—Page. 597
4. Political geography of the Chola country—By. Y. Subbarayalu.
5. ,, ,, ,, ,, ,,
6. The Colas—Page. 375
7. The Cholas. by. N. Sethuraman Page 48
8. Ibid Page. 61
9. Ibid Page 60-61
10. The Cholas—Page 60-61
11. மதுராந்தகன் நினைவாக எடுக்கப்பட்ட இக்கோயில் ஸ்ரீமதுராந்தக ஈஸ்வரமுடையார் கோயில் என்றிருத்தல் வேண்டும். ஆனால் மருதாந்தக ஈஸ்வரமுடையார் கோயில் எனக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.
12. Are 429 of 1954 —55.
13. இவரும் கூத்தனூர் கல்வெட்டில் ஒட்டக்கூத்தரின் பேரனாகக் கூறப்படும் கவிப்பெருமாளான ஓவாதக்கூத்தரும் ஒருவராக இருத்தல் வேண்டும்.

# குப்பள நாயக்கன்

**மா. செந்தில்செல்வக்குமரன் எம். ஏ.,**
*மாவட்டத் தொல்பொருள் அலுவலர்,*
*மதுரை.*

திருமலை குப்பள சின்னப்ப நாயக்கன் என்பவன் விருப்பாட்சிப் பாளையப் பட்டில் பத்தொன்பதாவதாக அரசு பொறுப் பேற்றவன். இவ்விருப்பாட்சி மதுரை—பழனி சாலையில்உள்ளது. குப்பள நாயக்கன் இவ்விருப்பாட்சி மலை மீது தனக்கென ஒரு அரண் அமைத்துத் தன்னாட்சி புரிந்திருக்கிறான். இன்றளவும் அவ்வூர் மக்கள் அவனை நினைவு கூறும் அளவிற்குப் புகழ் வாய்ந்தவனாகவும் இருந்திருக்கிறான். இவன் கி. பி. 1729இல் திருமலை தாசிரிசின்னப்ப நாயக்கருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவன். தன்னுடைய 33வது வயதில் கி. பி. 176இல் தனது அண்ணன் திருமலை கதிர் சின்னப்ப நாயக்கருக்குப் பிறகு பட்டமேற்றவன். இவன் 40வருடங்கள் ஆட்சி புரிந்து 73-வது வயதில் திண்டுக்கல் கலெக்டராக இருந்த ஆற்டிசு என்பவாரல் தூக்கிலிடப்பட்டான். குப்பள நாயக்கரின் மகன் முத்துவேல் நாயக்கன் என்பவன் தன் தந்தையுடன் இருந்து ஆட்சி புரிந்தான். இவனும் ஆற்டிசு துரையால் தூக்கிலிடப்பட்டான்.

**குப்பள நாயக்கன் செய்த போர்கள் :**

குப்பள நாயக்கன் ஆட்சிபுரிந்த காலம் தமிழகத்தின் மிகக் குழப்பமான காலமாகும். கும்பினியார் ஒருபுறம் படையெடுத்து ஊர் ஊராகச் சென்றனர். மறுபுறம் ஹைதர் அலி, திப்புசுல்தான் படையெடுத்து ஊர் ஊராகச் சென்றனர். இவர்களுக்கு இடையில் ஏற்பட்ட போர்கள், பலஇன்னல்களை பாளையப்பட்டுக்களுக்கும், மக்களுக்கும் விளைவித்தன. குப்பள நாயக்கன் விருப்பாட்சிப் பாளையப்பட்டினை ஆட்சி புரிந்துவரும் காலத்தில் மங்களுட்டுத்துரை மேற்கே படையெடுத்து செல்லுகிறார். அப்பொழுது குப்பள நாயக்கன் அவரை நேரில் சென்று பார்த்து தங்களுக்குக்கீழ் ஆட்சிபுரிந்து வருகிறோம் எனச்

சமாதானம் பேசி பகுதிப் பணமும் கொடுக்க ஒப்புக் கொள்கிறான். மேலும் வருடமொன்றுக்கு 3, 250 பொன் கொடுக்க சம்மதம் தெரிவிக்கிறான். இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது கைவசம்இருந்த பணம் 630ஐயும், பொன்320ஐயும் கும்பினியாரிடம்கொடுத்து ஒப்பந்தப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்கிறான். குப்பள நாயக்கன் இப்படி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்ட பொழுது திண்டுக்கல்சீமை மைசூர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. எனவே குப்பள நாயக்கன் மங்களூட்டுத் துரை சந்திப்பு, கும்பினியாரின் நட்பையும் அதே நேரத்தில் மைசூராரின் பகைமையையும் குப்பள நாயக்கனுக்குப் பெற்றுத் தந்தது.

**குப்பளன் மீர்சாகிப் போர் :**

திண்டுக்கல் ஆட்சிப் பொறுப்பை ஹைதர்அலி தன் மனைவியின் தங்கை கணவனான மீர்சாகிப்பிடம் கி. பி. 1772இல் ஒப்படைக்கிறான். மீர்சாகிப் திண்டுக்கல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தனக்கு அடங்காத பாளையப்பட்டுக்களை அடக்கி தன்கீழ் கொண்டுவர நினைக்கிறான். அதன் விளைவு கி.பி. 1773இல் குப்பள நாயக்கருக்கும், மீர்சாகிப்பிற்கும் இடையே போர் ஏற்படுகிறது. இருவருக்கும் இடையில் பெரியகோட்டை, விருப்பாட்சி, நான்காஞ்சியாறு ஆகிய இடங்களில் சண்டை நடைபெறுகிறது. இப்போரில் குப்பள நாயக்கனை மீர்சாகிப்பால் எளிதில் அடக்க இயலவில்லை, இருப்பினும் இப்போரின் இறுதியில் குப்பள நாயக்கன் தோற்றோடுகிறான். ஆட்சேதமும், பொருட்சேதமும் இருபுறமும் ஏற்படுகின்றன. குப்பளநாயக்கன் தன் மனைவி குழந்தைகளுடன் மலையில் போய் தங்கி விடுகிறான்.

பின்பு குப்பளநாயக்கன் மீர்சாகிப்பிற்குச் சமாதானத் தூது விடுகிறான். கும்பினியாரிடம் தங்களைப் பற்றி நான் எதுவும் கூறவில்லை. பெரியதுரை ஆகையினால் மரியாதைக் காகப் பார்த்து வந்தேன் எனக் கூறுகிறான். இப்படிக்கூறி சமாதானம் செய்துகொண்டு மீர்சாகிப்பிற்கு கொடுக்கவேண்டிய பாக்கிகளைக் கொடுத்து மறுபடியும் விருப்பாட்சியின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கிறான். மீர்சாகிப்பிற்கு பிறகு கி. பி. 1785இல் முதலாம் மைசூர் போரின் பொழுது திண்டுக்கல் பிரிவு கானல்லாங் என்பவன் கைக்கு வருகிறது. அடுத்த ஆண்டே அதாவதுகி.பி. 1786இல் மறுபடியும் திண்டுக்கல்கர்னல்லாங் கையிலிருந்து திப்புசுல்தானுக்கு மாறுகிறது. திப்பு திண்டுக்கல் ஆட்சிப்பொறுப்பை மீர்சாகிப்பின் மருமகனான செய்யது

சாகிப்பிடம் ஒப்படைக்கிறான். கி. பி. 1786இல் செய்யது சாகிப் திண்டுக்கல்லுக்கு உட்பட்ட 26 பாளையங்களில் 5 பாளையங்களை அதற்குரிய ஜமீன்களைத் தள்ளிவிட்டு தன்னுடைய நேரடியான ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருகிறான். இந்த நிலையில்தான் செய்யது சாகிப் குப்பளநாயக்கனுடன் போரிட வேண்டியது ஏற்படுகிறது.

## குப்பள நாயக்கன் செய்யது சாகிப் போர் :

விருப்பாட்சி பாளையக்காரன் குப்பள நாயக்கனுடன் போரிட்டு அவனை அடக்க வேண்டும், ஆதலால் போதியபடை வீரர்களை அனுப்பி வைக்குமாறு செய்யதுசாகிப் மைசூருக்கு கடிதம் எழுதுகிறான். மைசூரில் இருந்து படைவீரர்களைப் பெற்று குப்பள நாயக்கனுடன் போரிடுகிறான். இப்போர் கி. பி. 1787-இல் நடைபெற்றிக்க வேண்டும். குப்பள நாயக்கனுக்கும் செய்யது சாகிப்பிற்கும் இடையே தொடர்ந்து ஆறு மாதங்கள் சண்டை நடைப்பெற்றது. இப்போரில் செய்யது சாகிப் வெற்றி பெற இயலவில்லை. எனவே செய்யது சாகிப் தனது இயலாமையை மைசூருக்குத் தெரிவிக்கிறான். கி. பி. 1788இல் மைசூரிலிருந்து திப்புசுல்தானே நேரடியாக படைதிரட்டிவந்து குப்பளநாயக்கனுடன் சண்டையிடுகிறான். இச்சண்டையிலும் திப்புவால் குப்பளநாயக்கனை எளிதில் வெல்ல இயலவில்லை. இதனை ''திப்புசுல்தான் அவர்களே விருப்பாட்சி பேரிலே வந்திறங்கி மலைசுத்தியும், ராச்சியம் சுத்தியும், விருப்பாஷி பேறிலே வெகு கடினம்செய்தான்.'' என்று பாளையப்பட்டு வம்சாவளி கூறுகிறது. இப்போரின் இறுதியில் குப்பளநாயக்கன் தோற்று மனைவி குழந்தைகளுடன் கும்பினியாரின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள மாம்பாறை பாளையப் பட்டு கடலூரில் வந்து தங்குகிறான்.

## கும்பினியாரின் உதவியை நாடல் :

குப்பள நாயக்கன் தனது ஆட்சி பீடத்தை மறுபடியும் கைப்பற்ற கும்பினியாரின் உதவியை நாடுகிறான். அதற்காக கும்பினியாரிடம் முத்துவீரசேர்வை சென்னை சென்று ஜெனரல் மேடுசுதுரையைச் சந்திக்கிறான். ''எங்களுடைய படையெடுப்புக்கு உதவினால் உங்களுடைய சீர்மையை உங்களுக்கு இனாமாகத் திரும்பக் கொடுக்கிறோம்.'' என்று மேடுசுதுரை கூறுகிறார். மேடுசுதுரையின் ஆணையின் படியே கும்பினியாரின் படை

யெடுப்பிற்கு வீரர்கள், பொருட்கள் ஆகியன கொடுத்து உதவி செய்து மறுபடியும் குப்பள நாயக்கன் விருப்பாட்சியின் ஆட்சி பீடம் ஏறுகிறான். மேஜர் அலெக்சாண்தர் என்பவன் தன் காலத்தில் விருப்பாட்சிப் பாளையப்பட்டு கும்பினியாருக்கு வருடம் 3,250 பொன் கப்பமாகக் கொடுக்கவேண்டும் என உறுதி செய்கிறான். இந்த ஒப்பந்தத்தின்படியே மேஜர் ரங்கன்துரை. மேஜர் உஞ்சித்துரை ஆகியோர் திண்டுக்கல்லின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலங்களிலும் குப்பள நாயக்கன் வருடம் 3,250 பொன் கப்பமாகக் கட்டி ஆட்சிபுரிந்து வருகிறான். 1,795 இல் குப்பளநாயக்கன் மறுபடியும் கும்பினியாருக்கு எதிராகச் செயல்படுகிறான். கன்னிவாடி ஜமீன்தார் அப்பொழுது இறந்து விட்டதால் அப்பாளையப்பட்டின் உரிமையைத் தானே எடுத்துக் கொள்கிறான். அப்போதைய கலெக்டரின் வழக்கமான வெகுமதிகளை ஏற்க மறுத்து விட்டதோடு அல்லாமல் அவரது பிரயாணத்திற்கும் ஆங்காங்கே தடை ஏற்படுத்துகிறான். குப்பள நாயக்கனின் இச்செய்கை கும்பினியாருக்கு சினத்தை ஏற்படுத்தியது. மேலும் 1791இல் தனக்குச் சொந்தமில்லாத 26 கிராமங்களைத் தன் பாளையப்பட்டுடன் இணைத்துக் கொள் கிறான். குப்பளநாயக்கனின் இச்செய்கையால் கர்னல் இன்ஸ் என்பவன் கி. பி. 1803இல் குப்பளநாயக்கன் மீது படை யெடுக்கிறான். இப்போரில் தோற்ற குப்பளநாயக்கன் ஓடிஒளிந்து கொள்கிறான்.

கி. பி. 1803 மார்ச்சு 21 இல் விருப்பாட்சியினை கும்பினியார் எடுத்துக்கொள்கின்றனர். அதேவருடம் மார்ச் 27இல் குப்பளநாயக்கனுக்குச் சொந்தமான யானைகள், குதிரை கள், பொருட்கள் அனைத்தையும் விருப்பாட்சிக்குள் கிழக்கே யுள்ள வடகாட்டில் இருந்து கும்பினியார் கைப்பற்றுகின்றனர். அதேவருடம் மேமாதத்தில் மறைந்திருந்த குப்பளநாயக்கனும் கும்பினியாரால் பிடிக்கப்படுகின்றான். திண்டுக்கல் கலெக்டரான மேஜர் ஆர்டிசுத்துரை என்பவரால் இவன் நமக்குப் பகைவரான கம்பாக்கவுண்டரையும், லக்கன நாயக்கனையும் ஆதரித்தான் என்றும், ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு ஆள் அனுப்பினான் என்றும் குற்றம் சாட்டப்பட்டு கி. பி. 1803இல் விருப்பாட்சியில் தூக்கி லிடப்பட்டான்.[2] இவன் மகன் முத்துவேல் நாயக்கனும் இதே வருடத்தில் இவனுடன் தூக்கிலீடப்பட்டான். குப்பள நாயக்கன் குடும்பத்தைச் சேர்ந்த 22 பேர் திண்டுக்கல் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

**குப்பள நாயக்கனைப் பற்றிய நூல் :**

குப்பள நாயக்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல் ஒன்றிருக்கிறது. இது ஏட்டுப்பிரதியாக உள்ளது. இதன் பெயர் இரணவிஜயம் என்பதாகும். இதுகாறும் அச்சிடப்படா இந்நூல் குப்பள நாயக்கன் புரிந்த போர்களை மையமாக வைத்துப்பாடப்பட்டுள்ளது. குப்பளநாயக்கன் மீறுசாய்பு இடையே பல இடங்களில் நடைபெற்ற போர்களையும் அதன் விளைவுகளையும் வர்ணித்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. குப்பள நாயக்கன் மீறுசாய்பினைப் புறம் கண்டு தன் வெற்றியினைக் கொண்டாடுமுகமாக வீதிவலம் வந்து, வெற்றிக்கு உதவியவர்களுக்கும் பரிசுகள் நல்கி அவனைப் புலவர்கள் வாழ்த்திப் பல்லாண்டு பாட இந்நூல் முடிவெய்துகிறது. ரெங்கப்புலவர் மகன் கர்த்தா செட்டி என்ற புலவர் இந்நூலினை ஆக்கியதாக ஏட்டுப் பிரதியின் இறுதியில் குறிப்பிட்டுள்ளது.

**அடிக்குறிப்பு :**

1. குப்பள நாயக்கன் எந்த இடத்தில் தூக்கிலிடப்பட்டான் என்பதில் கருத்துவேறுபாடுகள் உள்ளன. வாடஸ் என்பவர் தனது சர்வே குறிப்பில் குப்பள நாயக்கன் வேதானப்பட்டி என்ற இடத்தின் அருகில் தூக்கிலிடப்பட்டான் எனக் குறிப்பிடுகிறார், மக்கன்சி குப்பள நாயக்கன் விருப்பாட்சியில் தூக்கிலிடப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்.

**மேற்கோள் நூல்கள் :**


1. **Madurai District Gazette.**
2. பாளையப்பட்டு வம்சாவளி —தொகுதி II

# தஞ்சை மாரட்டிய வம்சாவளியும் போன்ஸ்சுலே வம்ச சரித்திரமும்

ம. இராசேந்திரன், எம். ஏ.,
சுவடி நூலகம்,
சென்னை.

ஆதியில் குபேரன் தேவ சிற்பியாகிய விஸ்வக்யனைக் கொண்டு தென்னாட்டில் அளகாபுரிக்கொப்பாக இந்நகரை நிர் மாணிக்கச் செய்து, இதில் அவன் சில காலம் தங்கியிருந்து சிவ பிரானைத் தியானம் செய்தமையால் அளகை என்று பெயர் பெற்றதென்றும், தஞ்சகன் வேண்டுகோளுக்கிரங்கி தஞ்சாபுரி என்று அழைக்கப் பெற்றதென்றும் தல மான்மியங்களால் சிறப்பித்துக் கூறப்படுவது இத்தஞ்சை மாநகரமாகும்.

பழங்காலமேயன்றி வரலாற்றுக்காலம் முதற்கொண்டும் தஞ்சைக்குத் தனிப்புகழ் உண்டு. பிற்காலச் சோழ வமிசத்திற்கு அடிகோலிய விசயாலயன் 9-ஆம் நூற்றுண்டின் மத்தியில் பெரும் பிடுகு முத்தரையன் என்ற சிற்றரசனிடமிருந்து தஞ்சை நகரைக் கைப்பற்றி அழகுறச் செய்தான். 13-வது நூற்றுண்டின் மத்தி வரையில் சோழர்களாட்சியில் சிறப்படைந்தும், 14 முதல் 16ஆம் நூற்றுண்டின் இடையில் நிகழ்ந்த இராச்சியக் குழப்பத்தில் அகப் பட்டும், மறுபடியும் நாயக்கர் அரசுரிமை பெற்ற காலத்தும் (1549—1673) பிறகு மராட்டிய மன்னர்கள் காலத்தும் (1675—1855) தலைநகராகச் சிறப்புற்று இருந்த தஞ்சை, ஆண் சந்ததியில்லாமல் சிவாஜி இறக்கவே ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்கு வந்தது. இது தஞ்சையின் வரலாறாகும்.

தஞ்சையைக் கைப்பற்றிய மராட்டிய மன்னர்களின் முன் னோர் பற்றியும், தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களில் சர போசி வரையிலும் (1675—1803) உள்ள வரலாற்றுப் பகுதியைத் தெரிவிக்கும் ஒரு சுவடியும் கல்வெட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**சுவடி : தஞ்சை மராட்டிய மன்னர் வமிசாவளி :**

இது கி.பி. 1782-இல் கிழக்கிந்தியக் கம்பெனி அனுப்பிய பயிற்சிப் பொறியாளர்களோடு இந்தியா வந்தடைந்து இறக்கும் வரை (கி. பி. 1821 வரை) பல்வேறு இந்திய மொழிகளிலும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரிய கருவூலங்களைத் தொகுத்துச் சேர்த்த காலின் மெக்கன்சியின் சேகரிப்பில் உள்ள சுவடியாகும். இச்சுவடியில் மெக்கன்சியின் குறிப்புரையும் முத்திரையும் உள்ளன. இது கி.பி 1803 மார்ச் 25 ஆம் நாள் தஞ்சை அரசர் சேவகன் கிட்டினிசு பாபுராயர் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. தமிழில் 284 பக்கங் களைக் கொண்டுள்ளது. இது தரங்கம் பாடியிலிருந்துபெயர்த்து எழுதப்பட்டுள்ளது.

**கல்வெட்டு : போன்சுலே வம்சு சரித்திரம்!**

இது தஞ்சைப் பெரிய கோவில் சரபோசி காலத்தில் மராத்தி மொழியில் ஏற்படுத்தப்பட்ட கல்வெட்டாகும். கி,பி. 1803 டிசம்பர் 13-ஆம்நாள் பாபுராவ் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. இதுபோல் கோவையாக வரலாற்றினைக் கல்வெட்டில் காண்பது அரிது. இக்கல்வெட்டினைத் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தார் கி பி. 1951இல் எஸ். கோபாலன் என்பவரைப் பதிப் பாசிரியராகக் கொண்டு வெளியிட்டுள்ளனர். தமிழ் ஆங்கில மொழிப்பெயர்ப்புகளோடு 158 பக்கங்கள் அச்சுநூலில் காணப் படுகின்றன.

**ஆய்வின் நோக்கம் :**

1. சுவடியையும் கல்வெட்டையும் ஒப்பிட்டு வேறுபாடு களைக் கண்டறிதல்.
2. வேறுபாடுகளுக்கான காரணங்களை ஆராய்தல்.
3. தஞ்சை மராட்டிய வரலாறு முழுமையடைவதில் இச் சுவடியின் பங்கினை வெளிப்படுத்தல்.

**வேறுபாடுகள் :**

சுவடியிலும் கல்வெட்டிலும் பலசெய்திகள் பொதுவாக இருக்கின்றன. எனினும் சுவடியில் மட்டும் சில செய்திகளும் கல்வெட்டில்மட்டும் சிலசெய்திகளும் காணப்படுவதோடு 27இடங் களில் வேறுபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றுள் இன்றியமை யாத சில வேறுபாடுகள் மட்டும் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

சுவடியில் மட்டும் இடம்பெறும் செய்திகள் :

1. நிஜாம்ஷா (கி.பி. 1630) தனக்கு எதிராகச் செயல் பட்ட யாதவராஜாவைப் பேட்டிக்கு வரச்செய்து சூழ்ச்சியில்அவனைக் கொன்று போட்டது.
2. நிஜாம்ஷாவுடைய காலத்தில் (கி.பி. 1630) ஏற்பட்ட பஞ்சம்.[1]
3. கி.பி. 1628ல் சிவாஜி பிறந்த செய்தி.[2]
4. அமர்சிங்குக்கும் சரபோசிக்கும் நடந்த ஆட்சியுரிமைச் சண்டை.
5. கம்பெனியின் தயவு வேண்டி சரபோசி எழுதிய கடிதம்.

அமர்சிங்கு ஆட்சிபற்றி எழுதிய கடிதத்தின் கருத்துகள் :

1. சிவராயர், பச்சப்ப முதலியார் ஆகியோர் அமர்சிங்குக்கு ஆதரவாக இருக்கின்றனர்.
2. துளஜா மகராஜாவுக்கு கர்மவிதி பூர்வீகம் சாஸ்திரப் படிக்குப் பண்ணவில்லை.
3. துளஜா மகாராஜா பெண்டுகள் பேரிலேயும் அமர்சிங்கு சுலும்பு பண்ணுகிறார்.
4. மக்கள் பயப்படுகிறார்கள்.
5. நாட்டில் நீதி இல்லை.
6. அமுருத சிங்கு அயோக்கியன்.
7. ஆட்சியை நிலைநிறுத்த வீண் செலவுகளைச் செய் கிறான்.
8. வீண்செலவால் கசானாவை காலி செய்து கம்பெனிக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காமல் ஒத்தி போடுகிறான்.
9. நாட்டுப்பகுதிகளைத் துபாசிகளுக்கு அடமானமாகக் கொடுத்து அவர்கள் தயவை நாடுகிறான்.
10. மானியவரி, வீட்டுவரி போன்ற பலவரிக்கொடுமை களால் மக்களைப் பேதலிக்கச் செய்கிறான்.

இவைபற்றி கம்பெனியின் நேரடி விசாரனைவேண்டும், மக்கள் அப்போதுதான் கும்பினி ஆட்சிக்கு பயந்து விசுவாசமாக இருப்பார்கள்.

**கல்வெட்டில் மட்டும் காணப்படும் செய்திகள் :**

**1. ஆங்கிலேயரின் கொடியைக் கிழித்தமை :**

கி.பி. 1762இல் பிரதாபசிம்ம மகாராஜா திருச்சிராப்பள்ளி பிராந்தியத்தில் இருக்கிற மறவரின் இராச்சியத்திலுள்ள அனுமந்தக்குடி முதலான ஏழு கோட்டைகளை வசப்படுத்திக் கொண்டார். அனுமந்தக்குடியில் இருந்த கர்னல்ஹர்நாதா என்பவரால் எழுதப்பட்ட ஆங்கிலேயரின் கொடியொன்றை எடுத்துக் கொண்டு மகாராஜாவுக்கு அனேகவிதமாய்ச் சொல்லியும் மகாராஜா கேட்காமல் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டது மட்டுமல்லாமல் கர்னல் கிளைவ்வினிடத்தில் உள்ள கொடியையும் கிழித்தெறிந்தார்.[3]

**2. ஐரோப்பியருக்கு ஆள்வரி :**

மகாராஜா தன் ராச்சியத்தில் ஓர் உத்திரவு போட்டார். இந்த சமஸ்தானத்தில் பரம்பரையாய் நடந்த வழக்கமானது ஐரோப்பியர் யாராவது ஒருவர் வந்தால் அவர் எங்கிருந்து ராச்சியத்தில் பிரவேசிக்கிறார்களோ அங்கங்கு சுங்கவரி வசூலிக்க வேண்டும். அது எவ்விதமென்றால் ஐரோப்பியர் நடந்து வந்தால் ஒவ்வொரு ஆளுக்கும் ஐந்து வராகன் வீதமும் குதிரையின் மேல் சவாரி செய்து வருபவருக்கு அதற்கு அதிகமாயும் ஐரோப்பியர்கள் யாராவது பல்லக்கில் உட்கார்ந்து வந்தால் அவர்களுக்கு விசேஷ வரியும், மற்றும் சேனையை அழைத்துக் கொண்டு ஐரோப்பிய சர்தார் விரைவதாயிருந்தால் அவர் மகாராஜாவுக்கு முன்பே சொல்லியனுப்பி வரிவசூலிப்போருக்கு வரியை வசூலிக்காமல் இருக்குமாறு உத்திரவு போடுவதும் வழக்கமாயிருந்தது. தற்காலம் கடற்கரையிலிருக்கும் ஐரோப்பியர்கள் சமஸ்தானத்திற்கு வேண்டியவர்களாயிருக்கிறார்கள். மேலும் அவர்கள் வருவதும் போவதும் இனிமேல் எப்போதும் இருக்கும். அதிலும் சைன்யத்தோடு வருபவர்கள் நிச்சயமாய் நமக்குத் தெரிவித்துவிட்டுத்தான் வருவார்கள். மற்றும் வரும் ஐரோப்பியர் எத்துறை முகத்திலிருந்து எப்படி வந்தாலும் அவர்கள் கொடுக்க வேண்டிய வரியைத் தள்ளிவிட உத்தரவு வேண்டியதில்லை'' என்றும் கட்டளையிட்டார்.[4]

**வேறுபாடுகளுக்கான காரணங்கள் :**

காணப்படும் வேறுபாடுகளின் தன்மையைப் பார்க்குமிடத்து சில இயல்பாக ஏற்பட்ட பிழைகளாகவும் பல உள்நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டவையாகவும் இருக்கின்றன.

1. சுவடி மெக்கன்சியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பாதிரியார்கள் அறிந்த தமிழ் மொழியில் உள்ளது என்பதால் ஆங்கிலேயர்களை பற்றி அளவிறந்த புகழ்ச்சிகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

2. கல்வெட்டு மராத்தியில் இருப்பதால், தங்கள் இனத்தாரின் பெருமையைக் குறைப்பதாக இருக்கும் பல செய்திகள் இடம் பெறவில்லை.

சான்று :

3. சரபோசி அமர்சிங்கு பதவிச்சண்டை.

4. ஐரோப்பியர்களுக்கும் மராட்டியர்களுக்கும் இடையே நிகழ்ந்த போராட்டங்களும், கொடி கிழித்தல், ஆள்வரி போடுதல் ஆகியவையும் தமிழ் மொழிச் சுவடியில் இடம் பெறவில்லை. நிலவும் நல்ல உறவை இச்செய்திகள் கெடுத்து விடுமோ என்ற அச்சம் சரபோசிக்கு இருந்திருக்கிறது.

முடிவுரை :

கல்வெட்டும் சுவடியும் சரபோசி காலத்திலேயே எழுதப்பட்டுள்ளன; எனினும் எந்தத் தனி ஒன்றுமே வரலாற்றை முழுமையாகச் சொல்லும்படி இல்லை.

சுவடியின் மூலமே அமர்சிங்கு ஆட்சிக்கால நிகழ்ச்சிகளும் அதனைப் பெற சரபோசி எடுத்துக் கொண்ட முயற்சிகளும் தெரிய வருகின்றன.

மகாராட்டிர வமிசத்துக் கடைசிமன்னரான சிவாஜி 1855இல் இறக்கவே கம்பெனியினர் தஞ்சாவூர் இராச்சியத்தையும் அதன் அரசுரிமைச் சொத்துக்களையும், கோயில்களையும் பறிமுதல் செய்ய நேர்ந்ததும், சிவாஜியின் முதல் இராணியாகிய மாதுஸ்ரீகாமாட்சியம்பாபாய் சாகேப்வழக்குதொடங்கி863இல் மீண்1டும் பெற்றதும் 1929க்குப் பிறகு ஸ்கீம் திட்டத்தின் கீழ் வந்ததும் ஆகிய பிற்கால நிகழ்ச்சிகள் பலவற்றிற்கும் தொடக்கமாய், தங்களுக்குள் நிகழ்ந்த பதவிச்சண்டையை முன்னிட்டு சரபோசி ஆங்கிலேயர் காலூன்ற கைகொடுத்த நிகழ்ச்சியே அமைந்துவிட்ட வரலாற்றுச் செய்தி தெரிய வருகிறது.

தஞ்சையை மராட்டியர்கள் ஆண்டவரலாறு என்பதில் அமர்சிங்கு ஆட்சிக்காலமும் அடங்கும் என்பதால் அதனை உள்ளிட்ட வரலாற்றினை முழுமையாக அறிய இச்சுவடி பெரிதும் பயன்படுகிறது.

பாபுராவ் என்பவராலேயே கல்வெட்டும் சுவடியும் எழுதப் பட்டுள்ளது எனினும் காலத்தால் முந்தி நிற்கும் சுவடி, வரலாற் றைக்குழப்பமடையச்செய்யும் கல்வெட்டுப்பிழைகளைத்தவிர்த்து இருப்பது சிந்தித்தற்குரியது.

தமிழிலும், மராத்தியிலும் பேச்சு மொழியாகவே எழுதப் பட்டுள்ள பொதுத்தன்மையையும், குறிப்பிடப்பட்டுள்ள காலத் தையும் நோக்கும்போது, முதலில் தமிழில்எழுதப்பட்டு பிறகு கல் வெட்டில் மராத்தி மொழியாக்கப்பட்டுள்ளமை தெரிய வருகிறது.

அடிக் குறிப்புகள் :

1. நிஜாம் ஷாவுடைய தேசமெல்லாம் மழையில்லாமல் குருவிக்கு முதல் இரையில்லாமல் கிடையில்லாமல் பாடிடஞ்சு போயி விட்டுது. அந்த வேளையில் பாக்கிய வந்தானராயிருக்கிறவாள் திரவியத்துக்குச் சரியாய் தானியத்துக்கு நிறுத்து வாங்கி காலட்சேபம் பண்ணிக் கொண்டு இருந்தார்கள். மற்ற மிருகங்கள், ஏழை மனுஷர்கள் ஒண்ணுக்கொண்ணு பட்சிக்கத் தலைப் பட்டுது."

—தஞ்சை மராட்டிய வம்சாவளி

2. இது வரலாற்றிற்கு முரண்படும் வகையில் கல்வெட்டில் ஏகோஜி பிறந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

3. போன்சுலே வம்ச சரித்திரம், ப. 109.

4. ஷெ. ப. 110.

# பலர் எடுத்த ஒரு கோயில்

சு. இராசகோபால் எம். ஏ.,
பயிற்றுநர்
திருமலைநாயக்கர் அரண்மனை
தொல்பொருள் ஆய்வுத்துறை
மதுரை

தமிழக கட்டடக்கலை வரலாற்றில் ஒரு பெரிய கோயிலின் மதிலினுள் எப்படி பலகால கட்டங்களில் பல்வேறு பகுதிகள் உருவாகின என்று கல்வெட்டுக்கள், கட்டிட அமைப்புகள் கொண்டு நமக்குப் பல செய்திகள் கிடைத்துள்ளன. அதாவது கருவறைப் பகுதி ஒரு காலத்தில் ஒருவரால் கட்டப்பட அடுத்த காலத்தில் மற்றொருவர் மண்டபமெடுக்க பிறிதொருகாலத்தில் ஒருவர் திருச்சுற்று, திருச்சுற்று மாளிகை எடுக்க, பிறகு கோபுரம், நூற்றுக்கால், ஆயிரங்கால், மண்டபங்கள், குளம், அடுத்தடுத்தத் திருச்சுற்றுகள் என்று எடுக்கப்பட்டு ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, சிதம்பரம் போன்றவை, உருவாகின என்ற உண்மைகள் நமக்குத் தெரிந்த ஒன்று.

கரந்தையில் கோயிலுக்கு வேண்டிய கற்களில் 23 ஐ ஒருவன் 21 காசுக்கு வாங்கித்தானம் செய்தான், மற்றொருவன் உத்திரம் கொடுத்தான், கோயிலூரில் ஒருவன் நீர்வழியும் பிரணாளம் கோமுகம் அளித்தான். பிரான்மலையில் ஒருவன் சுனைக்குச் செல்லும் படிகள் அமைத்தான், பத்மநாபபுரத்தில் அரசரொருவர் "திருச்சுற்றின் உட்புறம் நான்கு புறமும் தளக்கல் கட்டி, சுற்றம் பலத்தில் கல் தூமப்பட்டிகையும், நடையில் இரண்டு பக்கத்திலும் வானமும், சேத்தியும், கண்டமும், பட்டிகையும் வைச்சு தளமும் பணி செய்விச்சாரு" என்பன போன்ற கட்டடக் கூறுகளின் தானங்களைச் சொல்லும் கல்வெட்டுக்களும் நிறையக் கிடைக்கின்றன.

இதுபோன்ற செய்திகளிலிருந்து வேறுபட்டதாக இந்தக் கட்டுரை ஒரே காலக்கட்டத்தில் பலர் தனித் தனியாக ஒரு

கட்டடக் கோயிலின் வெவ்வேறு கூறுகளை தானமாக கொடுத்ததால் ஒரு முழுக்கோயில் உருவாகியது என்பதை கூற முனைகிறது.

பொன்னமராவதி அருகில் சுந்தரம் என்று ஒரு ஊர், கல்வெட்டுகளில் சுந்தர சோழபுரம் என்றும், தேசியுகந்த பட்டணம் என்றும் இதன் பெயர் வழங்கியதை நாம் அறியலாம். இன்று இங்கு ஒரு சிறிய சிவன் கோயில் சுயம்பிரகாசசுவாமி கோயில் என்று சமஸ்கிருதப் பெயருடனும், கல்வெட்டுக்களில் தான்தோன்றீஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டு விளங்குகின்றது. இக்கோயிலும், இங்குள்ள கல்வெட்டுக்களும் இக்கட்டுரைக்கு அடிப்படையானவை.

மொத்தமுள்ள 19 கல்வெட்டுக்களில் 10 கல்வெட்டுக்கள் இக்கோயிலின் கட்டிடக் கூறுகளையும் யார் யார் தங்கள் தானத்தால் உருவாக்கினர் என்பதைத் தெரிவிப்பவை, அக்கல்வெட்டுகளைப் பார்ப்போம்:

1. ஸ்வஸ்திஸ்ரீ உடையார் திருத்தான்தோன்றீஸ்வரமுடைய நாயஞர் திருக்கோயில் திருமண்டபத்து திருவாசல் நிலைக்கால் இரண்டும் மேற்படியும் கீழ்படியுஞ் செய்வித்தாஞ் இன்னகரத்து புன்னங்குடையான் வஞன அம்மைத் தேவன் தன்மம். (P. S. I. 1012)

2) தான் தோன்றீசுரமுடையஞயஞர் திருக்கற்றளி பலகைப்படையும் பஞ்சரமும் அகவாயுஞ் செய்தான் இந் நகரத்துக் கூடலுடையான் எடுத்தான் அம்பல செழிய தனஞ்சியன். (P. S. I. 1014)

3. ஸ்வஸ்திஸ்ரீ திருத்தான்தோன்றீசுரமுடைய நாயனார் திருக்கோயில் மய்ய உத்தரம் செய்தான் இன்னகரத்து மருதாந்தகபுரமுடையானான தேவந் சூரிய தேவனேன். (P. S. I. 1015)

4. ஸ்வஸ்திஸ்ரீ உடையார் திருத்தாந்தோன்றீசுவரமுடைய நாயனார் கோயில் போதிகை இரண்டு உத்தரமொன்று பாற்கல்லேழுஞ் செய்தான்... பாண்டிக் கோனான சொக்கனாரான சமைய சூரியச் சிலை செட்டியார் (P. S. I. 1016)

5. ஸ்வஸ்திஸ்ரீ உடையார் திருத்தாந் தோன்றீஸ்வரமுடைய நாயனார் கோயில் கெற்பக் கிரகத்து

தலஞ்செய்தான் இந்நகரத்து பரம்பையுடையான் அரியான் அரசனான சமைய புரந்தான்.

(P. S. I, 1017)

6. ஸ்வஸ்திஸ்ரீ உடையார் திருத்தாந்தோன்றி ஈசுவர முடைய நாயனார் திருக்கற்றளி திருப்பணி இரண் டாங்காலும் தாடிப்பட்டையும் திருவிக்கிர மண்டப மும் அகவாயுட்பட செய்தான் இந்நகரத்து அரட்டன் சந்தனான சந்திவனப் பெருமாள்.

(P. S. I. 1019)

7. ஸ்வஸ்திஸ்ரீ உடையார் திருத்தாந்தோன்றீசுர முடைய ஞயனார் கோயில் எழுதகப்படை திருக்கற்றளியும் திருவக்கிர மண்டபமும் செய்தான் இன்னகரத்து துகவூரருடையான் அந்தரி உடையானான தில்லை நாயகன் (P. S. I. 1013)

8. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்குயாண்டு 24 ஆவது ஒல்லையூர் கூற்றத்து சுந்தரசோழபுர மான தேசியுகந்த பட்டணத்து உடையார் திருத் தான்தோன்றீஸ்வரமுடைய நாயனார் [மண்ட] பத்தில் வாசலில் முகவணைக்கல்லு பழுவூருடையான் செம்பொன் உய்யவந்தபெருமாள். (P. S. I. 612)

9. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு 23 ஆவது ஸிம்ஹநாயற்று பூர்வ பக்ஷத்து திரதீயையும் வியாழக்கிழமையும் பெற்ற உத்திரட் டாதி நாள் தென்கோனாட்டு ஒல்லையூர் கூற்றத்து சுந்தர சோழபுரமான தேசியுகந்த பட்டனத்து திருத் தான்தோன்றீசுரமுடையார் கோயிலில் மண்டபத் தில் மய்யப்பத்தியில் பதிநெட்டு பாக்கல்லும் [பாத்] தட்டோடுமிரு... (P. S. I. 382)

10. ஸ்வஸ்திஸ்ரீ நாயனார் திருத்தான்தோன்றீஸ்வர முடைய நாயனார் திருக்கற்றளி திருப்பணி...ரவும் உட்படச் செய்தாள் இந்நகரத்து முல்லை அழகன் உடையானான வணிகன் மகள்... (P.S.I.1018)

இக்கல்வெட்டுக்களைத் தொகுத்து நோக்கும்போது திருக் கற்றளி விமானப் பணியை இரண்டுபேர்பகிர்ந்து கொண்டனர்

என்றும், கருவறைத்தளம் மைய உத்தரம், கூரைப்பகுதியில் அமையும் எழுதகைப்படை, கருவறைக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடைப்பட்ட அகவாய், மண்டபத்தின் நிலை, அதன் மேலும் கீழும் உள்ள படிகள், வெளித்தூண் அமைப்பில் உள்ள போதிகை, பலகைப்படை, தாடிப்பட்டை முதலிய தூண்பகுதிகள். சுவர் பகுதியில் அமையும் பஞ்சர அமைப்பு, இவற்றைத் தனித்தனியாக ஒவ்வொருவர் பகிர்ந்து கொண்டனர் என்பதையும், சொற்பொழிவுகள் நிகழவல்ல வக்கிர மண்டபத்தை ஒருவர் எடுத்தார் என்பதையும், மண்டபத்தின் நடுப்பகுதியில் மேலே இரண்டு உத்திரங்கள் மீது பரப்பக்கூடிய பாக்கற்கள் 18, அவற்றின் இடைவெளிகளில் நீர் இறங்காமல் இருக்க அவற்றின் மீது அடுக்கிப் பரப்பி ஒட்டக் கூடிய தட்டோடுகளை ஒருவர் அமைத்தார் என்பதையும், மண்டப வாசலில் அழகுடன் அமையக் கூடிய முகவணைக்கல்லை [தோரணம்] ஒருவர் அமைத்தார் என்பதையும் இப்படி ஒவ்வொருவர் கொடையால் ஒரு கோயில் முழுமை பெற்றது என்பதையும் நாம் நன்கு உணரலாம்.

கொடை கொடுத்தவர் ஒவ்வொருவரும் இன்னகரத்து புன்னங்குடையான் அம்மைத் தேவன், இன்னகரத்து அந்தரி உடையானை தில்லைநாயகன் என்ற முறையில் இந்நகரத்தைச் சேர்ந்தவர் என்றே குறிக்கப்படுகின்றனர்.

இவ்வூரின் மற்றொரு பெயராக தேசியுகந்த பட்டணம் என்று பெயர் இருந்தது என்பதை முன்பு கண்டோம். தேசி என்ற பெயர் வணிகர்களைக் குறிக்கும். நாநாதேசிகள் என்பது வணிகர்களுக்கு குறிப்பிடப்படும் மற்றொரு பெயர். இவ்வூரில் உள்ள கல்வெட்டுகளில் நகரமாக இசைந்த நகரத்தோம் என்றே தொடர்புடையவர்கள் குறிக்கப்படுகின்றனர். எனவே இவ்வூர் ஒரு நகர அமைப்புடைய ஊர் என்பதையும் இக்கோயில் நகர மக்களின் கோயில் என்பதும், நகரமக்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒவ்வொருவர் ஒவ்வொரு பகுதியை ஏற்றுக் கொண்டு கோயிலைக் கட்டி முடித்துள்ளனர் என்பதையும் உணரலாம்.

இவ்வூரில் உள்ள பிறகல்வெட்டுக்கள் நகரத்தார் கோயிலைக் கட்டியதோடு கோயில் வழிபாடு, நிலங்கள் முதலியவற்றையும் கவனித்து வந்துள்ளனர் என்பதையும் உணர்த்துகின்றன.

அடுத்து இக்கோயில் எக்காலத்தில் இவ்விதம் கட்டப்பட்டது என்பதை நாம் அறிய வேண்டும். இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்ட கல்வெட்டு சோழநாடு வழங்கியருளிய

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஏழாவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டாகும். (கி. பி. 1226) அடுத்து சோழ நாட்டைத் திரும்பப் பெற்ற மூன்றாம் ராஜராஜ சோழனின் 12-வது ஆண்டுக் (கி. பி. 1228) கல்வெட்டும் இங்குள்ளது. கட்டடக் கூறுகளைப் பற்றிக் குறிக்கும் கல்வெட்டுக்களில் பலவற்றில் எந்தவித மன்னன் பெயரும் இல்லை. அவற்றில் இரண்டுகல்வெட்டுக்களில் மட்டும் ஜடாவர்மன்வீரபாண்டியனின் [முதலாம் ஜடா. சுந்தரபாண்டியனின் சம காலத்தவன்] 23-வது 24-வது ஆட்சியாண்டுகள் உள்ளன. அவற்றில் ஒன்று பஞ்சாங்கக் குறிப்புக்களின் அடிப்படையில் கி.பி. 1276 என்று கணிக்கப் பட்டுள்ளது. ஆட்சியாண்டு குறிப்பிடப் படாத கல்வெட்டுக்களை முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திற்கு முற்பட்ட தாகக் கருதினால் கோயில் கி.பி. 1226க்கு முன்னதாகச் கட்டப் பட்டிருக்க வேண்டும். ஆட்சியாண்டு குறிப்பிடப்படாத கல்வெட்டுக்கள் கோயிலைக் கட்டியவர்களைக் குறிப்பிடுவது போலவே ஜடாவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டுக்களும் குறிக் கின்றன. எனவே ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் கோயில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. இது சரியெனில் கி.பி. 1276-ல் கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் கி.பி. 1276-இல் கட்டப்பட்ட கோயிலில் கி.பி. 1223-இல் பொறிக்கப்பட்டுள்ள மாறவர்மன் சுந்தரபாண்டின் கல்வெட்டு இருப்பது சிக்கலை உண்டுசெய்கிறது. ஒருவேளை முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஜடாவர்மன் வீரமாண்டியன் காலத்தில் முற்றுப் பெற்றிருக்கலாம். இதனை சிறிது ஏற்றுக் கொள்வது போல ஜடாவர்மன் வீரபாண்டியனது கல்வெட்டுக்கள் கட்டடம் முற்றுப் பெறும் காலத்தில் அமைக்கக் கூடிய மண்டப வாசலில் உள்ள முகவணைக்கல், மண்டப கூரையில் பாக்கல், தட்டோடு பற்றிய தானங்களைக் குறிக்கின்றன. அப்படியெனில் இக்கோயில் கி.பி. 1223-க்குச் சற்று முன்னதாகத் துவங்கப்பட்டு 50 ஆண்டு கள் பணி நிகழ்ந்து கி.பி. 1276க்குச் சற்று பின்னதாக முடிக்கப் பட்டது என்று கருதலாம்.

# மனுநெறி கண்ட சோழன்

**பாலசுப்ரமணியன்,**
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

பிற்கால சோழ மன்னர்கள் தங்கள் பெருமையைக் கூறும் போதெல்லாம் தங்கள் குல முன்னவனாகிய மனுநீதிச்சோழனின் பெருமையைக் கூறாமல் விடுப்பதில்லை. தன் மகனின் தேர் ஆழியில் மாய்ந்த இளங்கன்றுக்காக நீதி கேட்ட பசுவிற்கு தன் மகனைத் தேராழியில் இட்டு முறை செய்த மன்னவனின் வரலாற்றை; பல்வேறு தமிழ் இலக்கியங்களில் நுகரும்போது தமிழகத்தின் தலைசிறந்த பண்பை கால அடிப்படையில் காண முடிகிறது.

ஈழநாட்டின் வரலாற்றைத் தொகுத்து கூறும் ''மகாவம்சம்'' எனும் நூலில் கூட மனுவேந்தனின் வரலாறு சில சிறிய மாறுபாடுகளுடன் காணப்படுகிறது.

**தமிழ் கூறும் தொன்மைச் சான்றுகள் :**

சங்க நூல்களில், குறிப்பாக சிலம்பும் மேகலையும் மனு வேந்தனின் பெருமையை அழகாக எடுத்துரைக்கின்றன. பாண்டி நாடு சென்று வழக்குரைத்த கண்ணகி, தான் பிறந்த மண்ணின் பெருமையை பேசும்போது—

''வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என்பதியே''

எனக் கூறுகின்ற பாங்கால் இளங்கோ அடிகள். தம் இலக்கியத்தில் இவ்வழகிய வரலாற்று முத்தைப் பதித்துள்ளார். இது போன்றே மணிமேகலையில் புகார் நகரிலிருந்த கிள்ளிவளவன், தன் மகனாகிய உதயகுமரனென்பான் மணிமேகலை என்னும் தவமகளை காதலித்து ஓர் விஞ்சையனால் வெட்டுண்டிறந்தான் அன்பை எறிந்தது, தன் மகன் புரிந்த தீமை பிறவேந்தர் செவியை

அடையுமுன் அவனை ஈமத்தீயில் ஏற்றுக என்று கூறி, மகனை முறை செய்த மனுவேந்தனின் வழியில் வந்த தன் குலத்திற்கு சிறு மறுவும் இல்லாது காத்த இம்மன்னவனின் மாட்சிமை குறிக்கப்பட்டுள்ளது. இதனை.

"மகனை முறை செய்த மன்னவன் வழிமோர்
துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
வேந்தர்தம் செவியுறுவதன் முன்னம்..."

என்று குறிப்பிடுகிறது தமிழ்க் காப்பியம்.

சயங்கொண்டாரும், ஒட்டக்கூத்தரும் தமது நூல்களான கலிங்கத்துப் பரணியிலும், மூவருலாவிலும், மனுவின் பெருமைகளை விரித்துரைக்கின்றனர்.

## ஆரூரின் அரிய கல்வெட்டு

**விக்கிரம சோழன் (கி. பி. 1123) :**

மனுவின் சரிதம் பற்றி பல்வேறு நூல்கள் விரித்துரைப்பினும் இவை அனைத்திலும் கூறப்படாத பல புதிய செய்திகள் திருவாரூரில் உள்ள ஓர் கல்வெட்டில் காணப்படுகிறது. மனுவின் வரலாற்றைப் பேசும் இது விக்கிரம சோழனால் வெட்டப்பட்டதாகும். ஆரூர் இறைவனே இம்மன்னனது வரலாறு கூறுவது போன்று வெட்டப்பட்டுள்ளது. இதில் மனுவின் மகன் "**பிரியவிருத்தன்**" என்றும், அவனது அமைச்சன் இங்க நாட்டு பாலையூர் "**உபயகுலாமலன்**" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இறைவனின் திருவருள் பெற்று உயிர்த்து எழுந்த அமைச்சன் உபயகுலாமலனும் மன்னன் மனுவும் தம் இறுதிக் காலத்தில் தபசு மேற்கொண்டதாகவும், அப்போது பிரிய விருத்தன் அமைச்சரின் மகன் சூரியனின் துணையுடன் ஆட்சி மேற்கொண்டதாகவும் கூறுகின்றது. மேலும் விக்கிரம சோழன் காலத்தில் மனுவின் அமைச்சனான உபயகுலாமலனின் வமிசத்தில் தோன்றிய "**சந்திரசேகரன் ஆதிவிடங்கனான குலோத்துங்க சோழ மாபலி வாணாதிராயன்**" என்பவன் உயிர் வாழ்ந்ததாகவும், அவனுக்கு விக்கிர சோழன் திருவாரூரில் மாளிகையும் சில பரிசுகளையும் கொடுத்தான் என்பதையும் விவரிக்கின்றது.

**சேக்கிழார் காட்டும் மாநிலங்காவலன் :**

சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் திருக்கயிலை சிறப்பு, பாடி திருநாட்டின் வளமும்கூறி, திருநகரச் சிறப்பாக ஆரூரின் பெருமையை உணர்த்துகின்றார்.

ஆரூரின் பெருமை பேசும்போது, மனுவேந்தனின் வரலாற்றை அழகு தமிழால் பாடுகிறார்.

வாயிற் தூங்கிய மணியின் நடு நா பசுவொன்றின் துயர் சுமந்து ஒலிப்பதைக் கேட்ட மனு வேந்தன், உடன் தன் அமைச்சர்களை நோக்கி கேள்விக் கணை தொடுக்கின்றான். அமைச்சர்களும் மன்னனது குமாரனால் ஏற்பட்ட விபத்தை விளக்கிக்கூறி —பசுவின் துயரத்திற்குக் கழுவாயாக பழமையான நூல்களில் கூறிய "வழக்கு"களைக் கூறினர். இது கேட்ட மனுவேந்தன்

"வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறுங் கோவுரு நோய்—மருந்தாமோ?"

என மறுத்துறைக்கின்றான். இதுமட்டுமல்லாமல் ஓர் மாநிலத்தை ஆளும் மன்னனுக்குரிய கடமைகளாக,

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆன பயம் ஐந்துந்தீர்த்தறங் காப்பான் அல்லனோ?"

எனக் கூறுகின்றான். இத்தனைக் கடமைகளுக்குரிய நான் மட்டும் என் மகன் செய்த பாதகத்திற்காக தவம் செய்வது சரியென்றால் பின் எப்படி உயிர் கொன்ற அன்னியன் ஒருவனுக்கு எனது நீதி மன்றத்தில் கொலை தண்டனை அளிக்க முடியும்? என்ற கேள்விகளை எல்லாம் அமைச்சர்களையே கேட்டு விட்டு "தொன் மனுநூல் தொடை மனுவால் துடைப்புண்டதெனும் —பழி என்மேல் உண்டாகுமாறுகூறினீர்களே." இதுதான் மந்திரிகளின் "வழக்கு" எனக்கூறும் மன்னனது பண்பு, இந்த நாட்டிலன்றி வேறு எங்குமே இருந்திருக்க முடியாது".

**பிற்கால இலக்கியங்கள்:**

சோழ மன்னர்களுக்குப் பிறகு தஞ்சைப் பகுதியை ஆண்ட நாயக்க—மராட்டிய மன்னர்களை "மனுநீதிச் சோழனின்" வரலாறு மிகவும் கவர்ந்தது. இவர்கள் காலத்தில் மனுநெறியை அடிப்படையாகக் கொண்டு பல தமிழ் நூல்கள் மலர்ந்தன— நாடகத் தமிழும்—இசைத் தமிழும் வளர்ந்தன. இத்தகைய நூல்கள் பல வெளியுலகுக்குத் தெரியாமலேயே ஓலைச்சுவடிகளாக இருந்து வந்தன.

**தியாகேசர் குறவஞ்சி**

தஞ்சை மராட்டிய குல திலகங்களில் குறிப்பிடத்தக்கவர் சகசி (சாஹஜி) மன்னராவார். தலைசிறந்த இலக்கியப் பித்தனாய்—இசை வானனாய் விளங்கிய இப்பெருமகன் இயற்றிய நூல்கள் பலவாகும். இவரது காலத்தில் குறவஞ்சி நூல்கள் ஆக்கம் பெற்றன. அவ்வாறு தோன்றிய நூல்கள் வரிசையில் குறிப்பிடத் தக்கது தியாகேசர் குறவஞ்சியாகும்.

இக்குறவஞ்சி நூலில் மனுவின் சரிதம் பெருமையாக பேசப் படுகிறது. மனுவின் சரிதத்தோடு புராணக் கதைகளும் கலந்து மக்களை கவரும் வண்ணம் படைக்கப்பட்டு திகழ்கிறது. தியாகப் பெருமானே பசுவாகவும்—எமனே கன்றாகவும் வந்து மனுவேந்தனை சோதித்த திறம் விளங்குகிறது. இந்நூல் சரஸ்வதிமகால் நூலகத்தால் அச்சிடப்பட்டுள்ளன.

**மனுநீதி சோழன் நாடகம்**

மெலட்டூர் பாகவதமேளா பற்றி அறியாதார் தமிழ் நாட்டில் இருப்பது அரிது. இது தெலுங்கில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இசை நாடகமாகும். இதேபோன்று தமிழில் பல தலைமுறையாக (சுமார் 300 ஆண்டுகளாக) மனுவேந்தனின் காவியம் இசை நாடகமாக நடிக்கப்பட்டு வருகிறது.

பனை ஓலைச்சுவடி நூலாக உள்ள இந்த, இசைத் தமிழ் நாடகம் தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமான் அருகில் உள்ள ஆண்டாங்கோயில் என்ற கிராமத்தில் ஆண்டுதோறும் சித்திரை முழுநிலவு விழாவில் துவங்கி 5லிருந்து 9 நாட்கள் வரை நடத்தப் படுகிறது. திரு. காத்தய்யா வாயாடியார் என்பவரின் பரம்பரையினரால் தொடர்ந்து 300 ஆண்டுகளாக நடிக்கப்பட்டு வருகிறது.

தமிழர் தம் நீதிக்காவியமான தேரூர்ந்த சோழனின் வரலாறு கல்வெட்டுக்களாக—சுவடி நூல்களாக—இசை நாடகமாக பல்வேறு கால கட்டங்களில் வளர்ந்து மக்களால் மதிக்கப் பட்டது என்பதை அறிகிறோம். அரிய இவ்விலக்கியச் செல்வங்களை அழியாமல் காத்துத் தந்த பெருந்தகையாளர்களுக்கெல்லாம் தமிழகம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

# பகை அறுத்துக்கொண்ட சோழன்

து. துளசிராமன், எம். ஏ.,
அகழ்வாய்வாளர்,
தொல்பொருள் ஆய்வுத் துறை,
சென்னை—28.

செங்கை மாவட்டம் திருவள்ளூர் வட்டத்திலுள்ள பேரம்பாக்கம் சோழீஸ்வரர் கோயிலில் முதலாம் குலோத்துங்கனின் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன.[1] இதில் இம்மன்னனின் 42 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு செயங் கொண்ட சோழ மண்டலம், மணவிற்கோட்டம், பாசாலி நாட்டைச் சேர்ந்த பெரும்பாக்கமான இரட்டபாடி கொண்ட சோழ நல்லூரைக் குலோத்துங்க சோழீஸ்வரமுடையார்க்கு தேவதானமாகப் பகை அறுத்துக் கொண்ட சோழ வேளைக்காரர் கொடுத்துள்ள செய்தியையும்; 44 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு பகை அறுத்துக்கொண்ட சோழ வேளைக்காரர் கூத்தாடி தக்கரைசன் தெலுங்கராயன் என்பவன் குலோத்துங்கச் சோழீஸ்வரமுடைய மகாதேவர்க்கு விளக்கெரிக்க தானம் கொடுத்த செய்தியையும் தெரிவிக்கின்றன. இக் கல்வெட்டுக்கள் குறிக்கும் "பகை அறுத்துக் கொண்ட சோழனும்" இரட்டபாடி கொண்ட சோழனும் யார்? என்பது பற்றியும், வேளைக்காரர் கூத்தாடி தக்கரைசன் தெலுங்கராயன் யார்? என்பது குறித்தும் இக் கட்டுரையில் காண்போம்.

முதலாம் குலோத்துங்கன் தன் தந்தையின் ஆட்சிக்காலத்தில் வேங்கி நாட்டில் இளவரசு பட்டம் சூடி அந்நாட்டு மரபுப்படி 'விஷ்ணுவர்த்தனன்'[2] என்னும் பட்டப் பெயர் பூண்டிருந்தான். இவனுடைய சிறிய தந்தையாகிய விசயாதித்தன் என்பவன் வேங்கி நாட்டை ஆட்சி புரிய வேண்டும் எனப் பேரவா கொண்டிருந்ததால் தன் தந்தைக்குப் பின் இவனால் ஆட்சிக்கு வர முடியவில்லை. இதனால் இவ்விருவருக்கும் பகைமை இருந்தது என்பது விசயாதித்தன், அவன் மகன் சக்திவர்மன் ஆகியோர் செப்பேடுகளால் அறிய முடிகிறது.

அதிராஜேந்திரனுக்குப் பின் வாரிசு இல்லாமையால் சோழப் பேரரசு அரசனின்றித்தவித்தது. இச்சமயத்தில் கீழைச் சாளுக்கிய அரச மரபைச் சேர்ந்தவனும், முதலாம் இராஜேந்திரனின் மகள் வழிப் பேரனுமாகிய முதலாம் குலோத்துங்கன் சோழ நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையை நீக்கி, அமைச்சர்கள், படைத்தலைவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மன்னனாக முடி சூட்டிக்கொண்டான். அது முதல் குலோத்துங்கன் தனது சிறிய தந்தையாகிய விசயாதித்தனுடன் பகை நீக்கி அன்பு பாராட்டினான். மேலும் வேங்கி நாட்டைத் தம் பேரரசின் வடஎல்லையாக அமைத்து மேலைச்சாளுக்கியருடன் போர் செய்தலையும் தவிர்த்தான். தன் மாமன்மார் துங்கபத்திரை ஆற்றுக்கு வடக்கே உள்ள மேலைச் சாளுக்கிய நாட்டைத் தம் பேரரசோடு இணைப்பதற்கு மேற்கொண்ட படையெடுப்பினால் ஏற்பட்ட துன்பங்களையும், இதில் பல்லாயிரக்கணக்கான சோழ வீரர்கள் உயிர் துறந்ததையும் அறிந்த குலோத்துங்கன் துங்கபத்திரை ஆற்றுக்கு வடக்கே சோழப் பேரரசைப் பரப்பும் எண்ணத்தை அடியோடு கைவிட்டான். மிகவும் தேவையான-இன்றியமையாத போர்களில்மட்டும் ஈடுபட்டு, உள்நாட்டில் அமைதி காத்து மக்களுக்கு நலம் புரிவதையே நோக்கமாகக் கொண்டிருந்தான். மேலும் இவன் முதலாம் இராஜேந்திரனைப் போன்று வென்ற நாடுகளைத் தன் பிரதிநிதிகளைக்கொண்டு ஆட்சி செய்யாமல் அவற்றை உரிய அரசர்க்கே கொடுத்து (பாண்டிய[4] சேரர்களை[5] வென்று அந்நாடுகளை அவர்களுக்கே திருப்பி அளித்து ஆட்சி புரிந்து திறை செலுத்தச் செய்தமை) ஆட்சி புரியுமாறு கூறியமை இவன் தன்னிடம் தோல்வி எய்திய அரசர்களிடமும் பகை அறுத்து அன்பு பாராட்டிய செயலைக் காட்டுகிறது. மேலும் இம் மன்னன் சீன நாட்டுக்கு 72 பேரடங்கிய தூதுக்குழுவை அனுப்பினான்.[6] கடாரம், காம்போசம், கன்னோசி போன்ற நாடுகளுடன் நட்புறவு கொண்டிருந்தான். தான் மேற்கொண்ட அனைத்துச் செயல்களிலும் இவன் அமைதியையே விரும்பினான். எனவே, இம்மன்னன் '**பகை அறுத்துக்கொண்ட சோழன்**' என அழைக்கப்பட்டான் போலும்.

அடுத்து, இம்மன்னன் பேரம்பாக்கத்தில் சிவபெருமானுக்குக் கோயில் எடுப்பித்து, அதற்கு 'குலோத்துங்கச் சோழீஸ்வரமுடையார்' என தன் பெயரைச் சூட்டியுள்ளான். மேலும் பேரம்பாக்கம் என்று வழங்கி வந்த இவ்வூரை இரட்டபாடி கொண்டசோழ நல்லூர் என்று பெயர் மாற்றி வழங்கினான்.

இவன் இளைஞனாக இருந்தபோது தன் தாய் மாமனாகிய வீர ராஜேந்திரனுடன் சாளுக்கிய மன்னன் ஆகவ மல்லனுக்கு எதிராக நடைபெற்ற போர்களில் கலந்து கொண்டுள்ளான். இப்போரில் இரட்டபாடி நாட்டில் தேவநாதன், சித்தி, கேசி என்னும் சாளுக்கியத் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இவ்வெற்றியில் முதலாம் குலோத்துங்கனுக்கும் பெரும் பங்கிருத்தல் வேண்டும். எனவே, "இரட்டபாடிக் கொண்ட சோழன்" என அழைக்கப்பட்டான் எனலாம்.

ஆக, அபயன், சயதரன், சயதுங்கன், விருதராச பயங்கரன் கரிகாலன், இராசநாராயணன், உலகுய்யவந்தான். திரு நீற்றுச் சோழன், மனுகுலதீபன், உபய குலோத்துங்கன் போன்ற சிறப்புப் பெயர்களோடு 'பகை அறுத்துக்கொண்ட சோழன்,' 'இரட்டபாடி கொண்ட சோழன்' என்னும் சிறப்புப் பெயர்களையும் முதலாம் குலோத்துங்கன் பெற்றிருந்தான் என்னும் புதிய செய்தி இதனால் தெரிகிறது.

மன்னனுடன் எப்பொழுதும் உடனிருந்து அவன் உயிருக்கு ஆபத்து நேருங்கால் தம் உயிரையும் கொடுத்து காக்கும் வீரர்கள் வேளைக்காரர் எனப்படுவர். இவர்கள் பெரும்பாலும் அரச மரபைச்சேர்ந்தவர்களாகவே இருப்பர். சுந்தரசோழன்காலத்தில் பழுவேட்டரையர்கள் வேளைக்காரர்களாக இருந்துள்ளனர். மேற்குறித்த பேரம்பாக்கம் கல்வெட்டு ஒன்றில் கூத்தாடி தக்கரைசன் தெலுங்கராயன் என்பவன் வேளைக்காரர் எனக் குறிக்கப்படுகிறான். கூத்தாடிஎன்பது ஆடவல்லானைக்குறிக்கும். சோழப் பேரரசின் படைத்தலைவர்களும், குறுநில மன்னர்கள் சிலரும் தம் பெயருக்கு முன் 'கூத்தாடி' என்பதனைச் சேர்த்து வழங்கியுள்ளனர். உதாரணமாக இரண்டாம் இராஜேந்திரன் காலத்தில் அரசியல் அதிகாரிகளில் ஒருவனாக விளங்கிய வேளாளக் கூத்தன் ஆகிய செம்பியன் மூவேந்த வேளாளன் என்பவனையும், எருக்கட்டாஞ்சேரியிலிருந்து அரசு புரிந்த குறுநில மன்னனான உதயதிவாகரன் கூத்தாடியாரான வீரராஜேந்திர மழவராயன் என்பவனையும் கூறலாம்.[9] பிற்காலத்தில் மூன்றும் குலோத்துங்கன் காலத்திலிருந்து சோழர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாக விக்கிரமசிங்கபுரம் எனப்படும் நெல்லூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த தெலுங்குச் சோழர்கள் அனைவரும் திக்கரையன், திக்கநிருபதி, அல்லுந்திக் கரைசன் என்னும் பட்டப்பெயர்களைக் கொண்டிருந்தனர். எனவே தெலுங்குச்சோழ மரபைச்சேர்ந்த கூத்தாடி தக்

கரைசன் தெலுங்கராயன் என்பவன் முதலாம் குலோத்துங்க னின் வேளைக்காரருள் ஒருவனாக இருந்துள்ளான் என்னும் செய்தி தெரிய வருகிறது.

அடிக் குறிப்புக்கள்

1. A. R. E *68, 69/1947—48*
2. A. R. E *393, 400/1933*
3. Ryali Plates of Vijayaditya VII and the Telugu Aca damy Plates of Sakti Varman II.
4. சிதம்பரத்தில் வடமொழியில் காணப்படும் கல்வெட் டொன்று முதலாம் குலோத்துங்கன், பாண்டியர் ஐவரை யும் போரில் வென்ற செய்தியைக் கூறுகின்றது (EP. Ind. Vol. *V*. No. *13A*

   'வடகடல் தென் கடல் படர்வது போலத்
   தன் பெருஞ் சேனையை மேவிப் பஞ்சவர்
   ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
   வெரிநளித் தோடி அரணெனப் புக்க
   காடறத் துடைத்து நாடடிப் படுத்து'
   (முதல் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி)

5. Ep. Ind, Vol V, No. *13A*
6. K. A. N. Sastri—The Colas, P. *316*.
7. S. I. I., Vol III, No. *30*.
8. A. R. E—*60/ 1947—48*
9. தி. வை. சதாசிவபண்டாரத்தார்—பிற்காலச் சோழர் சரித்திரம் பக்—*230—31*

# உவமைத் தொடர்—அகர வரிசை

பொ. இராசேந்திரன், எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர்,
மதுரை.

**சுவடி—அறிமுகம் :**

இக்கட்டுரை நிலக்கோட்டை ஜமீனிலிருந்து தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள சுவடிகளுள் ஒன்றினைப் பற்றியது. சுவடி முழுமையாகக் கிடைக்கவில்லை. இருப்பினும் 48 ஆவது ஏட்டின் இரண்டாம் பக்கத்தில் காணப்படும் ''அஷ்ச்சர வீதத்தில் உகமைச் சொல்லு எழுதினது'' என்ற வாசகத்தினால், இச்சுவடியினை உவமைத் தொடர்களின் அகர வரிசைத் தொகுப்பாகவே இச்சுவடியின் ஆசிரியர் கருதியிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

சுவடி ஆசிரியர் சுவடியினை உவமைத் தொடர்களின் தொகுப்பாகக் கருதியிருப்பினும் சுவடியில் உவமைத் தொடர் களைவிட பழமொழிகளே மிகுதி. பழமொழிகள் அனைத்தும் உவமைத் தொடர்களாகா. உவமைத் தொடர்கள் அனைத்தும் பழமொழிகளாகா. பழமொழிகளும் பழமொழிகளாகக்கூடிய உவமைத் தொடர்களுமே இச்சுவடியிலுள்ளன.

கிராமப்புறங்களில் ''பழமொழியாகப் பேசுகிறான்'' என் பதை ''உவமையாகப் பேசுகிறான்'' எனப் பேச்சு வழக்கில் கூறு வதுண்டு. இம்மரபு பற்றியே இச்சுவடி ஆசிரியர் பழமொழி களுக்கும் உவமைத் தொடர்களுக்கும் பொதுவாக பேச்சு வழக்கி லிருந்து 'உகமைச்சொல்' எனப்பயன் படுத்தியிருக்கலாம்.

**சுவடி அமைப்பு :**

சுமார் ஐம்பது ஏடுகளைக் கொண்டிருக்க வேண்டிய இச் சுவடியில் தற்சமயம் முப்பத்து மூன்று ஏடுகள் மட்டுமே எஞ்சி யுள்ளன. ஏட்டின் தொடக்கப்பகுதிகளும், முடிவுப்பகுதியும்

இல்லை. 38, 39, 41 ஆம் ஏடுகள் நீங்களாக 13 முதல் 48 வரை யிலான ஏடுகள் மட்டுமே உள்ளன.

'அ' தொடங்கி 'வை' வரை தொடர்கள் அகர வரிசையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. ஏட்டின் இறுதியில் ஒவ்வொரு எழுத்து வரிசைக்கும் எத்தனைத் தொடர்கள் தொகுத் தளிக்கப்பட்டுள்ளன என்பது அட்டவணைப் படுத்தப்பட் டுள்ளது. சுவடியின் இறுதி ஏடு இல்லாததால் அட்டவணை முழுமையாகக் கிடைக்கவில்லை. அட்டவணையைக் கொண்டு இச்சுவடியில் கிடைக்கப்பெறாத தொடர்களின் எண்ணிக்கையை ஊகித்தறிய முடிகிறது. இச்சுவடியில் இருந்த மொத்தத்தொடர் களின் எண்ணிக்கை சுமார் 1300. தற்போது கிடைத்துள்ள தொடர்கள் 913.

கிடைக்கப் பெறாத ஏடுகளிலிருக்கும் தொடர்களின் எண்ணிக்கை : அ—57; ஆ—57; இ—31; ஈ—14; உ—43; ஊ—27; ஒ—22; ஓ— 11; ஔ—1; ஃ—2; க—14. ஏடு சிதைந் திருப்பதால் எ, ஏ, ஐ, பு, பூ, பெ, பே, பை, பொ, போ, பௌ போன்றவற்றிற்கான தொடர்களின் எண்ணிக்கை தெரிய வில்லை.

எஞ்சியுள்ள ஏடுகளில் 'க' வரிசையிலிருந்து தொடர்கள் தொடங்குகின்றன. இதைக் குறிக்கும் வகையில் ஏட்டின் தொடக்க ஓரத்தில் 'க' னாவுக்கு என எழுதப்பட்டிருப்பதை ஏட்டுக்குரியவர் பிழைபட உணர்ந்து இவ்வேட்டிற்கு கனவு சாஸ்திரம் எனத் தலைப்பிட்டிருந்தார்.

இச்சுவடியிலுள்ள தொடர்கள் முழுக்க முழுக்க பேச்சுத் தமிழில் உள்ளது உள்ளபடியே தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. "நான் அறிஞ்ச மட்டும் உகமைச் சொல்லு எழுதினேன்," "கொஞ்சம் யின்னம் விசாரித்து எழுதினால் அனேக உகமைச் சொல்லு எழுதலாம்." "வொ, வோ, வௌ யிந்த மூன்றச்சரத் துக்கும் லோகத்தில் கேட்டு எழுத வேணும்" 'ழ' னா வரி முச் சூடும்,'ள' னா வரிமுச்சுடும் லோகத்திலே விசாரித்து உகமை எழுதவேண்டியது." "ரி, ரீ, ரு, ரூ, ரெ, ரே, ரை, ரொ, ரோ, ரௌ யிந்த அச்சரத்துக்கெல்லாம் லோகத்திலே கேட்டு எழுத வேணும்" "ல னா வரி முச்சூட்டுக்கு லோக வழக்கங்கேட்டு எழுதவேணும்" என தான் தொகுத்தவை தவிர்த்து தொகுக் காத எழுத்து வரிசைகளுக்கெல்லாம் உலக வழக்கத்தைக்கேட்டுத் தொகுக்க வேண்டும் என்கிறார். தன்னுடைய தொகுப்பு முழு மையற்ற தென்பதையும், இன்னும் விசாரித் தெழுதினால்

நிறையத் தொடர்களைத் தொகுக்கலாமெனவும் சுவடி ஆசிரியர் திறனாய்வுக் கண்ணோட்டத்துடன் தன் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

**சமுதாயப் பின்புலம் :**

இச்சுவடியிலுள்ள பெரும்பாலான தொடர்கள் நாயக்கர், பாளையக்காரர், ஆங்கிலேயர் ஆட்சிக் கால சமுதாயத்தினைப் படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன.

"சினத்தாலறுத்த மூக்கு சிரிச்சாப்போல ஒட்டுமா?" என்ற தொடர் மூக்கறுப்புப் போரினைக் கருத்திற் கொண்டெழுந்ததாக உள்ளது.

"கோபுரத்திலேறி விழுந்தவனுக்கு எங்கேயென்று தேனினைக் காட்டுகிறது;" என்ற தொடர் கோபுரமேறி வீழ்கின்ற மரபினை அடிப்படையாகக் கொண்டது. திருப்பரங்குன்றம் தமரும் ஊரும வெள்ளைக்காரர்களால் எடுபட்டுப் போகாமலிருக்கக் கோபுரம் ஏறி வீழ்ந்த குட்டியையும், திருப்பரங்குன்றம் கோயிலின் நில உரிமைகளை நிலைநாட்டக் கோபுரமேறி வீழ்ந்த வலலப்ப முதலியையும், ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமிக்குப் படித்தரம் ஒழுங்காக நடக்க வேண்டி வெள்ளைக் கோபுரமேறி வீழ்ந்த அப்பவய்யங்கார் மற்றும் பெரியாழ்வார் ஆகியோரையும் நினைவிற் கொண்டே இத்தொடர் எழுந்துள்ளது.

"திரித் துவட்ட யெண்ணையில்லையாந் திருச்சிராப்பள்ளி வரை ரெட்டைப் பந்தம் பிடி யெண்ணானாம்" என்ற தொடர் பந்தம் பிடித்துக் கொண்டு இரவுப் பயணம் செய்த முறையினை அடிப்படையாகக் கொண்டது.

இதே போல அன்றைய சமுதாயத்தில் திருவிழாக்களும் விழாக்களால் கூத்தும், கூத்தை மையமாகக்கொண்டு கூத்தாடிகளும், தேவரடியாரும் சமுதாயத்தில் பெற்றிருந்த முக்கியத்துவம் பல தொடர்களில் பிரதிபலிக்கிறது. "தேருக்குண்டான சிங்கார மெல்லாமிருக்கிறது" "தேவடியாள் சிங்காரிக்கு முன்னே தேரோடி நிலைக்கு நின்னுபோகுது" ஆகிய தொடர்கள், தேரோட்டமும், தேருக்கு முன்னால் தேவரடியார் ஆடிவரும் முறையினையும் கருத்திற்கொண்டெழுந்தவை. "வாதுக்காடின தேவடியாள் வயது முத்தினாலொரு காசுக்குமாகாள்" "வாதுக்காடின கூத்தாடி வயது முத்தினால் கழுதை மேய்ப்பான்", "கூத்தியார் செத்து குறுங்கட்டில் வெறுங் கட்டிலாகுமா?" "கூத்தாடிச் சிலம்பம் படை வெட்டுக் காகுமா", "கூத்தாடி முத்திக் கழுதை மேச்சானம்", "கூத்துக்குப் பந்தம பிடிச்சுத் திரிஞ்சாப்போலே திரியவேணும்", கூத்தாடி தானே

ஆடித்தானே மெச்சிக் கொண்டானாம்” “கூத்துக்குப் பூந்து கொட்டுக்கஞ்சுகிறதா?” போன்ற தொடர்களால் கொட்டு முழக்கத்துடன் பந்த வெளிச்சத்தில் இரவு நேரங்களில் நிகழ்ந்த களையும் கூத்தாடிகளின் வாழ்வினையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

பொருட்களை விற்கவும் வாங்கவும், சிறந்த மையங்களாகத் திகழ்ந்த சந்தைகள் குறித்து பல தொடர்கள் காணப்படு கின்றன. சந்தைகளில் அனைத்துவகைப் பொருட்கள் விற்கவும் வாங்கவும் மக்கள் மிகுதியாகக் கூடுவதையும் இவ்வகைத் தொடர் கள் தெளிவுப்படுத்துகின்றன. “சந்தை ஏறியு முக்காடேன்?” “சனியன் பிடிச்ச பெண்களுக்குச் சந்தையிலே போனாலும் மாப்பிளை கிடையாது” “சந்தைக் கெத்தனைபேரோ எலந்தைக் கெத்தனை முள்ளோ”, “ சந்தை கூடுமுன்னே முடிச் சவுக்க முந்திநானாம்”, “சந்தைக்கு வந்தவன் தலையிலே தம் பட்டத்தை வச்சு அடிச்சானாம்”, “சந்தைக்குப் போனவன் சிலவு சொல்ல அறியானா?” “சந்தையிலே அடிச்சதுக்குச் சாட்சி என்னத்துக்கு?” போன்றவை சந்தைகளைப்பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன.

அன்றைய சமுநாயத்தில் அடிக்கடி நடந்து வந்த போர் களின் தாக்கமும் பல தொடர்களில் தெரிகிறது. “பணத்துக்கு ஒரு அம்பு கொண்டு பாளிலே எய்யிறதோ?”, “வில்லூண இடங் கொடுத்தால் வீடெல்லா மென்னிட மெங்கிறாய்,” “நடுப்படையிலே நாணத்தாப் போலே”, “தலைக்கி மேலே அம்பு பறக்கையில் படை விசளங் கேள்க்கிறியா?”, “டோம் பனை நம்பிப் படை யெடுத்தாப்போலே” போன்றவை சில எடுத்துக்காட்டுக்கள்.

மதுரை நாயக்கராட்சியில் தெலுங்கர்களும், தெலுங்கும் மிகுதியாக இப்பகுதியில் பரவியதால் பல தொடர்களில் தெலுங் கின் தாக்கம் தெரிகிறது. “நிய்க்க நிழலுமில்லை; நிண்ணிருக் கத் தாவு மிலது,” “தொட்டவா ளித்தாப் பட்ட ராது; பட்டித்தே விட வராது,” “தாளிக்கிப் பேருதேன் கொண்டைய மாணிக்கத்தான்,” “தனக்குச் சந்தேகமாம்; பின்னவாட்டுக்குப் பொப்புகூடு வேணுமாம்” “டில்லிக்கு ராசா வானாலும் தல்லிக்குப் பிள்ளை தானல்லவோ” போன்றவற்றில் தெலுங்குச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்து வழங்கியுள்ளன.

**வட்டார வழக்குச் சொற்கள் :**

இச்சுவடியில் காணப்படும் தொடர்களில் உள்ள சொற்களில் 'இ'கரத்தின் தாக்கம் மிகுதியாக உள்ளது. இதனால் நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' பல சொற்களில் 'கி' யாகத் திரிந்துள்ளது. எடுத்துக்காட்டாக கழுதைக்கி, நாய்க்கி, காடைக்கி, தண்ணிக்கி, கோளிக்கி, கீரைக்கி, செடிக்கி, குளக்கட்டைக்கி, குருவிக்கி என வரும் சொற்களைச் சுட்டலாம். 'சுவர்' 'சுமக்கும்' போன்ற சொற்கள் இகரத்தின் தாக்கத்தினால் சிவரு, சிமக்கும் எனவும், 'காட்டிலும்' 'நிக்குதே' 'காக்காய்' போன்றசொற்கள் காட்டியிலும், நிய்க்குதோ காய்க்காய் எனவும் திரிந்துள்ளன. கண்டது என்ற சொல்லில் உள்ள 'அ'கரம் இகரமாகிக் கண்டிது ஆகியிருக்கிறது. 'படல' என்ற சொல் ஐகாரம் அகரமானதற்குச் சான்று.

செத்ததாம், மெனக்கிட்டதாம், கெட்டதாம் போன்ற சொற்கள் செத்துதாம், மெனக்கிட்டுதாம், கெட்டுதாம் என உகரத்தின் தாக்கம் பெற்றுள்ளன. எகரத் தாக்கத்தால் 'கங்கை'யும், 'கதி'யும் கெங்கை, கதி ஆகியுள்ளன.

பெரும்பாலான சொற்களில் 'ந'கரம் னகரமாகவோ,அல்லது ணகரமாகவோ வந்துள்ளது. கண்ணை (கன்றை), எண்ணு (என்று), என்னால் (என்றால்), திண்ணால் (தின்றால்), கொண்ணால் (கொன்றால்) போன்றவை சில எடுத்துக்காட்டுக்கள்.

'ர'கரமும் 'ற'கரமும் வேறுபாடின்றியே எழுதப்பட்டுள்ளன. பேச்செளிமையினால் 'ர'கரம் மிகுதியும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ல, ழ, ள ஆகிய மூன்றும் வேறுபாடின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ள போதும் பேச்செளிமையினால் 'ள' மிகுதியும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

'த'கரம் பல இடங்களில் 'ச'கரமாகவே வந்துள்ளது. பிடிச்சு அடிச்சு, காச்ச போன்றவை இவ்வகையின.

'எங்கள் அம்மை' 'நம்மை' யாகவும் 'எங்கள் ஐயன்' 'நைய'னாகவும் வழங்கியுள்ளன.

ஆயுத எழுத்தான 'ஃ' பேச்சு வழக்கில் 'அக்கட' என்றழைக்கப்படுவதை யொட்டி, 'கட' என்றே எழுதப்பட்டுள்ளது.

இவை யனைத்தும் திண்டுக்கல், நிலக்கோட்டை வட்டாரப் பேச்சு வழக்குச் சொற்களைப் புரிந்து கொள்ளத்துணை நிற்பவை.

**முந்திய—பிந்திய பழமொழித் தொகுப்புகள் :**

இந்த சுவடிக்கு முந்திய பழமொழித் தொகுப்பு முயற்சிகளில் பழமொழி நானூறு, தண்டலையார் சதகம், செயங்கொண்டார் வழக்கம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவையனைத்தும் பழமொழிகளைப் பாடல் வடிவில் தொகுத்தளித்தன.

பழமொழிகளைப் பேச்சு வழக்கில் தொகுக்க ஏற்பட்ட முயற்சிகளில் முதல் முயற்சியாக இச் சுவடியினைக் குறிக்கலாம். பழமொழி ஆய்வாளர்கள் 1842 இல் பெர்சிவல் பாதிரியார் தொகுத்தளித்த பழமொழித் தொகுப்பே முதல் முயற்சி என்பார். இவர் ஆங்கிலேயர் தமிழ் மக்களுடன் தமிழில் உரையாடுவதற்காகப் பயன்படுத்திக் கொள்ள 'தமிழகப் பழமொழிகள்' என்னும் இந்நூலை வெளியிட்டிருக்கிறார்.

இவரைத் தொடர்ந்து 1870இல் திரு. எச். டபுள்யு. லாரி 1874 இல் திரு எஸ். இராமசாமி ஐயங்கார், 1877 இல் திரு. வேணுகோபால் நாயுடு, 1888இல் குப்புசாமி நாயுடு & திரு கருப்பண்ண பிள்ளை, 1893இல் சுந்தர சாஸ்திரியார், 1894இல் திரு. ஜான் லாசரஸ், 1894 இல் திரு கிருஷ்ணசாமி செட்டியார், 1897இல் திரு. ஹெர்மன் திரு. ஜென்சன் பாதிரியார், 1899 இல் திரு. தி. செல்வக் கேசவராய முதலியார், 1902இல் திரு. பு. எ. பார்த்தசாரதிப்பிள்ளை, 1913இல் திரு. அனவரத நாயகம் பிள்ளை, 1914இல் யாழ்ப்பாணம் திரு. சி. ஆர் சீனிவாச சாஸ்திரி, 1916இல் திரு. வெ. ஆ. சிதம்பரம்பிள்ளை, 1946 இல் திருமதி கஸ்தூரி திலகம், 1950இல் திரு. க. இனியன், 1952 நீலாம்பிகை அம்மையார், 1952 கழகப்பதிப்பு, 1955இல் பண்டிதர் சுப்பிரமணிய நாவலர், 1957 இல் திரு. வி. நந்தகோபாலன், 1960இல் திரு. எஸ். கே. சாமி; 1961இல் திரு. கே. இலக்குமணன், 1964இல் கே. எஸ். இலட்சுமணன், 1965இல் புலவர் செந்துரைமுத்து 1996இல் பூவை. திரு. எஸ். ஆறுமுகம், 1967 இல் திரு. கே. எஸ். இலட்சுமணன், 1968இல் எஸ். ஏ. சுலைமான், 1969இல் திரு. ப. இராமசுவாமி, 1969இல் திரு. வ. பெருமாள், 1976இல் தமிழ்வாணன் போன்றோர் பழமொழிகளைத் தொகுக்கவும் விளக்கவும் முற்பட்டுள்ளனர்.

இவர்களுடைய தொகுப்புகள் பெரும்பாலும் பழமொழிகளை இலக்கிய நடையிலேயே தொகுக்கப்பட்டுள்ளன. இச்சுவடி முழுக்க முழுக்க பேச்சு வழக்கிலுள்ள வற்றை உள்ளது உள்ள படியே தொகுத்த தொடர்களைக் கொண்டதால் இவற்றினின்று தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

# புதிய நாடக வகை

புலவர் சௌந்தரபாண்டியன், எம்.ஏ.,
சுவடி நூலகம்,
சென்னை—5.

இதுவரை தமிழுலகம் சிறப்பாக அறியப்படாத நாடக வகை 'குளுவ நாடகம்' என்பதாகும். கிடைத்தற்கரிய இவ்வகை நூல்களில் இதுவரை அச்சில்வராத 'கருப்பர் குளுவ நாடகம்' (R. 3506) என்ற ஓலைச்சுவடி சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடிநூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு குளுவரை அடிப்படையாகக் கொண்டு யாக்கப்பெற்ற இலக்கியங்கள் குறம், குறவஞ்சி, குளுவம் என்பன. குறம், குறவஞ்சி ஆகிய இலக்கியங்கள் போலவே நீஞ்சுவையுடைய மற்றொரு வகைதான் குளுவ நாடகங்கள்.

இதுகாறும் நாம் அறிய முடிகிற குளுவ நாடக நூற்கள் ஏழு. அவை :

1. அருணாசலம் செட்டியார் பேரில் குளுவ நாடகம்.
2. ஏழு நகரத்தாற் பேரில் குளுவ நாடகம்.
3. கோட்டூர் நயினாற் பேரில் குளுவ நாடகம்,
4. சின்னமகிபன் குளுவ நாடகம்.
5. கருப்பர் குளுவ நாடகம்.
6. குற்றாலக் குளுவ நாடகம்.
7. நாவலங்க நல்லக்குட்டி மேல் குவளு நாடகம்.

என்பனவாம். இவற்றில் கோட்டூர் நயினார் குளுவ நாடகம், ஏழு நகரத்தார் குளுவ நாடகம், சின்னமகிபன் குளுவ நாடகம் ஆகிய மூன்றும் அச்சாகியுள்ளன.

இஃது பறவை பிடிக்கும் 'குளுவன்' என்பவனை மையமாகக் கொண்ட இக்குறுவன், குறவஞ்சி நூல்களில் குறவனுக்குத் தோழனாகச் சித்திரிக்கப்படுகிறான். எல்லாக் குறவ நாடகங்களும் ஒரே வித அமைப்பையே கொண்டிலங்குகின்றன என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

முதற்கண் குளுவனும் அவன் தோழனாகிய சிங்கனும் அறிமுகப்படுத்தப் படுகிறார்கள். இவ்வறிமுகப் பகுதியில் அவர்கள் தம் திறன்கள் தோன்றுகின்றன. குளுவனும் தன்திறம் உரைக்கிறான். பிறகு குளுவன் பறவைகளின் வகைகளையும் மாட்சிகளையும் பலபடப் பேசுகிறான். இவ்வாறு பறவைகளைக் கூறும்போது நாட்டு வளமும் நவிலப் பெறுகின்றன. பிறகு குளுவன் சிங்கனைப் பார்த்துப் பலவிதப் பொறிகளை எடுத்து வரும்படிக் கூறுகிறான்; அதன்பின் எவ்வெவ்விடங்களில் விலங்குகள் பறவைகளை வேட்டையாடலாம். அதன் வழிமுறை என்ன என்பது பற்றியெல்லாம் குளுவன் விளக்குகிறான். அவர்களின் கண்ணிகளில் அகப்பட்ட பறவைகள் முதலியவற்றைக் கண்டு களிகொள்கின்றனர்.

குளுவ நாடகத்தின் சுவையான இப்பகுதிக்குப் பின்வரும் பகுதி இன்னும் சுவையுடையது. பறவைகளைப் பிடித்து வந்த பின்பு அவற்றை யார் யாரிடம் தந்து என்னென்ன பரிசுபெற்று வரல் வேண்டும் என்ற விளக்கம் தருகிறான்; சிலவற்றைத் தெய்வங்கட்குப் படைக்கச் சொல்கிறான்.

இவை நடந்த பின்பு, குளுவன் தன் மனைவி சிங்கியைக் காணாது தவிக்கிறான்; சிங்கன் சிங்கியை அழைத்து வருகிறான். வந்த சிங்கி நிறையப் பரிசுப்பொருள் பெற்று வந்ததாக அறிவிக்கிறாள். ஒவ்வொரு பரிசும் யார் தந்தது எனக் குளுவன் வினவ சிங்கி பதிலளிக்கிறாள்.

இம்முறையில் நடைபோடுவதே 'குளுவ நாடகம்' எனும் புதிய நாடகம். சொல் நயமும், ஓசை நயமும், கருத்தோட்டமும் கொண்ட இக்குளுவ நாடகம் ஓசை வடிவில் எங்கிருப்பினும் அதனைக் கண்டறிந்து அச்சிட்டு இலக்கிய உலகுக்கு அளித்தல் கற்றோர் கடமையாகும்.

# ரசகல்பத்ருமம்

கு. வெங்கடாச்சாரியார்,
வடமொழி பண்டிதர்,
அரசினர் கீழ்த் திசை ஓலைச் சுவடி நூலகம்,
சென்னை—5.

சதுர்புஜமிச்ரகவி இயற்றிய இந்நூல் கி. பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வடமொழி காப்பிய நூலாகிய இந்நூல் சுபாஷிதம் என்னும் செய்யுள் திரட்டு வகையைச் சேர்ந்தது.

நவரசங்களையும் பொது அறிவையும் நீதிகளையும் புகட்டும் நூலாக இயற்றப்படுவதே சுபாஷிதம் என்ற வகைப்படும். 'ரசகல்பத்ருமம்' என்னும் இந்நூலில் 1115 சுலோகங்களை 65 தலைப்புக்களில் தொகுக்கப்பட்டு உள்ளன. 142 கவிகளின் செய்யுட்கள் பெயருடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் 'ரசகல்பத்ருமம்' என்னும் மற்றொரு நூல் ஜகந்நாதமிச்ரர் என்னும் கவியால் ஒரிஸ்ஸா மாநிலத்தவரால் இயற்றப் பெற்று அச்சாகியிருக்கிறது. 213 சுலோகங்கள் (ரசகல்பத்ருமம் என்ற) இவ்விரு நூல்களிலும் ஒன்றாக எடுத்தாளப்பட்டுள்ளன. இந்நூற்களின் ஆசிரியர்களான ஜகந்நாதமிச்ரருக்கும் சதுர்புஜமிச்ரருக்கும் சிறிது கருத்து மாறுபாடு இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

சதுர்புஜமிச்ரர் இயற்றிய ரசகல்பத்ருமம் என்ற நூல் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவர் இந்நூலை விக்ரமசகம் 1705-ம் ஆண்டு வைசாகபூர்ணிமை திதியில் வியாழக் கிழமையன்று (27-4-16 ' 8) எழுதி முடித்ததாகக் கூறுகிறார்.

இப்புலவர் சாயஸ்தகான் என்னும் முகம்மதிய அரசரால் போற்றப்பட்டு ஆதரிக்கப்பட்டவர். வடமொழி புலவர்களையும் வல்லுநர்களையும் ஆதரித்து பொருளுதவி செய்து புகழ்பெற்ற அஸப்கான் என்பவரின் மகனே இந்த சாயஸ்தகான் என்பவர். கி. பி. 1658 முதல் 1707 வரை அரசாண்ட ஔரங்கசீப்பின் தாய் மாமனான இவர் ஔரங்கசீப்பின் அனைத்துப் படைகளுக்கும் தலைவராக விளங்கினார். ஔரங்கசீப்பின் மூத்தசகோதரன் 'தாராஷிகோ'விற்கு வடமொழியில் வல்லமையும் ஊக்கமும் உண்டாகும்படி செய்தவரும் இவரேயாகும்.

இத்தகைய சாயஸ்தகானை மகிழ்விக்கவே இந்நூலை இயற்றியதாக சதுர்புஜமிச்ர கவி குறிப்பிடுகிறார். சதுர்புஜர் என்ற பெயரில் முப்பத்துநான்கு நூலாசிரியர்கள் உள்ளனர். தர்மபாலன் என்ற அரசரால் தானமாகக் கொடுக்கப்பட்ட 'கரஞ்ச்' கிராமத்தைப் பெற்ற ஸ்வர்ணரேகா வமிசத்தவரான வங்கதேசக் கவியாகிய சதுர்புஜரால் பதின்மூன்று சருக்கங்கள் கொண்ட ஹரிசரிதம் என்ற காப்பியம் கி.பி. 1493-ல் இயற்றப் பட்டுள்ளது. இவர் மகன் கமலாகரர் என்பவர் 'கடகர்பரம்' என்னும் காப்பியத்திற்கு உரையும் லோலம்பராஜரின் 'ஹரிவிலாசம்' என்ற காப்பியத்திற்கு உரையும் எழுதியுள்ளார். உத்தரபிரதேசத்திலுள்ள காம்பில் என்ற ஊரைச் சேர்ந்த சதுர் புஜகவி என்பவர் அமருசதகம் எனும் நூலுக்குப் பாவ சிந்தாமணி என்ற உரையை எழுதியுள்ளார் என்பது தெரியவருகிறது.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள சதுர்புஜமிச்ர கவி தம் நூலில் பொதியமலையைப் பற்றிக் கூறும் சில செய்யுட் களையும் தாமிரபரணி முத்துடைத்து எனக்கூறும் செய்யுளையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். இதனால் இவருக்குத் தமிழ்நாட்டின் மீது பற்றிருந்தது என்பது தெரிகிறது.

இவர் தாம் எழுதிய செய்யுட்களுடன் சாயஸ்தகான் எழுதிய ஏழு செய்யுட்களையும் இந்நூலில் சேர்த்திருக்கிறார். கடைசியில் தேசவ கவியியற்றிய ஒரு செய்யுளை எடுத்துக்காட்டியுள்ளார்; எடுத்துக்காட்டாக சதுர்புஜரின் செய்யுட்கள் கருத்தையும், சாயஸ்தகான், தேசவகவி ஆகியோரின் செய்யுட் கருத்தையும் காணலாம்.

### சதுர்புஜரின் செய்யுட் கருத்து :

நல்லவர் தனது சிறிய தவறையும் உணர்ந்து வருந்துவர். பிறரது பெரிய தவறுகளை மனதில் கொண்டு தூற்றமாட்

டார்கள். அதேபோல தனது மலை போன்ற பெருமைகளை பெரிதாக எண்ண மாட்டார்கள். மற்றவரது சின்னஞ்சிறு நன்மைகளையும் நல்ல தன்மைகளையும் புகழ்ந்து பேசி மதிக்கும் இயல்பானவராயிருப்பர் என்பதாகும்.

**சாயஸ்தகான் செய்யுட் கருத்து :**

கடலின் நீரை உண்டு தழைந்து கருத்து கிளம்பி கடலின் மேல் நின்று மேகம் கர்ஜனை செய்வது தவறாகாது. கர்வம் கொள்வதாயும் எண்ண இடமில்லை. ஏனெனில் உப்புநீரை இனிமையாக்கி தருகின்றதே, சிப்பியில் பொழிந்து முத்தாக்கித் தருகின்றதே. பிறரால் முடியாததைச் செய்வதாக மேகத்தை குறைகூற முடியாது என்பதாகும்.

**இடைச்செய்யுள் (தேசவக்கவி) கருத்து :**

சண்பகப்பூவில் வண்டு நில்லாது வராது எனக் கூறுவது கவிகளின் மரபு. அதை வைத்து சண்பகப்பூவைத் தேற்றுவதாக அமைந்த செய்யுள் இது. அதாவது, "ஓ...செண்பகமே! கருத்து அற்று அலையும் அறிவிலியான வண்டு வரவில்லையே என்று கவலையுறாதே. உன்னை மதித்து மகிழ்ந்து உன் மணத்தை இனிதாக நுகர்ந்து கூந்தலில் சூடும் மங்கையர்களை நினைத்து மகிழ்ந்து நீ நீடூழி வாழவேண்டும்," என்பதாகும்.

# வாசவதத்தை

எஸ். சேசாத்திரி,
சுவடி நூலகம், சென்னை.

வடமொழி இலக்கியங்களில் மிகச்சிறந்ததும், பழமையானதும், பிரசித்திபெற்ற கவிஞர் பலரால் போற்றப்பட்டதும், புகழப்படுகின்றதும், முதன் முதலில் வடமொழியில் இயற்றப் பட்ட சிலேடை காவியம் என்னும் பெரும் சிறப்பை அடைந்தது மான ''வாசவதத்தை'' எனும் நூல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**நூலாசிரியர் குறிப்பு:** இந்நூலாசிரியர் ''சுபந்து''. வாசவ தத்தா எனும் ஒரே நூலை இயற்றி இலக்கிய உலகில் அழியாப் புகழுடன் திகழ்கிறார். இவர், கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்தவர் என்பதை வாசவதத்தா, ஹர்ஷசதம் ராகவபாண்டவீயம் முதலிய நூல்களிலிருந்து தெரிகிறது.

'வாசவதத்தா' காட்டும் விக்கிரமாதித்யன் 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட பாலாதித்யன் என்ற அரசனின் தோழனான யசோதர்மன் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே, இதற்குபின் 6-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் சுபந்துவின் காலமாகக் கொள்வர். மேலும், 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி செய்த ஹர்ஷவர்த்தன அரசனின் அவைப்புலவரான பாணபட்டா, தன்னுடைய ''ஹர்ஷ சரிதம்'' என்னும் நூலில் வாசவதத்தா என்னும் நூலைப் போற்றியுள்ளார். ஆகவே இதற்கு முற்பட்ட 6-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலமே சுபந்துவின் காலமாகக் கருதலாம்.

**கதைச்சுருக்கம்:** பாடலிபுத்திரம் எனும் நகரத்தில் சிந்தாமணி என்ற அரசன் இருந்தான். அவ்வரசனுக்கு 'கந்தர்ப்பகேது' எனும் அழகிய குமாரன் பிறந்து அரசர்கட்குரிய முறையில்

வளர்ந்து வருகிறான். ஒரு நாள் இரவு 4-ஆம் யாமத்தில் அரச குமாரன் 18 வயதை அடைந்த அழகிய இளம் நங்கையை கனவில் காண்கிறான்.

அப்பொழுது முதல் அந்நங்கை மீது கொண்ட காதலால் அவ்வரசகுமாரன் எவருடனும் பேசாமலும், பார்க்காமலும் எந்தக்காரியத்திலும் ஈடுபாடற்றவனாகவும் இருக்கின்றான். இச் சமயத்தில் சாமர்த்தியமாகக் கந்தர்ப்பகேதுவை அவனுடைய தோழன் மகரந்தகேது சந்தித்து ஆறுதல் கூறுகிறான். தோழனின் ஆறுதல் வார்த்தைகளை ஏற்காத அரசகுமாரன் அவனையும் அழைத்துக்கொண்டு காட்டிற்குச் செல்கிறான். அங்கு விந்திய மலைச்சாரலில் நர்மதா நதியின் கரையில் நாகமரத்தின் நிழலில் இளைப்பாறுகிறான்.

இரவின் 3-ஆம் யாமத்தில் விழித்துக் கொண்ட அரச குமாரன்' ஜோடிக்கிளிகளின் உரையாடலைக் கேட்கிறான். ''குசுமபுரநகர அரசன் திருங்காரசேகரன் என்பவருக்கு வாச வதத்தை என்ற பெண் இருக்கிறாள். தக்கவயதில் தந்தையால் ஏற்பாடு செய்யப்பட்ட சுயம்வரத்தில் எந்த அரசகுமாரனுக்கும் மாலையணிவிக்கவில்லை என்றும், அன்று இரவு கனவினில் அழகுள்ள வாலியன் ஒருவனைக் கண்டாள்; அவன் சிந்தாமணி அரசனின் குமாரன் கந்தர்ப்பகேது என்றும் கனவில் அறிந்து கொண்டாள்; விழித்தெழுந்த குமாரியும் அவ்வரசகுமாரனை எண்ணியபடியே இருக்கிறாள் என்றும் இதனையறிந்தே தோழி ''தாமலிகா'' என்ற பெண் கிளியை கந்தர்ப்பகேதுவிடம் தூது அனுப்பி இருக்கிறாள்; அக்கிளியே மரத்தின் கீழ் இருந்து பேசு கிறது என்றும் அறிகிறான்.

இதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்த கந்தர்ப்பகேதுவும் தன் நண்பன் மூலம் கிளி சொன்ன செய்தியைக்கேட்டு பின்பு, வாச வதத்தையின் மாளிகையை அடைகிறான். அங்கு வாசவதத் தையைப் பார்த்த அரசகுமாரன் கனவில் தன்னைக் கவர்ந்த காரிகை இவள் என்று அறிந்து மகிழ்கிறான். பின்பு காந்தர்வ முறைப்படி மணந்து காட்டிற்கு வந்து மகிழ்ந்து உறங்குகிறான்.

உறக்கத்திலிருந்து முதலில் விடுபட்ட 'வாசவதத்தை' உண்ணுவதற்கு கனி, கிழங்கு எடுத்துவரச் செல்கிறாள். வழியில் வேட்டையாட வந்த வேடர்களிருவர் வாசவதத்தையைப் பார்த்து அவளையடைய விரும்பி சண்டையிட்டுக் கொண்ட னர். இதனால் பக்கத்தில் தவமிருந்த முனிவரின் ஆசிரமம்

அழிந்தது. முனிவர் தன் தபோ மகிமையால் இதற்கு காரணம் வாசவதத்தை என அறிந்து அவளைக்கல்லாகும்படிச் சபிக் கிறார். வாசவதத்தை முனிவரை வேண்ட 'நீ கணவன் கைபட்ட தும் உயிர் பெறுவாய்' என்கிறார்.

விழித்தெழுந்த கந்தர்ப்பகேது பக்கத்திலுறங்கிய வாசவதத் தையைக் காணாமல் பரிதவித்து, பிரிவைத் தாங்கமுடியாமல் காட்டில் அலைந்து கடைசியில் இளைப்பாற எண்ணி ஒரு கல்லைத் தொட்டான். உடன் அதிலிருந்து வாசவதத்தை உயிருடன் வெளிப்பட்டாள். பின்கந்தப்பகேது வாசவதத்தை யைத் தன் நாடான பாடலிபுத்திரம் அழைத்துச் சென்று சுகமாக இருந்தான்.

இந்நூலாசிரியர் ஒவ்வொரு பதத்திலும் சிலேடையாக வர்ணனை செய்வதன் மூலம், தான்ஓர் சிறந்தஇலக்கியக் கவிஞர் என்பதனை நிலை நாட்டுகிறார். இயற்கையழகின் வர்ணனை, சூரிய உதய அஸ்தமன வர்ணனை இவைகளைப் படிப்போர் வியக்க கூறுகிறார். இவரதுநூலில் உள்ள சுவைமிக்க பல பாகங் களைப் பாணபட்டர் ஹர்ஷசரிதநூலில் எடுத்தாண்டுள்ளார் பலஇடங்களில் ஒன்றை மற்றொன்றுக்கு உவமையாகக்காட்டியுள் ளார். இந்நூலுக்கு சுமார் 10 கவிஞர்கள் உரை எழுதியுள்ளனர். இவைகளில் சுமார் 8 உரைகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடியின் பாதுகாப்பில் உள்ளன.

இந்நூலைப் போன்றே வீணாவாசவதத்தை 'ஸ்வப்ன வாசவ தத்தை எனும் நூல்கள் பாஸகவியால் இயற்றப்பட்டு நாடக முறையில் அமைந்துள்ளது.

# தொன்மையான கற்சின்னங்கள் புனரமைப்புப் பணிகள் பற்றிய ஒரு அறிமுகம்

கோ. தேவராஜ்,
இளநிலைப் பொறியாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை-28.

பராமரிப்புப் பணிகள், பாதுகாப்புப்பணிகள் மற்றும் புனரமைப்புப் பணிகள் இவைகளுக்கான தொழில்நுட்ப முறைகளை சின்னங்களின் கட்டுமான முறை, உபயோகப்படுத்தப்பட்டகட்டுமானப் பொருள், அமைந்துள்ள இடம் இவைகளின் தன்மைகளுக்கேற்ப மேற்கொள்ள வேண்டி இருக்கும். ஒரு குறிப்பிட்ட சின்னத்திற்குப் பராமரிப்புப் பணிகள், பாதுகாப்புப்பணிகள் ஆகியவைகளை மேற்கொண்டாலும் கூட தொடர்ந்து சேதமடைவதை தவிர்க்க இயலாது என்ற சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் சின்னத்தின் சரித்திரம், தொன்மை, கலைச்சிறப்புகள், சுற்றுப்புறச்சூழல் ஆகியவை எப்படியாவது ஏதாவது ஒரு வகையில் பாதிப்புக்குள்ளாவதை முற்றிலும் தவிர்க்க இயலாது. எனவேதான் கூடுமானவரை புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும் எனினும் முன்பு குறிப்பிட்டபடி புனரமைப்புப்பணிகளைச் செய்தே ஆகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் சில முறைகளைக்கவனமாக மேற்கொள்ள வேண்டி இருக்கும்; தொன்மையான கற்சின்னங்களுக்கு இவ்விதமான புனரமைப்புப் பணிகளின் சில நுட்பங்கள் இப்போது கூறப்படுகிறது.

சின்னங்களின் மீது ஊடுருவி வளர்ந்திருக்கும் மரம் செடி களின் வேர்கள், சுற்றிலும் உள்ள மரம் செடிகள் இவைகளை அழித்தல், சின்னத்தை மறைத்திருக்கும் மண்மேடிட்டுள்ள பகுதி களை வெட்டி எடுத்தல், பூமியினுள் புதையுண்டிருக்கும் கற்கள், சின்னங்களின் மீது வலுவிழந்து சீர் குலைந்த நிலையில் உள்ள கற்கள் இவைகளை அப்புறப்படுத்தி வரிசைப்படுத்திக் குறியிட்டு அட்டவணைகளில் பதிவு செய்தல், வரைபடங்கள் தயாரித்தல் போன்றவைகள் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படும் வழக்க மான பணிகளாகும்.

வரைபடங்கள், அட்டவணைகள் இவைகளை அடிப்படை யாகக் கொண்டு பழைய கற்களை உபயோகப்படுத்திச் சேர் மானப் பணிகளைத் தொடரும் போது சிற்சில இடங்களில் கற்கள் அகப்படாமல் போகலாம். அல்லது மூலாதாரமான கற்கள் இல்லாமல் வேறு கற்கள் கிடைக்கப்பெற்று ஆனால் சரியாக சேர் மானம் ஆகாமல் போகலாம். பொதுவாக இது போன்ற சமங் களில புதிய கற்களைக் கொண்டு பழையவை அகப்படாத இடங் களில் உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கமான முறையாகும். புதிய கற்களைத் தேர்ந்தெடுப்பதில் சில பிரச்சினைகள் உருவாக லாம். புதிய கற்களின் நிறம் கூடுமானவரை பழைய கற்களின் தோற்றத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பழைய கல் கிரானைட் அல்லது கொண்டலைட் முதலான வகையினைச்சேர்ந்த தாக இருந்தால் உபயோகப்படுத்தும் கற்களும் அதே தன்மை உடையவைவாகஇருக்கவேண்டும். பிறகு தகுந்த Quarry-ஐ தேர்ந் தெடுக்கவேண்டும். எனவே, கூடுமானவரை பழைய கற்களையே உபயோகபபடுத்த முயற்சிககலாம. பிரித்துச் சேகரித்து வைக்கப் பட்டிருக்கும் எல்லாக் கற்களும்ம மூலாதாரமான கற்களாகஇருக்க முடியாது. எனவே அவற்றில் தேவைப்படாத கற்களில் தேர்ந் தெடுத்துக் கொள்ளலாம். சில இடங்களில் பழுதடைந்த நிலை யில் உள்ள கோயிலைச் சேர்ந்த கற்கள், சுற்றிலும் கவனிப் பாரன்றி கிடக்கும். ஆற்றுப்படுகை, குளம், கிணற்றடிகள் போனற இடங்களிலும் இதே போல இருபபதைக காணலாம். இன்னும் சில இடங்களில் சுற்றிலும் வாழும் மக்களே கோயிலைச் சேர்ந்த கட்டுமானப் பொருட்களை அப்புறப்படுத்திப் பல்வேறு சொந்த உபயோகங்களுக்குப் பயன் படுத்திக் கொள்வதையும் காணலாம். எனவே முதற்கட்டமாக மேற்குறிப்பிட்டபடி சுற்றுப்புறங்களிலும் உள்ள கற்களை ஆய்வு செய்து சேகரித்து வைத்துக் கொண்டு தகுந்வைகளைப் புனரமைப்புப் பணிக்கு உப

யோகப்படுத்த வேண்டும். இது முடியாத நிலையில் புதிய கற்களைத் தேர்ந்தெடுத்துப் பணிகளைச் செய்யலாம்.

சில சமயங்களில் கல்வெட்டுகள் அமைந்த கற்களும் அகப் படாமல் போகலாம். எனவே பழைய சமமான கற்களை மட்டுமே இந்த இடங்களில் உபயோகப் படுத்த வேண்டும். அல்லது புதிய சமமான கற்களையும் (Plain Course) உபயோகிக்கலாம். ஆனால் இப்பகுதிகளைச் சேர்மானம் செய் யும் போது பழைய கற்களின் மட்டத்திற்கு இல்லாமல் சற்று உட் புறம் தள்ளி சேர்மானம் செய்தல் வேண்டும். புனரமைப்புப் பணிகளின் போது மூலதாரமான கற்கள் அகப்படாததால் புதிய கல் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பிறகு அறிந்து கொள் வதற்காகவே இவ்விதம் செய்யப்பட வேண்டியது அவசிய மாகிறது.

பூ வேலைப்பாடுகள், கொடிக்கருக்குகள், ஒழுங்கான வடி வமைப்புகள் போன்றவைகள் அமைந்த வரிக்கற்கள் அகப்படாத நிலையில் பழைய கற்கள் அல்லது இயலாது போனால் புதிய கற் கள் இவைகளில் இதே போன்று சிற்ப வல்லுனர்களைக் கொண்டு குறிப்பிட்ட வேலைப்பாடுகளின் வெளிப்புற வரிவையை மட்டும் (Outline) செதுக்கி உபயோகப்படுத்திக் கொள்வது அனுமதிக் கப்படுகிறது ஆனால் மிருகங்கள், பறவைகள், பூதகணங்கள், மனிதர்கள் போன்ற உருவங்கள் அமைந்த கற்களுக்குப் பதிலாகப் புதிதாக உருவாக்கம் கண்டிப்பாகச் செய்யக் கூடாது இந்த இடங் களில் சாதாரண சமமான கற்களையே உபயோகப் படுத்த வேண்டும்.

சிற்பங்களைப் பொறுத்த வரையில் எந்த வகையான பழுது பார்த்தல் பணியும் மேற்கொள்ளப்படக்கூடாது. பழுது பார்க் கப்படாவிட்டால் சிலைகள் மேலும் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்ற சூழ்நிலையில் மட்டுமே சில பணிகளை மேற்கொள்ளலாம். குறிப்பாகச்சிற்பங்களில் விரிசல் கண்டிருந்தாலோ அல்லது குழிவு கள் (Cavilier) ஏற்பட்டிருந்தாலோ எப்பாக்சி பசை[1] அல்லது தகுதியான சாந்து மூலம் இவைகள் மேலும் சேதமடை யாத வகையில் சரி செய்யபபடவேண்டும். ஆனால் இவ்விதம் உபயோகப்படுத்தப்படும் சாந்து அல்லது பசை விரிசல்கள் அல்லது குழிவான பாகங்களின் உட்புறத்திலேயே அடங்கி யிருக்கும்படிச் செய்யப்படவேண்டும்.

1. Epoxy Rosin Mortor: (Epoxy + Hardner + Pikment + Filler.)

**Epoxy Resin Mortar: (Epoxy Resin+Hardner + Pigment+ Filler**

பழைமையான ஓவியங்கள் காணப்படும் பகுதிகளடங்கிய கற்களைப் பொறுத்த வரையில் எந்த விதமான புனரமைப்புப் பணியும் மேற்கொள்ளப்படக் கூடாது.

இதுவரை பொதுவாக மேற்கொள்ளப்பட வேண்டிய சில முறைகள் கூறப்பட்டது. புனரமைப்புப் பணிகளில் சில குறிப்பிட்ட பணிகளைப்பற்றி இப்போது கூறப்படுகிறது.

1. தொன்மையான கற்சின்னங்கள் பாதிப்புக்குள்ளாவதற்குப்பல காரணங்களுள்ளது. எனினும், பெரும்பாலும் காரணமாக அமைபவை அதன்மீதும் உட்புறங்களிலும் ஊடுருவி வளரும் மரம் செடிகள் போன்றவைகளின் வேர்கள் ஆகும். சில இடங்களில் சின்னம் அமைந்துள்ள நிலத்தின்மண் தன்மையைப் பொருத்தும் சேதமடைய வாய்ப்புகள் உண்டு. குறிப்பாகக் கடினமில்லாத வழுவழுப்பான களிமண் அமைந்துள்ள இடம், அல்லது எப்போதும்தண்ணீர்தேங்கி அல்லது அடியில் நீறூற்றுகள்கொண்ட அமைந்த இடம் இவைகளில் சின்னங்களின் நிறை காரணமாக பூமியினுள் அழுந்திப் புதையுற வாய்ப்புண்டு. இதன்தன்மை ஒரே சீராக இல்லாத போது ஏற்ற இறக்கம் காரணமாக விரிசல்கள் ஏற்பட்டு நாளடைவில் பகுதி பகுதியாக இடம் பெயர்ந்து சாய்ந்து விழ ஆரம்பிக்கிறது. பூமியில் நீர்ப்பசையுள்ள காலங்களில் உள்ள மண்ணின் கொள்ளளவு வரண்ட சமயங்களில் காய்ந்து சுருங்குவதன் காரணமாகவும் மேற்குறிப்பிட்டபடி கடைக்கால் பகுதிகள் சேதமடையலாம். சின்னங்களின் பக்கங்களில் சாதாரணமாக விரிசல் கண்டு, ஆனல் நேராக ஸ்திரமான நிலையில் இருந்தால் புனரமைப்புப் பணிகள் தேவையில்லை. மேற்கொண்டு சேதமடையாமல் இருக்கக் கடைக்கால் பகுதிகளை சிதைக்காமல் வலிமையூட்டும்முறை அல்லது மண்ணின் நிறைதாங்கும் சக்தியை அதிகரிபபது போனற முறைகள் மூலம் வலிமைப் படுத்தலாம். சாய்ந்து சீர்குலைந்த நிலையில் இருக்கும் சின்னங்களைப் பொறுத்த வரையில் தேவைப்படும் பகுதிகளுக்குப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளலாம். புனரமைப்புப் பணிகளைத் துவக்கும் முன் வரைபடங்கள், குறியிடப்பட்டு பதிவுசெய்யப்பட்ட கற்களைப் பற்றிய அட்டவணைகள் ஆகியவை மிகத் துல்லியமாகத் தயாரிக்கப்பட வேண்டும். இது மிகக் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டிய பணியாகும்.

2. பெரும்பாலும் பழைமையான சின்னங்கள் தாழ்வான இடங்களில் அமைந்திருப்பதைக் கவனிக்கலாம். தற்கால ஊரமைப்புமுறை வளர்ச்சியின் காரணமாகவும், சுற்றுப்புறத்தில் வசிப்பவர்கள் தண்ணீர் தேங்காமல் இருக்க, தத்தம் இடங்களில் மண்மேடிட்டு உயர்த்திக் கொள்வதாலும் சுற்றுப்புறப் பகுதிகள் மட்டம் நாளடைவில் உயர்ந்து சின்னம் அமைந்துள்ள இடம் தாழ்வாக அமைந்து விடுகிறது. இதன் காரணமாக மழைக்காலங்களில் நீர்வடிய வழியின்றி சுற்றிலும் நீர் தேங்கி சின்னங்களின் மீது பாசி, காளான் போன்ற தாவர வகைகள் பரவ ஆரம்பிக்கிறது; இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு நிலமட்டத்தை உயர்த்த வேண்டியிருந்தால் வேறுசில பிரச்சினைகள் உருவாகலாம். குறிப்பாக உபானப் பகுதிகள் மறையாத வகையில் நிலமட்டத்தை உயர்த்த வேண்டி இருக்கும். அல்லது சுற்றுப்புறம் முழுவதும் தாழ்வான சுற்று வழியாக அமைத்து மற்ற பகுதிகளை உயர்த்தலாம். வேறு மாற்று வழிகள் இல்லையெனில் இவ்விதம் செய்யலாம். மற்றொரு முறையாக, தேங்கும் தண்ணீரை பூமிக்கு அடியில் வடிகால் அமைப்புகள் மூலம் தூரமாக ஒரு இடத்தில் வடியச் செய்து தேக்கி அங்கிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சிக்கலாம். இந்த வடிகால் அமைப்புகள் ஏதும் பார்வைக்குத் தெரியாத வகையில் உருவாக்கப்பட வேண்டும்.

3. மகாமண்டபம் அல்லது முகமண்டபம் பகுதிகளில் மேற்கூரை போன்ற கட்டுமானப் பகுதிகளின் நிறை முழுவதும் தூண்கள் தாங்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். எனவே தூண்களில் விரிசல் கண்டிருந்தாலோ, அல்லது இடம் பெயர்ந்து சாய்ந்த நிலையில் காணப்பட்டாலோ உடன் சரி செய்யத் தேவையான பணிகளைக் கவனிக்க வேண்டும். சாரம் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி சேதமடைந்த தூணைச் சுற்றியுள்ள கூரைப்பகுதிகளைத் தாங்கும் வகையில் முட்டுக் கொடுக்கலாம். இவ்விதம் நிறை முழுவதும் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் சாரம், முட்டுகள் போன்றவைகள் தாங்குவதை உறுதிப்படுத்திக் கொண்டு, பழைய தூணை அகற்றி சரிசெய்யப்பட்ட அல்லது புதிய தூண்களை மீண்டும் சரியான அதன் பழைய இடத்தில் பொருத்த வேண்டும். இறுதியில் சார அமைப்புகளைப் பகுதி பகுதியாக அகற்ற வேண்டும்.

4. தூண்களைக் காட்டிலும் உத்திரங்கள்தான் பெரும்பாலும் சேதமடைகிறது. பழைய கோயில்களில் பாவுக் கூரைக்

கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மேல்தளத்தின் மீது தேவைக்கும் மிக அதிகமான அளவில்செங்கற் கட்டுமான வேலைகள் மூலம் weathering course அமைந்திருப்பதைக் காணலாம். ஏற்கனவே உள்ள பாவுக் கற்களின் நிறையுடன் இந்த weathering course கட்டுமான நிறையும் சேர்ந்து அதிகமான நிறை கூடி உத்திரங்களின் மீது அழுந்துவதால் நாளடைவில் விரிசல்கள் ஏற்படுகிறது. சேதமடைந்த உத்திரங்கள் காரணமாக நாளடைவில் கூரைப் பகுதிகள் பழுதடைய ஆரம்பிக்கிறது. உத்திரங்களைப் பழுதுபார்ப்பதற்குச் சில குறிப்பிட்ட முறைகள் உள்ளது. சாதாரணமாக மேலே குறிப்பிட்டபடி உத்திரப்பகுதி சுற்றிலும் சார அமைப்புகள் ஏற்படுத்தி முட்டுக் கொடுத்து மேலே உள்ள weathering course கட்டுமான வேலை முதல் பாவுக் கற்கள் உட்பட உத்திரப்பகுதிகளையும் சேர்த்து அகற்ற வேண்டும். பிறகு உத்திரங்களை வலிமைப் படுத்தி சரிசெய்து அல்லது புதிய உத்திரங்களை மீண்டும் பொருத்த வேண்டும். பழைய உத்திரங்களை வலிமைப்படுத்தி மீண்டும் அதையே உபயோகப்படுத்தச் சில முறைகள் உள்ளது.

சுமாரான நிலையில் விரிசல் கண்டு சேதமடைந்த உத்திரங்களை எப்பாக்சிப் பசை, மற்றும் உட்புறம் குடைவுசெய்யப்பட்டு அதன் இடங்களில் பொருத்தப்பட்ட fierods மற்றும் RSJ கர்டர்கள்மூலம் ஒரேபகுதியாக பொருத்தி வலிமைப்படுத்தி மீண்டும் உபயோகப்படுத்திக் கொள்வது ஒரு முறை.

மிகவும் சேதமடைந்த உத்திரங்களில் சிற்ப வேலைப்பாடுகள் போன்றவை ஏதும் இன்றி சமமான கற்களாக இருந்தால் புதிய உத்திரங்களை உருவாக்கி உபயோகப்படுத்துவதும் உண்டு.

ஆனால் மிகத் தொன்மையான பழைய காலத்தைச் சேர்ந்த அதே சமயம் சிற்பநுணுக்கங்களையும் ஒருங்கே கொண்ட ஒரு உத்திரம் மிகவும் சேதமடைந்து நொறுங்கிய நிலையில் காணப்பட்டால் எந்த முறையில் பழுது பார்த்து மீண்டும் அதையே உபயோகப்படுத்துவது என்ற பிரச்சினை சில சமயங்களில் எழலாம். முதற்கட்டமாக முன்பக்கம் மற்றும் பின்பக்கத்துத் தோற்றங்கள் மற்றும் அடிப்பக்கங்கள் சேதமடையாத வகையில் பகுதி பகுதியாகத் தனிப்பலகைகளாக செதுக்கித் தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு முன்பு முழு அளவிற்கு வரைபடம் தயாரிக்கப்பட்டு அந்தந்த பகுதிகள் பொருந்தும் பாகங்களைக் குறிப்பிட்டு அட்டவணைப்படுத்திக்

கொள்ள வேண்டும். பழைய உத்திரத்தின் நீளம், உயரம், முன்பு குறிப்பிட்டபடி உயரம் அகலம் இவைகளை அளவாகக் கொண்டு செதுக்கி எடுக்கப்பட்டபிறகு உள்ள திண்ணாக்கம் செய்யப்பட்டு வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கலவையாலான உத்திரம் உருவாக்கப்பட வேண்டும் (R.C.C.). இந்த உத்திரம் பழைய உத்திரத்தின் இருப்பிடத்தில் பொருத்தப்பட்டு பிறகு முன்பு செதுக்கிப் பலகைகளாக எடுத்து வைக்கப்பட்டிருக்கும் பாகங்களை அதனதன் பகுதிகளில் எப்பாக்சி (Epoxy Resirn பசை கொண்டு முன்பக்கம் அடிப்பாகம் மற்றும் பின் பக்கங்களில் அமைக்க வேண்டும். இந்த பணி முடிவுற்ற பிறகு வெளிப்புறத் தில் பழைய உத்திரத்தின் தோற்றமே தெரியும். உட்புறம் அமைக்கப்பட்டிருக்கும் சிமெண்ட் உத்திரம் மறைக்கப்பட்டிருக் கும். இந்த உத்திரம் பொறியியல் வடிவமைப்பு முறைகளின்படி கணக்கிடப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். உத்திரம் மீண்டும் பொருத்தப்பட்ட பிறகு மற்ற புனரமைப்புப் பணிகளை வழக்க மான முறையில் மேற்கொள்ள வேண்டும். Weatheing Course ஐ பொருத்தவரையில் மேல்தளங்களின் மட்டத்திற்கு ஏற்ப மழைநீர் எளிதில் வழிந்தோடும் வகையில் புதிதாக தேவைக் கேற்ப, அமைத்துக் கொள்ளலாம். இதனால் வெளிப்புறத் தோற்றம் மாறுதலுக்குள்ளாவதில்லை.

இதுவரை கற்சின்னங்களுக்கு மட்டுமே புனரமைப்புப் பணி களில் சில முறைகள் கூறப்பட்டது. சரித்திரப் புகழ் வாய்ந்த கட்டிடங்கள், அரண்மனைகள், மலையில் அமைந்துள்ள குகைகள், பாறை ஓவியங்கள், அகழ்வாய்வு செய்யப்பட்ட இடங்கள் இவை களுக்கான பாதுகாப்புப் பணிகளுக்கான முறைகள் மிகவும் விரிவானவை. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விளக்கப்பட வேண்டியிருக்கும்.

முடிவாக முன்பே குறிப்பிட்டபடி கற்சின்னங்களைப் பொறுத்த வரையில் புனரமைப்புப் பணிகள் கண்டிப்பாக மேற் கொள்ளப்படவே ஆகவேண்டும் என்ற சூழ்நிலையில் மட்டுமே செய்யப்பட வேண்டும். கூடுமானவரை புனரமைப்புப் பணி களைத் தவிர்த்து பராமரிப்புப் பணிகள் மற்றும் பாதுகாப்புப் பணிகள் மூலமாகவே சின்னங்களைப் பாதுகாக்க வழிவகைகளை கவனிக்க வேண்டும்.

# வழி வழியாக வந்த பூச்சு முறைகள்

V. நாராயணசாமி,
உதவி செயற்பொறியாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை—28.

17-ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட திருமலைநாயக்க மன்னன் தனது அரண்மனையை அழகுபடுத்தவும், ஒளிகூட்டவும் ஒரு பூச்சு முறையினை மிகவும் அழகாகக் கையாண்டு உள்ளார். திறமையான வேலையாட்கள் மற்றும் தேர்ந்தெடுத்த கட்டிட பொருள்களைக் கொண்டு அவர் செய்து முடித்துள்ள பூச்சுவேலையானது, தற்காலத்தில் உபயோகப்படுத்தப்படும் பூச்சுவேலை மற்றும் அதன்மீது வண்ணம் பூசுதலை விட மிகவும் சிறப்பு மிக்க ஒன்ருக விளங்குகிறது. அவர் செய்து முடித்துள்ள சுண்ணாம்பு பூச்சு வேலையானது நீர் விட்டுக் கழுவக் கூடியதாகவும்; குளிர்ந்த தன்மை பொருந்தியதாகவும் உள்ளது சிறப்பு மிக்க ஒன்றாகும். இம்முறை பூச்சினை தற்போது வெள்ளை வைத்தல் எனக் கூறுகிருர்கள்.

சாதாரணமாக பூச்சு வேலைக்கு இருபொருள்கள் தேவை. 1. ஒட்டும் தன்மையுள்ள (Binding) சுண்ணாம்பு, சிமெண்ட் முதலியன. 2. கொரகொரப்பான மணல் போன்ற உபபொருள்கள். இவ்விரண்டுபொருள்களையும் வேலையின் தன்மைக்கு ஏற்ப தகுந்த விகிதாச்சாரத்தில் கலந்து பூச்சு வேலைக்கு உபயோகப் படுத்துவார்கள். பூச்சுவேலை முடிந்தவுடன் அதன்மீது வண்ணம் அடித்து மேற்படி பகுதிகளை அழகுபடுத்துவார்கள்.

மன்னர் திருமலை நாயக்கர் உபயோகப்படுத்தியது போன்ற தொன்மையான பூச்சுவேலை தற்காலத்தில் செய்யப்படும் இரு வேலைகளையும் ஒருங்கே செய்து கட்டட அமைப்பை சிறப்பானதாக செய்கிறது.

பூச்சு வேலையின் முக்கிய நோக்கம் கட்டட உள் அமைப்பை பேணிக் காப்பதும் வெளிப்பகுதியை அழகுபடுத்துவதுமாகும். இவ்வாய்வுக் கட்டுரையில் கூறப்படும் தொன்மையான பூச்சு வேலை மூன்று பெரும்பகுதிகளாக பிரித்து பூசப்படுகிறது.

இத்தொன்மையான வேலைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருள்கள் கிளிஞ்சல் சுண்ணாம்பு மற்றும் வெள்ளைக்கல் (Quarty). கிளிஞ்சல் சுண்ணாம்பு என்பது கொழுப்பு தன்மையை உடைய சுண்ணும்பு ($CaOH_2$). வெள்ளைக்கல் என்பது குவார்ட்டி ($G10_2$).

வெள்ளைக்கல்லின் அளவு மூன்று உபகரணங்களாகப் பிரிக்கப் படுகிறது. இவை 4mm (Sieve 400), 2mm (200) மற்றும் ½mm (50) ஆகும். கிளிஞ்சல்கள் சுண்ணாம்பு கல் வேகவைக்கும் காலவாயில் வேக வைக்கப்பட்டு சுண்ணாம்பாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இவ்விரண்டு பொருள்களையும் வைத்து பூச்சின் அழகினையும் உறுதியையும் எவ்வாறு மிகசிறப்பாகச் செய்துள்ளனர் என்பதை இப்போது விபரமாக பார்ப்போம்.

தற்காலத்தில் உபயோகப்படுத்தப்படும் பூச்சு வேலைகளுக்கு தேவைப்படும் மணல் போன்ற பொருள்களின் தகுதி (Specification)யினை விவரிக்கையில் அவை கூர்மைத் தன்மை உடைய தாகவும், களிமண், பெரும் கல் போன்ற வெளி பொருள்கள் இல்லாதவாறும் தனித்து இருக்க வேண்டும் என்றும் இவை ஒரு குறிப்பிட்ட சல்லடைத் துளைகளில் மட்டும் செல்பவைகளாக இருக்க வேண்டும் என்றும் கருதுகின்றனர்.

தொன்மைப் பூச்சில் வெள்ளைக் கல் உபயோகப்படுத்தப் படுகிறது. இது அனைத்து களிமண் போன்ற வெளி பொருள்கள் இல்லாமல் மிகவும் சுத்தமாக உள்ளது. மேலும் பூச்சுவேலையில் மூன்று நிலைகளாக நடைபெறுகிறது.

1. 4mm அளவுள்ள வெள்ளைக்கல் கிளிஞ்சல்சுண்ணாம்புடன் 5 : 2 என்ற விகிதத்தில் கலந்து நன்றாக அரைத்து முதல் பகுதி யாக பூசப்படுகிறது.

முதல் கலவை சிறிதளவு கெட்டிபடும் நிலையில் இரண்டாம் கலவை முதல் கலவையின் மீது பூசப்படுகிறது. இதற்கு சுண்ணாம்பு வெள்ளைக்கல் (3:2) என்ற விகிதத்தில் கலந்து உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த பூச்சு மிகவும் அழுத்தமாக தேய்க்கப்பட வேண்டும். இதனால் இரண்டாம் கலவையில் உள்ள 4mm வெள்ளைக்கல்முதல்பூச்சின் இடைவெளி களில் நன்கு படிந்து உறுதிப்படுத்துகிறது. தேய்ப்பு கற்களி னால் தேய்ப்பதால் மெருகும் ஏற்படுகிறது.

மூன்றாவது நிலையில் 4:1 என்று சுண்ணாம்பு, வெள்ளைக்கல் கலவை கலந்து அரைத்து பூசப்படுகிறது. இதுவும் மேற்கண்ட நிலையில் தனது பங்கை செய்து மேற்படி பூச்சை செயற்கையான குவார்ட்ஸ் ஆக மாற்றுகிறது. இது தற்காலத்தில் சிமெண்ட் பூச்சின் மேல் சிமெண்ட் பாலை ஊற்றி தேய்த்து வழவழப்பாக்கு வதைப் போன்றது.

கடைசி நிலையாக இப்பூச்சின் மீது சுண்ணும்பு மற்றும் முட்டைவெள்ளை ஆகியவற்றைக் கலந்து மேல்பூசி தேய்த்து சுத்தம் செய்யப்படுகிறது. இதனால் முன் செய்த மூன்று நிலை பூச்சிகளின் காற்று இடைவெளியில் புகுந்து, இதனை முழுமை யானதாக மாற்றுகிறது.

கடைசியாக தேய்ப்புப்பணி நடைபெறுகிறது. (சில தற்சமயம் Mossaic போன்ற அமைப்பு கொண்டது) இப்பணியின்போது கடினமான தேய்ப்புக் கல்லினைக் கொண்டு தேய்க்கப்படுகிறது. இதனால் சுண்ணாம்பு தன்னுடைய மெருகு தன்மையை வெளிப் படுத்தி தூணை பளிச்சிடும் வெண்மையாக மாற்றுகிறது.

தேய்ப்பு முடிந்தபின் பூசப்பட்ட பகுதிகளில் நீர் வெளிவரத் துவங்கும். இது ரசாயன மாற்றத்தால் ஏற்படுவதாகும்.

1. சுண்ணாம்பு—$CaoH_2$) $+ Co_2 \rightarrow CaCo_3 + H_2o$.

(சுண்ணாம்பு வெளிக்காற்றிலிருந்து $Co_2$ எடுத்து ரசாயன மாற்றத்தால் சுண்ணாம்பை $Caco_3$ ஆக மாற்றி மிகுதியை நீராக்குகிறது.)

# கொங்கு நாட்டில் கன்னி வழிபாடு

இரா. செல்வராசு, எம். ஏ.,
தொல்பொருள் அலுவலர்,
கோவை.

கொங்குநாடு நாற்புறமும் மலைகளும் குன்றுகளும் சூழ்ந்த பகுதியாகும். தொல்பழங்காலத்தில் இருந்து கைமாறி வந்த வழிபாடுகள், சடங்குமுறைகள் பழக்க வழக்கங்கள் கொங்கு நாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றன. 1. இங்கு சில ஆண் தெய்வ கோவில்களில் பெண்கள் சென்று வழிபட அனுமதிக்கப் படுவதில்லை. உதாரணமாக வெள்ளக் கோவிலில் உள்ள வீர குமாரசாமி கோயில், கொங்கல்லி மல்லிகா அர்சுணர் கோயில், கோபிவட்டம் புலவக்காட்டு பாளையம் சுப்ரமணியர் கோயில், வெள்ளிமலை ஆண்டவர் கோயில் முதலியவற்றை குறிப்பிட லாம். இம்மரபிற்கு அடிப்படையான காரணம், கால்நடை வளர்ப்புச் சமுதாயமாகும். கால்நடை வளர்ப்புச் சமுதாயத்தில் பெண்களின் பங்கைவிட ஆண்களின் பங்கே உயர்வானது. கொங்கு நாட்டு வேளாளர் குடும்பங்களில் பிறக்கும் ஊனமுள்ள குழந்தைகளை வளர்க்க 'முடவாண்டி' என்ற பிரிவினர் இருந் தனர்; இருக்கின்றனர். விஜயநகர காலம் வரை ஊனமுற்ற குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் அல்லது போட்டுவிடும் வழக்கம் இருந்தது. இது வேட்டுவ', கால்நடை வளர்ப்பு வாழ்வின் எச்சமாகும். (மாட்டுப்பொங்கல் அன்று மாடுகளை நான்கு வழிகள் சந்திக்கும் இடத்திற்கு ஓட்டிச்செல்வது கொங்குநாட்டின் சில பகுதிகளில் இன்றும் உள்ளது. இந்த வழக்கம் புதிய கற்காலம் தொட்டு வருவதாகும்.) வாதநோய் கண்ட சிலர் நடுகல்லையோ அல்லது குத்துக்கல்லையோ இரவு நேரத்தில் அம்மணமாக கட்டித் தழுவும் வழக்கம் இன்றும் உள்ளது. இந்த வழக்கம் கற்காலம் தொட்டு வருகின்றது. கொங்குநாட்டு வேளாளக் குடும்பங்களில் நடைபெறும் செவ்வாய்ப்பிள்ளை நோன்பு மழைச் சடங்கின் எச்சமாகும். கொங்கு நாட்டுப் புறத்தில் இன்றும் நடைபெறும் பெண்களின் நிர்வாண நடனம்

செவ்வாய்பிள்ளை நோன்பின் தொல்பழங்கால வடிவமாகும். இயற்கையமைப்புகளால் தமிழகத்தின் பிறபாகங்களுடன் தொடர்பு குறைந்திருந்தமையால் இத்தகைய தனிச்சடங்குகள், வழிபாடுகள் பழக்க வழக்கங்கள் தொன்றுதொட்டுத் தொடர்ந்து வந்தன. தமிழகத்தின் பிறபாகங்களில் பற்பல பழங்கால சடங்குகள், வழிபாடுகள் கால வெள்ளத்தில் மூழ்கிப் போயின. ஆனால் கொங்கு நாட்டில் மட்டும் நிலைமை வேறுவித மாகக் காணப்படுகின்றது.

இதுபோன்று தொல் பழங்கால வழிபாடுகளில் ஒன்றுன கன்னி வழிபாடும் கொங்கு நாட்டில் நடத்தப்படுகின்றது. இது பற்றி இனி விரிவாகக் காண்போம். பூப்பொங்கல் சடங்கில் கன்னிப் பெண்கள் பங்கேற்று செய்யும் சடங்குகள் பண்டைய கன்னி வழிபாட்டின் எச்சமாகக் கொள்ளலாம். கொங்குநாட்டில் பொங்கல் அன்று பூப்பொங்கலை சிறப்பாகச் செய்வார்கள். இதில் பெண்கள் மட்டுமே குறிப்பாக அதிகமான அளவில் கன்னிப் பெண்களே கலந்து கொள்வார்கள். மார்கழி மாதம் ஒவ்வொரு நாளும் வீட்டின் முன் காலையில் சாணியில் பிள்ளையார் போல் செய்து வைப்பர். மாலையில் அப்பிள்ளையாரைப் பத்திரமாக எடுத்து வைப்பர். இச்சடங்கின் போது பிள்ளையாரை நீரில் விடுவர். நீரில் விட்டு திரும்பும்போது கன்னிப்பெண்கள் பூ பரிப் பார்கள். அச்சமயம் அனைத்துப் பெண்களும் கீழ் கண்ட பாடலைப் பாடுவார்கள்.

1. ஓலையக்கா [ள்] கொண்டையிலே ஒரு சாடு தாழம்பூ.
2. தாழம்பூச் சிற்றாடை தலை நிறைய முக்காடு (ஓலை)
3. நாழி, நாழி நெல்குத்தி நடுகிணற்றிலே பொங்கல் வைத்து
4. நாட்டாரை கூட்டமிட்டு நடந்து போருள் (ஓலை) யக்காள்!

இப்பாடல் 49 வரிகள் கொண்ட நீண்டப் பாடலாகும். இச்சடங்கையும், பாடலையும் ஆய்வாளர்கள் ஆய்ந்தால் சரியான வரலாற்று உண்மை வெளிப்படும் என்பதில் சிறிதளவும் ஐய மில்லை.

பொள்ளாச்சி வட்டம் ஆனைமலைப் பகுதியில் ஒரு நம்பிக்கை நிலவி வந்தது. சரியாக விளையாத நிலத்தில் விளைச்சலை அதிகரிக்க ஒரு சடங்கை மேற்கொள்கின்றனர். கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்கள் மாதவிடாய் ஆன தினங்களில் அந்த குறிப்பிட்ட வயலைச் சுற்றி ஓடினால் விளைச்சல் அதிகரிக்கும் என்றும் நிலம்

செழிப்படையும் என்றும் நம்பினார்கள். இச்சடங்கு கன்னி வழிப் பாட்டின் மறுவடிவமாகும்.

தமிழகத்தில் சிலப்பதிகார காலத்திலேயே கன்னி வழிபாடு சிறப்புற்று விளங்கியது என்பதை வேட்டுவ வரியின் மூலம் உறுதி செய்யலாம். சிலப்பதிகாரத்தில் எயினர் குடியில் பிறந்த சிறு பெண் ஆடும் வேட்டுவவரியை, கன்னிவழிபாடு என்று தொல் பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கள் தம்முடைய **Tantric cult in Tamil Nadu** என்ற நூலில் கூறுவதை இங்கு நினைவு கூறுதல் பொருத்தமாகும். இதே கருத்தை R. N. நந்தியினுடைய **Religious institutions and cults in the Deccan** என்ற நூலிலும் உறுதிப்படுத்துகின்றார்.

கன்னி வழிப்பாட்டின் சிறப்பை கி. பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த "பைரவ பத்மாவதி கல்ப" என்ற நூலும், "மகா நிர்வாணம்" என்ற நூலும், கர்நாடக மாநிலம் கோலாரில் உள்ள பிடாரிக் கோயில் கல்வெட்டிலும் விரிவாக குறிப்பிடு கின்றது. மேற்கண்ட சான்றுகளைக் கொண்டு கன்னி வழிபாடு மத்திய காலத்தில் தென்னிந்தியாவில் குறிப்பாக தக்காணத்தில் சிறப்புற்று விளங்கியது என்பதை அறியலாம்.

கன்னி வழிபாட்டில் பங்கு பெறுவதற்கு ஏழு வயதுப் பெண்ணையே தேர்ந்தெடுப்பார்கள். மதுரை மாவட்டம் வத்தல குண்டு அருகில் உள்ள தேவதானப்பட்டி என்ற கிராமத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கன்னி வழிபாடு நடத்து கின்றனர். இச்சடங்கு நடைபெறும் கோயில் கொற்றவை கோயிலாகும். இங்கு ஒன்பது வயது பெண்ணையே தேர்ந்தெடுத்து விரதம் இருக்க வைத்து கன்னி வழிப்பாட்டை நடத்துகின்றனர். இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் சடங்கை நடத்துபவர் பிராமணர்கள் ஆவர். பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள், வழிபாடு பழங்குடி மக்களுடைய சடங்காகும் என்ற கொள்கையை நிறுவியுள்ளனர். இவ்வாறு வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதற்கு காரணம் இக்கன்னி வழிப்பாட்டைப்பற்றி வேதங் களிலோ, பிரமாணங்களிலோ குறிப்பிடாமையே ஒரு முக்கிய காரணமாகக் கொள்ளவேண்டும். இச்சடங்கு பிராமணர்களிடம் எங்ஙனம் செல்வாக்கு பெற்றது என்பதை ஆய்வாளர்கள் மேலும் ஆராயவேண்டும். மேலும் இதில் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் கோவிலின் கூரை ஓலையால் வேயப்படுகின்றது. இப்பழக்கம் பாலை நிலத்திலுள்ள கொற்றவை கோயிலில்

கூரையை நினைவு கூறத்தக்கது கோயிலில் கூரை வேயும்போது கண்ணை கட்டிக்கொண்டு வேயவேண்டும் என்பது ஒரு அய்தீகம் கொங்கு நாட்டில் கன்னி வழிபாட்டின் சிறப்பை நாட்டுப்புற கதைகளின் மூலமும் அறியலாம்.

கொங்கு நாட்டில் கன்னி வழிபாடு சிறப்புற்று விளங்கியது என்பதை பூப்பறித்தல் சடங்கின் மூலமும் மற்ற சடங்குகளின் வாயிலாகவும் அறிந்தோம். ஆனால் அச்சடங்கு எவ்விதம் நடைபெற்றது என்று கூறுவதற்கு போதிய சான்றுகள் நமக்கு கிடைக்கவில்லை. எனினும் அண்டை நாட்டிலும், மாவட்டத்திலும் கிடைக்கக்கூடிய சான்றுகளைக்கொண்டு கொங்கு நாட்டில் கன்னி வழிபாடு நடைப்பெற்ற முறையை ஓரளவு கூறமுடியும். கோலார் மாவட்டத்திலுள்ள பிடாரிகோயில் கல்வெட்டிலும் 'பைரவ பத்மாவதி' என்ற நூலிலும் விரிவாகக் காணலாம்— 'பைரவ பத்மாவதிகல்ப' என்றநூலில் இரண்டு 7வயது கன்னிகளை தேர்ந்தெடுத்து சடங்கிற்கு முன் இரவில் பால்மட்டுமே உணவாக கொடுத்து வைக்கோலினால் செய்த படுக்கையில் படுக்க வைப்பார்கள். சடங்கு நடக்கும் காலையில் அக்கன்னியை நீராட்டி வெள்ளை ஆடையை உடுத்தி குறிப்பிட்ட இடத்தில் உட்கார வைத்து—அதன்பின், மந்திரங்களை கூறி வழிபடுவார்கள். வழிபாட்டிற்கு வெள்ளை மலரையே பயன்படுத்துவார்கள். பிடாரி கோவில் கல்வெட்டின் மூலம் கன்னி வழிபாட்டை செவ்வாய் கிழமையிலேயே நடத்துவதை அறியலாம்.

கொங்கு நாட்டில் சப்த கன்னியர்களின் சிற்பம் கிடைக்கவில்லை. இவ்வாறு இருப்பதற்கு காரணம் இம்மக்கள் பழங்குடி அல்லது அரைப்பழங்குடி நிலையிலே இருக்கின்றனர். ஆதலால் அவர்கள் கரடு முரடாக (rude form) உருவங்களாக வெறும் 7 செங்கல்லையும் சாணியையும் வைத்து வணங்குகின்றனர்.

மேற்கண்ட சடங்குகளில் இருந்து சக்தியின் மனித வடிவம் கன்னிப்பெண், கன்னி ஒருத்தியிடம் படைக்கும் சக்தி பொதிந்து கிடக்கிறது என்ற நம்பிக்கையும், சிந்தையும் மனமும் செல்லா இடத்தில் உள்ள ஒன்றை கன்னி வழிபாட்டின் மூலம் தன் ஆளுகைக்குள் கொண்டு வரமுடியும் என்று தந்திரர்கள் கருதினார்கள்.

# சங்கு

R. வசந்தகல்யாணி எம். ஏ.,
கல்வெட்டாய்வாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை—28

சாங்கஸ்பைரம் என்பது இதன் அறிவியற் பெயர். இது நத்தையைப்போல் மொலஸ்கா என்னும் மெல்லுடலித் தொகுதியில் கால்ட்ர போடா எனும் வயிற்றுக்காலி வகுப்பைச் சேர்ந்தது. இந்த உயிர் திருகலான ஒட்டுக்குள் இருக்கும். இந்த ஓடே சாதாரணமாகச் சங்கு எனப்படும். சங்குகளில் ஆண், பெண் இனமுண்டு. கடலில் குளித்து எடுக்கக்கூடிய பெரிய படுகைப் பகுதிகளில் ஏறக்குறைய ஏழுஆள் ஆழம்வரையில் கிழக்குக் கரையில் திருநெல்வேலி, இராமநாதபுரம், தென்னாற்காடு, தஞ்சைமாவட்டங்களிலும் மேற்குக் கரையிலே திருவிதாங்கூர், கத்யவார் ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது.

**சங்கின் வகை :**

நந்து, சுத்தி, பணிலம், நாகு, வண்டு, கோடு, வளை, சுரிமுகம், கம்பு, வெள்ளை, இடம்புரி, வலம்புரி தரா, சங்கு எனப் பலவகை உண்டு.

**சங்கெடுத்தலும் கொற்கைச் சங்கும் :**

சங்கம் தொடங்கி இன்று வரை கொற்றையிலும் அதன் அருகிலுள்ள கடற்கரை ஓரங்களிலும் சங்கெடுக்கும் தொழில் மிகச் சிறப்பாக இருந்து வருகிறது. சங்கெடுக்கும் மக்களுக்கெனத் தனிச் சேரியே இருந்தது என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. "இலங்குவளை இருசேரி" அதாவது "விளங்குகின்ற பெரிய சங்கு குளிப்பார் இருப்பு" என்கிறது மதுரைக்காஞ்சி.

தற்போது இடிந்த கரை, உவரி, புன்னைக் காயல் என்னும் இடங்களிலும் சங்கு எடுக்கப் படுகிறது.

இன்று சுமார் 3000 பேர்வரை ஈடுபட்டுள்ள முக்கிய மான தொழிலாக உள்ளது. முத்துக்குளிப்பு நடைபெறா மாதங்களில் தற்போது 70 அடி ஆழம் சென்று சங்கெடுக்கும் தொழில் நடைபெறுகிறது. சங்கெடுக்கும் குளியர்களும் சங்கு படிந்து கிடக்கும் இடங்களை அவர்கட்குக் காட்டும் பரமந்தாடி களும் இவ்வேலைகளை அரசாங்கத்தின் மேற்பார்வையில் செய் கின்றனர். கீழக்கரை, பெரியபட்டினம், திருப்பாலங்குடி மண்டபம், வெடலைப்பகுதிகளில் மீனவர் பருவகாலத்தில் சங்கு எடுக்கின்றனர். இராமநாதபுரம் கடலோரப் பகுதிகளில் பல நூற்றாண்டுகளாகச் சேதுபதிகளின் தனி உரிமையாக இருந்து வந்துள்ளது. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முத்துக் குளிக்கும் உரிமை பிரிட்டிஷாருக்கு மாறியபோதும் சங்கெடுப்பது சேதுபதி களிடமே இருந்தது. ஜமீன் ஒழிப்புக்குப் பிறகே இவ்வுரிமை அரசினருக்குக் கிடைத்தது. பட்டி, இருபிறவி, இராமேஸ்வரம் எனும் மூவகைச் சங்குகள் இம்மாவட்டத்துக் கடற்கரைப் பகுதி களில் கிடைக்கின்றன. ஜனவரி முதல் மார்ச் வரை சங்கெடுக் கும் தொழில் நடைபெறுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்துக் கடலோரப் பகுதிகளில் கிடைக்கும் சங்குகளுக்கு வங்காளத்தில் நல்ல கிராக்கி உண்டு. பூகம்பம் ஏற்பட்டால் சங்கெடுத்து ஊதும் வழக்கம் வங்கப்பெண்களிடம் நிலவுகிறது.

சங்கு வேலை செய்வோர் :

சங்கினை அறுத்து வளை செய்தல் பற்றித் தமிழ் இலக்கியங் கள் குறிக்கின்றன. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திலும் சங் கறுப்போர் பற்றிய செய்தி வருகிறது. ''ஆகரத் தொழிலதிகாரி' சங்கு வைரம், மாணிக்கம், முத்து, பவழம், உப்பு எனும் இவை பற்றிய தொழில்களையும் (சங்கை அறுத்தலும், மெருகிடலும் வைரம் முதலியவற்றைத் தூய்மைசெய்தலும்) வாணிகத்தையும் (சங்கு முதலியவற்றை விற்றலும் வாங்குதலும்) செய்வித்தல் வேண்டும்'' என்று கூறுகிறது. சங்கினை அறுத்து வளை செய் தலைப் பற்றி,

''விலங்கரம் பொரூஉம் வெவ்வளை போழ்நர்'' (மணி. பக். 330)
''விலங்காம் பொறாத சங்கின் வெவ்வளை'' (சீவ : 2441)
''அரம்போழ் அவ்வளை பொலிந்த முன்கை'' (அகம் : 6)
''கோடுபோழ் கடைஞரும்'' (மது : 516)

என்ற பாடல்களின் வழியே சங்கு சிறிய அரத்தால் அறுக்கப் பட்டு வளையல்களாகச் செய்யப்பட்டன என்பதறிகிறோம்.

இந்தச் சங்கு அறுக்கும் வேலையைப் பார்ப்பனர் செய்துவந்தனர் என்பதையும் இலக்கிய வரிகளால் உணரலாம்.

"வேளாப்பார்ப்பான் வாளரந் துமித்த வளை" (அகம்-291)

**சங்க நிதி :**

மக்களோடு நெருங்கிய தொடர்புடைய சங்கினை ஒரு நிதியாகவே கூறிவந்தனர் தமிழர். "பெருநிதிக் கிழவன் குபேரன் இருநிதிக்கிழவன்" என்று உலகின் மாபெரும் செல்வத்திற்கு அதிபதியாகக் கூறப்படுகிறான். இருநிதி என்று சங்கநிதி, பத்மநிதியாகும்.

**சங்கின் பயன் :**

சங்கு மிகப் பன்நெடுங்காலமாகவே வளையல்கள் தோடுகள் செய்யவும், சுண்ணம் இடித்து வீடுகளுக்கும் மாளிகைகளுக்கும் சுண்ணம் பூசவும் உபயோகப்படுத்தப்பட்டது. வலம்புரிச் சங்கு உயர்ந்த பெருமை உடையது.

**அணிகலன்கள் :**

சங்கு வடிவாக ஒரு தலையணிகலன் இருந்தது. சங்கு என்பதற்கே வளை என்ற பெயரிருந்தது. அப்பெயரே கையிலணியும் ஒரணிகலனுக்கும் பெயராகிச் சங்க இலக்கியங்களில் சிறப்புறப் பேசப்பட்டது. (ஐங். நூறு: 191, 193, 194)

சங்கினைச் சுட்டுச் சுண்ணாம்பாக்கிப் பூசுவதற்குப் பயன்படுத்தினர். அந்தச் சுண்ணம் அங்காடிகளிலும் விற்கப்பட்டன என்பதை,

"நீடு கொடி இலையினர்
கோடு சுடு நூற்றினர்" (மது : 401)

என்ற வரிகளால் அறியலாம். இதற்கு ஒரு கல்வெட்டுச் சான்றும் நமக்குக் கிடைக்கிறது. கி.பி 13-ஆம் நூற்றாண்டில் முதற் குலோத்துங்கனின் காலத்துச் சேனைத் தலைவனாகிய நரலோக வீரன் திருச்சிற்றம்பலத்தைச் சங்குச் சுண்ணத்தால் புதுப்பித்த செய்தியை,

"என்றும் சிற்றம்பலத்து எங்கோமானந்தி
சங்கொடும் உலகேத்தச் சாந்தமைத்தான்"

என்று சிதம்பரம் கல்வெட்டுக் கூறுகிறது.

**அகழ்வாய்வில் சங்கு :**

கொற்கை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியில் ஏராளமான சங்கால் செய்யப்பட்ட அணிகள் கிடைத்துள்ளன. அதிலும் பாதி அறுத்த நிலையிலேயே காணப்படுகின்ற சங்குகளும் கிடைத்துள்ளன.

**வழிபாட்டில் சங்கு :**

தெய்வத் திருவுருவங்களுடனும் கோயில் வழிபாட்டுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது சங்கு. பரிபாடலில் திருமாலைக் குறிக்கும் போது,

"நீயே வளையொடு புரையும் வாலிபோற் கவ
னிளைய னென்போர்க் கிளையை யாதலும்.

என்றும்,

"இருவேறு மண்டிலத் தியக்கம் போல
நேமியும் வளையும் ஏற்றம் கையில்
கருவி மின்ன"

"சலம்புரி தண்டேந்தினவை
வலம்புரி வயநேமியவை"

என்றும் பரிபாடலில் திருமாலின் கையில் சங்கு இருப்பது குறிக்கப் படுகிறது. சமணத்திலும் பௌத்தத்திலும் கூடச் சங்கிற்கு வழிபாட்டில் சிறப்பிடம் தரப்படுகிறது.

கோயில் வழிபாட்டின்போது சங்கு ஊதப்பட்டது. இதற்காகச் சங்கு ஊதுவோர்க்கு நிலமும் அளிக்கப்பட்டது. காலையில் இறைவனுக்குப் பள்ளியெழுச்சி முதல் எல்லா நிகழ்ச்சிகளிலும் உபயோகிக்கப்பட்ட வாத்தியங்களுள் சங்கும் ஒன்றாம். மேல் சேவூர் (செஞ்சிவட்டம்) ரிஷப புரீஸ்வரர் கோயிலில் உள்ள முதல் இராஜராஜன் கல்வெட்டு,

1. ..."செய்யும்பணி தலைப்பறை ஒன்றும் திமிலை ஒன்றும் மத்தளம் ஒன்றும் கறடிகை.

2. ...றும் கைம்மணி ஒன்றும் சங்கு இரண்டும் ஆக ஆள் பன்னிரண்டு கொண்டு பள்ளி எழுச்சி.

3. ...உட்பட எப்பேர்ப்பட்டதுங் கொட்டக் கடவர்களாக கவும்... வழிபாட்டில் சங்கு ஊதப்பட்டதையும் அதற்கென அவர்களுக்கு நிலமளிக்கப் பட்டதையும் தஞ்சைப் பெருவுடையார் கோயிற் கல்வெட்டும் குறிக்கிறது.

திருச்சோற்றுத்துறையில் உள்ள சோழன் இராஜகேசரி வர்மன் கல்வெட்டில் திருச்சோற்றுத்துறை மகா தேவர்க்கு இரண்டுசங்குவழங்கியதைக் குறிக்கிறது. (S.I.I. vol V No:615)

"1. ஸ்வஸ்திஸ்ரீ கோராஜ கேசரி பன்மற்கு யாண்டு 19 ஆவது கிழார்க் கூற்றத்து தேவதானம் திருச்சோற்றுத் துறை மஹாதேவர்க்கு.

2. திருப்பலி உள்ளிட்ட பணி எப்பேர்ப்பட்டதும் செய்வதாகக் கிழார் கூற்றத்துத் தேவதான ஹவிர்ப்பலக் குடிப் பாம்ப.

3. லக்குடான் நக்கனாதித்தன் குடுத்த சங்குஇரண்டு இவை ஊதுவார்க்கு போகம்."

எனவரும் இக்கல்வெட்டு வாசகங்களால் திருச்சோற்றுத்துறை மகாதேவர்க்கு இரண்டு சங்குகள் அளிக்கப்பட்டு ஊதுவார்க்கு நிலமளித்த செய்தியும் உணரப்படுகிறது.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டொன்று கோயிலில் சங்காபிஷேகம் செய்யுமிடத்து அச்சங்கில் நீர் ஊற்றி அபிஷேகம் செய்வானுக்கு நிலமளித்த செய்தியைக் கூறுகிறது.

"கோப்பெருஞ் சிங்கதேவர்க்கு யாண்டு மூன்றாவது
......திருப்புலீஸ்வரமுடையார் திருநந்தவனத்து
உட்கிடையாய் அகப்பட பலவரவை நீற்றமுது
சங்கடுவானுக்கு அச்சேரி சாத்தங்குடியில் அடைப்பான்
குழி எண்பத்தேழே முக்காலே ஒருமா

வீரவநல்லூர்க் கல்வெட்டு திருநெல்வேலிப் பெருமாள் என்பவர் நித்ய பூசைக்கும் மற்ற சிறப்பு வழிபாட்டுக்கும் நிலமளித்த செய்தி கூறுகிறது. (குமரி கல்வெட்டு : 87 1969)

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் உள்ள விஜயநகரர் காலக் கல்வெட்டு வலங்கையர்க்குச் செய்த சிறப்புப் பற்றிக் கூறும்போது சங்கும் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது.

திருமலைக்கடம்பர் கோயிலில் (நார்த்தாமலை) இரண்டாம் இராஜேந்திரன் கல்வெட்டொன்று ""சங்கு பரமேஸ்வரி"" என்ற தெய்வத்தை எழுந்தருளுவித்ததைக் குறிக்கிறது.

இன்னும் சிறப்பாகக் குறிப்போமானால் சங்கில் எழுத்துக்கள் பொறித்துத் தங்கத்தினால் அழகுற வேலைப்பாடுகள் செய்யப்பட்டுக் கோயில் வழிபாட்டிற்குக் கொடுக்கப்பட்டது என்பதையும் கிடைக்கப் பெற்ற எழுத்துக்கள் பொறித்த சங்குகளால் அறிந்து கொள்ளலாம். சாலிஹுண்டத்தில் பிராமி எழுத்தில் உள்ள சாசனத்தோடு வெண்சங்கு ஒன்று கிடைத்துள்ளது.

திருவிடை வாசல் சங்கு

""சிங்...நனுமகன் கொடுத்த சங்கு பொன் கெட்டியது.""

ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் (கழிஞ்சூர்) சங்கு :

""ஸ்ரீ கெஞ்சூர் இறையநீசுரமுடையாற்கு நகருடையாந்
செய்கோவன் இட்ட சங்கு""

திருவதிகைவீரட்டானேஸ்வரர் கோயில் சங்கு :

""திருச்சிராப்பள்ளி உடையார்""

இவ்வாறு சங்கு பொன்னால் வேலைப்பாடுகள் செய்யப்பட்டு அளித்தவர் பெயரும் பொறிக்கப்பட்டு வழிபாடுகளுக்காக வழங்கப்பட்டது.

சமுதாயத்தில் சங்கு :

**சங்குத்தாலி வெள்ளாளர்** : சங்கினால் இயன்ற தாலியை மகளிர் பூணும் வழக்கமுடைய ஒரு வெள்ளாளச் சாதியார்.

**சங்குப்பறையர்** : மரணச் சடங்கில் சங்கு ஊதுபவரான ஒருசார் பறையர்.

சங்கில் சில மருந்துப் பொருட்கள் இருப்பதால் அது நோய் தீர்க்கும் வல்லமையுடையது என்று கருதிச் சிறு குழந்தைகளுக்குச் சங்கினால் பால்வார்க்கும் வழக்கம் இருந்து வருகிறது. இதை ஒரு தாலாட்டுப் பாடலும் கூறுகிறது.

தங்கத் தலைப்பாவும் சாலுவையும் மேல் போட்டு

*சங்கு கழுகி தளிகையிலே பாலாத்தி*
*சங்கு கொள்ளப் போன வுங்களம்மான் சந்திரரோ*
*சூரியரோ? (பாண்டி. தாலாட்டு: 17)*

அன்று முதல் இன்றுவரை மக்கள் வாழ்வோடு, கோயில் வழி பாட்டோடு மிகுந்த தொடர்பு கொண்ட சிறப்புப் பொருளாகச் சங்கு இருந்து வருகிறது. என்பதற்கு மேற்குறித்த குறிப்பு களே சான்று.

# சருகு அரிக்கும் சீந்திவலையர்

இரா. ப. கருணானந்தன் எம். ஏ.,
காப்பாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
இராமநாதபுரம்.

வேதாரண்யம் காட்டுக்குள் சீந்திவலையர் என்ற ஒருவகைப் பிரிவினர் இருக்கின்றனர். இவர்கள் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் கோடியக்காடு குழகர் கோயிலிலிருந்து புறப்பட்டு 1 பர்லாங் தொலைவில் ஒற்றையடிப்பாதையையே பின்பற்றி ஆகவேண்டும். நீண்ட மணல் பரப்பு— பனைமரங்கள் உயர்ந்து நிற்க நடுவே ஆழமாகக் கிடக்கும் குட்டைகள் — அங்கங்கு தென்படும் முள் மரங்கள் இத்தனையும் தாண்டிச் சென்றால் இயற்கையாக அமைந்த காட்டிற்குள் இவர்கள் இருப்பிடத்தைக் காணலாம். மாலை நேரமாக இருந்தால் ஒரு ஆளையும் உடன் வைத்துக் கொள்ளுதல் நன்று. ஏனென்றால் சமயத்தில் காட்டுப் பன்றிகள் நம் வழியை மறித்தாலும் மறிக்கக்கூடும்.

**பெயர்க் காரணம் :**

வலையன் என்றால் நெய்தல் நிலத்தவன் என்று பொருள் கூறுகிறது பிங்கல நிகண்டு. குடிமக்கள் பதினெண்மருள் மீன், பறவை முதலிய பிடித்து வாழும் சாதி வலையர் சாதி. சீந்தி வலையர் என்னும் இவர்களது அடிப்படைத் தொழில் சருகு அரித்தலும் மீன்பிடித்தலுமே ஆகும். காட்டில் இயற்கையாகக் கிடைக்கும் ஒரு வகைக் கொடி சீந்திக் கொடி. அக்கொடியை இந்த வலையர் சேகரித்து முருங்கைக் காய் போல வெட்டி வேக வைத்து உண்பதால் சீந்திவலையர் என்று பொது மக்களால் அழைக்கப் பெறுவாராயினர்.

**பூர்வீகம் :**

பெரியவர்களுக்கு, விஷேட காலங்களில் பல்லக்கு முதலியன தூக்குவதற்கு மேற்கே இடும்பாவனம், தொண்டியக் காட்டிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டனர் என்று சொல்லப் பெறுகிறது. அடிமைத் தொழில் செய்வதற்காக விலைக்கு வாங்கி வரப் பெற்றவர் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். ஏழு தலைமுறையாக இங்கு இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். வேதாரண்யம் கல்வெட்டுக்கள் இரண்டு, கோயிலுக்கு அடிமைகள் விற்கப்படுவதைக்கூறுகின்றன. கோயிலில் அடிமைகள் தேவையில்லை என்று ஆன பிற்காலத்தில் விவசாயம் முதலியன தெரியாததால் காட்டிற்குள் ஒரு வகைப் பிரிவினராய் ஒதுங்கியிருத்தல் வேண்டும். அவர்களே சீந்திக் கொடியைத் தின்று சீந்திவலையர் என்று ஆகியிருக்கலாம் என ஊகிக்கவும் இடமுள்ளது.

இடும்பாவனத்துள் இவர்கள் பரம்பரையினர் இருக்கின்றனர், அவர்கள் தங்களை அம்பலகாரர் என்றும் பிள்ளை என்றும் அழைத்துக் கொள்கின்றனர். சீந்திவலையரில் சிலர் தாமரைக் குட்டை, காரங்குட்டை தில்லை விளாகம் முதலிய ஊர்களுக்கு குடியேறி வசதியாக வாழ்ந்து வருகின்றனர்.

**செய்யும் தொழில் :**

சருகு அரித்தல் இவர்களுடைய முக்கியமான தொழில் என்று முன்னரே கூறப்பெற்றது. தேனெடுத்தல், குட்டைகளில் மீன்பிடித்தல் முதலியவற்றையும் செய்வர். காலை 5 மணி அளவில் கணவன் மனைவி சகிதமாகக் காட்டுக்குள் சருகு சேகரிக்க சிப்பம், கூடையோடு செல்வர். சேகரித்த சருகை காலை 9 மணிக்குப் பட்டறையில் கொண்டுவந்து சேர்ப்பர். 9 மணி முதல் மாலை 3 மணி வரை வீட்டிலேயே இருப்பர், மீண்டும் 3 மணிக்குப் புறப்பட்டு மாலை 6 மணியளவில் வீடு வந்து சேர்வார்கள். சருகுகளைக் காட்டில் சேகரிக்கும் பொழுதே உணவுக்குத் தேவையான பழம், கீரை, கொடி முதலியவற்றையும் சேர்த்துச் சேகரிப்பது வழக்கம்.

பாலாச் சருகு, முனாச் சருகு, பூவரசு, கொன்னை, காசாஞ் சருகு, நாகச் சருகு, சீந்திக் கொடி சருகு என்பன அவர்கள் சேகரித்து வரும் சருகு வகைகளில் சில. இத்தகைய சருகுகளை அரிக்கும்போது காட்டு அதிகாரிகளுக்குப் பயந்து சத்தமில்லாமல்

சருகு அரிக்க வேண்டியதாயுள்ளது என்கின்றனர், சருகு சேகரிக்கப் பயன்படும் வலையைச் சிக்கம் (சிப்பம்) என்கின்றனர். கூடைகளிலும் சிக்கங்களிலும் சருகு அரித்து தலையில் வைத்துக் கொண்டு காட்டுக்குள் நடந்து வரும் காட்சி, காட்டு மனிதர் வாழ்க்கையை நமக்கு நினைவூட்டும். புகையிலை விவசாயி களிடம் இவர்கள் சோற்றுக்காகக் கடன் வாங்கிக் கொள்வர். அக்கடனை அடைப்பதற்காக நாள்தோறும் சென்று சருகை அரித்து பட்டறையில் வந்து சருகை அளந்து கொள்வர். அச் சருகு, குழிக்குள் நிரப்பி மண்ணை மூடி உரமானதும் புகையிலை தோட்டத்தில் பரப்பப்பெறும். கணவன் மனைவியாகச் சேர்ந்து பகலெல்லாம் சருகு அரித்தாலும் அவர்கள் பெறக்கூடிய கூலி ரூபா 1-50 மட்டுமே. மழைக்காலம் வந்து விட்டால் அதுவும் இல்லை.

மழைநீர் தேங்கிக் கிடக்கும் குட்டைகளில் மீன்பிடித்தலும் இவர்களுடைய குலத்தொழில் ஆகும். குண்டு குழியில் கோமணத் தோடு கிட்டிபோட்டு சகதிக்குள் உட்கார்ந்து கொள்வர். கழுத்தின் பின்புறம் பரிக்கூடை (பனை ஓலையில் செய்தது) யைக் கட்டிக்கொள்வர். இரண்டு கைகளையும் நீருக்குள் ஒன்று சேர்த்து மீன்களைத் தடவிப் பிடித்துப் பரிக்கூடையில் போட்டுக்கொள்வர். மடவா, கெளுத்தி, ராட்டு, கீச்சான், சூடை, நண்டு, சிலேப்பி (கருப்பாக இருக்கும்—மற்றவர்கள் சாப்பிடாதது) முதலியன இவர்கள் பிடிப்பனவற்றுள் சில. கடலுக்குள் சென்று மீன் பிடிக்க இவர்களுக்குத் தெரியாது. காட்டில் கிடக்கும் பழங்கள், பழுபா கற்காய், காட்டுச்சுள்ளி, எரு முதலியவற்றை விற்றும் இவர்கள் ஜீவனம் செய்கின்றனர்.

**உணவும் பழக்கம் :**

விவசாயம் செய்யவோ, அல்லது மண் வெட்டி பிடித்து கடுமையாக உழைக்கவோ இவர்கள் பரம்பரையினர் இவர்களை பழக்கவில்லை. காட்டில் கிடைப்பனவற்றைச் சேகரித்தே வாழ்ந்து பழகி விட்டனர். இந்த வரும்படியைக் கொண்டு மூன்று வேளையும் அரிசிச் சோறாக்கி வயிறு புடைக்க உண்பதற்கு முடி யாது. எனவே அவர்களுடைய பசி என்னும் பிணியை தணித்துக் கொள்ளவும் காட்டின் உதவியை நாடுகின்றனர்.

மின்னிக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, கோவை, சீந்திக்கொடி, நந்நாரி வேர், பாச்சித்திக்கீரை, முசுட்டைக்கீரை, கோவைக்கீரை

மின்னக்கீரை, காறங்கீரை, குண்டுமணிக்கொட்டை, துரடிப் பழம், (துவர்ப்புச் சுவையுடையது) வர்ப்பிலாப்பழம், கிளாப் பழம் என்ற இயற்கை தருசெல்வங்கள் அவர்கள் பசிக்குத் தற்கா லிகப் பாலம் இடுகின்றன. இவைகளால் ஆண்டு முழுமையும் கைகொடுத்துவிட முடியுமா?

கோலிவரன்கொட்டை, பூனைக்காய்ச்சிக்கொட்டை என்பன கொடியிலிருந்து கிடைக்கக்கூடியன. வண்டலுக்குச் செல்லும் ஆணும் பெண்ணும் இக்கொட்டைகளை நிறைய சேகரித்துக் கொண்டு வருவார்கள். இவை விஷம் மிகுதியாக உடையன. இவற்றைப் பச்சையாகவோ பக்குவம் செய்யாமலோ சாப்பிட் டால் பித்தம் தலைக்கேற வாயில் நுரை தள்ள சாவைத் தழுவ வேண்டி வந்தாலும் வருமாம். இத்தகைய கொட்டைகளை வைத்து உரலில் இட்டு இடிப்பர். இடித்த மாவில் நீர் ஊற்ற மஞ்சள் கலந்த நிறத்தில் நுரை வரும். இந்த நுரையே விஷத் தன்மை வாய்ந்தது. இதனை இறுத்துவிட வேண்டும். இவ்வாறு 2 தடவை நீர் ஊற்றி இறுத்து வெறும் மாவை மட்டும் வைத்துக் கொள்வர். இக்கொட்டை மாவை உப்பு, சர்க்கரை, புட்டு முதலியவற்றோடு சேர்த்துச் சாப்பிடுவதும் வழக்கம். பஞ்ச காலத்தில் மற்றவர்களும் சீந்தி வலையரிடம் இந்த மாவை வாங்கி உண்டு வருகின்றனர் என்று சொல்லப்பெறுகிறது.

சீந்திக்கொடியைச் சீந்தி வலையர் எப்படிச் சாப்பிடு கின்றனர்? காட்டுக்குள் இருக்கும் சீந்திக்கொடியை முதலில் அறுத்துக்கொண்டு வருவர். அதனை முருங்கைக் காய்போல குட்டையாக நறுக்கி நீரோடு உலையில்வைத்து வேக விடுவர். நன்றாக வெந்து மேல்தோல் கழிந்தவுடன் கிழங்கைப் போல அக்கொடியைத் தின்று சக்கையைத் துப்பி விடுவது வழக்கம். இந்த சீந்திக் கொடியை ஒரு காலத்தில் தாம் வாழும் குடிசைக்கு உள்ளேயே துப்பிக் கொண்டிருந்தனராம்.

**சில சடங்குகள் :**

குழந்தை பிறந்தால் மற்ற இனத்தாரைப்போலவே தனியே வைத்திருந்து 16ஆம் நாள் புண்யாதானம் செய்து தீட்டுக்கழித்து வீட்டிற்குள் சேர்த்துக் கொள்கின்றனர். பெண்ணுக்குப் பருவம் வந்தாலும் இப்படியே செய்கின்றனர். வீட்டின் ஒரு பகுதியில் தனியாக இருக்கும் பருவப் பெண்ணுக்கு வேப்பிலைக் காப்பைக் கையில் சுற்றி உளுந்து மாவும் எண்ணெயும் கொடுப்பர். மோட் டம்மை கும்பிடுதல் என்ற ஒரு பழக்கமும் உள்ளது. சூரியனையே

மோட்டம்மை என்பர். தாய் மாமன் பேறு காலச் சமயத்தில் மிளகாய்ப்பூ போட்டு விடும் வழக்கம் இவர்களிடத்தே உள்ளது.

திருமண நிச்சயதார்த்தத்தில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணின் தாய்மாமனுக்கும், மாப்பிள்ளையின் தாய்மாமனுக்கும் வெற்றிலை பாக்கு சந்தனத்தோடு ரூபா ஒன்று கொடுப்பது வழக்கம். திருமணத்திற்கு ஐயரிடம் நல்ல நாள் பார்த்து—2 கவளி (2000) வெற்றிலை சந்தனம் வாங்கி காளியம்மன் (அவர்களுடைய கோயில்) கோயிலில் பெரியவர்கள் எடுத்துக்கொடுக்க தாரை தப்பட்டை ஏதுவும் இல்லாமல் தாலியைக் கட்டிக் கொள்வது வழக்கம். திருமணமாகி ஒரு வாரம் கழித்து மணமகன் வீட்டார் அழைப்பளந்த பின்னரே முதல் இரவு ஆகும். அதுவரை மணமக்கள் இருவரும் மாப்பிள்ளை வீட்டிலே இருந்தாலும் பேசவோ தொடர்பு வைத்துக்கொள்ளவோ கூடாது. தாலி கட்டாமல் சேர்த்து விட்டுவிடுதலும் உண்டு. மணமகள் பிடிக்காமல் விலகிக் கொள்வதானல் ரூபா 25 கொடுக்க விலக்கி விட்டுவிடுவார்கள்.

பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் இவர்களிடம் நிறைய உள்ளது. பெரும்பாலும் மீன்வடிவையே குத்திக்கொள்கின்றனர். ஆண்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் பச்சை குத்திக் கொள்ளவேண்டும். பெண்கள் அலங்காரக் கொண்டை போட்டுக்கொள்வதை ஆடவர் சமுதாயம் விரும்புவதில்லை. எனவே பெண்கள் முடியை அள்ளிச் சொருகிக்கொள்கின்றனர். அப்படியே அலங்காரம் செய்து கொண்டால் யாரையோ கணக்கு வைத்துக் கொண்டாள் என்று அர்த்தமாம்.

பெரமன் (பிரம்மா) வீரய்யன், காத்தான், பொதியன் சித்தாயி, அஞ்சம்மாள், குப்பம்மாள், குஞ்சப்பன், நாவாத்தாள் கோடியம்மாள் என்பன அவர்கள் வைத்துக்கொள்ளும் பெயர்களுள் சில. பிணத்தைச் சுடுவதற்கு ஏற்ற வசதிகள் அவர்களிடத்தில் இல்லை. எனவே புதைத்து விடுகின்றனர்.

**சோபனம் கொட்டுதல் :**

புஷ்பவதி ஆன பெண்ணுக்குத் தலைக்கு நீர் ஊற்றி வீட்டிற்குள்ளே தனி இடத்தில் வைப்பர். ஒவ்வொரு இரவும் 16 நாள் வரை பெண்கள் வட்டமாகக் கூடிச் சோபனம் கொட்டுவர். இந்தச் சமயத்தில் பூப்பு எய்திய பெண்கள் வெளியில் வந்தால் கருக்கருவாள் கொண்டு வரவேண்டும் என்கின்றனர்.

**மழைக் காலத்தில்...**

பனை ஓலை வேய்ந்த சிறிய வாயிலை உடையதே இவர்களுடைய குடிசையாகும். அரசாங்கம் இவர்களுக்கு 10 சென்ட் நிலம் கொடுத்து குடியிருக்க ஓட்டு வீடும் கட்டிக் கொடுத்தது. ஆனால் மழைகாலத்தில் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிந்துவிட, இப்போது தங்களுடைய பழைய குடிசைக்கே வந்துள்ளனர். கார்த்திகை, மார்கழி போன்ற மழைக்காலத்தில் இந்தக் குடிசைகளுக்கு முன்னால் ½ அடி உயரத்திற்கே சேறாகவே இருக்குமாம். அத்தகைய காலத்தில் கொன்னைத்தழை, கட்டுமான்தழை, காசாதழை முதலியவற்றை ஈரமண் மீது பரப்பித்தான் குடிசையில் படுத்துக்கொள்கின்றனர். மழைக்காலத்தில் மட்டுமாவது தங்குவதற்கு ஏற்ற ஒரு பெரிய காரைவீடு இருந்தால் தேவலை என்பது அவர்களுடைய உள்ளத்துடிப்பு.

**வழிபடும் தெய்வங்கள் :**

இவர்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே கோயில் உள்ளது. காளியம்மன் கோயில் ஒன்று மட்டுமே இவர்களுக்குச் சொந்தமானது. அக்கோயிலில் 2 பாலமரங்களும் 7 வீர மரங்களும் என 9 மரங்கள் உள்ளன.

1. தூண்டிக்காரன், 2. சோலி, 3. முனியன், 4. முன்னடியகன், 5. கள்வடையான் 6. கன்னிமா பொங்கல் 7. கொம்புக்காரன் 8. முனி, 9. வீரன் என்ற சிறு தெய்வங்களும் காளியம்மன் கோயிலில் குடியிருக்கின்றன. காளியம்மன் முன்னடியான் என்ற இருவருக்கு மட்டுமே சுதைச் சிற்பங்கள் உள்ளன. மற்ற தெய்வங்களை நினைவூட்ட மேற்காட்டிய மரங்கள் மட்டுமே இருக்கின்றன.

வலக்கையில் வெட்டருவாள், இடக்கையில் தண்டு, தலையில் முண்டாசு முருக்கிவிட்ட மீசை, கைக்கடகம், காதில் கடுக்கன் என்ற தோரணையில் காளிக்கு நேர் எதிராக முன்னடியான் நின்றுள்ளார். பெரிய வைசூரி ஒன்று காண அம்மையின் அருளால் அந்நோய் நீங்கியது. அன்றிலிருந்து காளியம்மனுக்குக் கோவில் அமைத்து வழிபட ஆரம்பித்தனர். மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமை அம்மனுக்கும் வெள்ளிக்கிழமை மற்ற சாமிகளுக்கும் பட்டினி கிடந்தாவது தேங்காய் உடைத்து விடுவர். அம்மனுக்கு ஆடிமாதத்தில் ஒருநாள் கெடா வெட்டு நடத்துவர் 3 மரக்கால் அரிசிப்பொங்கல் படைப்பதும் உண்டு. சருகு

அரிக்கும்போது பாம்பு தீண்டாமல் இருக்கவும், நோய் நொடி வராது இருக்கவுமே இவர்கள் இத் தெய்வத்தை வழிபடுகின்றனர்.

**சில மருந்துகள் :**

சீந்தி வலையர் நோய்களைத் தீர்த்துக் கொள்ள மருத்துவரை நாடிச் செல்வதில்லை. கூடுமானவரை அவர்களாகவே காட்டு மூலிகைகளைக் கொண்டு நோயை குணப்படுத்திக் கொள்கின்றனர். கத்தி வெட்டுக்கு நொச்சி இலையும் சுண்ணாம்பையும் இணைத்துக் கட்டிக் கொள்கின்றனர். காலில் ஏற்படும் கோடைக்கு (பித்த வெடிப்பு) புளிய மரத்து இலையையும் உப்பையும் அவித்து மிதிக்கின்றனர்.

இவர்கள் பேசுகின்ற மொழி தமிழே என்றாலும் கொங்கு நாட்டவரைப்போல இழுத்து இழுத்துப் பேசுவது கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது.

பிறவி ஏழைகளான இவர்களுக்கு சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள், காந்தி நினைவு நிதி மூலம் ஆடை துணி மணிகளை வழங்கினார். அரசும் மண்வெட்டி, வலை, கோடரி, கடப்பாரை, பாத்திரங்கள் முதலியன கொடுத்து உதவியது. ஆனால் இத்தனையையும் புயலென்னும் வாரி 1962-ஆம் ஆண்டு வாரிக் கொண்டு போய்விட்டது. உடுத்திக்கொள்ள துணி கூட இல்லாமல் குடிசைக்குள் உட்கார்ந்து அழுகுரல் எழுப்பும் சீந்தி வலையர் வாழ்வு வளம் பெறுமா?

# மங்கையர் வணங்கும் மயில் பண்டிகை

கலைவாணன் எம். ஏ.,
காப்பாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
ஆற்காடு.

இன்றைய நாகரிகத்தின் தாக்குதலினால் நம்முடைய பண்டையப் பண்பாடுகளும் சிறப்புகளும் அதிகமாக அழிந்து விடாமல், இன்றைய தினம் தமிழகத்தில் எஞ்சி உள்ள பகுதி களில் தருமபுரி மாவட்டம் ஒன்றாகும். அம்மாவட்ட மகளிர் களால் கொண்டாடப்பட்டு சிறுகச் சிறுகச் செல்வாக்கிழந்துவரும் ஓர் அறிய பண்டிகையாகும்.

இப்பண்டிகை, உழவர் திருநாளை உவகையுடன் தைமாதம் கொண்டாடி முடித்து உடன் நடக்கும் ஓர் பண்டிகை ஆகும். தை மாதம் ஆறாம் தேதி இரவே இப்பண்டிகை ஆரம்பித்துவிடும். அன்று இரவே பெண்கள் அனைவரும் விரதம் இருக்கத் தொடங் கிடுவர். தை ஏழாம் தேதி காலை மகளிர் தங்கள் வீடுகளைச் சுத்தப்படுத்தி குளித்து முடித்து மயில் பண்டிகையினை துவக்கி விடுவர். இத்துவக்கத்தில் ஊரில் உள்ள அனைத்துப் பெண்களும் ஓர் இடத்தில் கூடி மயிலை வணங்கத் துவங்குவர். அவர்கள் எப்படி எப்படி விரதம் மேற்கொள்ளவேண்டும் என்பதை ஓர் அழகான பாடலாகப் பாடி வணங்குவர். அந்நாட்டுப்புறப் பாடல் வருமாறு;

''மொச்சு மொச்சு என மோர் குடிக்கக் கூடாது.
பச்சுப் பச்சு என பைத்தங்காய் தின்னக் கூடாது.
ஆலை ஏறி கரும்பு தின்னக் கூடாது.
செக்கு ஏறி புண்ணாக்கு தின்னக் கூடாது.
பாக்கு நசுக்கக் கூடாது.
பல்லாங்குழி ஆடக்கூடாது
சுக்கு நசுக்கக் கூடாது

சோம பானம் கூட்டக்கூடாது
கீழ்தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
மேல் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
அன்று கட்டி அன்று அவிழ்த்து
ஆயிரம் நோன்புக்கும் தலையான நோன்பு
கும்பிடுங்கோ தோழிகளே; கும்பிடுங்கோ.''

இப்படி அவர்களுக்கு கடுமையான விரதங்கள் விதிக்கப்படுகிறது. பின் ஒவ்வோர் வீட்டிலும் மணக்கும் சமையல் துவங்கும். ஒவ்வொரு வீட்டிலும் இருபத்தோரு வகையான காய்கள் சமையல் செய்யப்படும். அன்று ஒரு நாள் மட்டும் பெண்கள் யார் தோட்டத்தில் காய்கள் இருந்தாலும் யாரையும் கேட்காமல் பறித்துக் கொள்ளலாம் என்பது இன்றளவும் வழக்கில் உள்ள ஓர் நிகழ்ச்சி ஆகும்.

சமையல் வேலை முடிந்த உடன் அனைத்துப் பெண்களும் ஓர் இடத்தில் கூடி ஓர் வெள்ளைச் சுவற்றில் மயில்களை வண்ணத்தில் வரைவர். சில ஊர்களில் வரைந்து வைக்கப் பட்டுள்ள வண்ணத் திரைச் சீலைகளைத் தொங்கவிடவும் செய்கின்றனர். இந்நிகழ்ச்சி முடிந்த உடன் கட்டு உடைப்பு அல்லது பண்டிகையின் இறுதி நிகழ்ச்சிகள் துவங்கும். ஒவ்வொரு வீட்டிலும் சமைக்கப்பட்ட விதவிதமான காய்கறிகளுடன் சித்திரம் எழுதப்பட்ட இடத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் எனத் தனியோரப் படையல்கள் போடப்படும். படையல் போடுதல் முடிந்த உடன் கட்டு உடைப்புப் பாடல் பாடப்படும். அப் பாடல்கள் வருமாறு:

''ஆளோடு மயில் எழுதி
அம்மானை தான் எழுதி
தேரோடு மயில் எழுதிப்
பெரும் பானைத்தான் எழுதி
மொச்சி, மொச்சி என மோர் குடிக்கலாம்.
பச்சி, பச்சி என பைத்தங்காய்த் தின்னலாம்.
ஆலை ஏறி கரும்புத் தின்னலாம்.
செக்கு ஏறி புண்ணாக்குத் தின்னலாம்
பாக்கு நசுக்கலாம்,
பல்லாங்குழி ஆடலாம்
சுக்கு நசுக்கலாம்
சோமபானம் கூட்டலாம்

கீழ்த் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
மேல் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
ஆயிரம் நோன்பிலும் தலையான நோன்பு
கும்பிடுங்கோ தோழிகளே கும்பிடுங்கள்.''

என பாடிப் பாடி கட்டு உடைக்கப்படும். அதன்பின் ஒவ்வொரு வீட்டின் படையலில் இருந்தும் சிறிது சோறு எடுத்து ஒரு படையல் உருண்டை ஆக்கி மயிலுக்கு படையல் ஒரு வீட்டின் கூரையில் வைக்கப்படுகிறது. இப்படையலை உண்பதற்காக மயில் ஏழு நாட்கள் உண்ணா நோன்பு இருக்குமாம். மயிலுக்குப் படையல் வைத்த பின் மகளிர் ஏழைகளுக்கு அன்னமிட்டபின் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் உண்டு மகிழ்வர். இப் பண்டிகையை முழுக்க முழுக்கப் பெண்களே செய்வர்.

ஒரு பெண் கட்டுப் போடப்படும் இடைக்காலத்தில் ஏதாவது மேற்சொன்ன பொருளில் ஒன்றைச் சாப்பிட்டாலும் மயில் பண்டிகையில் கலந்து கொள்வதில் இருந்து நீக்கப்படுவாள். ஒரு பெண்ணோ அல்லது அவள் குடும்பத்தைச் சேர்ந்த யாரோ மயிலுக்குத் துன்பம் விளைவித்ததாகவோ அல்லது மயில் மாமிசம் உண்டதாகவோ தெரிய வந்தால் அவரும் அக்குடும்பமும் அக்குடும்பத்தின் வழிவருபவர்களும் மயில் பண்டிகையில் இருந்து விலக்கப்படுவார்கள்.

ஒரு வேளை மயில் பண்டிகை செய்யாத குடும்பத்தில் இருந்து மயில் பண்டிகை செய்யும் குடும்பத்தில் ஒரு பெண் மனைவியாக வருவாளானால் அவள் நாக்கிலும் கைகளிலும் கற்பூர தீபம் ஏற்றப்பட்டு அவளைப் புனிதப்படுத்தி மயில் பண்டிகையில் சேர்த்துக்கொள்வர். அதேபோல் மயில்பண்டிகை செய்யும் ஓர் குடும்பத்தில் பிறந்த பெண் மயில் பண்டிகை இல்லாத குடும்பத்தில் மணமுடிக்கப்படுவாளானால் அவள் மயில் பண்டிகைச் செய்யும் தகுதியையே இழந்து விடுவாள். இவ்வாறு மயில் பண்டிகையைச் செய்வதற்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்துப் பெண்டிர் இன்றும் கொல்லாமை, நோன்பு முதலியவற்றை எவ்வாறு கடுமையாகக் கடைபிடித்து வருகின்றனர் என்பதற்கு இது ஓர் சான்றாகும், அதே நேரத்தில் சிறுகச் சிறுக இப்பண்டிகை முக்கியத்துவத்தை நாளுக்கு நாள் இழந்து வருகின்றது என்பதும் வருந்தத் தக்க ஒன்றாகும்.

# மன்னன் இறந்தால்......

அ. இராசேந்திரன், எம். ஏ., (தமிழ்); எம். ஏ., (வரலாறு);
கல்வெட்டாய்வாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை—28.

*மன்னர்கள் இறந்தால் எவ்வாறு அடக்கம் செய்தார்கள்; இறுதிச் சடங்கு எப்படி நடந்தது என்பதைப்பற்றி ஆய்கிறது இக்கட்டுரை.*

**நோயில் இறந்தால் :**

மன்னர்கள் போரில் புண்பட்டு இறப்பதையே பெரும் பேறாகக் கருதினர். போரில் இறக்காது வீரக்கழலினையுடைய அரசர்கள் நோயின் பக்கத்தான் இறந்தால் வாளாற் படாத குற்றம் அவர்களிடம் இருந்து நீங்கவேண்டி அறத்தை விரும்பிய கோட்பாட்டையுடைய நான்கு வேதத்தையுடைய பிராமணர் பசிய தருப்பைப்புல்லைப் பரப்பி அதன் மீதுபிணத்தைக் கிடத்தி வாளால் வெட்டிப் புதைத்தனர். (புறம்:93)

இன்று இந்த வழக்கத்திற்குப் பதிலாகப் பிணத்தை வைக்கோலில் கிடத்தி, கைகால்களை ஒடித்துப் புதைக்கிறார்கள். இந்தப் பணியைத் தற்போது வெட்டியானே செய்கிறான்.

**பாடை :**

பாடையைக் கால்கழி கட்டில் என அக்காலத்தில் வழங்கி வந்தனர். (புறம் :286) இறந்தவர்களை இப்பாடையில் கிடத்தி மிக வெண்மையான ஆடையைக்கொண்டு போர்த்தி விடுவார்கள் என்பதை ஔவையார் (புறம்:286) குறிக்கிறார். இதை **தூவெள்ளறுவை** போர்த்தல் எனப் புறம்-291-ஆம் பாடல் சுட்டும்.

**பறைகொட்டுதல் :**

சாவில் பண்டு தொட்டுப் பறைகொட்டும் மரபு இருந்ததென் பதைச் சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. பெருந் தொகை—710-ஆம் பாடல் இதை 'பூசன் மயக்கம்' என்று குறிக்கிறது. "இரவலர் வம்மினென விசைத்த துடி" எனத் தகடூர் யாத்திரை பாடல் சுட்டுகிறது.

**சாப்பண் பாடுதல் :**

சிறுவர்களும், துடியர்களும் பிணத்தைச் சுற்றி வந்து பறை கொட்டுவார்கள். அப்போது சாப்பண்ணைப் பாடினர் என்பதை (புறம்:291) சுட்டும். கனல் முழங்கி விளரிப்பண் கண்ணினார் பாணர் எனப் புறப்பொருள் வெண்பாமாலை மேற்கோள் பாடல் சுட்டுவதால் இக்காலத்து விளரிப்பண்ணில் பாட்டிசைத்தனர் எனத் தெரிகிறது.

**அழகு பார்த்தனர் :**

இறந்த மன்னனின் பிணத்திற்குப் பொன்னும் மணியும் அணிவித்து இறுதியாக அழகு பார்த்திருக்கிறார்கள்' மணிமருள் மாலையையும் ஒற்றைவட மாலையையும் ஒரு அரசனுக்கு சூட்டியதாகப் புறம் 291-ஆம் பாடல் காட்டுகிறது.

**மார்பில் அறைந்துகொள்ளுதல் :**

இக்காலத்து யாரேனும் ஒருவர் இறந்தால் பெண்கள் மார்பில் அறைந்து கொண்டு ஒப்பாரி வைப்பதைக் காண்கிறோம்.

அரசன் இறந்தஞான்று மகளிர் மாரடித்துக்கொண்டனர் என்பதை புறம்—237-ஆம் பாடல் சுட்டும். கைகளில் அணிந்திருந்த வளையல்கள் உடைந்து வாழைப் பூ போல் சிதறி விழும்படியாக மார்பில் அறைந்து கொண்டனர்.

அரசனின் பிணத்தைக் குளிப்பாட்டிப் பாடையில் (வெள்ளில்) வைத்துப் பின் சுடுகாட்டிற்கோ அல்லது இடுகாட்டிற்கோ எடுத்துச் சென்றனர். (புறம்:380)

**அடக்கம் செய்தல் :**

பண்டுதொட்டு அரசனுடைய பிணத்தைச் சுடுதலும், தாழியில் கவிப்பதும், கழுகுகளுக்கு உணவாகப் பிணத்தை ஆல

நீழலில் போட்டு வருவதும் மரபாக இருந்து வந்துள்ளது. (புறம்:278, 238, 256)

**பெருங்காடு :**

சுடுகாடும், இடுகாடும் பெரும்பாலும் ஊரின் ஒதுக்குப் புறத்திலேயே அமைந்திருந்தன. இக்காட்டை பெருங்காடு (புறம்: 383) தனித்தலை பெருங்காடு (தனி இடத்தை உடைய புறக்காடு (புறம்: 250) என இலக்கியங்கள் சுட்டுகின்றன.

பிணத்தை இட்டுப் புதைக்கப்பட்ட தாழியினது குவிந்த புறத்தே கழுகுடன், பொதுவல், அண்டங்காக்கை, கோட்டான் முதலியன தாம் விரும்பியபடி சுற்றித் திரியும் என்பதைப் புறப் பாடல்கள் காட்டுகின்றன.

**கைப்பலி :**

அரசனின் பிணத்தைச் சுடக் குறவனே விறகை வெட்டி வருகிறான், (புறம்:231) சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப் பட்ட பிணத்தைத் தர்ப்பைப் புல்லில் கிடத்திக் கள்ளையும் பருக்கை உணவையும் புலையன் படைக்கிறான். (புறம்:360) இதை வெள்ளினிறுத்த பின்றைக் கள்ளொடு புல்லகத்திட்ட சில்லவிழ் வல்சி புலையன் ஏவ" என்னும் அடிகளால் உணரலாம். இதையே "உப்பிலிப் புழுக்கல் காட்டுப் புலைமகனு குப்ப வேகக் கைப்பலியுண்டு" என்று சீவக சிந்தாமணியடிகளும் (2994) தெளிவுபடுத்துகின்றன.

**பிண்டச் சோறு :**

இறந்துபட்ட அரசன் சொர்க்கம் புகுதல் வேண்டி அன்புக் குரிய மனைவி வீட்டை மெழுகிப் பிண்டச் சோற்றைப் படைக் கிறாள். (புறம்:234) பொதுவாகச் சங்க காலத்தில் இறந்துபட்ட ஆண்மகனின் உயிர் சுவர்க்கம் புகுதல் வேண்டித் தம் மக்களே பிண்டச் சோற்றை வழங்கினர். (புறம்:9) இவை தாம் இலக்கியம்வழி அறியப்படும் நீத்தார் சடங்குகள்.

**மேனாட்டார்க் குறிப்பு :**

அராபியரான "அல் இத்ரீஸ்' என்பவர் இந்து மன்னர்கள் இறந்தால் எப்படி அடக்கம் செய்கிறார்கள் என்பதைப் படம்

பிடித்துக்காட்டுகிறார். இவர் கி.பி. 1100-இல் பிறந்தவர். அல் புருனிக்குப் பிறகு (கி. பி. 1048) தென்னிந்தியாவைப் பற்றித் தெளிவான குறிப்புக்களை வழங்கிய பெருமான். இவர் சிசிலிய மன்னன் ரோஜர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உலக வரலாற்றை எழுதியவர். இவர் உலகப் புவியியல் வரலாற்றை 70 பாகங்களாக எழுதினார். உலகநாடுகள் அனைத்தையும் 20 ஆண்டுகளுக்கு மேல் நேரில் சென்று ஒரு புதினத்தைப் போல் எழுதி வைத்துள்ளார். இந்நூல் அரபி மொழியில், "கிதாப் நஸ்ஸகத்துல் முஸ்தாக் பி. இக்த தாகில் அபாக்" என்ற பெயரில் வெளிவந்திருக்கிறது.

இவன் தென்னிந்தியாவைப் பற்றிக் குறிப்பிடும் செய்திகள் கி.பி. 900—1150-க்கும் இடைப்பட்ட காலத்தில் கண்ட, கேட்ட நிகழ்ச்சிகள் என்பதை வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

அவர் கூறும் செய்தியைக் கீழே தரலாம் : "................ இந்தியாவில் இந்து அரசர்கள் இறந்தால் புதைப்பதில்லை சுட்டு விடுகிறார்கள். ஒரு ஆள் படுக்கும் அளவு 2 சாண் உயரத்தில் ஒரு வண்டியை செய்கிறார்கள். இவ்வண்டியை பூக்களால் அலங்காரம் செய்கிறார்கள். இறந்த மன்னனை குளிப்பாட்டி, உடைகள் ஆபரணங்கள் அணிவித்து இவ்வண்டியில் கிடத்து கிறார்கள். சில அடிமைகள் இவ்வண்டியை முக்கிய வீதிகளின் வழியாக இழுத்துச் செல்கிறார்கள். தலைப்பாகம் தவிர ஏனைய பாகங்கள் எல்லாம் வெள்ளைத் துணியால் மூடி இருப்பார்கள். அரசனின் நீண்ட தலைமுடி தரையைக் கூட்டி கொண்டே வரும். இந்த இறுதி யாத்திரையை மக்கள் சாலையின் இருமருங்கும் நின்று மரியாதை செலுத்திச் செல்கிறார்கள். இவ்வாறு செல்லும் ஊர்வலத்திற்கு முன்னால் ஒருவன் ஏதோ புரியாத மொழியில் சில வாக்குகளைச் சொல்லிக் கொண்டே செல் கிறார்கள். "அது இதுதான்: மக்களே! இதோ உங்கள் மன்னன் வருகிறான், இங்கே அரசனின் பெயர், தந்தையின் பெயர் நாடு இங்கே புகழ்ந்து உரைக்கப்படுகிறது. வெகு நாட்கள் செல்வச் செழிப்புடன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். இவனுடைய ஆட்சிக்குக் கீழ்பட்டு பல அரசர்கள் தலைவணங்கினர். இன்று அந்த அரசன் நம்முடன் இல்லை. அரசன் ஈட்டிய செல்வங்கள் எல்லாம் இன்று அவனை விட்டுப் பிரிந்துவிட்டது. அவனிடம் அரசும் இல்லை; ஆட்சியும் இல்லை. இவன் ஈட்டிய செல்வங் களும், அரசும் தன்னோடு கொண்டு செல்வதில்லை. இனி இவர் எவர்மீதும் அதிகாரம் செலுத்தமாட்டார். எல்லாம் அஸ்தமித்து

விட்டது. இனி இவரது நற்புகழ் மட்டுமே உலகில் நிலைத்து நிற்கும். பிறந்தபோது என்ன கொண்டு வந்தாரோ அதை மட்டுமே தன்னுடன் கொண்டு செல்கிறார். அரசனுக்கு மட்டும் இந்த விதி என்று நினைக்காதீர்கள். மக்களே! இது உங்களுக்கும் பொருந்தும். இதை அறிந்து நடந்து கொள்ளுங்கள்' என்று கூறிச் செல்கிறான். ஊர்வலம் பிணத்தை சுடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இடத்தை அடைந்தவுடன் உடலைச் சிதையில் வைத்துக் கொளுத்தி விடுகிறார்கள். அரசன் இறந்தால் அதற்காக எவரும் வருந்துவதில்லை. இறந்தவர் மீண்டும் வருவதில்லை என்பதை இங்கே நன்றாக அறிந்து வைத்துள்ளனர்..." இவ்வாறு அல் இத்ரீஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஆக இங்கே மறைந்துபட்ட ஒரு பண்டை மரபு இங்கே சுட்டப்படுகிறது.

**பாண் பாட்டு :**

சங்க இலக்கிய புறப்பாடல்களில் பண்பாட்டு என்ற ஒரு துறை வருகிறது. இஃது போரில் இறந்தவர்களுக்கு சாப்பண்ணை பாடிப் பாணர்கள் தங்கள் கடனைக் கழித்தலாகிய பொருளில் வருகிறது. சாப்பண்ணைப் பாடும் பாணர்கள், விளரிப் பண்ணில் பாடினர்.

பாணர் தம் பாடல்கள், மன்னனின், நிலையாமையைப் பேசுகின்றன. அடைநெடுங் கல்வியாரின் புறப்பாடல், ஒரு பாணன் மற்றொரு பாணனுக்கு கூறுவது போல் அமைந்துள்ளது. பாண! நம் மன்னன் இறந்து பட்டான் நாம் மன்னனைப் பாடி நம் கடனை கழித்து வருவோம்! வா!' என்று கூறுகிறான்.

புறம் 311-ஆம் பாடலில் ஔவையார், "மன்னன் நமக்கு ஊன் கொடுத்தான், உடை கொடுத்தான், இவனைப் போல் உலகில் வேறு அரசன் உண்டா?" என்று வருந்திக் கூறுகிறார் :

"பலர் குறை செய்த மலர்தாரண்ணல்
ஒருவரும் இல்லை மாதோ செருவத்துச்
சிறப்புடைச் செங்கண் புகைய வோர்
தோல் கொண்டு மறைக்கும் சால்புடையோனே!"

புறம் 286-ஆம் பாடலில் 'ஐயோ! மன்னன் உடலில் தூவெள்ளறுவைப் போர்ப்பித்திலதே!" என வருந்தி பாடப்

பட்டிருக்கிறது. மேலும் சில கையறுநிலைப் பாடல்கள் அரசனின் இறந்துபாட்டை உரைத்து தளர்தல் போல் அமைகின்றன.

ஆக இப்புறப்பாடல்கள் பாணர்களால் சவஊர்வலத்தில் பாடப்படும் பாடல்களாக இருக்கலாம் என்பதை அல்இத்ரிசின் அறியலாம்.

தற்காலத்தும் தமிழகம் முழுதும் பிணஊர்வலத்தில் புலையர்கள் துடிகொட்டிக் கொண்டு பாட்டுப் பாடிச் செல்வதைக் காணலாம்.

இதுவரை கூறப்பட்ட செய்திகள் :

1. சங்ககாலத்தில், மன்னன் இறந்தால் எவ்வாறு சடங்குகள் மேற்கொள்ளப் பட்டது என்பதைப் படம் பிடித்துக் காட்டப்பட்டது.

2. அல்இத்ரீஸ் என்ற அராபிய யாத்திரிகரின் குறிப்பில் இருந்து மன்னனின் சவ ஊர்வலம் பற்றிய நிகழ்ச்சி காட்டப் பட்டது.

3. மேற்படி யாத்திரிகரின் குறிப்பால், மன்னரின் சவ ஊர்வலத்தில் பாடப்பட்டு வந்த நிலையாமைப் பாடல்கள், 'பாண் பாட்டு' என தனித்துறையாக உருப்பெற்றது.

# சுவாமிதேவர்

சி. வசந்தி எம். ஏ.,
தொல்பொருள் அலுவலர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை—28.

தமிழகத்தில் சோழர்களின் ஆட்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெரியோர்கள் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டனர். அத்தகையவர்களில் ஒருவரான சுவாமிதேவர் என்ற பெரியார் சோழவேந்தன் மூன்றாம் குலோத்துங்கனின் அவையில் ஓர் சிற்றரசன் போல் திகழ்ந்தார்.

செங்கை மாவட்டம், ஆர்ப்பாக்கம்[1] கல்வெட்டில் இவர் தட்சிணத்தைச் சேர்ந்த கௌட தேசத்திலிருந்து (இன்றைய ஒரிஸா பகுதி) தமிழகத்திற்கு வந்தவர் எனக் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவரது மற்ற பெயர்களாக உமாபதி தேவர் என்ற ஞானசிவ தேவர்[2] எனக் கூறப்பட்டுள்ளது. செங்கை மாவட்டம் இராமகிரி என்ற ஊரில் உள்ள[3] கல்வெட்டு, திருக்காளத்தி என்ற யாதவ அரசனால் (சோழர்களின் சிற்றரசன்) சுவாமிதேவருக்குத் தம் பெயராலேயே சதுர்வேதி மங்கலம் ஒன்றை அளித்த செய்திகூறப்பட்டுள்ளது.[4]

சிதம்பரத்தில்[5] உள்ள கல்வெட்டில் சுவாமிதேவர், சரஸ்வதி பண்டாரம் (நூல் நிலையம்) ஒன்றை நிறுவி ஓலைச்சுவடிகளை ஒழுங்குப்படுத்திப் பிரதியெடுப்பதற்கான வழிமுறைகளை வகுத்துத் தமிழிலும், வடமொழியிலும் எழுதப்பட்ட நூல்களை சரிபார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அந்நூல்களுள் ஒன்றாகச் சித்தாந்த ரத்னாகரம் என்ற சமஸ்கிருத நூலின் பெயரும் கூறப்பட்டுள்ளது. இந்நூலை எழுதியவர் உடையார் சுவாமிதேவர் ஸ்ரீகண்ட சிவனின் மகனார் ஈசுவரசிவன்

எனக் கூறப்பட்டுள்ளது. ஆர்ப்பாக்கம் சுவாமிதேவர் மேற்கூறிய சுவாமிதேவர் ஸ்ரீகண்ட சிவனின் வழிவந்த சீடராக இருக்கலாம்

மூன்றாம் குலோத்துங்கனின் அவையிலிருந்த சுவாமிதேவர் பற்றிய செய்தி, இரண்டாம் இராஜேந்திரன் காலம் முதலே அறியப்படுகிறது. செங்கை மாவட்டத்தில் உள்ள ஆர்ப்பாக்கம் என்ற கிராமம் ஏகபோக இறையிலியாக நம் சுவாமி தேவருக்கு அளிக்கப்பட்ட செய்தியும், அவர் அதனைப் பெற்ற காரணமும் அக்கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது. அக்கல்வெட்டில், சோழ நாட்டில் ஈழப்படையினால் நேரவிருந்த ஆபத்தைத் தம் தவ வலிமையாலும், கடவுள் நம்பிக்கையாலும் தடுத்து நிறுத்தியதால், இவருக்குச் சோழ அரசின் மற்றொரு சிற்றரசன் எதிரிலி சோழ சம்புவராயனால் அக்கிராமம் தானமாக அளிக்கப் பட்டது. அன்று முதல் அவர் அரசனால் பெரிதும் போற்றப் பட்டசெய்தியினைப் பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவர் தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டத்திலுள்ள அச்சுதமங் கலத்தில் உள்ள சோமநாதர் கோயிலை எடுப்பித்து, அதற்குப் பல நிவந்தங்கள் அளித்துள்ளார்.[7] அத்துடன் நில்லாமல், தம் அரசனையும் பல நிவந்தங்களை அளிக்கும்படி செய்துள்ளார். இதே கோயில் திருமடைவிளாகத்திற்கு[8]த் தேவையான தானங்களையும் செய்துள்ளார். இக்கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டில் இவரது மக்கள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.[9] இதைக் கொண்டு பார்க்கும் பொழுது இம்மத குருக்கள் இல் வாழ்க்கை நடத்திய செய்தியும் அறியப்படுகிறது.

சுவாமிதேவர், குலோத்துங்க சோழன் நியமித்த கோயில் குருக்களை நீக்கிவிட்டு, வழிவழியாக வந்த கோயில் குருக்களை நியமித்த செய்தியினைத் திருக்கடையூர்[10] கல்வெட்டு கூறுகின் றது. இதனை நோக்கும் பொழுது, அந்நாளில் அரசனின் ஆணையையே நீக்கி, நீதியை நிலைநாட்டிய பெருந்தகையாய் இருந்ததையும் அரசர் அவரிடம் கொண்டிருந்த நன்மதிப்பையும் நாம் அறிகிறோம்.

சுவாமிதேவர், சோழர்களுக்கு மட்டுமில்லாமல், பாண்டிய அரசனுக்கும் குருவாய்த் திகழ்ந்தார். இவர் திருப்புகலூரில்[10] பாண்டிய அரசன் வீரபாண்டியன் பெயரால் (மூன்றாம் குலோத் துங்கனின் சமகாலத்தவன்) "வீரபாண்டியன் சந்தி" என்றநிவந் தத்தை ஏற்படுத்தினார். அத்துடன் நில்லாமல், தம் குருவினை

ஆதரித்த விக்கிரமசோழன்[11] பெயராலும் விக்கிரமசோழ நல்லூர் என்ற அக்கன்பள்ளிப்படை கிராமத்தை சிதம்பரம் கோயிலுக்கு நிவந்தமாக அளித்துள்ளார். இதனால், சோழ அரசர்கள் மட்டுமின்றிப் பாண்டிய மன்னர்களும் சிறப்பு செய்யுமாறு தன் செயலாலும் அறிவாலும் உயர்ந்த பெரியார், கி. பி 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமிதேவர்-என்ற செய்தி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனின் அது மிகையன்று.

அடிக்குறிப்புக்கள் :

1. S. I. I. Vol VI No, 456.
2. செங்கை மாவட்டம் திருப்பாச்சூர் ஊரில் இருந்த ஒருவர் வாரணாசியில் இருக்கும் கொல்லமடத்தைச் சேர்ந்த ஞான சிவ இராவலரின் சீடராகக் கூறப்பட்டுள்ளார் (Colas, P.484 By Nilakanta Sastri)
3. ARE. No. 636/1904.
4. இராமகிரி கல்வெட்டொன்று சுவாமிதேவர் லக்ஷதியாயீ முதலியாரின் (Lakshadyayi Mudaliar) சமய கூட்டத்தைச் சார்ந்தவர் எனக் கூறப்படுவது சிறப்புடையது.
5. ARE. 301 of 1907
6. நன்னிலம் கல்வெட்டுக்கள்—தொகுதி II எண். 274—1978
7. A.R.E. 395/1907,
8. A.R.E. 403/1907
9. Colas, p-222, By Nilakanta Sastri
10. நன்னிலம் கல்வெட்டுக்கள்—தொகுதி II எண். 368/1978.
11. Topographical List of inscriptions Vol I, No. 133

# பல்லவ ஈசுவரவர்மன்

டாக்டர் இரா. நாகசாமி, எம். ஏ., பிஎச். டி.,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை—28

சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தன் தனது கண் வீச்சினாலே நரசிம்ம போத்தராஜனுடைய புகழையும் மகேந்திர னின் பிரதாபத்தையும் ஈசுவரபோத்தராஜனின் வீரத்தையும் வீழ்த்தியதாகத் தனது காத்வால் செப்பேட்டில் கூறிக்கொள் கிறான். இவன் கூறும் நரசிம்மன், மகேந்திரன், ஈசுவரன் ஆகிய மூவரும் பல்லவ அரசர்கள். இங்கு நரசிம்மன் என்பவன் முதலாம் நரசிம்மனாகிய வாதாபிகொண்ட மாமல்லன் ஆவான். மகேந்திரன் என்பவன் அவனது மகனான இரண்டாம் மகேந்திரன். மகேந்திரனுக்குப் பிறகு அதன் மகன் முதல்பரமேசு வரன் பட்டம் எய்தினான் எனப் பல்லவர் செப்பேடுகள் கூறு கின்றன. ஆதலால் சாளுக்கிய விக்கிரமாதித்தன் கூறும் மூன்றாம் பல்லவ அரசனான ஈசுவரவர்மன் என்பவன் பரமேசுவரவர்மனே என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர். அண்மையில் தர்மபுரி, செங்கம் பகுதிகளில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை பல நடுகற்களைக் கண்டுபிடித்துள்ளது. அவற்றின் உதவி கொண்டு பார்க்கும்போது பல்லவன் ஈசுவரவர்மனும் பரமேசுவர வர்மனும் ஒருவரல்லர். வெவ்வேறானவர் எனத் தெரிகிறது. ஈசுவரவர்மன் என்று தனியாக ஒரு பல்லவ அரசன் இருந்திருக் கிறான் என்று காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், கூக்கடபட்டி கிராமத்தில் இரண்டு நடுகற்கள் கிடைத்துள்ளன. இரண்டும் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இரண்டும் விசைய ஈசுவரவர்மன் காலத்தவை. முத்து வேடியப்பன் என்ற பெயரில் வணங்கப்படுகின்றன. முதற் கல்வெட்டில் குதிரைமீதமர்ந்த

வீரன் ஒருவன் இடக்கரத்தில் கேடயமும் வலக்கரத்தில் நெடு வேலும் தாங்கி உள்ளது காணப்படுகிறது,

"கோவிசை ஈசுவரவர்மருக்கு இரண்டாவது கந்தவாண்ணதி அரசர் மேற்கங்கப்படை ஒடெறிந்த ஞான்றவர் சேவகன் நாவிண்ண தீரனார் மகன் சாத்தன் பட்டான்.[1]

இரண்டாவது நடுகல்லும் அதே இடத்தில் உள்ளது. அதே ஈசுவரவர்மனின் இரண்டாவது ஆட்சியாண்டைச் சார்ந்தது ஆகும். கல்வெட்டு பின்வருமாறு உள்ளது.

"ஈச்சுவரவருமற்கு இரண்டாவது கந்தவாண்ணதி அரைசர் மேற்கங்கப்படை ஒடு கலாத்த ஞான்று அவர் சேவகன்பராம தாயர் மகன் கண்ணமாறி பட்டான் கல்"[2].

கல்வெட்டுக்கள் "கோவிசைய ஈசுவரவர்மன்" என்று தொடங்குவதிலிருந்து இம்மன்னன் பல்லவன் என்பதில் ஐயமில்லை. அம்மன்னன் இப்பகுதியின் அரசனாக ஆண்டுள் ளான். அவனது பெயர் 'ஈசுவரவர்மன்' என்பதும் தெளிவு.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் கந்தவாணதியரையர் என்னும் குறுநிலத்தலைவன் இப்பகுதியில் பல கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறுகிறான். ஆதலால் அவனையும் ஈசுவரவர்மனையும் அவர்கள் காலத்தையும் கணிக்க இயலும்.

மேலைகங்க அரசன் சிவமாறன் என்பவனுடைய 47-ம் ஆண்டில் கந்தவாணதி அரசன், அன்று புறமலை நாடு என்று கூறப்பட்ட இன்றைய அரூர்பகுதியின் சிற்றரசனாகத் திகழ்ந்திருக் கிறான். காலம் கி. பி. 726.

"ஸ்ரீ சிவமாரபருமர்க்கு ஆண்டு நாற்பத்தேழாவது கந்த வாண அதிஅரைசர் புறமலை நாடாள அவர் மகனார்தெளிய நி ஆர் சேவகர் வாணிகச்சடையனார் வெட்டக்கியார் கூடல் வந்துவிட அவர் மேல் ஆனையாடி பட்டார்." என்று உள்ளது.

இச்சிவமாறன் என்பவன் கி. பி. 679-ல் அரியணை ஏறிய வனும் நவகாமன் என்று பட்டம் பெற்றவனும் ஆன மேலைக்கங்க அரசனாவான். (ஹல்லகரே செப்பேடு). அவன் கீழ் சிற்றரசனாகத் திகழ்ந்த 'கந்த வாணதியரசன்' பல்லவ ஈசுவர வர்மன் கீழும் முதலில் சிற்றரசனாகத் திகழ்ந்திருக் கிறான்,

சாளுக்கிய விக்கிரமாதித்ய அரசன் நரசிம்மன், மகேந்திரன் ஈசுவரன் ஆகிய மூன்று அரசர்களையும் வென்று கி.பி. 674-ல் கும்பகோணத்துக்கு அருகில் காவிரி ஆற்றங்கரையில், உரகபுரத்தில் படைவீடு இறங்கி இருந்தான் எனச் செப்பேடுகள் கூறுகின்றன. ஆதலின் ஈசுவரவர்மன் என்ற பெயர் கொண்ட ஒருவன் கி.பி. 670ம் ஆண்டை ஒட்டி இருந்திருக்கிறான் என்று தெரிகிறது.

இதை ஒட்டி செங்கம் பகுதியில் கிடைத்துள்ள மூன்று நடுகற்களும் புதிய ஒளியைக் கொடுக்கின்றன. ஒன்று மகேந்திரன் காலத்தது. இரண்டாவது ஈசுவரவர்மன் காலத்தது. மூன்றாவது பரமேச்சுவர வர்மன் காலத்தது. முதலிரண்டும் ஒரே இடத்தில் உள்ளன. பரமேசுரன் காலத்தது, பக்கத்து ஊரில் உள்ளது. அருகருகில் உள்ள இரண்டு நடுகற்களில் ஒன்றில் ஈசுவரவர்மன் என்ற பெயரும் மற்றதில் பரமேசுரன் என்ற பெயரும் காணப்படுவதால், ஈசுவரன் வேறு, பரமேசுவரன் வேறு என்பதில் ஐயமிருக்க முடியாது.

ஈசுவரவர்மன் காலத்திய நடுகல், அவனது 8-ம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. பெரும் போத்தரைசர் என்ற ஒருவரைக் குறிக்கிறது. செங்கம் வட்டம் பெரியகோளப்பாடி என்ற இடத்தில் உள்ளது. இதே இடத்தில்தான் மகேந்திரனுடைய 11-வது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட நடுகல்லும் உள்ளது. இக்கல்லும், அதே போரைக் குறிப்பதோடு அதே பெரும் போத்தரைசர் என்பவரையும் குறிக்கிறது.

* கல்வெட்டு

> கோவிசைய மகேந்திரபருமற்கு யாண்டு பதினொன்றா
> வது கீழ்வேணாட்டுத் துடரி மேல் விலக்குமிறையார்
> வந்த ஞான்று பெரும்போத்தரையர் மருமக்கள்
> அம்கோட்டையார் சேவகன் சாக்கை பறையனார்
> இளமகன் ஏறன் எறிந்து பட்டான்.

என்றுள்ளது.

இந்நடுகல்லில் குறிக்கப்பட்டுள்ள மகேந்திரன், மாமல்லனான முதலாம் நரசிம்மனின் மகன், இரண்டாம் மகேந்திரன் ஆவான். அவன் 11 ஆண்டுகள் ஆண்டிருக்கிறான் என இக்கல்வெட்டால் தெரிகிறது. இரண்டு நடுகற்களும் ஒரே போரைக் குறிப்பதால் இரண்டாம் மகேந்திரவர்மனின் 11-வது ஆண்டும் ஈசுவரவர்மனின் 8-வது ஆண்டும் ஒன்றே என்பதும் பெறப்படுகிறது. இரண்டாம் மகேந்திரன் அரியணை ஏறிய மூன்று ஆண்டுகளுக்குப்

பிறகு ஈசுவரவர்மன் பல்லவ சாம்ராஜ்யத்தின் மேலைப்பகுதியை ஆள முடிசூடினான் என்றும் இதனால் பெறப்படுகிறது.

பேராசிரியர் T. V. மகாலிங்கம் அவர்கள், தமது 'பண்டைய தென்னிந்திய வரலாற்றில் காஞ்சி' என்னும் நூலில் இரண்டாம் மகேந்திரன் ஒரே ஆண்டு ஆட்சி புரிந்தான் என்று கூறியுள்ளார். கல்வெட்டறிஞர் தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் இரண்டாம் மகேந்திரன் சுமார் 10 ஆண்டுகளாவது ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்று தமது பல்லவர் செப்பேடுகள் என்னும் நூலில் ஊகித்திருக்கிறார். இந்நடுகற்களில் இருந்து இரண்டாம் மகேந்திரன், பதினொரு ஆண்டுகளுக்கும்மேல் ஆட்சி புரிந்திருக்கிறான் என்றும், ஈசுவரவர்மன் அவனுடன் எட்டு ஆண்டுகள் உடன் ஆட்சிபுரிந்து இருக்கிறான் என்றும் அறிய இயல்கிறது.

சாளுக்கிய அரசன் விக்கிரமாதித்யன் கி.பி. 670-671-ல் காஞ்சிபுரம் வரை வெற்றி கண்டு, அந்நகரின் அருகில் படைவீடு தங்கியிருந்தான். (T.V.M. ப 8) கி.பி. 674ல் நரசிம்மன், மகேந்திரன், ஈசுவரவர்மன் ஆகியோரை வென்று உரகபுரத்தில் தங்கியதாக அவனது காத்வால் செப்பேடு கூறுகிறது. ஆதலின் கி.பி 670 வரையில் நரசிம்மன் ஆண்டிருக்கக் கூடும். விக்கிரமாதித்தியனின் வெற்றி தற்காலிகமான வெற்றியே. பல்லவ நாட்டை அவன் நாட்டுடன் இணைத்துக் கொள்ள வில்லை. ஆயினும் கி.பி. 674-ல் அவன் வென்றது இரண்டாம் மகேந்திரனையும் ஈசுவரவர்மனையும் ஆகும். மகேந்திரன் தனது தந்தையான வாதாபிகொண்ட மாமல்லனுடன் இணைந்து சில ஆண்டுகள் ஆண்டிருக்கிறான். ஆதலின் கி.பி. 665-லிருந்து 676 வரை இரண்டாம் மகேந்திரனது ஆட்சி நிலவியது எனக் கொள்ளலாம். ஈசுவரவர்மனுக்கும் இரண்டாம் மகேந்திர வர்மனுக்கும் என்ன தொடர்பு என்பது தெளிவாகத் தெரிய வில்லை. ஈசுவரவர்மன் மகேந்திரவர்மனுடைய தம்பியாக, மாமல்லனுடைய இரண்டாவது மகனாக இருக்கக் கூடும். மகேந்திரன் பட்டத்துக்கு வந்து மூன்று ஆண்டுகளில் இவனும் அரசனாகப் பதவிபெற்று இணைந்து எட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்து மகேந்திரனுடனாகவோ அல்லது அவன் இறந்த சில மாதங்களுக்குள்ளாகவோ இறந்திருக்கக் கூடும். ஆதலின் இரண்டாம் மகேந்திரனுக்கு பிறகு அவன் மகன் முதல் பரமேசுவரன் பட்டம் எய்தியுள்ளான். இது கி.பி. 675-ல் நடைபெற்றிருக்க வேண்டும்.

மேற்கூறியவற்றால் பல்லவர் வழியில் ஈசுவரவர்மன் என்று ஒரு மன்னன் இரண்டாம் மகேந்திரனுடன் உடன் ஆட்சி புரிந்திருக்கிறான் என்றும், அவனும் முதல் பரமேசுவரவர்மனும் ஒருவரல்லர், வெவ்வேறானவர் என்பதும் தெளிவாகிறது. மேலும் பின்னர் வந்த சோழர்களைப் போல் பல்லவர்களும், இணைந்து ஆட்சி புரிந்து இருக்கிறார்கள் என்று தெளிவாகிறது.

அடிக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | தருமபுரி கல்வெட்டுக்கள் | 1974/67 |
| 2. | ,, | 1974/68 |
| 3, | செங்கம் நடுகற்கள் | 1971/96. |

# A Revolt by Nattars

## And the Decision of Sabhas, Mahasabhas and Perilamai Nattars

*Natana. Kasinathan, M.A., Deputy Director,*
*State Department of Archaeology,*
*Madras.*

It is known from epigraphs that there were atleast seven Perilamai Nadus in Tamilnadu. Majority of them were located in Tanjore District and a few were situated near Chidambaram, in South Arcot District. It is interesting to note that they had always been near a Taniyur. For instance three perilamai Nadus seem to have been located in the west,[1] east[2] and north[3] of Perumbarrappuliyur. i. e Chidambaram, a Taniyur. Kulottunga Chola Perilamai Nadu appears to have existed near Tiru naraiyur, a suburb of Viranarayana chaturvedimangalam, a Taniyur. These perilamai Nadus seem to have come into existence at least from the time of Rajendra I, since some names of Perilamai Nadus are the epithets of Rajendra I.

Perilamai Nadu seems to be a bigger division consisting of several Nadus, which was an agricultural region and also a territorial assembly. Nadu as an assembly was represented by Nattar. Perilamai Nadu as big assembly was also represented by selective nattars being one or two from each Nadu. Perilamai Nattar, Citrameliperiya nattar and Perukkalar[4] are seemingly identical. Therefore they all were Vellalars. It is proved undoubtedly that the Perilamai Nattars were Vellalars with the help of two inscriptions. Both of these inscriptions belong to Tirukkadavur in Thanjavur District dated in 1177 A.D. "One of these mentions a memorandum submitted to the king by two

hundred and forty four Vellalars. The other refers to an agreement given by the mahasabha of Tirukkadavur to two hundred and forty Perilamaiyar. Since both the records are dated in the same reign and since the transactions of both seem to be related toeach other, it can be asserte with good authority that the Perilamaiyar were the same as Vellalars''[5] Another epigraph from Mannargudi also clarifies that the Nattars were none other than the Vellalars.[6]

Three inscriptions from Mannargudi in Tanjore District, engraved two at Kailasanathar temple[7] and one at Rajagopala temple[8] speak of the resolutions passed in the joint session of Sabhas, Mahasabhas and Perilamai Nadus, held at the temple of Kailasamudaiyar alias Rajadhirajisvara mudaiyar of Rajadhirajac caturvedimangalam, Thaniyur of Suttamalli Valanadu. This great assembly had happened to meet when the nattars of Rajarajac caturvedimangalam had revolted against the oppression of revenue collectors. They lodged a complaint stating that they were unable to do cultivation (வெள்ளாழ்மை) since they were unduly harassed to remit taxes in cash as well as in kind, and they could not stay in the village. On hearing their grievances the members of the Sabha, the Mahasabha and the Perilamai Nadu assembled in the temple of Kailasamudaiyar alias Rajadhirajisvaramudaiyar and enacted a number of resolutions codifying how the taxes were to be levied from Vellalars. There are certain acts which mainly prohibited atrocious measures such as imprisoning the Vellalars, and keeping them *in house arrest for not paying the taxes* (kadamai) by the revenue officials.

Some resolutions dealt with the minimisation of revenue burdens. The vellalars had also been exempted from doing Kudumbu (ward work) and the menial services (குடிகீழ் அனுசரித்தல்) to Brahmanas in Pidakais.

Lastly, a whip of warning had also been issued to the Brahmins, Vellalars and the accountant. In one inscriptiont this warning is somewhat polite and decent. In another epigraph it is described in harsh words.

The intention of the warning seems to be that the welfare measures introduced for the sake of the nattars (vellalars) should not be spilled out by the secret contact of some people of the same community with the Mudalis who adopted oppressive methods to collect the revenue from them.

## FOOT NOTES

1) A. R. E. No. 543 of 1921
2) S. I. I. Vol. XII, No. 175
3) S. I. I. Vol. VIII, No. 48
4) Dr. R. Nagaswamy, A Judgement of the chola period, Studies in Ancient Tamil Law and Society, P.75.
5) Y. Subbarayalu, Political Geography of the Chola country. page 46 (1973)
6) S. I. I. Vol.:VI, No. 58.
7) S. I. I. Vol VI, No, 48, 59.
8) Ibid No 58.

# The Conservation of Wall Paintings at Madurai Sri Meenakshi Sundaresvarar Temple

**J. Lakshmanan M.Sc., Chemist,**
State Dept of Archaeology, Madras.

Introduction:

Tamilnadu temples are famous for their wealth of paintings. Mostly paintings dated to Nayak period are noticed in the temples. In Sri Meenakshi Sundereswarar temple, Madurai opposite to Mukkuruni Vinayagar shrine, three panels of paintings of Nayak period are noticed.

First panel depicts the marriage scene of Siva Parvati. It is being witnessed by many persons on either side. At the bottom, right hand corner some royal personages are portrayed. They may be the benefactors of the paintings. These paintings look like the paintings of the famous wedding Scene at Unjal Mandapam of Mangammal period. In the other panel both Siva and Parvati are sitting and are being worshipped by the royal personages and others. Stylistically the paintings may be dated to post Mangammal i.e. Vijaya Ranga Chokkanatha Period.

This work was pursued in 1981 during the fifth World Tamil Conference.

Materials and Structure:

The primary support of the paintings is a nearly purelime (Calcium Carbonate) that contains a considerable amount of sand as a beoarse aggregative. This plaster support is attached to the brick wall. Over the rough plaster support, a thick coat ng of lime wash is given: upon this smooth, dried white wash paintings were executed. The distinct layer of lime wash present below the pigments, reveal the tempora technique

The pigments are mainly earth colours, red, lime black, yellow ochre and malachite (green). The medium of

pigment is found to be a vegetable gl ue based on the paper Chrometographic analysis. The over paint medium appears to be casein, since it gives a positive test for Nitrogen.

**Condition:**

The primary support lime plaster and the basic support of the paintings are in good condition. Thick layer (0.5mm) of dust and oily soot covers the whole surface of the paintings and thus imparts a dull appearance. Lime has been sprinkled thickly (1 mm) almost all over the surface. The earlier preser vative applied has turned grey due to age and is more tran- sparent. Fine crackings of pigments have been obser- ved at a few places which may spread and wither in the near future.

**Treatment:**

Chemical tests show that the pigments are unaffected by organic solvents and acids. Hence the thick crust, of lime were cleaned by cotton swabs moistened with lacetic acid in tur bentine-benzene mixture.

Black dirt and smoke coatings are removed by cotton swabs moistened with a dilute solution of triethyl amine in alc benzene and turbentine mixture. Use of triethylamil- ne solution is two fold; to remove the oily soot and to neutra- lize the acetic acid. After complete neutralization the earlie preservative was rubed off by brushing mildly with turbentine- petrol-chloroform mixture.

Then the whole painted surfacc was allowed to dry. Finer crackings were mended with a part of dammer resin in hexane. Finally it was coated twice with 5% solution of poly methy- lcryalate in benzene acetone mixture.

The problem of protecting the pigments from UV radia tion is under consideration.

Acknowledgement:

The author wishes to express his deep sense of gratitude to Thiru. K. Sridharan, Registering Officer, Madars, for the suggestions while executing the above work.

★★★